கல்கி












KALKI 2.10.1966 35காசு

இலங்கையில் 35சதம் தபால்செலவு தனி



BENSONS2/NGB-103C TAM

உங்கள் பிரியமுள்ள......

புதிய மணப் பெண்ணாகிய நான எனது பெற்றோர்களுக்கு எழுதும் இக்கடிதத்தில் நிறைய சமாசாரங்கள் இருக்கின்றன. எனது புக்ககம், புதிய வாழ்க்கை எல்லாவற்றையும் பற்றித்தான். ஆம், அதோடு மட்டுமில்லை, நான் நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸில் புதியதாக ஆரம்பித்திருக்கும் சேவிங்ஸ் பாங்கு கணக்கைப் பற்றியும்தான் எழுதியிருக்கிறேன். நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸில் எப்போதும் நட்புரிமையுடன் கூடிய நம்பகமான சேவை எனக்கு கிடைக்கிறது. மணமாகிய இதர பெண்களும் நேஷனல் கிரிண்ட்லேஸ் பாங்கில் சேவிங்ஸ் பாங்கு கணக்கை ஆரம்பிக்கவேண்டுமென்பதுதான் எனது அவா.

நீங்களும் நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸ் பாங்கும் உற்ற நண்பர்களாகி விடுவீர்கள்!

நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸ் பாங்க் லிமிடெட்

பிரிட்டனில் இணைக்கப் பெற்றது . அங்கத்தினர்களின் பொறுப்பு அளவிடப்பட்டது.

அசோஸியேடட் பாங்குகள்: லாயிட்ஸ் பாங்க் லிமிடெட். நேஷனல் புரொவின்ஷியல் பாங்க் லிமிடெட்

கிளைகள்: சென்னை: 3, நார்த் பீச் ரோடு; 378, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு. (லாயிட்ஸ் கிளை); 6, அரமனைக்காரத் தெரு; 158, மவுண்ட் ரோடு,

தூத்துக்குடி: 44, பீச் ரோடு; ஹைதராபாத்: அபித் ரோட்

சிறப்பு மலர்
பொருளடக்கம்

கல்கி

பராபவ, புரட்டாசி 16 ❊ அக். 2

இரண்டு எச்சரிக்கைகள்	—	5
பிடிவாதம்தான்.....	—	6
என்ன சேதி?	—	7
வெண்ணிலவுப் பெண்ணரசி	—	9
பூதலூரில் விபத்து	—	24
காற்றினிலே வரும் கீதம்	—	30
ராமையா	—	38
கல்விப் பணிக்கொரு...	—	46
முள்ளும் மலரும்	—	50
திமிர்க் காதல்	—	60
விண்ணவர் போற்றும்...	—	64
சிவனருட் செல்வர்	—	68
நொண்டிப் பல்லி	—	74
வெற்றித் திருநகர்	—	82
அபார ஞாபகம்	—	92
உண்மைக்கு ஒருபொழுதும்	—	100
நட்சத்திரப் பூ	—	106

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.




நினைவுத் திரையில்

காந்திஜி இந்தப் புண்ணிய பாரத பூமியின் மண்ணிலே நடந்து சென்ற நாளிலே நாமும் வாழக் கொடுத்து வைத்திருந்தோம். இது நமது மகத்தான பாக்கியம், பூர்வ ஜன்மத்துப் புண்ணியம்.

அன்பே தகளியாகவும், அஹிம்சையே நெய்யாகவும், என்புருகும் தியாகமே திரியாகவும் கொண்ட ஓர் அமர தீபத்தை - அழியாத சத்திய விளக்கை - மகாத்மா காந்தி ஏற்றி வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார். அந்தச் சத்திய தீபத்தை தினம்தினம் போற்றி வழிபடுவோம்; காற்றும் புயலும் அதை அணைத்துவிடாமல் பாதுகாப்போம்.

— தலையங்கம், கல்கி பிப்ரவரி 8, 1948.




கோஸிஜின்
காமராஜ்
மாவ் சேதுங்
கம்யூனிஸ திரிமூர்த்தி
உயிரூட்ட இந்த ரத்தம் உதவாது
பாங்குகள்
நாட்டுப் பொருளாதாரம்
PK

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்



மலர் 26 ■ இதழ் 9

இரண்டு எச்சரிக்கைகள்!

அரசாங்கத்தின் தவறான போக்குகளைச் சுட்டிக் காட்டி நல்லெண்ணத்துடன் ஆலோசனை சொல்லப் பூரணத் தகுதியும் அனுபவமும் வாய்ந்த இரண்டு ஸ்தாபனங்கள் சென்ற வாரம் ஆட்சியாளர்களுக்குப் புத்திமதி சொல்லியிருக்கின்றன.

ஒன்று அகில இந்தியத் தொழில் வர்த்தக சம்மேளனம். இது இந்தியத் தொழில் உலகத்தின் உயர் கேந்திரம். நாட்டின் தொழில்களை ஸ்தாபித்து, பேணி வளர்த்துப் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருபவர்கள் இதன் அங்கத்தினர்கள். பழுத்த அனுபவமுள்ளவர்கள். அவர்கள் தொழில் சம்பந்தமாகச் சொல்வதை மதித்துக் கவனிக்க வேண்டும்.

அவர்கள் சொல்லுவதாவது: ''ரூ. 23,500 கோடி அளவில் நான்காம் திட்டத்துக்கு ரொக்க வசதியைத் திரட்ட இயலாது; திட்ட அளவை 18,000 கோடிக்குக் குறைக்க வேண்டும். இப்போதைய பொருளாதார நிலைமைக்கு மதிப்புத் தந்து திட்டம் தயாரிக்கப்படவில்லை. இவ்வளவு பேராசையான திட்டத்தை நடத்தி வைப்பது நிர்வாக ரீதியில் சாத்தியமல்ல.''

இரண்டாவது ஸ்தாபனம் ரிசர்வ் பாங்கி. அரசாங்கத்தின் ஓர் அங்கம் இது எனலாம். நாட்டின் கடன் வசதிகள், நோட்டுப் புழக்கம், நோட்டு அச்சடிப்பது, நாணய மதிப்பு, பாங்குகள் மீது கண்காணிப்பு ஆகிய விஷயங்களை ரிசர்வ் பாங்க் கவனித்து நடத்துகிறது. பொதுவாக நிதி இலாகாவின் கோட்பாடுகளை அநுசரித்து, அதற்கு அனுகுணமாகவே அது செயல்படும். சுதந்திர அந்தஸ்துடன் செயல்பட்டு, நிதி இலாகாவுக்கு ஆலோசனை சொல்லவும் இதற்கு வாய்ப்புகள் உண்டு. எனினும் மாறுபட்ட கருத்துக்களைத் தைரியமாக ரிசர்வ் பாங்க் சொல்வது துர்லபம். ரிசர்வ் பாங்க் தனது ஏழாவது ஆண்டு அறிக்கையில் சொல்வதாவது: ''விலைகளை நிலைப்படுத்தாமல், வளர்ச்சித் திட்டங்களை நமது வசதிகளுக்கு மீறிய அளவில் நிறைவேற்ற முனைந்தால், பண வீக்க நிலை மேலோங்கும். செலாவணி வீக்கம் என்பது பெரிய நோய். இது பரவினால் திட்டங்கள் சிதறிப் போகும். பொருளாதாரத்தில், தொடர்ச்சியாகப் பல விபரீதங்கள், கோளாறுகள் தோன்றும். இப்போதே இவை தோன்றியுள்ளன. இவை தாற்காலிகமானவை என எண்ணலாகாது.''

இவை இரண்டும் பொருள் செறிந்த எச்சரிக்கைகள். ஆனால் எவ்வளவு நல்லெண்ணத்துடனும், நல்லறிவுடனும் எச்சரிக்கைகள் அளிக்கப்பட்டாலும் அவற்றுக்குச் சர்க்கார் இதுவரை என்ன மதிப்புக் கொடுத்திருக்கிறார்கள்? நாடு எக்கேடு கெட்டாலும், நாட்டு மக்கள் எப்படி வறுமையில் அமிழ்ந்து கிடந்தாலும் நான்காவது திட்டத்தை நிறைவேற்றியே ஆகவேண்டும் என்ற தோரணையில்தான் இப்போதும் தேர்தல் அறிக்கை தயாரித்திருக்கிறார்கள்.

நாட்டில் பணவீக்கம் ஏற்பட்டாலும் பரவாயில்லை; விலைவாசிகள் உயர்ந்துகொண்டே போனாலும் பரவாயில்லை; அந்நியக் கடனும், உள்நாட்டுக் கடன் சுமையும் அதிகரித்தாலும், வரிகள் உயர்ந்தாலும் பரவாயில்லை; எப்படியும் தங்கள் பதவிகளை நிரந்தரமாக்கிக் கொள்ளத்தான் ஆட்சியாளர்கள் எண்ணுகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

அறிஞர்களும், அனுபவஸ்தர்களும், நாட்டு மக்களின் நலனில் உண்மையான அக்கறை கொண்டவர்களும் சொல்லுவதைத் துளியும் மதிப்பதில்லை என்ற பிடிவாதத்துடன் செயல்படும் ஒரு கட்சியை மக்கள் குரலுக்குப் பணிய வைக்க ஜனநாயக வழியில் ஒரே உபாயம்தான் உண்டு. வாக்குச் சீட்டு மூலம் விடிவு காண்பதே அது. தேர்தலுக்குத் தேதியும் வைத்தாயிற்று. வாக்காளர்கள் காங்கிரஸைப் பதவியிலிருந்து அகற்ற இப்போதிருந்தே சங்கற்பம் செய்துகொள்ள வேண்டும்.

பிடிவாதம்தான், நன்னம்பிக்கை அல்ல

காங்கிரஸின் சோஷலிஸக் கொள்கை பிடிவாதமான ஒரு கொள்கை அல்ல, நன்னம்பிக்கையின் மீதே அமைந்தது என்று பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி காங்கிரஸ் மலருக்கு எழுதியுள்ள ஒரு கட்டுரையில் கூறுகிறார். இது எவ்வளவு தூரம் காங்கிரஸ் நடவடிக்கைகளுக்கு ஒத்திருக்கிறது? முரட்டுப் பிடிவாதத்துடனேதான் செயல்கள் நிகழுகின்றன என்றெண்ணுபவர் பலர். நல்ல காரியங்களைச் செய்து முடிப்பதில் பிடிவாதம் வரவேற்கத் தக்கதே. ஆனால் பாதை தவறானது என்று தெரிந்தும், அதே பாதையில் வேகமாகச் சென்று குழியில் விழ்வதில் பிடிவாதம் பிடித்தால் ஆபத்துத்தானே விளையும்? பிரதமர் சொல்வது போல் எதிர்காலம் சோஷலிஸத்தால்தான் வளமடையும் எனக் காங்கிரஸார் நம்பினால் அந்த நம்பிக்கைக்கு ஆதாரம் இருக்க வேண்டும். நடைமுறையில் அதற்குப் போதிய சான்று கிடைக்க வேண்டும். எதெதையோ எதிர்பார்த்துக் கொண்டு, இயற்கை விதியை மீறி இவையெல்லாம் நிகழ வேண்டும் என்று செயல்படுவதில் பிடிவாதத் தன்மையே மேலோங்கி நிற்கிறது.

மூன்று திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பதினைந்தாண்டுகளில் பலப்பல அற்புதங்கள் நிகழும் என்றுதான் காங்கிரஸ் நம்பிற்று. மக்களுக்கெல்லாம் வயிறார உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் கிடைக்கும் என்றே நம்பினார்கள். கிராமங்களில் எல்லாம் சிறு தொழில்கள் கொழிக்கும், விவசாயம் ஓங்கும், எழுத்தறிவு பரவும் என்றுதான் பெரிதும் நம்பினார்கள்.

ஆனால் பிரத்யட்ச நிலை என்ன? ஆண்டு தோறும் நூறு கோடி ரூபாய்க்கு உணவு இறக்குமதி செய்கிறோம். போதிய உடை தயாரிக்க முடியாதபடி ஆலைகள் கட்டுப் படுத்தப்பட்டிருக்கின்றன. ஏழை மக்களுக்கு வீட்டு வசதி என்பது எட்டாவிலேயே உள்ளது. போக்குவரத்து வசதியைப் பற்றியோ கேட்க வேண்டாம். ஒருசில ராஜ்யங்கள் தவிர கல்வி முன்னேற்றமும் ஒரு சதவிகித அளவிலேயே ஆண்டுதோறும் உயருகிறது. இந்த விகிதாசாரத்தில் மக்கள் அனைவருக்கும் எழுத்தறிவிக்க 75 ஆண்டுகளாகும். 1964–65ல் ரூ. 378 ஆக இருந்த சராசரி வருமானம் 1965–66ல் 325 ஆகத் தேய்ந்துள்ளது.

கனரகத் தொழில்களையே கவனித்து வருவதால் மக்களின் ஆதாரத் தேவை எதுவும் பூர்த்தியாகவில்லை. கடைசியில் என்ன சொல்கிறார்கள்? நான்காம் திட்டத்தாலும் விமோசனம் இல்லை; ஐந்தாம் திட்டம் முடிந்த பின் – 1976ல் – அதாவது காங்கிரஸ் பதவி ஏற்ற முப்பதாண்டுகளுக்குப் பிறகுதான் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யக் கூடும் என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். 1976ம் ஆண்டிலேனும் மக்களின் தேவை பூர்த்தியாக வேண்டுமானால் இருபதாண்டுகளாக நாட்டைக் குட்டிச்சுவராக்கியவர்களின் கையிலிருந்து ஆட்சி அதிகாரம் நீக்கப் படவேண்டியது அவசியம்.

சி. எஸ். மிரட்டுகிறார்!

மந்திரி திரு சி. சுப்பிரமணியம் மக்களை மிரட்டுகிறார். ''விலைவாசிகள் ஏறினால் மீண்டும் ரூபாய் மதிப்பைக் குறைக்க வேண்டியிருக்கும்!'' என்கிறார். விலைவாசிகள் உயர்வதற்கும், ரூபாய் மதிப்பு குறைவதற்கும் சர்க்காரேதான் பொறுப்பு. அப்படியிருக்க வீணாக மக்கள் மீது பழி சுமத்துவது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது.

ஏற்கனவே சர்க்கார் விதித்துள்ள வரித் திட்டங்களின் காரணமாகவே விலைகள் உயர்ந்துள்ளன. போதாததற்கு ரூபாயின் மதிப்பைக் குறைத்ததால் அந்நிய நாடுகளிலிருந்து வரவழைக்கப்படும் பொருள்களுக்கும் இந்திய வர்த்தகசமுதாயத்தினர் அதிக விலைகொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. அந்த அதிக விலையைத் தாங்கள் உற்பத்தி செய்து விற்கும் பொருள்கள் மீது சுமத்தாமல் எத்தனை நாட்களுக்கு நஷ்டப்படுவார்கள்? ஆகவே ஏற்கனவே செய்த ரூபாய் மதிப்புக்குறைப்பினால் விலைகள் ஏறத்தான் செய்யும். மந்திரி அவர்கள் விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போனால் மீண்டும் ரூபாயின் மதிப்பைக் குறைக்க வேண்டியிருக்கும் என்று பயமுறுத்துவதில் பொருள் இல்லை.

பீகார் சபாநாயகர்

ஹிந்தி வெறியின் மற்றொரு விநோத விளைவைப் பற்றிய செய்தி சமீபத்தில் பத்திரிகைகளில் வந்துள்ளது. பீகார் ராஜ்ய சட்ட சபை சபாநாயகர் ஸ்ரீ லக்ஷ்மி நாராயண் சுதான்சு என்பவர் தமது ராஜ்ய முதன் மந்திரி ஸ்ரீ கே. பி. ஸஹாய் அனுப்பிய ஓர் அழைப்பை நிராகரித்து விட்டார். எதற்கு அழைப்பு? பிரதமர் இந்திரா காந்தி விஜயம் செய்வதை யொட்டி விமான நிலையத்துக்கு வருமாறு ஸ்ரீ ஸஹாய் ஆங்கிலத்தில் அழைப்பு அனுப்பி யிருந்தாராம். ஆங்கிலத்தின் மேல் வந்த கோபத்தில் அழைப்பை நிராகரித்து, சபாநாயகர் பிரதமருக்கு அவமரியாதை செய்யவும் துணிந்து விட்டார்!

என்ன சேதி?

நெல்லை நகரசபை விஷயம்

யாருக்கு எச்சரிக்கை?

நெல்லை நகரசபை விஷயத்தில் சர்க்காருக்குக் கிடைத்த வெற்றியைப் போல யாருக்கும் கிடைக்க வேண்டாம். நெல்லை நகரசபை காங்கிரஸ் அல்லாத, தி. மு. க. சுதந்திரக் கட்சி அங்கத்தினர்கள் பெருவாரியாகவுள்ள ஒரு நகரசபை என்பது நேயர்களுக்கு நினைவிருக்கும் என்று நம்புகிறோம்.

நீதிமன்றத்தின் தீர்ப்பில் பின்கண்ட வாக்கியங்கள் காணப்படுகின்றன:

''சபையைக் கலைத்தது நிச்சயமாகத் தீவிர நடவடிக்கைதான். கலைப்பதற்கு ஆதாரமாகக் கூறிய காரணங்கள் போதுமானவையல்ல. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு ஸ்தல ஸ்தாபனத்தில் ஜனநாயக நடவடிக்கை இல்லாமல் செய்வதற்கு நியாயமான காரணங்கள் கூறப்படவில்லை என்று வாதிக்க இயலும்.

''ஆனால் இது அரசாங்கம் கவனிக்க வேண்டிய விஷயம். உண்மையில் இது நியாயமான நடவடிக்கைதானா? பொது நலனுக்கு இது அத்தியாவசியமானதுதானா என்பதை இப்பொழுதுகூட சர்க்கார் மறு பரிசீலனை செய்ய இடமுண்டு.''

இந்தத் தீர்ப்பைப் படித்த பின்னரும் உண்மை ஜனநாயக ஆட்சியில் பற்றுள்ள சர்க்கார் நடந்துகொள்ளவேண்டிய முறையே வேறாக இருக்க வேண்டும். தாங்கள் வெற்றி பெற்றுவிட்டதாக நினைத்துக் கொள்வதில் பொருளில்லை!

''தி. மு. க. நண்பர்களே, ஹிந்திக்கு எதிராகக் கிளர்ச்சி நடத்துங்கள்; வருகிற குடியரசு தினத்தன்று!'' என்று அழைப்பு விடுவதாகவே தோன்றுகிறது நமது முதன் மந்திரியாரின் கூற்று.

ஆனால் தி. மு. க. தலைவர் திரு அண்ணாதுரை அவர்கள் காலம் தாழ்த்தாமல் முதன் மந்திரியின் கூற்றுக்கு உடனடியாகப் பின் வருமாறு மறுப்புத் தெரிவித்திருக்கிறார்:

''கோவையில் முதல்வர் கூறியிருப்பது விந்தையான பேச்சு. 'நம்பகமான' தகவல் கிடைத்திருப்பதாகக் கூறுகிறார். அவருக்குக் கிடைத்துள்ள நம்பகமான தகவல் இப்படித்தான் இருக்கும் என்றால் அவரைக் கண்டு இரங்கத்தான் வேண்டும்.

''ஜனவரி 26ம் தேதி கிளர்ச்சியைத் தொடங்கும் திட்டமோ உத்தேசமோ தி. மு. க.வுக்கு இல்லை!''

1942ல் காங்கிரஸ் கனவிலும் நினைக்காத படுநாசக் காரியங்களை அன்று அமெரி துரை காங்கிரஸின் திட்டங்கள் என்று கூறியதன் காரணமாக நாடெங்கும் வன்முறைச் செயல்கள் நிகழ்ந்தன. இப்படியொரு கட்சிக்கு இல்லாத கருத்தை அக்கட்சியின்மேல் சுமத்துவது அக்கட்சியைச் சார்ந்த மக்களைத் தூண்டுவதேயாகும். ஏற்கனவே நாடெங்கும் 'பந்து'களும் வேலை நிறுத்தங்களும் நடைபெறும் வேளையில் முதல் மந்திரியார் இப்படியொன்றைக் கூறியிருக்க வேண்டாம்! தென்னகத்தில் கூடும் அ. இ. கா. கமிட்டிக் கூட்டத்தினருக்கு ஹிந்தியைப் பற்றி இப்பகுதி மக்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்த இவ்விதம் கூறிப் பயமுறுத்தினாரோ, என்னவோ!



விநாயக சதுர்த்தி அன்று சென்னையிலிருந்து புறப்பட்ட ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியும் அவரது கோஷ்டியாரும் பம்பாய் மார்க்கமாக செப்டம்பர் 20ந் தேதி ஜெனீவா சென்றார்கள். மூன்று தினங்கள் ஸ்விட்சர்லாந்திலும் மூன்று தினங்கள் ஜெர்மனியிலும் மூன்று தினங்கள் பாரீஸ் நகரத்திலும் இருந்துவிட்டு செப்டம்பர் 29ந் தேதி லண்டன் போய்ச் சேருகிறார்கள். ஜெனீவாவில் இந்தியச் சங்கத்தின் ஆதரவிலும், பான் நகரில் இந்திய-ஜெர்மானியக் கழகத்தின் அழைப்பின் பேரிலும், பாரிஸில் பிரபல பிரஞ்சுக் கலாச்சார சங்கத்தின் ஆதரவிலும் கச்சேரிகள் நடைபெற்றன. செப்டம்பர் 30ந் தேதியன்று லண்டன் ஒய். எம். ஸி. ஏ. ஹாஸ்டலில் இருக்கும் மகாத்மா காந்தி ஹாலில் ஒரு கச்சேரி இருக்கிறது. இதை முடித்துக் கொண்டு அக்டோபர் 2ந் தேதி காந்தி ஜெயந்தி தினத்தன்று லண்டனில் 'இந்தியா ஹவுஸி'ல் காந்தி ஜெயந்தியை யொட்டி நடக்க விருக்கும் பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு காந்தி அடிகளுக்குப் பிரியமான சில பஜன்களை ஸ்ரீமதி எம். எஸ். பாடுவார். அன்று பிற்பகல் எம். எஸ். குழுவினர் லண்டனிலிருந்து நியூயார்க் போய்ச் சேருகிறார்கள்.



செப்டம்பர் 9ந் தேதியன்று கன்னியா குமரி மாவட்ட சுதந்திரக் கட்சியின் முதல் மாநாடு எளிமையாகவும் அழகாகவும் ஜாம் ஜாமென்று நடந்தது. இம்மாநாட்டில் பேசிய தலைவர்கள் சுதந்திரக் கட்சியின் கொள்கை களைத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். தலைமையுரையாற்றிய திரு கோவை அய்யா முத்துவின் சொற்பொழிவு சிறப்பாக இருந் தது. மாநாட்டின் மிகப் பெரிதான கொட் டாரப் பந்தல் நிரம்பி வழியுமளவுக்குப் பெருந் திரளான மக்கள் ஆர்வத்துடன் கூடியிருந்தனர்.

தீரர் வல்லபாய் படேலின் குமாரர் தயா பாய் படேலும், பேராசிரியர் என். ஜி. ரங்கா வும் இம்மகாநாட்டில் சிறப்புச் சொற்பொழி வாற்றினார்கள். நில வரியைக் குறைக்க வேண்டும் என்றும், குமரி மாவட்டத்துக்கு இரயில் பாதை வேண்டும் என்றும், இரண்டு ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருப் போரிடம் கட்டாயக் கொள்முதல் செய்யக் கூடாது என்றும், மந்திரிகள் தேர்தலுக்கு மூன்று மாதங்களுக்கு முன் ராஜிநாமா செய்ய வேண்டும் என்றும், தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.


மாநாட்டுக்கு முதல் நாள் இரவு ''காத் திக்கே ஓட்டு'' என்ற கலை நிகழ்ச்சியும், மாநாட்டுப் பொதுக்கூட்டம் முடிந்த பிறகு ''யாருக்கு நாற்காலி?'' என்ற கலை நிகழ்ச்சி யும் சிறப்பாக நடந்தன. மாநாட்டையொட் டிச் சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிட்டனர். பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் காலை எட்டு மணி முதல் பகல் ஒரு மணி வரை கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இவ்வளவு வெற்றிகரமாக மகாநாட்டை நடத்திய பெருமை டாக்டர் மத்தியாஸ் அவர்களையும், அவர்களது நண்பர்களையும் சாரும். அவர்களுடைய ஊக்கத்தில் குமரி மாவட்டத்தில் சுதந்திரக் கட்சி சிறந்து விளங்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

மாநாட்டில்:

1. திரு தயாபாய் படேல் எம். பி. அவர்களின் உணர்ச்சிமிக்க சொற்பொழிவு.
2. குமரி மாவட்டச் செயலாளர் திரு முத்துக்குமாரசாமி அறிக்கையை வாசிக்கிறார்.
3. மாநாட்டுக்கு விஜயம் செய்த பார்வையாளர்களின் ஒரு பகுதி.









வெண்ணிலவுப் பெண்ணரசி

சோமு

முதல் பாகம்



அத்தியாயம் 1

நிலவில் மலர்ந்த நீலம்

இமைகளைத் திறந்து பார்த்தான் அந்த வீரன்! அவன் கண்ட காட்சியில் அப்படியே மறுபடியும் ஒருமுறை மயக்கம் வரும்போல் இருந்தது அவனுக்கு! இதைக் கண்ட அந்தப் பெண்ணழகி தன் கையிலிருந்த பொற்குவளையைத் தோழியிடம் கொடுத்துவிட்டு வீரனுக்கு அருகிலே வந்து அவனுடைய முகத்தை உற்றுப் பார்த்தாள்!

இரவு மூன்று யாமம் கழிந்திருக்க வேண்டும். நீல வானத்திலிருந்து வெண்ணிலவு பொழிந்து கொண்டிருந்தது. அங்கங்கே விண்மீன்கள் இமைகளைத் திறப்பதும் மூடுவதுமாக இருந்தன. அந்த விண்மீன்களைப் போலவே வேலவன் கோதை என்ற அந்தச் சேரநாட்டு வீரனும் தன் இமைகளை மூடி மூடி விழித்தான்!

வெண்ணிலவு! அது வானத்திலே இருந்ததா, அல்லது தனக்கு முன்னால் வந்து நின்று தன்னையே கூர்ந்து பார்த்ததா? மயக்கமுற்று உணர்விழந்து மணற் பரப்பிலே விழுந்து கிடந்தவனை மயக்கம் தெளிய ,வைத்தவள் இந்த மங்கைதானா? ஆகா! என்ன முகம்! நிலவைப் பொழிவது விண்ணிலவு - இல்லை; இந்தப் பெண்ணிலவு தான்!

என்ன ஒளி! என்ன அழகு! சேர நாட்டிலே எத்தனையோ வஞ்சிக் கொடிகள் மன்னனுடைய ''திருவோலக்கம்'' என்னும் திருச் சபையினை வந்து நிற்பார்கள். ஆயிரம் சந்திரர்கள் ஒரே பொழுதில் உதித்து வருவதுபோல் இருக்கும் அந்தக் காட்சி! அதையெல்லாம் பார்த்து வியந்தவன்தான் வேலவன் கோதை. என்றாலும் இப்படி ஒரு கன்னிகையை இதுவரை அவன் பார்த்ததில்லை. சந்திரர்களிலும் இப்படி ஒரு சந்திரன் உண்டா? அமுத நிலவிலும் இப்படி ஒரு நிலவா?

''இந்தப் பழச் சாற்றில் இன்னும் ஒரு மடக்குக் குடித்தீர்களானால் மயக்கம் நன்றாகத் தெளிந்து விடும்!''

இவ்வாறு சொல்லித் தோழியின் கையிலிருந்த பொற்குவளையை மறுபடியும் வாங்கி வேல





வன் கோதையிடம் நீட்டினாள் அந்தப் பெண்!

குவளையை வாங்கிப் பிடிப்பதற்கு வேண்டிய வலிமை நீந்தி நீந்திக் களைத்துப்போன தன் கைகளுக்கு ஏது என்று அவன் தயங்குவதற்குள், அவளே அந்தப் பொற் குவளையை வீரனின் வாயருகே கொண்டு பக்குவமாய்ச் சாய்த்தாள்.

''மெதுவாகக் குடியுங்கள்!''

வீரன் பருகினான். நாவிலே அந்தப் பழச் சாற்றையும், செவியிலே அந்த இனிய மொழிகளையும் உட்கொண்டு பருகினான்!

வெண்ணிலவு! அது வாய் திறந்து பேசினால் அந்த நிலவு-மொழி இப்படித்தான் இருக்க வேண்டும் என்று எண்ணினான் வேலவன் கோதை! மருந்து நன்றாக வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. பழைய மயக்கம் தெளியத் தெளிய ஒரு புதிய மயக்கம் அவனை ஆட்கொண்டது!

''நான் இப்போது எங்கே இருக்கிறேன்?''

இப்படி அவன் கேட்டபோது களைப்பினால் ஏற்பட்டிருந்த மயக்கம் மாறி அழகின் மயக்கத்திலே அவன் பேசினான். இது மண்ணுலகமா அல்லது விண்ணுலகமா என்று மதிமயங்கியது. 'மதிமயக்கம்' என்பதற்கு இப்படி ஒரு பொருளா? நிலவைப் பொழியும் முக மதியும், அறிவை இயக்குகிற மன-மதியும் இரண்டும் ஒன்றோடொன்று மயங்கின!

''கடம்ப வேந்தனின் வெள்ளைத் தீவிலேதான் இருக்கிறீர்கள் நீங்கள். நிமிர்ந்தெழுந்து இந்த மணற் பரப்பிலே அமர முடியுமா என்று பார்க்கிறீர்களா, சற்று?''

இவ்வாறு சொன்னாள் அழகுக் கன்னி. வீரன் சுற்றுமுற்றும் பார்த்தான்.

மேலே வானம். கீழே விரிந்து பரந்த வெண் மணல். தான் படுத்திருந்த திட்டுக்குச் சற்றுத் தொலைவிலே ஒரு கடம்ப மரம். மிகப் பெரிய மரம். அதற்கு அப்பால் சலவைக் கல்லினால் கட்டி நிறுத்திய கன்னி மாடம், நிலா முற்றம், அதை அணைத்துக் கொண்டு மாபெரும் அரண்மனை, பெரிய மதிற் சுவரோடு கூடிய கோட்டை! அதைச் சுற்றிலும் அலை வீசி ஆரவாரம் செய்யும் கருநீலக் கடல்!

வேலவன் கோதைக்கு அப்படியே நினைவுச் சக்கரம் சுழலத் தொடங்கியது. அந்த வெள்ளைத் தீவின் மணல் திட்டிலே ஏறுவதற்குள் அவன் பட்ட அத்தனை பாடுகளும், அதற்கு முன் நடந்த அத்தனை நிகழ்ச்சிகளும் எல்லாம் நினைவு மண்டலத்தில் 'கிறுகிறு' என்று வட்டம் சுற்றின.

* * *



சேரலாதன் விடுத்த அந்தத் திருவிழா அறிவிப்பு நாட்டு மக்கள் அனைவருக்கும் பெரும் வியப்பைத் தந்தது. வியப்போடு கூடவே எல்லையற்ற மகிழ்ச்சியையும் தந்தது.


அயிரை மலையிலே உள்ள கொற்றவை கோயிலில் சேர மன்னன் திருவிழாக் கொண்டாடப் போகிறான் என்பது அந்த விநாடிவரை யாருக்குமே தெரியாது!

கொற்றவை என்ற பெண் தெய்வம் வீரர்கள் வணங்கும் வெற்றிக் கடவுள். அயிரை மலையில் உள்ள கொற்றவையோ என்றால் சேர மன்னர்களின் குலதெய்வம். படை வீடுகளில் அமர்ந்து திருவருள் புரியும் தமிழ்க் கடவுளான முருகனைப் பெற்றெடுத்த வீரத் தாய் கொற்றவை! அவளை வழிபட்டுப் போரிலே வெற்றி தரும்படி வரம் கேட்பது தமிழ் அரசரின் பழைய வழக்கம். சேர மன்னன் இப்போது ஒரு போருக்கு ஆயத்தம் செய்வதாகவோ அல்லது அத்தகைய ஓர் எண்ணம் அவன் மனத்தில் இருப்பதாகவோ அரசச் சுற்றத்தில் எவருக்குமே இதுவரை தெரியாது. எனவேதான் மன்னனுடைய அந்தத் திருவிழா அறிவிப்பு எல்லாரையும் வியப்பில் ஆழ்த்தியது.

சேரலாதன் அறிவிப்புச் செய்த பின் எதுதான் தாமதமாகும்? கொற்றவையின் திருவிழாவுக்கு வேண்டிய ஏற்பாடுகள் இடிமுழக்கத்தோடும் மின்னல் வெட்டுக்களோடும் 'மடமட' என்று தொடங்கின.

சேர நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வேந்தர்களும், குறுநில மன்னர்களும், வேளிர்களும், புலவர்களும், பாணர்களும், விறலியரும், கூட்டம் கூட்டமாக வந்து அயிரை மலையிலே மொய்த்தார்கள்.

அறத்தின் முரசாகிய நீதி முரசம், அன்பின் முரசாகிய கொடை முரசம், வீரத்தின் முரசாகிய படை முரசம் ஒன்று சேர்ந்து ஒலித்தன. அயிரை மலையில் உள்ள நூறு நூறு அருவிகளின் ஓசையும் அடங்கும்படியாக முழவுகள் முழங்கின. சேரனுடைய வில்லின் நாணொலிக்கு அஞ்சி ஓடும் பகைவர்களைப் போல வன விலங்குகள் எல்லாம்



தவருமல் பினகா புளோரைட் பற்பசையினல்
துலக்குதல் பற்சேதத்தை தவிர்க்கிறது.

இன்றே ஒரு ட்யூப் வாங்குங்கள்

வீட்டிலோ, வெளியிலோ...ஆயுட்கால ஆனந்தத்தை அளிக்கும் உறுதுணை—பை!



வீட்டிற்குள்ளோ, வெளியிலோ ஒரு பை ரேடியோ எடுத்துச் செல்லுங்கள்! வருடக்கணக்காக உடனிருந்து ஆனந்தமளிக்கும் ரேடியோ, பை! பொருத்தமாக மாட்ச் செய்யப்பட்ட ஒலி அமைப்பின் காரணமாக, பை ரேடியோ, மிகத் தெளிவான ஒலியீட்டைத் தருகிறது. வருடக்கணக்காக அட்டிழுக்கற்று இயங்குவதற்கென இதன் ஒவ்வொரு பாகமும் மிக நுணுக்கமாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. பை ரேடியோவின் நவீன சீரமைப்பு (ஸ்ட்ரீம்லைண்ட் ஸ்டைலிங்) உங்கள் இல்லத்தை அழகுமிளிரச் செய்கிறது. ரேடியோ மற்றும் டெலிவிஷன் துறையில், சிறந்த அகில உலகப் புகழ்வாய்ந்தது, பை.

உங்கள் அருகாமையிலுள்ள பை வியாபாரியிடம் சென்று பை ரேடியோக்களையும், டிரான்சிஸ்டர்களையும் வைத்துக் கேட்டுப் பாருங்கள். நீங்கள் அவற்றை விரும்புவீர்கள்.

மாடல் 3320 போர்டேபிள் ட்ரான்சிஸ்டர். 9 டிரான்சிஸ்டர் டயோடுகள், 3 பாண்டுகள், அதி நுட்பம் வாய்ந்த ஒலிபெருக்கி, ஃபெர்ரைட் மற்றும் டெலெஸ்கோபிக் ஏரியல்கள், 2-டோன் வார்ப்படம் செய்யப்பட்ட காபினெட், எர்த்திங் (நிலத்தொடர்பு) மற்றும் வெளிப்புற ஏரியல்களைப் பொருத்துவதற்கான ஸாக்கெட்டுகள். விலை ரூ. 328/-* தோல் உறை விலை ரூ. 20/- மேலும், டேபிள் ட்ரான்சிஸ்டர்கள், ஏஸி மற்றும் ஏஸி/டிஸி மெயின்கள்.

* விலைகள் சுங்கவரி மாத்திரம் அடங்கியவை. விற்பனை வரி மற்றும் இதர உள்ளூர் வரிகள் தனி.

ஏகபோக விநியோகஸ்தர்கள்: ஜெனரல் ரேடியோ அண்ட் அப்ளையன்ஸஸ் லிட். பை ரேடியோ டிவிஷன்.
பம்பாய், கல்கத்தா, மதராஸ், டெல்லி, பெங்களூர், செகந்திராபாத், பாட்னா.

பை லிமிடெட், கேம்ப்ரிட்ஜ், இங்கிலாந்து, அவர்களின் சார்பில் நேஷனல் எக்கோ ரேடியோ அண்ட் என்ஜினீயரிங் கோ. லிட்., பம்பாய் அவர்கள் பை ரேடியோக்களைத் தயாரிக்கின்றனர்

Shilpi GRA 286 TAM

மலைப் புதருக்குள்ளே பதுங்கி ஓடின! மலைக்காடு நகர்ப்புறம் போல மாறிற்று. வீரர்கள், சிற்றரசர்கள், கவிஞர்கள், கூத்தர்கள் — ஆடவரும் பெண்டிருமாக மக்கள் கூட்டம் மலைப் பகுதியை நிரப்பி நின்றது.

கொற்றவை கோயிலின் முற்றத்திலே பம்பையும், முரசும், திட்டையும், தடாரியும், முழவும் முருடும்,- கரடிகையும், திண்டியும் வானளாவி எழுந்து ஒலித்தன.

'பம்பம்' என்றது பம்பை. 'முர்முர்' என்றது முருடு. 'கிர்கிர் கர்கர்' எனக் கேட்போர் நரம்பிலே முறுக்கேற்றியது கரடிகை.

தலைவன் நின்று விழாவை நடத்தினான். ஏழு நரம்புகள் கொண்ட செங்கோட்டு யாழிலே தக்க ராகம் முதலிய இரவுப் பண்கள் அமைதியாக ஒலித்தன, வீரத்துக்கும் ஆர்ப்பாட்டத்துக்கும் பின்னால் சேரனுடைய உள்ளத்தின் ஆழத்திலே அமைதியாக ஒலிக்கிற தன்னம்பிக்கையைப் போல! இந்தத் தன்னம்பிக்கையிலிருந்து புறப்படும் போர் ஏற்பாடுகளைப் போல் 'பட பட' என்று நெரிந்தன தாளக் கருவிகள்!

பேரிகை, படகம், இடுக்கை, உடுக்கை, இமிலை, குடமுழா, தக்கை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, துடி, தகுணிச்சம், விரலேறு — ஆகா! முரசுகளிலேதான் எத்தனை வகை! மனித உள்ளத்தின் கடவுட் பேரன்பிலேதான் எத்தனை ஒலிகள் பிறக்கின்றன! எத்தனை வகை! வானத்துக் கடவுளை வையத்திலே கொண்டு நிறுத்துகிற ஒலிகள் அல்லவா அத்தனையும்!

விற்கொடி காற்றிலே தவழ்ந்தது! புகை எழுப்பிச் சுடர் கொளுத்தினார்கள். மஞ்சள் கலந்த அரிசியையும் மலர்களையும் தூவி, அரிசித் தட்டங்களிலே ''ஈடு'' ஏந்தினார்கள். ஒருபுறம் குறமகளிர் கையில் செந்நூல் கட்டி இசைக் கருவிகள் கறங்கக் கூத்தாடினார்கள்!

நேரி மலைக்கு வடகிழக்கில், பேரியாற்றுக்கும் அயிரை ஆற்றுக்கும் இடையிலே வானளாவிய சிகரங்களும் எண்ணிலடங்காத அருவிகளும் கொண்டு நிற்கும் அயிரை மலையின் கொற்றவை கோயிலில் அந்தத் திருவிழா மிகச் சிறப்பாக நடந்தது. சேரலாதன் திருவோலக்கம் என்ற திருச் சபையிலே- அமர்ந்தான். துகிலும், மணியும்,, பொன்னும், யானைத் தந்தமும், அகிலும், ஆரமும் பரிசுப் பொருள்களாக ஒரு மலைக்கு மேல் இன்னொரு மலை போலக் குவிந்திருந்தன. முனிவர்களும், சான்றோர்களும், தானைத் தலைவரும், அரசியற் சுற்றத்தாரும் சூழ்ந்து நிற்க, அரசமா தேவியுடன் அமர்ந்து பரிசுகளை வழங்கினான் சேரலாதன். கொடுமணம் என்ற ஊரில் செய்த அணிகலன்களையும் முத்துமாலைகளையும் அவரவர் தகுதிக்கேற்பப் பரிசாக வழங்கினான் மன்னவன்!

சுற்றத்தார் எல்லாரும் தம் தம் ஊர்களுக்குப் புறப்பட்டனர். என்றாலும் எல்லாருடைய மனத்திலும்- எழுந்த கேள்விக்கு விடை காணோம்!

திருவோலக்கத்தின்போதும் மன்னன் எதுவும் சொல்லவில்லை, விழாவின் நோக்கத்தைப் பற்றி! பூசனையின் போதும், போருக்குரிய எந்த அறிகுறியும் அங்கே யாருக்கும் புலனாகவில்லை!

இரவு அகன்று வானில் வெள்ளி முளைத்து நின்றது! செங்கோட்டு யாழின் மெல்லிய நரம்புகளிலே 'புறநீர்மை' என்ற உதய காலத்துப் பண் ஒலித்தது. செம்பொற் குழம்பிலே கதிர் என்ற இறகைத் தோய்த்து, வானம் என்னும் இருட் திரையிலே ஒளி ஓவியங்களை வரைந்தது வைகறை! சேரலாதன் எழுந்தான். வேலவன் கோதை என்ற அந்த ஒரு வீரனை மட்டும் தனியே அழைத்தான்.

மலைக் கோயிலுக்குச் சற்றுத் தொலைவில் ஒரு சிறிய அருவி. அதன் அருகில் ஒரு பாறை. அதில் ஒரு கடம்ப மரம். அந்த இடத்தை நோக்கி வேலவனை அழைத்துச் சென்றான் மன்னவன்.

''வேலவா! இந்தக் கொற்றவைத் திருவிழாவின் நோக்கம் என்ன என்று எல்லாரையும் போலவே நீயும் குழம்புகிறாய் என நினைக்கிறேன். வேறு யாருக்கும் தெரியாமல் உன்னிடம் மட்டுமே சொல்ல வேண்டிய செய்தி அது. சொல்கிறேன் கேள்!'' என்று தொடங்கினான் சேரலாதன்.

''மேலைக் கடல் தீவுகளிலே கூபகம் என்ற தீவு முதல் தெற்கே செல்லச் செல்ல மிகப் பல தீவுகள் இருப்பது உனக்குத் தெரியும். இவற்றில் வெள்ளைத் தீவு என்று ஒன்று இருப்பது உனக்குத் தெரியும் அல்லவா?''

''தெரியும் அரசே. ஏழில் மலைக்கு ஒரு சமயம் நான் சென்றிருந்தேன். அப்போது மலையுச்சியிலே ஏறி நின்று பார்த்தேன். மூன்று காத தூரம் வரை கடலுக்குள்ளே தெரிந்தது. தென் மேற்கில் வெள்ளைத் தீவு இருப்பதையும் கண்டேன். அங்கேயுள்ள கடம்பர்கள், மானவர் என்ற முனிவரின் வழியில் வந்தவர்கள் என்றும், அந்த முனிவரின் மனையில் கடம்ப மரம் வளர்ந்து வந்ததால் அதுவே இவர்களுடைய காவல் மரம் ஆகி, இவர்

ளும் கடம்பர்கள் என்றே அழைக்கப்படுகிறார்கள் என்றும் நண்பர்கள் சொன்னார்கள்!''

''வேலவா! இந்தக் கடம்பர்கள் தங்கள் குலப் பெருமைகளை எப்படி எப்படி யெல்லாமோ பறைசாற்றிக் கொள்ளுகிறார்கள். சிவபெருமான் திரிபுரத்தை எரித்த பிறகு, அந்தக் களைப்பும் கோபமும் தீரத் தமது வியர்வையை ஒரு கடம்ப மரத்தின் நிழலில் சிந்தினார் என்றும், அந்தத் துளிகளிலிருந்து முதலாவது கடம்பன் தோன்றினான் என்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். பிற வம்சத்துக் கதைகளையெல்லாம் திருடித் தங்கள் முன்னோர்களின் வரலாறு என்று பொய் பரப்பி வருகிறார்கள்! அவர்கள் சொல்லும் இந்தக் கட்டுக் கதைகளையெல்லாம் நம்புகிறவர்கள் நமது சேர நாட்டிலும் இருக்கிறார்கள்! என்ன செய்வது!''

''வேந்தர் பெருமானே! அந்த வெள்ளைத் தீவில் உள்ளவர்கள் அத்தனை பேரும் கடற் கொள்ளைக் கூட்டத்தார்கள் என்பது எனக்குத் தெரியும். அந்தத் தொழிலை மறைத்துத் தமிழக வேந்தர்களுக்குச் சமமாகத் தங்களை எல்லாரும் மதிக்க வேண்டும் என்பதற்காகவே, வரலாற்றுக்கு மாறாக இப்படிக் கற்பனைப் பெருமைகளைப் பேசி வருகிறார்கள் என்று நினைக்கிறேன்.''

''வேலவா! நமக்குச் சமமாக இருக்க வேண்டும் என்ற நோக்கம் மட்டுமில்லை. கடவுளின் பெயராலும், முனிவர்களின் பெயராலும் தங்கள் வழிமுறைக்கு ஆதாரம் கூறினால், நாமெல்லாம் இவர்களுக்கு அஞ்சுவோம் என்றும், அவர்களுடைய தவறுகளைப் பார்த்துப் பொறுத்துக் கொண்டு சும்மா இருப்போம் என்றும் மனப்பால் குடிக்கிறார்கள். இதனால்தான் கயிலை மலையிலிருந்து வானவர்களே தங்களுக்கு அருள் செய்தார்கள் என்றும் ஒரு கதை புனைந்திருக்கிறார்கள்!''

''அப்படியா? வேடிக்கையாக இருக்கிறதே!''

''அதைக் கேட்டதில்லையா வேலவா நீ! நந்த வேந்தர்களில் ஒருவன் குழந்தை இல்லாமல் கயிலை மலையில் தவம் செய்தானாம். அப்போது வானவர்கள் அவன் கையில் கடம்ப மலர்களைச் சொரிந்து வாழ்த்து வழங்கினார்களாம். உடனே மேகத்திலிருந்து வான ஒலி ஒன்று கேட்டதாம். 'நந்தா, உன் தவத்தை மெச்சினோம். உனக்கு இரண்டு மக்கள் தோன்றுவார்கள். அவர்கள் இருவரும் கடம்பர் என்ற குலத்தை நிலைநாட்டுவார்கள். கவலைப்படாதே!' என்று தெய்வம் பேசியதாம்! யாரிடம்? இந்தக் கடற்கொள்ளைக்காரர்களின் ஆதி முதல்வனிடம்! எப்படி இருக்கிறது கதை!''

சேரலாதன் உரக்கச் சிரித்தான். வேலவன் கோதையும் சிரித்தான். ஆனால் அரச முன்னிலை என்ற நினைவிலே மனத்துக்குள் சிரித்துப் புன்முறுவல் செய்து கொண்டான். பிறகு சொன்னான்:

''பெருந்தகையே! கூபகத் தீவிலிருந்து கடம்பத் தீவுவரை உள்ள பல தீவுகளிலும் குடியிருந்து கொண்டு கடம்ப மரத்தைத் தங்கள் காவல் மரமாக நட்டு நிறுத்திக் கொண்டு இவர்கள் எத்தனையோ வகையில் கடற் குறும்பு செய்து வருகிறார்கள் என்பதும், இவர்களை நம்மவர்கள் 'கடற் குறும்பர்' என்றே அழைக்கிறார்கள் என்பதும், எனக்கு நன்றாகத் தெரியும். அரச ஆணைக்காகவே காத்திருக்கிறேன்!'' என்றான் வேலவன் கோதை, ஒரு தானை வீரனுக்குரிய உறுதியோடு.

சேரலாதன் சிரித்தான். இச் சிரிப்பில் ஆசையோடு கூடிய பரிவு இருந்தது.

''வேலவா! அத்தனை எளிதில்லை, இந்தக் குறும்பரை அழிப்பது. பல ஆண்டுகளாக இந்தக் குறும்பர்கள், கடற்கரை நாடுகளில் நுழைந்து அரம்பு செய்வதும், மேனாடுகளிலிருந்து நமது சேர நாட்டுக்கு வரும் யவனர்களின் மரக்கலங்களை முசிறித் துறைமுகத்துக்கும், தொண்டித் துறைமுகத்துக்கும் செல்லாதவாறு கடலிலே தடுத்து நிறுத்திக் கொள்ளையடிப்பதும், தொடர்ந்து செய்து வருகிறார்கள். இதுபற்றி யவன வணிகர் பலரிடமிருந்து நமக்கு எழுத்து வந்துள்ளது. இன்றல்ல. எந்தையார் காலத்திலேயே எழுத்து வந்து நான் பார்த்திருக்கிறேன். ஆனாலும் இப்போது அவசரமாக இது குறித்து ஒரு முடிவுக்கு வந்ததற்குக் காரணம், இந்தக் குறும்பர்கள் வெள்ளைத் தீவைத் தங்களுடைய மையமான இடமாகக் கொண்டு மேனாட்டார்களுடன் புதிதாக வாணிபம் செய்ய முனைந்திருக்கிறார்களாம்!''

''வாணிபமா? மேனாட்டாருடனா?''

''ஆமாம், வாணிபம் செய்வதற்கு இவர்களிடம் என்ன பொருள் இருக்கிறது என்று திகைக்கிறாயா? உழுகிற உழவனுக்குத்தான் விளைச்சலைப் பற்றிக் கவலை. கொள்ளை அடிப்பவனுக்கு என்ன கவலை? மற்றவர்களுடைய விளைச்சல் எல்லாம் அவனுடைய விளைச்சல் தானே? ஊரிலுள்ள எல்லாருடைய

உங்கள் சிறுவனுக்குச் சிறகு முளைக்கும்போது...



தானாகவே பறக்கும் தன்னம்பிக்கையைப் புகட்டுங்கள்.

விரைவினிலே, காளைப் பருவம் எய்திவிடுவான் அவன். தன்னம்பிக்கை கொண்ட இளைஞனாக அவனை உருவாக்க உறுதிகொள்ளுங்கள். ஆகும் வயது எதுவாயினும் சரி, அவனுக்கென ஒரு மைனர் சேமிப்புக் கணக்கினைத் துவங்குங்கள், அருகமைந்த பாங்க் ஆப் பரோடாவின் கிளையொன்றிலே...துவக்குங்கள் இன்றே! 14 வயது எய்தியதுமே தனக்கென ஒரு கணக்கை இயக்கவிடுவதன்மூலம்...பணத்தைப் பற்றியும் சிக்கனத்தைப் பற்றியும் ஒப்பற்ற முறையிலே அறிவுபெற உதவுகிறோம்.

மைனர் சேமிப்புக் கணக்கு ஒன்றை எம்மிடம் துவங்குவது வெகு எளிது. ஒரே ஒரு ரூபாய் செலுத்தினாலே போதும். வள்ளிசாக ஆண்டொன்றுக்கு 4 சத விகித வட்டி தருகிறோம். தவிரவும், முன்னறிவிப்பின்றியே ஆண்டொன்றுக்கு 150 தடவைகள் பணமெடுக்க அனுமதிக்கிறோம். தன் சொந்தப் பெயரிலே கணக்கு வைத்துக் கொள்ளக் கொடுத்துவைத்த உங்கள் செல்வன், தன்னை வயதிற் பெரியவனாக நாங்கள் நடத்தும் விதத்தைப் பெரிதும் விரும்புவான்

தி பாங்க் ஆப் பரோடா லிட்.

(ஸ்தாபிதம்: 1908) பதிவுபெற்ற அலுவலகம்: மாண்ட்வி, பரோடா.

இந்தியாவில் 240க்கு மேற்பட்ட கிளைகளை உடையது. தவிர, லண்டன், கிழக்கு ஆப்பிரிக்கா, கிழக்கு பாகிஸ்தான், பிஜி தீவுகள், மரிஷஸ், கயானா ஆகிய இடங்களிலும் கிளைகள்.

எங்கள் பணிகள் அனைத்தையும் விவரிக்கும் *"May We Help You?"* என்ற இலவச புத்தகத்தைப் பெற எழுதுங்கள்.

CMBB-17 B TM

கலையும் அவனுக்குச் சொந்தம் தான் அல்லவா!''

இப்படிச் சொல்லிவிட்டு மறுபடியும் பெரிதாகச் சிரித்தான் சேர மன்னன். சிரித்துக் கொண்டே சொல்லுவான்:

''சேர நாட்டு மிளகும், இந்தத் தீவுகளுக்கே உரிய பவளமும், நல் முத்தும், மீனும் தாங்களே யவனர்களுக்குத் தருவதாகக் கூறுகிறார்களாம் இந்தக் கடம்பர்கள்! வடக்கே நன்னர்களின் நாட்டுக்கு அப்பால் உள்ள புன்னாட்டில் ஒரு நீலக் கல் சுரங்கம் இருக்கிறதல்லவா, தெரியுமா உனக்கு?''

''ஆமாம். உரோமானியர்களும், கிரேக்கர்களும் இந்த நீலக் கற்களை மிகவும் விரும்பி, ஏராளமான பொன் கொடுத்து வாங்குகிறார்கள் என்று கேட்டிருக்கிறேன்.''

''இந்த நீலக் கல் சுரங்கத்தையும் கொள்ளையிட்டுப் புன்னாட்டையே தங்கள் ஆளுகையின் கீழ் கொண்டு வரவும் எண்ணுகிறார்களாம் கடம்பர்கள்!''

''கடம்பர்களா? இந்தக் கடற் குறும்பர்களா?''

''ஆமாம். இத்தனை துணிவுக்கும் காரணம், நன்னர்களும் அவர்களுடைய வேந்தன் நன்னனும் கடம்பர்களைக் காக்கும் வள்ளல்களாக உறவு சேர்ந்திருப்பதுதான்! கூட்டுக் கள்ளர்கள் இவர்கள் என்ற முறையில் இந்த முறைகேடு நடந்து வருகிறது!''

''வேந்தர் பெருமானே! நன்னர்களை இத்தனை ஆண்டுகளாக நாம் தன்னிச்சையாக விட்டு வைத்தது தவறு. நன்னர்களை முன்னமேயே ஒடுக்கி விருந்தால் கடம்பர்களும் தொலைந்திருப்பார்கள் அல்லவா!'' என்று கவலையோடு சொன்னான் வேலவன்.


''இல்லை. நன்னர்களின் ஆற்றலைத் தெரியாமல் நீ இப்படிச் சொல்லுகிறாய். மூன்று திசைகளில் மூன்று படைகள் சென்று கடலிலும், மலையிலும் நிலத்திலும் முக்கூட்டாகத் தாக்கினால்தான் இந்த நன்னர்களை வெல்ல முடியும். அதற்கு முன்னோடியாக இந்தக் கடம்பரை முதலில் அழித்தாக வேண்டும். இல்லையென்றால் எத்தனை பெரிய கடற்படை நம்மிடம் இருந்தாலும் கொள்ளைக் கூட்டத்தார்களை மீறிச் சென்று நன்னர்களை அடக்குவது இயலாத செயல்! அதனால்தான் என் மனம் கடம்பர்களையே சுற்றுகிறது. சுழல்கிறது!''

இவ்வாறு சொல்லும்போது சேரன் குரலில் ஏதோ தயக்கம் ஒலித்தது.

''அரசே! மலை கலங்கினாலும் நிலை கலங்காத உள்ளம் சேர உள்ளம். அந்த உள்ளத்தில்—''

''வேலவா! வீரம் என்பது நெறியோடு நடப்பவர்களிடத்திலேதான் செல்லும். ஆனால் எத்தனை ஆற்றல் நிரம்பிய போர் வீரனையும் மறைவிலிருந்து ஒருவன் தாக்க முடியும் அல்லவா? பின்புறமாக வந்து ஒருவன் திருட்டுத்தனமாய் முதுகிலே வாளைச் செருகினால் எந்த வீரன்தான் என்ன செய்ய முடியும்?''

இப்படிச் சொல்லிவிட்டு ஒரு வினாடி



மௌனமாக இருந்த சேரலாதன் மறுபடியும் சொல்லுவான்:

''வேலவா! வெள்ளைத் தீவில் இயந்திரப் பொறிகள் அமைந்த கற் கோட்டை ஒன்று இருப்பதாகவும், சூழ்ச்சிகள் நிரம்பிய இடம் அது என் றும் பலரும் சொல்லுகிறார்கள். இந்த ஆற்றல்கள் எல்லாம் கடம்பர்களுக்கு இருப்பதனால்தான் அந்தக் கொள்ளைக் கூட்டத்தார்களை அரசர்கள் என்று நம் முன்னோர்களும் ஒப்பியிருக்கின் றனர்! வலிமை பொருந் திய நன்னர்கள் கூட இந்தக் கடம்பக் குறும் பர்களின் உறவை எதற் காக நாட வேண்டும்? நீயே ஆராய்ந்து பார்!''

மறுபடியும் மோனம். பிறகு வேலவன் கோதை பேசினான்:


''வெற்றி வேந்தே! தாங்கள் சொல்வதே அடிப்படையான உண்மை. ஏதோ நுட்ப மாக இந்தக் கடம்பர்கள் சில வேலைகள் செய்து வருகிறார்கள். எதற்கும் அவர்களுடைய கோட் டைக்கு உளவு சென்று பார்த்தால் தான் உண்மை நிலை புரியும்.''

''ஆமாம். அறிவுக் கூர்மையோடும் நிகரற்ற திறமையோடும் செய்து முடிக்க வேண்டிய உளவு அது. அதனால் தான் உன்னை இப்போது தனி யாக அழைத்தேன்!''

இந்தச் சொற்களைக் கேட்டதும் வேலவன் கோதைக்குப் பெருமித மும் நன்றியுணர்வும் உடம்பு முழுவதும்படர்ந் தன. மெய் சிலிர்த்தது.

''வேந்தே! இவ்வளவு பெரிய அரசியல் சுற்றத் தார்களிலே தங்களுடைய நம்பிக்கை யும் பேரன்பும் இந்த எளிய தொண் டனை வந்து அடைந்தது கண்டு தோள் விம்முகிறது. உள்ளம் பொங்கு கிறது!''

''வேலவன் கோதை! எளிய தொண் டன் என்று உன்னைச் சொல்லிக்கொள் ளாதே. வழி வழியாகச் சேர மன்னர் களுக்குச் சம்பந்திகள் நீங்கள். உன் தந்தை இப்போது இருந்தால் இந்தக் கொற்றவை விழாவில் அவருக்குச் சம்



பந்தி மரியாதைகள் செய்யும் கடமையே எனக்கு உண்டு!''

பளீர் என்று, ஆனால் வணக்கம் மிகுந்த குரலில் மறுமொழி சொன்னான் வேலவன் கோதை.

''எந்த மரியாதையும் இதற்கு ஈடாகாது அரசே! எந்தச் சம்பந்திச் சிறப்பும் தாங்கள் இப்போது எனக்கு வழங்கும் பெருமைக்கு இணையில்லை. சேரப் பேரரசின் நம்பிக்கையை, எதிர் கால வெற்றிகளை அல்லவா என் புயங்களில் சுமத்துகிறீர்கள். என் தந்தை இருந்தால் இதைவிட அவருக்கு மகிழ்ச்சி தரக் கூடிய சிறப்பு வேறு என்ன உண்டு?''

''வேலவா! உன் தந்தை எங்கும் போய்விடவில்லை. சேரப் பேரரசு தன்னுடைய பகைவர்களையெல்லாம் வீழ்த்தி வெற்றி வாகை சூடுகிறவரை அவர் நமக்கு உறுதுணையாக, கண்களுக்குத் தெரியாமல் நம்முடனேயே இருக்கிறார். அதோடு நாம் விழாக் கொண்டாடி வணங்கிய கொற்றவை, நமது குலதெய்வம், உன்னுடன் உனக்கு முன்னே வருகிறாள் என்பதும் நினைவிருக்கட்டும்!''

வேலவன் கோதை சேரலாதனின் எதிரே அந்தப் பெரிய பாறையில் மேனி தோயும்படி வணங்கினான்.

சேர மன்னன் சொன்னான்:

''ஆயம் என்ற சொல்லுக்கு எத்தனையோ பொருள் உண்டு. என்றாலும் நமது அரசியலில் மிகப் பெரிய இரகசியத்துக்குத்தான் ஆயம் என்ற சொல்லை நாம் கையாளுகிறோம். எனவே ஆயத்தில் எல்லாம் பெரிய ஆயமாக உனது பயணம் அமைய வேண்டும். அவ்வளவுதான் நான் சொல்லுவேன்!''

* * *



கண் இமைகளை மூடிய வேலவன் கோதை மெதுவாகக் கண் திறந்து தனக்கு முன்னே நின்ற அழகுக் கன்னியை மறுபடியும் பார்த்தான்.

கடம்பர்களை வேரோடு அழிப்பதற்கான வழிகளைக் கண்டு வரவேண்டும் என்ற நோக்கத்துடன் அயிரை மலையை விட்டுக் கிளம்பி, மலைகளையும், காடுகளையும் கடந்து, கடற் கரைக்கு வந்து மிகச் சிறிய கடல் மிதவை ஒன்றைத் துணையாகக் கொண்டு துணிகரமாக நள்ளிரவிலே கடல் அலைக்குள் புகுந்தது இப்போது நினைவு வந்தது.

ஆம்; மிதவையிலே ஏறி மிதந்து கொண்டே வெள்ளைத் திவலை நோக்கி, தானும் தனது துணிவுமாகவே வந்தான் வேலவன் கோதை. அந்தப் புயற்காற்றை அப்போது அவன் எதிர் பார்த்தானா?

இமைகளை மறுபடியும் இறுக மூடினான் வேலவன். எதிரே இருந்த அழகி மறைந்தாள். இப்போது அவன் கண் முன் ஒரே நீலக் கடல், கருநீலக் கன்னங்கரிய அஞ்சனக் கடல்! கடல் முழுதும் கருப்பு. வானமெங்கும் இருட்டு! மேகங்கள் மூடியதால் மனம் புழுங்கி ஆகாயமே கண்ணீர் விட்டது. அதுவும் கருப்புக் கண்ணீர்! பிறகு? அதைத் தொடர்ந்து புயல். மழை. சுழல் காற்று. அலைக் குமுறல். கடலின் கொந்தளிப்பு. இருட்டுக்குள்ளே ஒரே அரக்க ஊழி! மேகங்கள் மோதின. இடிகள் இடித்தன. அலைகள் சீறின. காற்று கூச்சலிட்டது. உலகமே நடு நடுங்கிற்று.

இதோ! படார் என்று ஓசை. ஐயோ! பெரிய கடற்பாறை ஒன்றிலே மிதவை மோதிவிட்டது. என்ன ஆயிற்று? மிதவை சிதறி விட்டதா, என்ன?

இருளில் ஒன்றுமே தெரியவில்லை. வேலவன் மிதவையிலிருந்து அலைகளுக்குள்ளே தூக்கி எறியப்பட்டான். ஆனாலும் உள்ளத்துக்குள்ளே அத்தனை காற்றிலும் அத்தனை இருட்டிலும், ஒரு சிறிய அகல் விளக்கு, சின்னஞ் சிறிய அகல் விளக்கு வேலவனுடைய இருண்ட இதயத்துக்குள் சுடர் விட்டது! கொற்றவை கோயிலின் கருவறை விளக்கா அது! அணையாத நந்தா விளக்கு அல்லவா அது!

உள்ளத்தின் அந்தச் சுடர் ஒளியிலே வேலவன் நீந்த ஆரம்பித்தான். கையும் கால்களும் சோர்ந்து போகும்வரை நீந்தினான். பிறகு அலைகளுக்குமேலே மல்லாந்து மிதந்தான். பிறகு மறுபடியும் நீந்தினான்.

சேர நாட்டு நாடக அரங்குகளிலே கூத்து நடப்பதைப் பார்த்திருக்கிறான் வேலவன் கோதை. அதிலும் ஊழிக் கூத்தை விறலியர்களும், ஆடலர்களும் சேர்ந்து ஆடிக் காட்டுவார்கள். சில நாழிகை நேரம் அரங்கின் மீது பதினான்கு உலகங்களும் உருண்டு திரண்டு பந்தாடிச் சிதறிக் கிறங்கி ஒடுங்கும். அதன் பிறகு அத்தனை ஆட்ட பாட்டங்களும் நின்று அந்த அரங்கிலே ஒரு விநாடி ஒரு தெய்வ அமைதி நிலவும். மறு விநாடி இனிமையான புல்லாங்குழலும், செங்கோட்டு யாழும் ஒன்றை

யொன்று அணைத்துக் கொண்டு இணை யொலியாகப் பின்னித் தவழும். உதயப் பண் உள்ளத்தையும் உயிரையுமே கூடி முயங்கும்!

இப்போது அப்படி யிருந்தது. சற்று நேரத்துக்கு முன் ஊழிக் கூத்து ஆடிய புயற்காற்று ஒய்ந்து விட்டது. மறு விநாடி வானம் தெளிந்தது. அதோ விண் மீன்கள்! நிலவும் எழுகிறது! முழு நிலவு! சோர்ந்து ஒய்ந்த வேலவன் கோதையின் கண்கள் அந்த நிலவின் ஒளியில் மயங்குகின்றன. மல்லாந்து மிதக்கிறான். அலைகள் அவனைக் கரை யோரமாகக் கொண்டு செல்கின்றன. அதோ நிலவின் ஒளியில் மணற் பரப்பு தெரிகிறது. ஆனால் வேலவனுக்குத் தலை சுற்றுகிறது. கண்கள் இரண்டும் இமைகளுக்குள்ளே செருக முனைகின்றன.

ஒரு பெரிய அலை எழுந்து புறப்பட்டு ஓங்கி நிமிர்ந்து புரண்டு வந்து மணல் திட்டிலே போய்ச் சரிந்து அடிக்கிறது. வேலவன் கோதை அந்த அலையினால் தூக்கப்பட்டு மணல் திட்டிலே வந்து சரிந்து விழுகிறான்.

கண்களைத் திறந்தான். கால்களை மடக்க முயல்கிறான். முடியவில்லை. கைகள்? அவற்றை மடித்து இழுக்க முனைகிறான். நகர்த்த முடியவில்லை.

அதோ அடுத்த அலை! ஐயோ!- உள்ளே — கடலுக்குள்ளே— மறுபடியும் தன்னை இழுத்துச் சென்றுவிடுமோ?

வேலவன் கோதை அண்டங்களையே பெயர்த்து எடுத்து எறிபவன் போல ஆண்மை முழுதும் கொண்டு கைகளைத் திமிறினான். இந்தப் பெரிய அலையின் வேகம் அவனை இன்னும் மேலே தூக்கி இப்போது கரைமீது சற்றுத் தொலை விலே எறிந்தது. உருண்டான். உருண்டு உருண்டு மணல் திட்டைக் கடந்து மணற் குன்றின் உச்சியைப் பற்றினான்.

இனிக் கவலை யில்லை! அடுத்த அலை இவனை வந்து தொட முடியாது! மறுபடியும் புரண்டான். அலைகளின் ஆட்சி எல்லையைக் கடந்து, மேல் மணலின் பரப்பிலே உருண்டு புரண்டு சென்று எழுந்து நிற்க முயன்றான். ஆனால் இனி அந்த உடம்புக்கு வலிமை இல்லை. ஒரு துளியும் இல்லை!

மணற் பரப்பிலே வானத்தை நோக்கியவாறு மல்லாந்து விழுந்தான்.

நீல வானில் பஞ்சு மூட்டைகளாக ஓடும் முகிற் கூட்டங்களைப் பார்த்து வெகு தொலைவிலிருந்து கண் சிமிட்டின விண்மீன்கள் ! அவற்றையும் வெள்ளைத் திவையும் பார்த்து முழு நகை செய்தவாறு மிதந்து சென்றது வெண்ணிலவு!



வேலவன் கோதைக்கு நினைவுச் சுழலிலே அத்தனை காட்சிகளும் வந்து சுழன்றன. கண்களைத் திறந்தான். இப்போது அவனுடைய மேனி முழுதும் கம்பளிப் போர்வையால் மூடப்பட் டிருந்தது. மணலின் பரப்பிலேதான் படுத்திருந்தான். ஆனாலும் கம்பளித் துண்டு கொண்டு காலிலே வெப்பம் காணும்படி சூடேற்றிக் கொண்டிருந்தான் ஒரு முதிய தோழி!

நிலவுக் கன்னி? வெண்ணிலவு முகமும் மின்னிப் புரளும் மீன் போன்ற கண்களும் கொண்ட அந்த அழகுக் கன்னி அருகிலே அமர்ந்து, குவளையி லிருந்த கனிச் சாற்றை இப்போது தன் கையாலேயே அவனுக்குக் கொடுத்தாள்.

வேலவன் கோதை எழுந்து அமர்ந்தான். அந்தப் பொற் குவளையிலே இருந்த பழச் சாற்றின் ஆற்றலா, அல்லது அதை ஊட்டினாளே அவனுடைய அமுதக் கரங்களின் ஆற்றலா? இந்த இரண்டில் எதற்கு இத்தகைய உயிரூட்டும் அமுத ஆற்றல் இருந்தது?

வேலவன் கோதை முகத்தைத் திருப்பி மணற் பரப்பில் தனக்கு அருகிலே பார்த்தான். வீரர்கள் அணியக்கூடிய ''வட்டுடை'' என்னும் ஆடை ஒன்று அவனுக்காக அங்கே வைக்கப் பட்டிருந்தது.

நிலவு மறைந்து கீழ் வானத்திலே ஒளி மணல் சிதறத் தொடங்கியது.. வேலவன் சுற்றும் முற்றும் பார்த்தான். அவனுக்குப் பின்னால் அந்தக் கடம்ப மரத்தின் பின்னணியிலே மாபெரும் கோட்டையும் அரண்மனையும் நின்றன. அவற்றுக்கு அப்பால் வானை அளாவிய பல மாடங்கள் தெரிந்தன. மறு பக்கம் திரும்பினான். கடலின் கரையை விளிம்பிட்டுக் காட்டியது போல வரிசையாகப் பல குடிசைகள். ஆரையும் தாழையும் கொண்டு வேய்ந்தவை. அவற்றுக்கு அருகிலே மிதவைகளும் நாவாய்களும் கலங்களும் தெரிந்தன. இன்னொரு புறம் பார்த்தால் ஒரே நொச்சி மரங்கள்!

காலைப் பறவைகளின் மெல்லொலி கேட்கிறது. வானிலே விநோத ஒலிகளை எழுப்பிச் செல்லும் பறவைகள், கடலை நோக்கிச் சென்றவை, திடீரென்று ஏதோ திசை மாறியது போலச் சிறகை யடித்து வட்டம் சுற்றின. எங்கிருந்தோ எக்காளத்தின் ஒலி கேட்டது.

அந்த ஒலி கேட்ட மறு கணம் வேல வனுக்கு அருகிலே இருந்த வடிவழகி சரேல் என்று எழுந்து நின்ருள்.

''என்ன இது! ஏன் இப்படி எழுந்து விட்டீர்கள்? தீவின் எந்தப் பகுதியிலே நான் இருக்கிறேன்? எனக்கு இத்தகைய உதவியைச் செய்த நீங்கள் யார்? இதை யெல்லாம் எனக்கு உணர்த்தவில்லையே நீங்கள்!''

''நீங்கள் இருப்பது வெள்ளைத் தீவின் கன்னிமாடத்து முகப்பிலே. உங்களுக்கு ஏதோ முடிந்த அளவு உதவியைச் செய்யும் வாய்ப்புப் பெற்றவள் இந்தத் தீவின் அரசனுன கடம்ப வேந்தனின் மகள் நீலவல்லி!''

''என்ன! நீங்கள் கடம்பர்களின் இள வரசியா? உங்கள் பெயர் நீலவல்லியா?''

வேலவனுக்கு நெஞ்சை அடைத்தது. எந்தக் குறும்பர்களை அடியோடு அழிப் பதற்காக வேவுகாண வந்திருக்கிருனே, அதே கடம்பர்களின் இளவரசி, மன் னன் மகள், அவள்!

''இளவரசியே! எனக்கு நீங்கள் இந்த நேரத்தில் உணர்வூட்டி, உயிருட்டி யிரா விட்டால் நான் இந்தத் தீவிலே மாண்டு மடிந்தல்லவா போயிருப்பேன்! நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்? மயங்கி விழுந்து கிடந்த என்னை எப்படி நீங்கள் கண்டீர்கள்? நீங்கள் செய்த இந்தப் பேருதவிக்கு...''

வேலவன் அந்தச் சொற்களை முடிப் பதற்குள் கடலுக்குள் இருந்து முர சொலி கேட்டது.

''வீரரே! பேசுவதற்கு இனி நேர மில்லை. நாங்கள் இருவரும் இப் பொழுதே ஓடிச் சென்று அதோ தெரி கிற முற்றத்தின் சிறிய வாசலில் நுழைந்து கன்னிமாடத்திற்குள் மறைந்துவிடவேண்டும்! மன்னர் வரு கிருர் என்பதற்கு முன்னறிவிப்புக் கேட் கிறது. இன்னும் சற்று நேரத்தில் கோட்டை வாசலைத் திறந்து கொண்டு வீரர்கள் ஓடிவருவார்கள், மன்னரை வரவேற்க! மேலைக் கடலிலே தமது படையுடன் சென்ற எங்கள் அரசர், வென்ற பொருள்களோடு திரும்பு கிருர். முன்னேடிப் படகிலிருந்து வாகை முரசு ஒலிக்கத் தொடங்கி விட்டது! கோட்டை வாசல் திறக்கும் முன்பே நீங்கள் ஓடிச் சென்று தப்பித் துக்கொள்ளுங்கள். உங்கள் முகத் தைப் பார்த்ததுமே நீங்கள் வெள்ளைத் தீவுக்குப் புதியவர் என்று புரிகிறது. எங்கள் கடம்பர்கள் கண்ணில் பட்டால் எதுவும் நேரும். ஆகையால் உடனே தப்பித்துக் கொள்ளுங்கள். நாங்கள் இனி உங்களைச் சந்திப்பது அடுத்த முழு நிலவிலேதான். அன்றுதான் மறுபடியும் மன்னர் கடல்மீது படை செலுத்துவார். அதுவரை எங்கள் கன்னிமாடத்தின் கத வுகள் பூட்டியே இருக்கும்!''

வேலவன் கோதைக்கு என்ன பேசு வது என்று ஒன்றும் தோன்றவில்லை. உடம்பு மட்டுமே இயங்கியது.

''வீரரே, இந்த விநாடியே ஓடிச் செல்லுங்கள். தெற்குப் பக்கமாகச் சென்று அந்த நொச்சி மரங்களைத் தாண்டிக் கிழக்கிலே திரும்பினுல் ஒரு சிறிய பாறைப் பரப்புத் தெரியும். தென்னை மரங்களும், மாமரங்களும் பலா மரங்களும் அடர்ந்த ஒரு சோலை யும், அருகில் ஒரு குகையும் காண் பீர்கள். ஒரு சமணத் துறவி வாழ்ந் திருந்த இடம் அது. ''கொல்லா விரதம்'' குடிகொண்டுள்ள இடம் அந் தக் குகை. எனவே கவலையின்றிக் காயும், கனியும் கிழங்குகளும் உண்டு இனிய சுனையும், குளிர்ந்த சோலையு மாக உள்ள அந்த இடத்தில் சமணக் குகையிலே தங்கி, அடுத்த முழுமதி வரை காத்திருங்கள். நாங்கள் வந்து உங்களைச் சந்திக்கிருேம்.''

இந்தப் பெண்ணரசியின் குரலிலே என்ன மந்திரம் இருக்கிறது? எந்த வீரனையும் கீழ்ப்படியச் செய்யும் ஒரு ஆற்றல், கீழ்ப்படியும்போதே அதில் ஓர் இன்பம் உண்டாகும்படியான ஆற் றல், அந்த ஆற்றலுக்குப் பெயர் என்ன? வேலவன் கோதைக்கு அது ஒரு புதிய அனுபவமாக இருந்தது.

முரசொலி மீண்டும் ஒலித்தது.

முகிற் கூட்டத்துக்குள்ளே துள்ளி மறையும் இரண்டு மின்னல் கீற்று களைப் போல அந்த அழகுக் கன்னியும் அவளுடைய தோழியும் கோட்டையின் வாசலுக்குள்ளே ஓடி மறைந்தார்கள். அப்படி அவர்கள் வேகமாகத் துள்ளிய போது இளவரசி நீலவல்லியின் கூந்தலி லிருந்து நறுமணம் கமழும் ஒரு நீல மலர் நழுவி மணற் பரப்பிலே வேல வன் கோதைக்கு எதிரிலே விழுந்தது. நெஞ்சை அள்ளுகிற வாசனையோடு கூடிய அந்த நீலமலரைக் கையிலே எடுத்துக் கொண்டான் வேலவன் கோதை! மறுகணம் வட்டுடையணிந்த வீரனுக அங்கிருந்து கிளம்பினுன்.

முரசு மூன்ரும் முறை ஒலித்தது. உடனே கோட்டையின் வாசற் கதவுகள் திறந்தன.

கடம்ப மரத்தின் பின்னல் ஒரு புதருக்குள் மறைந்து, அங்கிருந்து தெற்குப் பக்கமாக ஓடி மறுபடியும் கிழக்கிலே திரும்பினுன் வேலவன் கோதை! (தொடரும்)

[ரயில் ஒன்று தாமதமாக வந்தால் அலுத்துக் கொள்வதும், ரயில்வே நிர்வாகத்தைச் சபிப்பதும் நமக்கு எளிதாய் இருக்கிறது. ஆனால் ரயில்வே ஊழியர்களில் எத்தனை பேர் எவ்வளவு தாக்குதல்களைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது! ரயில்வேயிலேயே பணியாற்றும் இக்கட்டுரை ஆசிரியர் ஒரு சிறு விபத்தின் பின் விளைவுகளைப் பல்வேறு கோணங்களில் நின்று படம் பிடித்துக் காட்டுகிறார்.

— ஆசிரியர்]

"பிரயாணிகள் கவனிக்கவும்: கும்பகோணம், மாயவரம், விழுப்புரம் வழியாக, சென்னை எழும்பூர் செல்லும் திருவனந்தபுரம் பாசஞ்ஜர், சுமார் ஆறு மணி பத்து நிமிஷங்களுக்கு இரண்டாவது பிளாட்பாரத்தில் எதிர்பார்க்கப்படுகிறது."

"இன்றைக்கும் இந்த வண்டி தாமதமாகத்தான் வருகிறதா? ஆமாம். நோட்டீஸ் போர்டில் அதுதான், 'வண்டிகள் தாமத அறிவிப்புப் பலகையில்' போட்டிருந்ததே? ஐந்து முப்பத்தைந்துக்கு வரவேண்டிய வண்டி ஆறு பத்துக்கு வருமாம்! அதாவது, முப்பத்தைந்து நிமிஷம் தாமதம்!"

"ஏன் ஸார், மெட்ராசுக்குச் சரியான நேரத்தில் போயிடுவானா?"

"சந்தேகம்தான். அச்சரப்பாக்கத்தில், இதை நிறுத்தி விட்டு, மற்ற எக்ஸ்பிரஸ் வண்டிகளையெல்லாம் ஓவர்-டேக் பண்ண விட்டுவிடுவார்கள். இவன் ஆய்ந்து ஓய்ந்து பத்து மணிக்குக் காலடி வைப்பான் எழும்பூரில்!..."

"இப்பொழுதெல்லாம் அப்படியில்லை, சார். விழுப்புரத்தில் மின்சார இஞ்சின் கோக்கிறான். அப்புறம் அசுர வேகம்தான். எவ்வளவு லேட்டானாலும் அதை மேக்-அப் பண்ணிடுவான்."

"யுவர் அடென்ஷன், ப்ளீஸ்... தி ட்ரிவாண்ட்ரம் பாசஞ்சர், பௌண்ட் ஃபோர் மெட்ராஸ் எக்மோர், இஸ் எக்ஸ்பெக்டெட்டு....டு..."

அறிவிப்பு அவ்வளவுதானா? ஒலி பெருக்கியில் கோளாறா? இல்லை,



டி. எஸ். ஜே.

அறிவிப்பாளர் 'அம்போ' என்று விட்டு விட்டுப் போய் விட்டாரா?...

''அவருக்கு என்னய்யா கவலை? வண்டிக்காகக் காத்துக் கொண்டிருப்பது நாம்தானே? அதனால்தான் வண்டி பிளாட்பாரத்தில் வருகிறவரையில் எதிர்பார்த்துக் கொண்டேயிருங்கள் என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்!...''

''பிரயாணிகள் கவனிக்கவும்....''

'அட வந்துட்டார், ஐயா!... இந்தத் தடவை எந்த இடத்தில் நிறுத்திவிட்டுப் போவாரோ?'

''சென்னை எழும்பூர் வரை செல்லும் திருவனந்தபுரம் பாசஞ்சர் சிறு விபத்து காரணமாக, பூதலூருக்கு அருகில் நிறுத்தப்பட்டிருக்கிறது. ரயில்பாதை சீர் செய்யப்பட்டதும், வண்டிகளின் நேர் போக்குவரத்து ஆரம்பமாகும்...''

'ஐயய்யோ!...விபத்தா? எங்கே, எங்கே?''

'எத்தனை பேர் செத்தார்களோ?'

'ஏங்க, எந்த வண்டிங்க வுளுந்திட்டுது?'

'நீர் ஒண்ணு! வண்டி விழுந்ததாக யார் ஐயா, சொன்னார்கள்? ஏதோ சிறு விபத்து என்றுதானே அறிவித்தார்கள்?'

'அப்படித்தான் சொல்லுவாங்க. ஒரு வண்டி பூராக் கவிழ்ந்து போச்சுன்னு சொன்னால், கேட்கிறவங்களுக்கு மாரடைப்பு வந்துடாதா?'

'அப்போ ஆயிரம் பேர் கூண்டோடு கைலாசம் என்று சொல்லுங்கள்.'

'அதற்கு மேலேயும் இருக்கலாம்!'

''குட் மார்னிங். நீங்கதானே டிபூடி ஏ. எஸ். எம்.?'

'ஆமாம்....'

'என்ன ஸார், ஆக்ஸிடெண்ட்?'

'ரொம்பவும் சாதாரண விபத்துத்தான். நூற்றிப்பத்தாம் நெம்பர் வண்டியின் எஞ்சின் பாதையிலிருந்து இறங்கி விட்டது.'

'விபத்திஞல் அதிக மரணமோ?'

'மன்னிக்கவும். ஒரு ஈ காக்காய்க்குக்கூட ஒரு காயம் இல்லை. இஞ்சின் மட்டும்தான் கீழே இறங்கியிருக்கிறது. பிரயாணப் பெட்டிகள் எல்லாம் பத்திரமாக இருக்கின்றன.'

'வண்டி எப்போ வரும்?'; 'இன்னும் ஒரு மணி நேரம் ஆகுமா?'; 'நான் வெளியே போய்ச் சாப்பிட்டுவிட்டு வரலாமா?'; 'ஏன் சார், இந்த வண்டியில் போஞல், சென்டிரலில் பங்களூர் வண்டி கிடைக்குமா?'...

பூதலூரில் விபத்து



'நாளைக் காலை எட்டு மணிக்குத் திருவல்லிக்கேணியில் முகூர்த்தம். நான் அவசியம் போகணும். என்ன சார் செய்வது?'; 'ஒரு பெரிய சாபக்கேடு! இந்த வண்டி நல்ல நாளிலேயே குறித்த நேரத்துக்குப் போகாது. இப்போ கேட்கணுமா? கடிகாரத்துக்குப் பதில் காலண்டரையே பார்க்க வேண்டியதுதான்'; 'அது வருகிறவரையில் நாகூர் வண்டி காத்திருக்குமா?'

அலுவல் நிலைய அதிகாரியின் அறையிலுள்ள எல்லாத் தொலைபேசிகளும் அடித்தொண்டையிலிருந்து அலறுகின்றன. உதவி நிலைய அதிகாரியும், டிரெயின் கிளார்க்கும் ஒவ்வொரு தொலைபேசியை எடுக்கிறார்கள்.

'எஸ் ஸார்... வெரி குட் ஸார்... வெரி வெல், ஸார்...' — ஏ. எஸ். எம். டெலிபோனை வைக்கிறார்.

'மாரியப்பா, ஷண்டிங் இஞ்சினை ஐந்தாவது ரோட்டுக்குக் கொண்டு வா... ஹலோ, ஹலோ.... ஈஸ்ட் கேபினு?... ஷண்டிங் இஞ்

பின் ஸைடிங்கில் நிற்கிறது. அஞ்சாவது ரோட்டுக்கு விடுங்கள். இதோ நானும் யார்டுக்குப் போகிறேன்...'

தலைமை நிலைய அதிகாரி அறையில் நுழைகிறார். வெளியில் கூடியிருந்த கூட்டம் அவரைச் சூழ்ந்து கொள்கிறது.

'நீங்கள், இங்கிருந்து தனியாக ஒரு 'ரேக்'கைக் கிளப்பலாமே மெட்ராசுக்கு?'

'காரேஜுகள் வேண்டுமே?'

'பெரம்பூரில் செய்து குவிப்பதாகப் பிரமாதப்படுத்துகிறீர்களே?'

'மேலும் இந்த வண்டியின் இஞ்சினுடைய முன்புற நான்கு சக்கரங்கள் மட்டுமே இறங்கியிருக்கின்றன.—அவைகளைத் தூக்கி வைத்து விட்டால் வண்டியைக் கிளப்பிவிடலாம். புதிதாக ஒரு ரயிலை இங்கிருந்து கிளப்புவது என்றால், இஞ்சின் வேண்டும்.'

'லோகோ ஷெட்டில் நாலைந்து எஞ்சின்கள் புகைகிறது சார்!'

'அந்த ஒரு காரணத்தாலேயே அவைகளையெல்லாம் உடனே வண்டியில் பூட்டிவிட முடியும் என்று சொல்ல முடியாது, மிஸ்டர்!'

'கிர்....ர்....ர்....ரிங்'

'என்ன ஜோஸப்? கூப்பிடுகிறானே, கேளுங்கள்.' அவர் டெலிபோனை எடுக்கிறார்.

'தஞ்சாவூர். எஸ், ஸார்... மராமத்து ஸ்பெஷல் புறப்படணுமா? சரி... கார்டு ஏற்பாடு பண்ணுகிறேன். சரி... இன்னும் அரை மணிக்குள்தானே? ரைட்... திருச்சியிலிருந்து கிரேன் ஸ்பெஷல் புறப்படப் போகிறதா?... சரி...'

ரயில்வே சங்கு 'ஊ...' என்று விட்டு விட்டு ஐந்து நிமிஷ நேரத்துக்கு அலறத் தொடங்குகிறது. திமுதிமுவென்று ரயில்வேச் சிப்பந்திகள் ஸ்டேஷன் மாஸ்டர் அறைக்கு முன் வந்து கூடுகிறார்கள். ரயில் பாதைப் பராமரிப்புத் துறையினர், மருத்துவத் துறையினர், பெட்டிகளைப் பழுது பார்ப்போர், மின்சார இணைப்புக் கொடுப்போர், தொலைபேசித் துறையினர்....

டாக்டர், இஞ்சினீயர், டிரெயின் எக்ஸாமினர், இன்ஸ்பெக்டர், கபேதார், அலுவலில் இல்லாத ஸ்டேஷன் மாஸ்டர்கள், கார்டுகள், மேஸ்திரிகள், பிட்டர்கள், காங்கிக் கூலிகள், கம்பௌண்டர், போலீஸ் அதிகாரி...

'ஹலோ... ரயில்வே என்கொயரி?'

'சார், என்ன சங்கு ஊதுகிறது? ஏதாவது ஆக்ஸிடெண்டா?'

'ஆமாம்.'

'எந்த வண்டிக்கு? சாவு அதிகமோ?'

'மன்னிக்கணும்...சென்னை போகிற திருவனந்தபுரம் பாசஞ்சரின் இஞ்சின் பாதையை விட்டு இறங்கிவிட்டது. ஓர் ஆளுக்குக்கூடக் காயம் இல்லை...'

'சரி சார்.'

'என்கொயரி?... ஓர் ஆப்ளிகேஷன்.... வந்து என்னோட சித்தப்பா பிள்ளை — கிட்டப்பான்னு பேரு—இன்னிக்குப் பாசஞ்சர்லே வரதாக் கடிதம் போட்டிருக்கான். அநேகமா வந்தாலும் வருவான். அந்த டிரெயினுக்குத்தான் ஏதோ ஆக்ஸிடெண்டாமே? கொஞ்சம், ...ரயில்வே கண்ட்ரோல் போன் வழியா விசாரிச்சு, அவன் சௌக்கியமா இருக்கானான்னு கேட்டுச் சொல்லுங்களேன்...'

'வெறும் தண்டம்! ஓர் ஊழியராவது உண்மையாக உழைக்கிறதில்லை.... கிராக்கிப்படி, சம்பளப் பணம், மலிவு விலைக் கடை என்று கேட்கிறீர்களே தவிர, வேலை செய்யணும் என்கிற எண்ணமே இல்லை.'

'அப்படியா? நீங்கள் என்ன உத்தியோகம் பார்க்கிறீர்கள்?'

'நான் ஏன் கைகட்டிச் சேவகம் பண்ணறேன்? பிஸினஸ் செய்கிறேன், ஐயா... ஷாப் வியாபாரம்....'

'அதுதான் கேட்டேன்.!... போன மாசம் உங்கள் கடையில் ஹார்லிக்ஸ் கேட்டேன். வாய் கூசாமல் பத்து ரூபாய் கேட்டீர்கள், பத்து ரூபாய். ரசீது மட்டும் ஐந்து ஐம்பதுக்குத் தந்தீர்கள்!'

'அட போய்யா. உலகம் முழுக்கக் கெட்டிருக்கு.'

'ரயில்வேக்காரனும் இந்த உலகத்தில் ஓர் அங்கம்தான். அவனை ஸ்பெஷலா குற்றம் சாட்டுவதிலே அர்த்தமில்லை. இது என் அபிப்பிராயம்.'

'ஹலோ, கண்ட்ரோல் டி. ஓ. எஸ். பேசுகிறேன். ப்ரேக்-டௌன் ஸ்பெஷல் எங்கே இருக்கிறது?'

'ஆறு நாற்பத்தெட்டுக்குத் திருவெறும்பூரில் தூருவாகும்.'

'ஆல்ரைட்....அந்த ஸ்பெஷலின் இஞ்சினைக் கொண்டு பிரயாணப் பெட்டிகளைக் கழற்றி, சோளகம்பட்டிக்கே கொண்டுவந்துவிடலாம்.'

'எஸ். ஸார்.'

'இரண்டு ஸ்டேஷன்களுக்கு நடுவில் அத்தனை பிரயாணிகளும் தவித்துப் போவார்கள். வந்து?... 'ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்டி'ல் யார் இருக்கிறார்கள்?'

'நேரே பேசலாம் ஸார். கார்டிடம் இருந்த டெலிபோனை கண்ட்ரோல் ஒயருடன் இணைத்திருக்கிறது. வண்டியில், குண்டக்கல் ஏ.டி. எஸ். போய்க் கொண்டிருந்தாராம், லீவில்... அவரே அடிக்கடி டெலிபோனுக்கு வந்து செய்தி அனுப்பிக் கொண்டிருக்கிறார். இதோ அவரே பேசுகிறார்..

'ஆக்ஸிடெண்ட் ஸ்பாட் ஹியர்...'

'டி. ஓ. எஸ். ஹியர்...'

'நமஸ்காரம் ஸார்.... பிரயாணிகளுக்குச் சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணினால் நல்லது...'

'...பண்ணியாகி விட்டதே?... சுமார் ஏழரை மணிக்குத் திருச்சி ஜங்ஷனிலிருந்து உணவுப் பொட்டலங்களுடன் ஒரு ஸ்பெஷல் புறப்படும். ஐந்நூறு சாம்பார், ஐந்நூறு தயிர் சாதப் பொட்டலங்களுக்கு உத்தரவு கொடுத்து விட்டோம். பாதை ரொம்ப தூரம் சீர்கெட்டிருக்கிறதோ?'...

'ஆ...மாம். சுமார் மூன்று தந்திக் கம்பங்கள் தூரத்துக்குச் சீர்கெட்டிருக்கிறது.'

'ஸ்பெஷலில் டிஸ்டிரிக்ட் எஞ்சினீயரும் வருகிறார்.'

''ரொம்ப நல்லது!''


AMRUTANJAN
Gripe Mixture
AMRUTANJAN
Gripe Mixture





இது கனவல்ல—
ஆரஞ்சு
கிரீம்தான்

ஆம், அது அசல் ஸாத்தேயின் ஆரஞ்சு கிரீம் தான். நீங்கள் எப்பொழுதும் விரும்பி ஏங்கிய மணம் இப்பொழுது உங்களுக்கு எத்தனை பொட்டலங்கள் வேண்டுமானாலும் கிடைக்கும். இன்றே வாங்கிப் பாருங்கள். குடும்பத்தினர் அனைவரும் அதை விரும்பி உங்களுக்கு அன்பு செலுத்துவர்.

ஸாத்தே பிஸ்கட் & சாக்கலேட் கம்பெனி லிட்., பூனா-2.

ஸாத்தே

பிஸ்கோத்துகள்

பொட்டலம் ஒரு இன்ப களஞ்சியம்.

சென்னை, மவுண்ட் ரோட்டில் உள்ள, ரயில்வே பொதுஜனத் தொடர்பு அதிகாரி அலுவலகம்.

'என்ன, டைப் அடித்து விட்டீரா? படியும்'

'இதோ படிக்கிறேன், ஸார். நெம்பர் 110 சென்னை நோக்கிச் செல்லும் திருவனந்த புரம் பாஸஞ்சர் வண்டியின் இஞ்சினின் மூன் சக்கரங்கள், சோளகம்பட்டி — பூ த லூ ர் ஸ்டேஷன்களுக்கிடையே இன்று மாலை சுமார் 5–30 மணிக்குப் பாதையிலிருந்து இறங்கி விட்டதால், திருச்சி — தஞ்சாவூர் பிரிவில் நேர்ப் போக்குவரத்து தடைப்பட்டிருக் கிறது. சீரமைப்பு வேலைகள் துரிதமாய் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. பிரயாணி களுக்கும் பிரயாணிப் பெட்டிகளுக்கும் சேத மில்லை. இவ்விபத்தின் காரணமாக நாளைக் காலை எழும்பூர் வரவேண்டிய மெயின் லயன் வண்டிகள் சில மணி நேரம் தாமதமாக வந்து சேரும் என்று அறிவிக்கப்படுகிறது. ஜெனரல் மானேஜர் காரியாலயத்திலிருந்து இவ்வளவுதான் நமக்குக் கிடைத்திருக்கிறது.'

'சரி! உடனே பத்திரிகைகளுக்கு அனுப்பி வையும். நகரப் பகுதியிலாவது முதலில் போடட்டும்....த்ரு ரன்னிங் ஆரம்பமானவுடன் இன்னொரு பிரஸ் நோட் அனுப்பிக்க லாம்.... மணி ஒன்பதாகிறதே. இன்னுமா பாதை சீராக்கப்படவில்லே?'

'மழை வேறு தூறிக் கொண்டிருக்கிறதாம். விபத்து நடந்த இடத்தில் இப்பொழுது மூன்று அதிகாரிகள் இருக்கிறார்கள். பெட் ரோமாக்ஸ் வெளிச்சத்தில் அநேகத் தொழி லாளிகள் வேலை செய்கிறார்கள். முதலில் இன்ஜினைத் தூக்கிப் பாதையில் வைக்க வேண்டும். அப்புறம் மெல்லமெல்ல அதைப் பூதலூருக்குக் கொண்டு வரவேண்டும்.... புதைந்து போன ஸ்லிப்பர் கட்டைகளை எடுத் துப் புதிய கட்டைகளைப் போட வேண்டும்...'

'கிரிங்...க்ரிங்...கிரிங்...கிரிங்...

'என்ன அழைப்பு?... கேளும். ஜி. எம். ஆபீஸிலிருந்து என்று நினைக்கிறேன்...'

'ஏன் ஸார், விபத்து பூதலூருக்கு அருகில்தானே?'

'ஆமாம்.'

'மாயவரம் பக்கத்திலிருந்து வருகிற வண்டிகளை இந்தத் தஞ்சாவூரில் வாங்கி நிறுத்தினால் என்ன? இதுவோ பெரிய ஜங் ஷன். பசுபதிகோவில்லேயும் பண்டார வாடையிலும் மற்ற பாசஞ்சர் வண்டிகளை மணிக்கணக்காய் நிறுத்தி வைப்பதில் என்ன லாபம்? பிரயாணிகளுக்கு எவ்வளவு கஷ்டம்?'

'மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் உங் களுடைய யோசனை மிகவும் சிறந்ததாகத் தோன்றும். ஆனால் உண்மையில் அப்படி இல்லே.ஒரு குறிப்பிட்ட வண்டியில் யாரையோ நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள். உங்கள் கவலை யெல்லாம் அந்த ஒரு வண்டியைப் பற்றித் தான். அனாவசியமாய் அது தாமதத்துக்கு உள்ளாக்கப்படுகிறது என்ற எண்ணம் தோன் றியதும், உங்களுக்குக் கோபம் வருகிறது. அது நியாயம்தான். ஆனால் ரயில்வேக்காரர் களோ எந்த ஒரு வண்டியைப் பற்றி மட்டும் இல்லாமல், எல்லா வண்டிகளைப் பற்றியும் கவலைப்பட வேண்டியிருக்கிறது. முதலில் வண்டிகளை வாங்குவதற்குப் பிளாட் பார வசதி வேண்டாமா?... வண்டிகளை எங்கே நிறுத்தி வைப்பது? எத்தனை ரயில்களை இங்கே நிறுத்த முடியும்? அப்புறம் பாதை சீராகியதும் சென்னை செல்லும் வெகு தூர வண்டிகள் வரத் தொடங்குமே? அவை களுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்க வேண் டாமா? ஆமாம். நீங்கள் யாரை எதிர் பார்க்கிறீர்கள்...?'

'...ஹி...ஹி.... என் மனைவி வருகிறாள்!'

'அப்போ உங்கள் கோபம் நியாயமானது தான்!'

'ஆக்ஸிடெண்ட் ஸ்பாட் ஹியர்.'

'யெஸ். கண்ட்ரோல் ஆபீஸ் ஹியர்.'

'இஞ்சினைத் தூக்கி வைத்தாகி விட்டது. பூதலூருக்குப் போகப் போகிறது.'

'வெரி குட். இருப்புப் பாதை?'

'கொய்ட் ஓ. கே. இன்னும் அரை மணியில் வண்டிகளை விடலாம்.'

'ஹெட் குவார்ட்டர்ஸில் துளைத்துக் கொண்டிருக்கிறார்கள். சொல்லிவிடுகிறேன்.'

"பிரயாணிகள் கவனிக்கவும்: கும்ப கோணம், மாயவரம், விழுப்புரம் வழியாகச் சென்னை எழும்பூர் செல்லும் திருவனந்த புரம் பாசஞ்சர், சுமார் பதினொரு மணி இருபத்தெட்டு நிமிஷங்களுக்கு இரண்டாம் பிளாட்பாரத்தில் எதிர்பார்க்கப்படுகிறது."

'அப்படீன்னா?'

'தஞ்சாவூருக்கு, சாயங்காலம் அஞ்சரை மணிக்கு வரவேண்டிய ரயில் ராத்திரி பதினொண்ணரைக்கு வரும் என்று அர்த்தம்!'

'நல்ல வேளை!... இப்பவாவது வருகிறதே!'



"காலேஜிலே பழைய மாணவர்கள் புது மாணவர்களைக் கிண்டல் பண்றது 'ராகிங்!' நம்ம வீட்டிலே பழைய மாட்டுப்பெண்களைப் புது மாட்டுப் பெண் கிண்டல் பண்றது இருக்கே, இதுதான் ராகிங்!"

அத்தியாயம் 6

"சிராவணம் வந்தது; சியாமளன் வாராளே?"

மேர்தா ராஜபவனத்தின் வாயிலில் பெருங் கூட்டம்.

ராவ் தூதா மக்களுக்குச் சிவப்பு நிற ஆடைகள் வழங்குகிறார். அவற்றைப் பெற்றுச் செல்லத்தான் கூட்டம் கூடியிருக்கிறது.

''தாத்தா, எனக்கு'' என்று கூட்டத்தின் பல கைகளிடையே இரண்டு மெல்லிய சிறு கரங்கள் நீட்டப்படுகின்றன.

''ஆ! மீரா, நீ ஏன் குழந்தாய் அவர்களோடு போய்க் கூட்டத்தில் சேர்ந்தாய்? இப்படி வா'' என்கிறார் தூதா ராவ்.

''எனக்கும் சிவப்புச் சேலை வேணுமே!'' என்கிறாள் மீரா.

''பேஷாக! உனக்கில்லாததா? ஆனால் அவர்களோடு நிற்க வேண்டாம். இந்தத் 'தோம்புத் துணி'யை வாங்கிக் கொள்ள வேண்டாம். உனக்கு மிக உயர்ந்த பட்டில் பொற் சரிகை போட்ட சேலை தருகிறேன். அரண்மனைக்குள்ளே வா'' என்கிறார் ராவ் தூதா.



காற்றினிலே வரும் கீதம்

ரா. கணபதி

''மாட்டேன். இவர்களோடுதான் இருப்பேன். இவர்களுக்குத் தருகிற தோம்புத் துணியைத்தான் நான் வாங்கிக் கொள்வேன்.''

''சரி, இதையும் வாங்கிக்கொள்'' என்று சிரித்தபடியே மீராவிடம் பாட்டனார் ஒரு முரட்டுத் துணியாலான சிவப்புச் சேலையைத் தருகிறார்.

மீராவின் கைகளுக்கு மேலாக ஒரு பாமர ஸ்திரீயின் இரு கைகள் நீட்டப்படுகின்றன.


ராவ் தூதாவிடம் வஸ்திரங்களை எடுத்துத் தரும் அதிகாரி விழிகளை உருட்டி அவளை உறுத்துப் பார்க்கிறார். ''சற்று முன் நீ சேலை வாங்கிக் கொள்ளவில்லை?'' என்று கோபமாகக் கேட்கிறார்.

''அப்போது சேலை வாங்கிக் கொண்டேன். இப்போது வேட்டிக்காகக் கை நீட்டுகிறேன். வீட்டுக்காரருக்கு உடம்பு சுகமில்லை. அவருக்கும் நானே வாங்கிப் போகிறேன்'' என்கிறாள் அந்தப் பெண்மணி.

தூதா ராவ், ''உன் புருஷன் உடம்பு ஈசானியின் அருளில் குணமாகும்'' என்று அன்போடு கூறிக்கொண்டே அவள் கையில் வேட்டியை வைக்கிறார்.

மீராவும் மறுபடி தனது கைகளை நீட்டுகிறாள்.

தூதா சிரிக்கிறார். ''போக்கிரிக்கழுதை! புடவையைக் கை இடுக்கில் ஒளித்துக் கொண்டு மறுபடியும் கை நீட்டு



கிறாயா? நீட்டுகிற கையில் பிரப்பம் பழம் தான் தருவேன், ஜாக்கிரதை'' என்கிறார் பொய்க் கோபத்துடன்.

மீராவுக்கு ரோஷம் பொத்துக் கொள்கிறது. முகம் குப்பென்று சிவக்க, ''நான் ஒன்றும் ஏமாற்றவில்லை. புடவைக்காகக் கைநீட்டவும் இல்லை. என்...'' மீராவுக்குக் கோபம் மறைந்து வெட்கம் உண்டாகிறது. மிகவும் மெல்லிய குரலில் ''என் வீட்டுக்காரருக்கு வேட்டி வாங்கிப் போகத்தான் மறுபடி கை நீட்டினேன்'' என்று சொல்லிக் கொண்டே புடவையையும் அங்கேயே போட்டுவிட்டு விருட்டென்று நகருகிறாள்.

சுருண்டு ஆடும் அவளது பின்னலைப்பிடித்து லாகவமாக இழுக்கிறார் தாதா. ''போக்கிரிப் பெண்ணே! புடவைத் திருட்டு செய்யவில்லை என்று நிரூபிக்க ஆசைப் பட்டு அதைவிடப் பெரிய திருட்டை வெளிப்படுத்தி விட்டாயே. தாத்தாவுக்குத் தெரியாமல் உனக்கு ஒரு வீட்டுக்காரன் வேறு ஏற்படுத்திக் கொண்டு விட்டாயா? யாரடி அம்மா அந்தக் கள்ள புருஷன்?'' என்று விளையாடுகிறார் தாதா.

பாலே மீராவுக்குச் சினம் பொங்குகிறது.

''என்ன தாத்தா, ரொம்ப ரொம்பப் பேசிக் கொண்டே போகிறீர்கள்! நான் ஒன்றும் திருட்டுத்தனமாகக் கலியாணம் செய்து கொள்ளவில்லை. எல்லாம் அம்மாவுக்குத் தெரியும். சரியாக ஒன்றும் கேட்காமலே கோபித்துக் கொள்ளுகிறீர்களே! ராஜா என்றால் இப்படி இருக்கவே கூடாது என்று அம்மா சொல்லியிருக்கிறாள்'' என்று ஒரு போடு போட்டுவிட்டு அங்கிருந்து ஓட்டமாக ஓடுகிறாள்.

ராவ் தாதா குலுங்கக் குலுங்கச் சிரிக்கிறார்.

மீரா குலுங்கக் குலுங்க அழுகிறாள் தன் அன்னையிடம்.

வஸ்திர தானம் முடிந்து ராவ் தாதா சிரம பரிகாரம் செய்து கொள்ளும்போது சந்திரமுகி மீராவையும் அழைத்துக் கொண்டு அவரிடம் வருகிறாள்.

''அப்பா, உங்களை அழைக்காமலே உங்கள் பேத்தி கலியாணத்தைச் செய்து விட்டேன். அதனால்தான் காலை அத்தனை உபத்திரவம் விளைந்து விட்டது'' என்று நகைத்துக் கொண்டே கூறுகிறாள்.

''கிழவனாகி விட்டால் அவ்வளவுதான்; வீட்டுக்காரர்களை இலட்சியம் செய்யமாட்டார்கள் என்று பெரியவர்கள் பாடி வைத்திருப்பதெல்லாம் பொய்யாகுமா? சரி, என் பேத்தியின் அகமுடையான் யார் என்று இப்போதாவது இஷ்டமிருந்தால் தெரிவிக்கலாம்'' என்று பொய் பவ்வியத்துடன் கேட்கிறார் தாதா.

''உங்கள் பேத்தியையே சொல்லச் சொல்லுங்கள். அவளாகவே பார்த்துத்தான் கலியாணம் செய்து கொண்டாள். நாங்கள் உங்களை லட்சியம் செய்யவில்லை என்கிறீர்களே. என்னையும் கூட லட்சியம் செய்யாமலேதான் மீரா அகமுடையானைத் தேர்ந்தெடுத்து விட்டாள்'' என்று கூறுகிறாள் சந்திரமுகி.

தாத்தாவிடம் கோபம் கொண்டதனால் அவருக்கு முதுகுப்புறத்தைக் காட்டிக் கொண்டு எங்கோ பார்த்தவாறு நிற்கும் மீராவிடம் சத்தம் செய்யாமல் வருகிறார் தாதா ராவ். அவளது இடுப்பைத் தன் விரல்களால் வருடிக் 'கிச்சு கிச்சு' மூட்டுகிறார்.

''போங்கள், தாத்தா!'' என்று கூறியவாறு சிரிப்பை அடக்க முயன்ற மீராவை வாரி எடுத்துக் கொள்கிறார்.

''மீராக் கண்ணு, நான் 'புத்தி' போட்டுக் கொள்கிறேன், உன் வீட்டுக்காரன் யார் என்று சொல்லும்மா'' என்று கெஞ்சுகிற குரலில் கேட்கிறார்.

மீரா தரையைப் பார்க்கிறாள். அவளது பெரிய இமைகள் கண்களைக் கவிந்து மூடியிருப்பது சொல்லொணாத சௌந்தரியமாக இருக்கிறது.

மாதுளை மொட்டுப் போன்ற அவளது உதடுகளையே பார்த்துக் கொண்டிருக்கிறார் பாட்டனார்.

அவை மெல்ல அசைகின்றன. ஒவ்வோர் எழுத்தாக உதிர்க்கின்றன.

''கி...ரி...த...ர...நா...க...ர...ன் ...''

''பிடித்தாயே புளியங்கொம்பை! கிரிதர நாகரனையா கலியாணம் செய்துகொண்டாய்? சந்திரமுகி! நீயும் ரத்தனும் அதிர்ஷ்டசாலிகள்தான். தஹேஜ் கொடுத்தே ஓட்டாண்டியாகிவிடுவது நம்முடைய வழக்கம். நீங்கள் தஹேஜ் இல்லாமலே ரொம்பப் பெரிய மாப்பிள்ளையாகப் பிடித்து விட்டீர்களே'' என்றார் தாதா ராவ்.

தஹேஜ் என்றால் வரதட்சிணையும், மற்றச் சீர்செனத்திகளும். ராஜஸ்தானியர்கள் ஜம்பக்காரர்கள் என்று சொல்லுமளவுக்கு இவ்விஷயத்தில் அவர்கள் மிகையாகச் செய்வார்கள்.

''சந்திரா, இந்தச் சம்பந்தம் எப்படி ஏற்பட்டது, எப்போது நிச்சயதார்த்தமாயிற்று என்பதெல்லாம் எனக்குத் தெரிய வேண்டுமே!'' என்றார் ராவ் தாதா.

அவர் எப்போதும் போர்க்களங்களையே நாடி வந்ததால், மேர்தாவில் அதிகம் இருப்பதில்லை. அவருக்கு மீராவின் பழைய கதையையெல்லாம் — இறைவன் மறைந்தருளியிருந்தது போக — சொன்னாள், சந்திரமுகி.

''ரூபகோஸ்வாமி இங்கிருந்து போனபின் ஒரு நாள் மாடத்தில் நின்று கொண்டிருந்தோம். வீதியில் ஒரு மாப்பிள்ளை ஊர்வலம் போயிற்று. மாப்பிள்ளையையே விழி பிதுங்கிவிடும் போல் மீரா பார்த்துக் கொண்டிருந்தாள். குதிரையில் உட்கார்ந்து கொண்டு, சரம் சரமாக மாலைகளை முகத்திலும் கழுத்திலும் தொங்கவிட்டுக் கொண்டு அவன் போவது அவளுக்கு வேடிக்கையாக இருக்கிறது போலும் என்று நினைத்தேன்.

'' 'என்னடி அப்படிப் பார்க்கிறாய்? இவன் யார் தெரியுமா?' என்று கேட்டேன்.

''அதற்கு உங்கள் பேத்தி எவ்வளவு லக்கணையாகப் பதில் சொன்னாள் தெரியுமோ? 'இவன் யாரென்று தெரியும் போலவும் இருக்கிறது; தெரியாதது போலவும் இருக்கிறது' என்றாள்.


'' 'இந்தக் கதை வேண்டாம். தெரியாதென்று ஒப்புக் கொள். இவன்தான் மாப்பிள்ளை. மாப்பிள்ளையென்றால் கலியாணம் செய்து கொள்கிறவன் என்று அர்த்தம். அது சரி, கலியாணமென்றால் என்னவென்று உனக்குத் தெரியுமோ?' என்று கேட்டேன்.

''மீரா யோசிக்கலானாள். நீண்ட நேரம் யோசித்துக் கொண்டேயிருந்தாள். ஊர்வலம் நகர்ந்துவிட்டது. ஷெனாய் ஒலிகூடத் தேய்ந்து விட்டது.


''மீரா அப்படியும் யோசனையிலேயே ஆழ்ந்திருந்தாள்.

''சேடிகள் பயந்து விட்டார்கள். குழந்தையைப் பிடித்து உலுக்கினார்கள். மீரா முகத்தைத் தூக்கி என்னைப் பரிதாபமாகப் பார்த்தாள். அவள் கண்களில் நிரம்பியிருந்த நீர் காது மடல்களுக்குள் ஓடின. உதட்டைக் கோணக் கோண நெளித்துக் கொண்டாள். குழந்தையைக் கட்டிக் கொண்டேன். 'என்னடி, கண்ணு! உனக்கு என்ன செய்கிறது?' என்று கேட்டேன்.

'' 'எனக்கு ஒன்றும் செய்யவில்லை. உன் மாப்பிள்ளைக்கு இந்த மாதிரி ஊர்வலம்



7 நாட்களில் உங்களுடைய முகப்பருக்களை அகற்றி சருமத்தை பிரகாசப்படுத்தும்



- கிருமிநாசினி கலந்தது. டாக்டர்களால் சிபாரிசு செய்யப்படுவது.
- சுகந்தமான மணமுள்ளது.

Nital

MEDICATED PIMPLE CREAM

(நிடால் முகப்பரு க்ரீம்)

விலை ரு.1/90

மருந்து கலந்த நிடால் முகப்பரு க்ரீம் உங்கள் சருமத்தில் தோன்றும் பருக்களை ஒருவித அபாயமுமில்லாமல் அகற்றி விடுகிறது. சருமத்துக்கும் பாதுகாப்பளிக்கிறது. சருமத்தின் அடித்தளம்வரையில் இறங்கி கிருமிகளை நாசம் செய்து விடுகிறது. பருக்கள் உலர்ந்து உதிர்ந்து விடுகின்றன. சொட்டையோ, தடமோ பின்பு எதுவும் இருக்காது.

யௌவனத்தின் பொலிவை மிகைப் படுத்துவதாலும், சருமத்தின் சுகாதாரத்தை அபிவிருத்தி செய்து பிரகாசப் படுத்துவதாலும் நிடால் க்ரீம் ஆண்களோ, பெண்களோ, யாவருக்கும் மிகவும் ஏற்றது.

இலவசம் — தயாரிப்போருக்கு எழுதி விவரங்கடங்கிய சிறிய புத்தகமொன்றை இலவசமாக பெறுங்கள்.

தயாரிப்போர்,

கொச்சின் பாம் பிரைவேட் லிட்

நவரத்ன ஹவுஸ், மந்த்ரா ரோடு

கொச்சி - 2

சென்னை, மைசூர் மற்றும் ஆந்திர பிரதேசத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்:

M/s. கணபதி & கோ., 103-104, லிங்கி செட்டித் தெரு, த.பெ.பெ. 1986, சென்னை-1

செய்யாததுதான் எனக்குக் கஷ்டமாயிருக்கிறது' என்றாள் அவள். 'என் மாப்பிள்ளையா, யாரடி அவன்?' என்றேன், ஒன்றும் புரியாமல். உடனே இவள் கள்ளச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே இப்போது உங்களிடம் சொன்னது போல் எழுத்தெழுத்தாக, 'கி...ரி...த...ர..நா..க..ர...ன்...' என்றாள்.

''அப்புறம் என்ன? ரூபகோஸாயியிடமிருந்து இவள் எடுத்துக் கொண்ட கிரிதர விக்கிரகத்தை ரதத்தில் வைத்து ஊர்வலம் விட்டோம். உங்கள் பேத்தியின் லீலைகளைப் பார்த்தீர்களா ?'' என்று உற்சாகத்துடன் கூறி முடித்தாள் சந்திரமுகி.

ராவ்தூதாவுக்கு உற்சாகம் ஏற்படவில்லை. அவரது முகத்தில் விசாரத்தின் ரேகைகளாகச் சுருக்கங்கள் விழுந்தன. தமது மனத்திலிருந்ததைச் சீராக உருவப்படுத்திக் கொண்டு பேசலானார்.

''சந்திரா! ரத்தனும் நீயும் நிரம்பக் கிருஷ்ண பக்தியுடன் இருப்பதற்கு நான் பெருமைப்படுகிறேன். ஆனால் ராஜபுத்திரர்களின் வாழ்க்கை பக்தியோடு நின்றுவிடவில்லை; நின்றுவிடவும் கூடாது. மிலேச்சர்கள் நம் நாட்டில் புகுந்து ராஜ்யங்களை ஸ்தாபித்து வருகிறார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டும். நமது மதத்தைக் காக்க வேண்டும். நமது மதத்தைக் காப்பதற்காகவே நம்முடைய பக்தியைக் குறைத்துக் கொள்ள வேண்டும். இப்படி நான் சொல்வது உனக்குப் புதிராக இருக்கலாம். ஆனால் பக்தியின் தன்மையை நன்றாக உணர்ந்தே நான் இதைச் சொல்கிறேன். பக்தனுக்கு எந்த மதமும் விரோதமல்ல; எவனும் அந்நியன் அல்ல. ஜகன்மாதாவின் கோயிலைத் துருக்கர் இடித்துத் தள்ளி மசூதி கட்டினால் அந்த மசூதியிலும் பக்தன் ஆண்டவனைக் கண்டு விடுவான். ஆனால் இத்தகைய சமரஸ பாவம் நடைமுறை உலகுக்குப் பொருந்துமா ? நம் பாரதத்துக்கே உரிய மரபுகளையும் பண்புகளையும் நாம் அந்நியரிடம் பறி கொடுத்து நிற்பது தருமா ? நம் தருமத்தைக் காக்கவேண்டுமானால் இப்போது வீரத்தின் மூலமே அதனைச் செய்ய வேண்டும். பக்தி மிகவும் முதிர்ந்து விட்டால் அதன்பின் வீரத்துக்கும் போருக்கும் இடமில்லை. சந்திரா! நான் சொல்வது உனக்குக் கசப்பாக இருக்கலாம். இருந்தாலும் என் உள்ளத்தில் இருப்பதைச் சொல்கிறேன். ரத்தனும் நீயும் ஓயாமல் பக்தி செய்தது போதும். இந்தக் குழந்தையையும் அந்த வழியில் அழைத்துப் போக வேண்டாம்.''

''அப்பா, தாங்கள் சொல்வது சரியல்ல'' என்று ரத்தன்சிங்கின் குரல் வந்தது. டாகுர் துவாரத்திலிருந்து நேரே அங்கு வந்து சேர்ந்திருந்தான் அவன்.

''எது அப்பனே, சரியல்ல? பக்தியினால் வீரம் போகிறது; இதன் விளைவாக நமது மதரட்சணமும் பங்கப்படுகிறது என்பது சரியல்லவா ?'' என்று நிதானமாக வினவினார் தூதா.



''ஆபீஸ் விட்ட உடனேயே பரதநாட்டிய புரோகிராம் இருக்கு சார்; மன்றத்திலே !

''சரியல்லதான். ஏனெனில், இதெல்லாம் கோவிந்தனின் திருஉள்ளப்படி நடக்கிறது. நாட்டில் எந்த விகிதாசாரத்தில் பக்தியும் வீரமும் இருக்க வேண்டும் என்பதை கோவிந்தனே காலத் தேவைப்படி நிர்ணயித்துத் தன் அலகிலா விளையாட்டை நடத்துவான். ஆனால் நான் 'சரியல்ல' என்று சொன்னது இவ்விஷயமாகத் தாங்கள் கூறியதை அல்ல. மீராவை நாங்கள் பக்திவழியில் அழைத்துச் செல்வதாகச் சொன்னீர்களே, அதுதான் சரியல்ல என்றேன். ஏனென்றால் அவள்தான் எங்களைப் பக்தி வழியில் அழைத்துச் செல்கிறாள்'' என்றான் ரத்தன்.

சந்திரமுகிக்குப் புல்லரித்தது. ராவ்தூதாவும் தமது பேத்தியின் பெருமை கேட்டு உள்ளுறப் புளகிக்கத்தான் செய்தார். ஆயினும் அதை அவர் வெளிக்காட்ட விரும்பவில்லை. அவர் வந்த வழி அப்படி ! சட்டென்று பேச்சை மாற்றினார்.

''சரி, ஸாவன் தீஜ் பண்டிகையில் என் பேத்தியை எவ்வளவு நாழி ஏமாற்றுவது! ஏய்.... யாரடா அங்கே! பொன்சரிகை வேய்ந்த ஒரு ஜோடி தம்பதி வஸ்திரம் கொண்டு வா'' என்றார்.

சித்திராலங்காரமான பேழையில் மீராவுக்கும் அவளுடைய 'அகமுடையானுக்கும்' புதிய ஆடைகள் வந்து சேர்ந்தன.

''பேத்தி ராணி! தாத்தாவை மன்னித்து விட்டு இதை வாங்கிக் கொள்'' என்று கூறிப் பேழையையே நீட்டினார் தூதா.

மீரா அதைத் தொடவில்லை.

''இது வேண்டாம். காலையில் அவர்களுக்குத் தந்த தோம்புத் துணிதான் வேண்டும்'' என்றாள் தீர்மானமான குரலில்.

மீரா வேறு எப்படிப் பேச முடியும்?

''பட்டுச் சேலையைக் கிழித்தெறிந்து விட்டு, கந்தையை உடுத்து உன்னிடம் வரு

வேன்'' என்று நந்தகோபாலனிடம் மீண்டும் மீண்டும் பாடப் போகிறவள் அல்லவா அவள் ?

'ஸாவன் தீஜ்' என்பது சிராவண மாதத்தின் மூன்றாம் திதி. அன்றுதான் ஈசன் ஈசானியை மணந்ததாக ராஜஸ்தானத்தில் விழாக் கொண்டாடுவார்கள். எல்லாரும் சிவப்பு வஸ்திரம் உடுத்துவார்கள். சிவத்தின் திருமணம் என்றால் உள்ளத்திலும் உடலிலும் செம்மை பெற்றுத்தானே அதை பாவிக்க முடியும்?

நமது ஆவணிதான் ராஜஸ்தானத்தின் ஸாவன். மழைக் காலத்தை அழைத்து வரும் திருமணக் காலம் அது. வருஷ ரிது என்றால் மகிழாதார் உலகில் எவரும் இல்லை. பாலைவனப் பகுதி மிகுந்த ராஜஸ்தான மக்கள் அதை இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் வரவேற்பதில் வியப்பில்லை அல்லவா?

ஆனால் அதிக மகிழ்ச்சி என்னும்போதே அதன் நிழலாக அதிகத் துயரமும் சம்பவிக்கத்தான் வேண்டும். கார்காலத்தில் பிரிவுத் துயர் ராஜஸ்தான ஸ்திரீகளை வதைக்கும். பிரியனைச் சேர்ந்து பிரிவுத் துயர் தீர்ந்து மகிழ வேண்டும் என்று ஏங்கிப் பாடுவார்கள். அவன் வந்தவுடன் ஆரவாரம் செய்து ஆனந்தப் பாட்டுப் பாடுவார்கள்.

மீராவும் பாடினாள். மற்ற ராஜஸ்தான ஸ்திரீகளைவிடப் பல மடங்கு விரகதாபத்துடன் பாடினாள். அதே போல், தன் நாயகனை அடைந்து அவர்களைவிடப் பதின் மடங்கு ஆனந்தத்துடன் கானம் செய்தாள்.

மழையை நினைந்தவுடன் மாதவன் நினைவு வராமற் போகுமா? மேகத்தைக் கண்ட போதெல்லாம் கொண்டல்வண்ணனை நினைப்பது ஆழ்வார்களின் அநுபவம் மட்டுமல்ல. மீராவும் அதே நிலையில் உருகினாள். சிராவண மாதம் வந்தும் சியாமளன் வரவில்லையே என்று தவித்தாள். அந்த நிலையிலிருந்து மாறி, குழந்தையாகவே மழையைக் கண்டு அஞ்சினாள்; மீராவாகிப் பாடினாள்:

சியாமள மஞ்சன் மஞ்சு நிரை கண்டு
சியாமளனே! அஞ்சினேன்
உறுமிடும் மேகத்தில் குமுறும் நீர்மைக் கண்டு
உருக்ரமனே அஞ்சினேன்

பார்க்குமிட மெல்லாம் நீர்மயமாயிற்று
பார்முழுதும் பச்சைப் பரவிப் பொலிந்தது
பாருலகில் வசிக்கும் பச்சைவண்ணன் வாயிலில்
பரிதவித்து மழையில் நனைந்து நிற்கிறாள் மீரா
பரிவுநியம் கொண்டு பிரிவுக் குளிர் நீராய்!

இவள்தான் பர உலகுக்குப் போனாளோ, அவன்தான் பூவுலகுக்கு வந்தானோ, இருவரும் சந்தித்தனர்.

கண்ணன் விழுந்து விழுந்து சிரித்தான். ''மலையைப் பிடித்து மழையைத் தடுத்த கிரிதாரி நான் என்று திரும்பத் திரும்பப் பாடினாயே, கடைசியில் நீயே இப்படி மழையில் ஒரேயடியாக நனைந்து நிற்கிறாயே !'' என்று கேட்டுவிட்டு மீண்டும் சிரித்தான்.

''என் கஷ்டம் உனக்குச் சிரிப்பு. ஆனால் ரொம்பவும் ஏமாளியாக்கி விடாதே. இந்தப் பாட்டில் 'கிரிதாரி' என்று நான் முத்திரை வைக்க வில்லை'' என்று பெருமை பேசிக் கொண்டாள் மீரா.

'' ம்.... அப்புறம்.... ?'' என்றான் கண்ணன்.

''சொல்லி விடட்டுமா?'' என்றாள் மீரா மிடுக்குடன்.

''பேஷாக....'' என்று ஊக்கினான் ஆயன்.

''மழையைக் கண்டு நான் பயப்படுகிறேனே என்று நீ கேலி செய்ய வேண்டாம். நீ மழைக்குப் பயந்த கதையும் எனக்குத் தெரியும்'' என்று கூறிக் கண்ணனின் கண்களை வெற்றிப் பார்வையுடன் நேராகப் பார்த்தாள் மீரா.

அது ஓர் அற்புதமான கதை.

பிருந்தாவனத்தில் ஆனிரை மேய்க்கக் கண்ணன் சென்றிருந்தான். மாலை வந்தது. வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்து காற்றில் மொத்துண்டு அலைந்தன. வானமே ஒரு தமால விருட்சமாகி, பந்து பந்தாக இலைக் கொத்துக்களை அசைத்துக் கொண்டிருப்பது போலிருந்தது. பாலகோபாலன் பயந்தான். அவனைத் தொடர்ந்து வந்திருந்த ராதையோ கலக்கமின்றி, முகிலின் கருநிற அழகை ரசித்துக் கொண்டிருந்தாள். ''ராதே, குழந்தை கோபாலனை ஆய்ப்பாடிக்கு அழைத்துப் போ'' என்று நந்தகோபன் கூறினான். கண்ணனுக்குக் காப்பாகச் சென்றாள் காரிகை. ஆனால் நேரே ஆய்ப்பாடிக்குச் செல்லவில்லை. யமுனா தீர குஞ்சபவனங்களில் அவனுடன் மனம் கொண்ட மட்டும் விளையாடி விட்டுத்தான் வீடு திரும்பினாள்.

இந்தக் கதையைத்தான் பெருமையுடன் கூறிவிட்டுக் கண்ணனின் கண்களை நேருக்கு நேர் பார்த்தாள் மீரா. அதற்காகக் கண்ணன் தன் கண்களைத் தாழ்த்திக்கொள்ளவில்லை.

''ஜயதேவர் இதை முன்னரே பறை சாற்றி விட்டார் என்பதால் உனக்கு வெட்கமாக இல்லை போலிருக்கிறது'' என்றாள்மீரா.

'' வெட்கப்பட என்ன இருக்கிறது ? நான் பக்தர்களின் காப்பில்தான் என்றுமே இருக்கிறேன்'' என்றான் எளியபெருமான்.

''அப்படியானால் என்னை மட்டும் ஏன் அடிக்கடி விட்டுப் பிரிந்து விடுகிறாய் ?'' என்று வினவினாள் மீரா.

''இதற்கு ஏற்கனவே கோபியரிடம் விடை சொல்லியாயிற்று'' என்று கூறி விடைபெற்றான் விநோதன்.

மீரா இக உலகுக்கு வந்தாள்.

டாகுர் துவார பூஜாரியிடம் சென்று கண்ணன் கோபியரிடம் கூறியதென்னவென்று கேட்டாள்.

அவர் நாத் தழுதழுக்கப் பாடினார்.

யதாதநோ லப்த நனே விநஷ்டே
தத் சிந்தயான்யன் நிப்ருதோ ந வேத

''புதையலைக் கண்ட ஓர் ஏழை அதை இழந்து விட்டால் பின்பு அதொன்றைப் பற்றியே எண்ணுகிறான் அல்லவா ? அதே போல் என்னை இழந்தால்தான் அடியார்கள் என்னை விடாமல் ஸ்மரிப்பார்கள் என்பதற்காகவே நான் பிரிந்து போகிறேன்'' என்ற கண்ணனின் வாக்குத்தான் அது. (தொடரும்)

கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில் ஒரே தேய்ப்பில் கால்கேட் கிரீம், துர்நாற்றத்தையும், சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒழித்துவிடுகிறது.

கால்கேட், 10ல் 7 சந்தர்ப்பங்களில் உடனடியாக வாய் துர்நாற்றத்தை அகற்றுகிறது என்பதையும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பெருமளவில் ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

கால்கேட்டின் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்!

நீங்கள் பற்பொடியை விரும்பினால் இந்தப் பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.



பசிகத்தந்தீர்க்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்மையான பற்களைப் பெறவும் வழக்கமாக கால்கேட்டினால் பல் துலக்குங்கள்

...உலகிலேயே பெரும்பாலானவர்கள் மற்றெல்லாப் பற்பசைகளையும் விட, கால்கேட் டெண்டல் கிரீமையே வாங்குகிறார்கள்.



ராணமயா

மறைநாயகன்



கோணிச் சாக்குக் கிழிசலை நெஞ்சுவரைக்கும் வசமாக இழுத்துப் போர்த்திக் கொண்டாள் பொன்னுத்தா. கரைப் பிசிறுகளை அவளுடைய வெளுத்த விரல்கள் வாகுடன் பற்றி யிருந்தன. என்றாலும், கோணி, அவளது கூதலுக்கு உணக்கை ஊட்டவில்லை. முறைக் காய்ச்சலா இப்படிப்பட்ட எளிய உபசாரத்துக்கெல்லாம் மசிந்து விடப்போகிறது? — ஊஹூம்!

நிலந் தெளியும் நேரம்.

பொன்னுத்தாளுக்கு மேனி அலுக்கையும், அசதியும் விட்டிருந்தன. மெதுவாக எழுந்தாள். தலைமாட்டிலிருந்த குண்டுச் சட்டியில் நொய்க் கஞ்சி ஆறித் தண்ணீராகி விட்டிருந்ததைக் கண்டாள். மேல் பக்கத்தில், அருமைக் குஞ்சு கண்மண் தெரியாமல் விழுந்து கிடந்த அவலத்தையும் அந்தத் தாய் நெஞ்சம் புரிந்து கொள்ளத் தவறவில்லை.

மகனைத் தொட்டுப் பார்த்தாள் பொன்னுத்தா.

இலேசாகக் 'காங்கை' இருந்தது.

'நானு இன்னிக்கு வேலைக்குப் பறியலே. மகன் போயி மண்ணு கொளைக்கிற எடத்திலே கூடமாட நின்னு கூடையிலே மண்ணு சொமந்து குடுத்து அந்தியிலே கூலிப் பணம் வாங்கியாந்து எங்கிட்டோ குறுணை வாங்கிக் கஞ்சி காச்சச் சொல்லி இங்கிட்டுக் கொண்டாந்து பெத்தவளுக்கின்னு சமத்தா வச்சிருக்குது! கடோசிலே, மகனும் கஞ்சி குடிக்கலே... நானும் கண்ணு தொறக்கல்லே...ம்!'

நெடுமூச்சின் அலைகள் காலக் கடலிலே சங்கமம் ஆயின.

இன்பமும், துன்பமும், சிரிப்பும் அழுகையும், நம்பிக்கையும், ஏமாற்றமும் கூடிப் பிரிந்து விளையாடுற அந்த நாட்கள்தான் அவளுடைய வாழ்க்கையா ?

ஒரு நாள் :

எருச்சிக்குக் காமாட்சி அம்மன் கோயிலுக்கு மாவிளக்குப் போடக் கூண்டு வண்டியிலே பொன்னுத்தாளின் குடும்பம் போயிருந்தது. அம்மன் ரொம்பவும் சக்தி பெற்ற அம்மன். ஆடிப் பதினெட்டில்தான் திருநாள்.

அப்போது கோயிலின் வெளிப் பிராகாரத்தில் இருந்த கணையில் மட்டும்தான் தண்ணீர் இருந்தது. ஆகவே, ஒவ்வொரு இடைகழியிலும், ஆண் பெண்கள் குளித்தனர்.


சுனை என்றால் சாமான்யமல்ல!


அறந்தாங்கியை ஆண்ட ஊமையன் ராஜா, தன் அரண்மனையில் சுரங்கம் கட்டி இங்கே எருச்சிச் சுனைக்கு வந்து நீராடிச் செல்வாராம். தண்ணீர் தேவாமிர்தம்தான்!

பொன்னுத்தா நீங்கலாக மற்றவர்கள் குளித்து முழுகிச் சென்று விட்டார்கள்.

பொன்னுத்தா, சுனையின் வடபுறக் குழியில் கருத்துடன் காலூன்றி, அடிப் படிக்கட்டில் கால் வைத்தவள், பாசியில் கால் வழுக்கி அப்படியே







நிலை குப்புற உள்ளே நழுவிச் சாய்ந்தாள். அவ்வளவுதான். சுழல் இழுத்தது. தண்ணீரில் நாலு வாய் குடித்தும் விட்டாள். மேலே எம்பி வரப் பட்ட பாடு வியர்த்தம். கையை மட்டும் நீரின் மேற்பரப்பில் காட்டினாள். அம்மன் சக்தி பெரிதல்லவா? யாரோ மாட்டுக் காரப் பயல் இந்நிலையைக் கண்டு பதறியடித்துக் கொண்டு வாசலுக்கு வந்து கத்தினான். அப்போது ரேக்ளாவில் தன் வீட்டுக்குப் பறந்து கொண்டிருந்த ராசாக் கண்ணு விவரம் அறிந்து ஓட்டமாக ஓடிவந்து பார்த்தான். பொன்னுத்தாளின் சிவந்த கைகள் மட்டிலும்தான் வெளிக்குத் தெரிந்தன. உடனே இளவட்டம் ராசாக் கண்ணு கடமையின் துள்ளலுடன் சுனையில் குதித்தான். அவன் குதித்த நேரம் மறு குழி ஒன்றும் வாய் திறந்தது. பொன்னுத்தாளை அந்தக் குழியும் இழுக்க முனைந்தது. சுதாரித்தான் ராசாக் கண்ணு. தன் உயிரைத் திருண

மாகவே மதித்தான். ஜீவமரணப் போராட்டம் நடத்தினான். எப்படியோ அவன் மனிதாபிமானம் வென்றது. பொன்னுத்தாளைக் குண்டுக் கட்டாகத் தூக்கி வந்து கனியின் தலைவாசலில் கிடத்தினான்.

கன்னிப் பொண்ணுக்குச் சுய ஞாபகமும் நல்ல மூச்சும் வர அரை நாழிகை பிடித்தது.

எடுத்தவுடன், பொன்னுத்தா தன்னுடைய அழகிய கைகளைக் குவித்து, ராசாக் கண்ணுவை நோக்கினாள். ''ஒங்களை நானு எப்பொறப்புக்கும் மறக்கவே ஏலாதுங்க! நீங்க எஞ்சாமிங்க!'' என்று நெஞ்சு நெக்குருகச் செப்பினாள்.

ராசாக் கண்ணு நெகிழ்ந்த மனத்துடன் அங்கிருந்து புறப்பட்டான், உடைமையை உடைமைக்காரர்களிடம் சேர்ப்பித்துவிட்டு.

''ஆத்தா, நானு அந்தச் செவத்தூர் மச்சானைத்தான் கண்ணாலம் கட்டிக்கிடுவேன்!'' என ஒருநாள் பொன்னுத்தா சுமுக்கமாகத் தன் அன்னையின் 'காதைக் கடிக்க', அந்த ரகசியம் பொன்னுத்தாளின் அப்பன்காரனையும் சாடிவிட்டது.

''சாதி விட்டுச் சாதி கண்ணாலம் கட்டவா? அதுதான் ஏலவே ஏலாது!'' என்று நாட்டுப்புற மண்ணிலிருந்து கற்றுக் கொண்ட மிடுக்குடன் முடிவு சொல்லி விட்டு, முறுக்கு மீசையை முறுக்கி விட்டான் கிழவன். புகையிலை மட்டையைக் காம்பு கிள்ளி 'கொடும் பில்' அடக்கிக் கொண்டான்.

தாய் தந்தையின் முடிவுக்கும் ஒரு முடிவு சொல்லி விட்டாள் பொன்னுத்தா: ''என்னை நெஞ்சார நேசிக்கிறவுக, எம்புட்டு மேனியைத் தொட்டுப் புட்டவுகளாக்கும்! அவுக இப்பொறப்புக்கு இல்லாங்காட்டி, சாவுதான் போக்கிடம் எனக்கு!'' என்றாள்.

பிறகு, பெற்றவர்களை முறித்துக் கொண்டு செவத்தூர் மாப்பிள்ளை ராசாக் கண்ணுவுடன் தொடர்ந்து, அவனது நிழலானாள் பொன்னுத்தா.

கோலக் கலாபமாக அவள் அமைந்தாள். நிலவானின் சீதளமதியாய் அவன் அமைந்தான்!

காலத்தின் ஓட்டத்தைக் கட்டிப் பிடிக்க இயலுமா?

அழுதபிள்ளை வாய்மூடும்!



ஐந்நூறு குழி 'காத்தான் தாக்கு' ராசாக் கண்ணுவுக்கும் அவன் குடும்பத்துக்கும் சோறு அளந்தது. புஞ்சைச்செய் நேர்த்தியில் நிலக் கடலையும், சோளமும் உபரி வரும்படி.

அவர்களின் தாம்பத்தியம் சிறக்கவும் நிறக்கவும் ராமையா பிறந்தான்.

காலம் ஓடியது.

செவ்வாய்ச் சந்தைக்குப் போய்த் திரும்பினான்–ஒருநாள். ''நம்ம மவன் அவதரிச்ச நேரம் நமக்கு அனேயமாய் நல்லதுதான் நடக்கும்னு தோணுது பொன்னு!'' என்றுசொல்லிக் காய்கறி வியாபாரத்தில் மிஞ்சிய லாபப் பணம் ரூபாய் ஐம்பதைச் சுளையாகக் காட்டினான். ''வார தெனைமக்கு ஒனக்கு ஒரு பச்சைச் சுங்குடி வாங்கியாரேன்!'' என்றும்மகிழ் ஊட்டி, அம்மகிழ்வை நிலைப்படுத்திக் கைக் குழந்தைக்குச் சோள முறுக்குக் கொத்து ஒன்று வாங்கி வந்தான்.


ராமையா 'அப்பா — ஆத்தா' பாட்டுப் பாட ஆரம்பித்து விட்டான். படுசுட்டி!...

ஆலங்குடிச் சந்தைக்குப் புறப்பட்ட போது பொன்னுத்தாளின் சொத்தாக இருந்தவன் அங்கிருந்து திரும்பிய பொழுது எவளோ ஒருத்தியான தங்கம்மாவின் உடைமையாகமாறி வந்தான்!....

ராசாக் கண்ணுவின் கண்களிலே சொக்குப் பொடியையும், பொன்னுத்தாளின் கண்களிலே மிளகாய்ப் பொடியையும் தூவி விட்ட விறு ஆனாள் அந்தத் தங்கம்மா!

தன் அன்பை அள்ளிக் கொட்டி 'முன்றானைப் பிச்சை' கேட்டாள் பொன்னுத்தா, தன்னைக் கொண்டவனிடம்–தான் முன்றானை விரித்துப் போட்டவனிடம்! ஆனால் பயன்தான் கிட்டவில்லை.

ராசாக் கண்ணுவுக்குப் புது மாங்கனி மீது ஏக நாட்டம். ஆகவே பழைய


சக்திக்கும், வலிமைக்கும்!
கோகோ
சர்க்கரை
மால்ட்
பால்
Bournvita
ஊட்டப்பொருள்கள் அனைத்தும் ஒருங்கே தேவையா? ஒரு கப் போர்ன்விடா அருந்துங்கள். தசைகள் வளர புரதங்களும், சக்திக்கும் வலிமைக்கும் புஷ்டியான மாவுச்சத்தும், எலும்புகளை வலுவாக்க தாது உப்புக்களும், பூரண ஆரோக்கியத்திற்கு மிக்க அவசியமான வைட்டமின்களும் இதில் உள்ளன. மிகச்சுலபமாக தயாரிக்கலாம். காலையில் உற்சாகத்துடன் எழுந்திருக்க வேண்டுமா? இரவில் அமைதியாக உறங்க வேண்டுமா? போர்ன்விடா அருந்துங்கள்.
காட்பரீஸ் போர்ன்-விடா

மாம்பழம் புளித்துவிட்டதோ? ஆனால் அவன் தன் குழந்தையைக்கூட அல்லவா அசட்டை செய்து விட்டான்! புது மோகக் கிறக்கம் அவன் கண்களைக் கட்டிவிட்டதோ? -பாவம்!

''ஒங்களை எம்புட்டோ ஆசைப்பட்டுக் கண்ணாலம் கட்டிக்கிட்டுறதுக்காவ, என்னைப் பெத்தவங்களைக் கூடப் பகைச்சுக்கிட்டு நீங்களே சதமின்னு ஓடியாந்தேன். அந்தப் புண்ணியத்துக்கு இப்ப எம் மூக்கை ஒடைச்சுப்புட்டீங்க. நான்தான் ஒங்களுக்கு ஒரு பொருட்டாகத் தோணலே. ஒங்க புள்ளை கூடவா ஒங்க மாளிகையிலேருந்து தடம் புரண்டிருக்க? ஐயோ! இந்தப் பாவம்—இந்த அநியாயம் – இந்தத் தீவினை தெய்வம் இருளத்துக்கு அடுக்கவே அடுக்காது! இனி மேலும் நானும் எம்மவனும் ஒங்க மூஞ்சியிலே முளிக்கிறதுகூட ரொம்பப் பாவம்!'' என்று வீறுடன் பேசிவிட்டுத் திரும்பிக் கூடப் பார்க்காமல் மகனுடன் மறைந்து விட்டாள் பொன்னுத்தா.

ராசாக்கண்ணுவுக்குத் தங்கம்மாதான் இப்போது சகலமும். ''நீ எம்புட்டு சொக்கப் பச்சை. நீ இல்லாங்காட்டி, நானு இல்லே!'' என்று அளந்தான் அவளிடம்.

தங்கம்மாவுக்கு உலகம் தெரிந்திருந்தது. ''இந்தா பாருங்க! அந்தப் பைத்தியக் காரியை ஏச்சாப்பிலே என்னையும் எப்ப வானும் ஏமாத்த நெனைச்சீங்கன்னு, அப்பவே உங்க உசிரு உங்ககிட்ட தரிக்காது! ஆமா!...'' என்று கடுமையாக எச்சரித்த பிற்பாடுதான், தன் வசம் ரகசியமாகச் சேர்த்து வைத்திருந்த சுருக்குப் பைப் பணத்தையும் தன்னையும் ஒப்படைத்தாள் தங்கம்மா!

எல்லாவற்றையும் அறிந்தாள் பொன்னுத்தா. 'எம் விதி இம்மாங்கொத்ததா? ஆத்தா காமாச்சி!' என்று பொட்டுப் பொழுதுக்குக் கண் கலங்கினாள். அதே சமயம் அவள் தன் உயிர் மகனை மார்புறத் தழுவிக் கொண்டு, எல்லாத் துயரத்தையும் மறக்கப் பழகினாள்.

எருக்கலைக் கோட்டை அவளுக்கு நிழல் தந்தது. காலம் நின்று விடுமா? – ஓடியது! அவளும் அவள் பிள்ளையும் பசி தெரியாமல் காலத்தை ஓட்டினார்கள்.

கோழி அடையும் நேரம்.

பொன்னுத்தா நெருப்பின் மீது இருப்பது போலத் துடித்தாள். 'மகனை இன்னமும் காணோமே! இம்மாம் பொழுதுக்கு அவன் எங்கணவும் கால் தரிச்சு இருக்க ஒப்ப மாட்டானே!' என்று அவள் எண்ணி எண்ணி மறுகி மறுகி அங்குமிங்குமாக வழிமிதித்து வழி பிரிந்து நடந்து நடந்தே இருட்டை வரவேற்றாள்.

பூவரசம் போத்தடியில் நின்ற அவளுக்கு ஒரு சந்தேகம் பொறி தட்டியது. 'அப்பிடியா இருக்கும்? ஊக்கும்! எம் மவன் ரோசக்காரப் பொடிசாக்கும்!'

ஒரு நாள் – வெகு நாளைக்கு முன் ஒரு நாள்.

இப்படித்தான் ராமையாவை வெகு நேரம் காணவில்லை; வேலைக்கும் போக வில்லை. 'அப்பங்காரரைக் கண்டு அஞ்சு பத்து வாங்கிக்கிட்டாக்க என்று ஆத்தா? நாளைக்கு ஒரு வேளையின்னு சதா இப்பிடி வாடிக்கிட்டு இருக்க வாய்க்குமா?' என்று குழந்தைத்தனமான போக்கில் ராமையா தன் அன்னையைக் கேட்டான். அவ்வளவு

திரியம்பகத்தில் ஒரு திருமடம்

பாரதத்திலுள்ள பல சிவஸ்தலங்களில் ''த்வாதச ஜ்யோதிர்லிங்க க்ஷேத்திரங்கள்'' எனப்படும் பன்னிரு பதிகள் மிகவும் பெருமை வாய்ந்தவை. இவற்றை ஆதிசங்கரர் துதித்திருக்கிறார். இவற்றில் திருவிடைமருதூரிலும், ராமேசுவரத்திலும் ஸ்ரீ காஞ்சி சங்கராசாரிய சுவாமிகள் சங்கரமடங்கள் அமைத்துப் பாதுகா பிரதிஷ்டை செய்திருப்பதை ஆஸ்திகருலகம் அறியும். ஸ்ரீசைலத்திலும் மட நிர்மாணம் பெருமளவு பூர்த்தியாகியுள்ளது. தற்போது நாசிக் அருகே, கோதாவரி உற்பத்தி ஸ்தானத்திலுள்ள துவாதசலிங்க க்ஷேத்திரமாகிய இரியம்பகத்திலும் ஸ்ரீ ஆதிசங்கரருக்கு மடாலயம் அமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. யாத்திரிகர்கள் விடுதியும் இதில் ஓர் அங்கமாகும்.

பக்தர்கள் யாவரும் தம்மாலியன்ற உதவி முழுவதையும் அளித்தால், வருகிற 1967 பிப்ரவரியில் ஸ்ரீ காஞ்சி ஜகத்குரு அவர்கள் பீடமேறிய வைர விழாவைக் கொண்டாடுமுன்பே இரியம்பக மடத்தின் கும்பாபிஷேகத்தைச் செய்து மகிழலாம் என்று நிர்வாகக் கமிட்டியினர் ஆர்வத்துடன் எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் எதிர்பார்ப்பதை அன்பருலகம் நிறைவேற்றி வைக்கும் என்றே நாமும் நம்புகிறோம்.

கீழ்க்கண்ட விலாசங்களில் ஒன்றுக்குப் பொருள் அனுப்பி வைக்கலாம் :

1. Sri P. M. N. Swami, 8, Prem Kunj, Sion west, Bombay-22
2. Sri S. Nagasundaram, 7, Viswa deep, Bhaudaji Road, Matunga, Bombay-19
3. Sri P. S. Natarajan, 5/146, Jain Society, Sion, Bombay-22

மகாத்மாவின் பொன்மொழி:

உள்ளத் தூய்மைக்குப் பிரார்த்தனை அவசியம். ஆத்ம சாந்திக்குக் குளியலைப் போன்றது பிரார்த்தனை.

தான். அவள் பத்திரகாளியாக மாறி, மகனைக் கடிந்தாள். 'நீ உன் அப்பன்காரரு பக்கம் மூஞ்சியைக் காட்டினதாகத் தாக்கல் தகவல் காதுக்கு விழுந்திச்சோ, அப்பாலே நானு பிசாசுதான்!' என்று எச்சரித்தாள்.

அந்த எச்சரிக்கைக்குப் பிந்திய நாள்தான் ராமையாவை நெடு நாழிகை வரை காண வில்லை. அவனை அவன் தந்தையின் வீட்டுப் பக்கம் கண்டதாக யாரோ செய்தி சொல்லவே, பொன்னுத்தா பேயாக மாறி ஓடினாள்.

குடிசையின் உள்ளே ராமையா நின்றான். எதிரில் அவன் தகப்பன் ராசாக்கண்ணு நின்றான்!

பொன்னுத்தா வேப்ப மர ஒண்டலில் ஒண்டி நின்று கவனித்தாள். அவள் பற்கள் நெரிந்தன.

''சும்மா வச்சுக்கப்பா, ராமையா!'' என்றான் ராசாக் கண்ணு. அவன் கையில் பத்து ரூபாய்த் தாளும் தோளில் அவன் பெண் குழந்தை ஒன்றும் காணப்பட்டன!

''எதுக்கு இந்தப் பிச்சைக் காசு! எங்க ஆத்தாளுக்கு இந்தச் சேதி — அதாகப்பட்டது, நானு இங்கிட்டு உங்க மூஞ்சியைப் பார்த்தது தெரிஞ்சதுன்னு, அப்பவே என் தலையை வாங்கிப்பிடும் அது! எங்களுக்கு ரோசம் ஊர்ப்பட்டது இருக்குது!... உங்களுக்கும் எங்களுக்கும் சொந்தம் முறிஞ்சு போயித்தான் எம்புட்டோ காலமாயிடுச்சுதே!...'' என்று பொரிந்து கொட்டினான் சிறுவன் ராமையா! அவனா சின்னப் பையன்?

''ராமையா!'' என்று மீண்டும் கெஞ்சினான் ராசாக்கண்ணு, மகன் கைகளைப் பற்றி.

''சரிதான் போ!'' என்று தந்தையின் கைகளைத் திமிறி விடுவித்துக் கொண்டு திரும்பி விட்டான் ராமையா.

பொன்னுத்தா கொதிப்படங்கி, மகனைத் தழுவி முத்தம் சுந்தாள்.

இருட்டு கனத்தது.

பொன்னுத்தா கைவிளக்கை நிமிண்டிக் கொளுத்தினாள். குச்சின் மையப் பிறையில் வைத்துக் கைபொருத்துக் கும்பிட்டாள். நெஞ்சடியில் ஏதோ உறுத்தியது. குனித்து பார்த்தாள். பிசிறு விரித்த மயிரிழைகளை ஒதுக்கிவிட்டு, மறு தடவையும் பார்த்தாள். அவளது மஞ்சள் தாலிதான் அப்படி உறுத்தியதோ? எதையோ இழந்தது போன்று அவள் உள்ளுணர்வு அச்சுறுத்தவே, அவள் தீக்கங்கு பட்ட பூச்சியாகத் துடித்தாள். கண்ணீர் மண்ட நிறைந்தது! 'ஆத்தா, இந்த வாட்டி ஏன் என் மனசு இப்படிப் பாடு படுது? என்னவோ நடந்திருக்குது கெட்டது.. ஐயையோ! ராமையா! ஆத்தா, எம்மவனை—

நல்லபடியாக் காப்பாத்து! ஊருக்கு மூத்த நுவளே!'' நரைப்பேய் புரண்டு எழுந்தாள். தளர்ந்து மெலிந்த உடம்பு குலுங்கச் சிலிர்த்தது.

''ஆத்தா!.... ஆத்தா!''

பொன்னுத்தா அடங்காப் பதற்றத்துடன் எழுட்டுப் பார்த்தாள். ''மகனே! ராமையாக் கண்ணு!'' என்று விம்மினாள். விம்மிக் கொண்டே அருமைத் திருமகனை வெகு உவப்புடன் நுணுக்கம் சேர்த்துப் பார்த்தாள்.

ராமையாவின் தலை மொட்டையடிக்கப் பட்டிருந்தது.

ஒருமல் ஒலி படர்ந்தது.

'...வேலைக்குப் போறப்ப வழியிலே யாரோ அப்பாவுக்கு ரொம்ப உடம்புக்கு அதிகமென்று சொன்னாங்க. உங்கிட்ட வந்து சொல்லப் பயந்துகிட்டு, நானாகவே அங்கிட்டலவே ஓடிப்புட்டேன்...! அங்கனே போயி நின்னு மூச்சு விட்டாக்க, அப்பன் காரக மூச்சு அடங்கிப் போயிடுச்சாம்! அழுது கதறினேன். அப்பாவின் காலைத் தொட்டுக் கும்பிட்டேன். மறுக்கொண்டு போய்த் திரும்பிப் போனவனுக்கு ஒரு பாளக்க தாக்கல் விழுந்திச்சது! அப்பனின் இரண்டாந் தாரத்துக்குப் பொம்பளைப் புள்ளேதான் இருக்காம். கொள்ளி வைக்கிறதுக்குப் புள்ளே இல்லையாம். அதனாலே அனாதைச் சடலமாட்டம் எரிக்கிறதுக்கு ஆயத்தப்படறதாகச் சங்கதி பேசிக்கிட்டாங்க! அவுக பெத்த மகன் நான் இருக்கையிலே எங்க அப்பன்காரவுக அனாதைச் சவமாப் போகங்கறதா?...எம் மனசு கொதிச்சுது. அப்பனுக்குக் கொள்ளி வைக்கிறதுன்னு முடிச்சேன். ஆத்தாக்காரி நீ இந்தக் காரியத்துக்காவ என்ன தண்டனை தந்தாலும் ஏத்துக்கிறதுன்னு ரோசிச்சுத் திட்டமிட்டுக் கிட்டு எம் முடிவைப் பத்தி ஊராருக்கு முன்னாலே பட்டு வைச்சேன்!... உடனேயே நான் என் தலையை மொட்டை அடிச்சுக் கிறு என் அப்பன்காரவுகளுக்கு வாய்க்கரிசி அள்ளிப் போட்டுக் கொள்ளியும் வைச்சுப் புட்டேன்! என் தகப்பனுக்கு நல்ல சாவு கெடைச்சிருச்சு, ஆத்தா!''

மகனையே விழி பிதுங்க விழித்துப் பார்த்தாள் தாய். மறு கணமே கீழே அறுந்து விழுந்த அந்த மஞ்சள் தாலியின் மீது விழுந்து கதறிப் புலம்பினாள் பொன்னுத்தா. ''ஐயையோ! நானு கொடுத்து வைக்காத பாவியாகிப்புட்டேனே!... பொசுப்பத்த அனாதையாகிப் புட்டேனே நானு!... ஆத்தாடியோ!...'' என்று மண்டையில் அடித்துக் கொண்டு, தலை முடியைப் பிய்த்துக் கொண்டாள். கதறினாள்; கூக்குரலிட்டாள்.

அடுத்த அரைக் கணத்துக்குப் பின்:


இருந்திருந்தாற்போல் அவள் ஏன் அப்படிச் சிரிக்கின்றாள்?...

''ஆத்தா!... ஐயையோ! ஆத்தா!''

ராமையாவின் தொண்டை கம்மத் தொடங்கி விட்டது!

விதியைப் போலவே சிரித்துக் கொண்டிருந்தது, இருட்டு....

சமய சஞ்சீவி





வலிதான் எங்கள் பிரச்சினை...

உங்களுக்கு நாங்கள் உதவக்கூடிய விதம் இதுதான்!

ஆராய்ச்சி: 'ஆஸ்ப்ரோ' [illegible]

'ஆஸ்ப்ரோ' இயங்குவது எப்படி? 'ஆஸ்ப்ரோ' [illegible] வலியை வெளியே இழுத்துவிடுகிறது.

இவைகளுக்கு 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: [illegible] • ஃப்ளு • டெங்கு.

அளவு:

பெரியவர்கள்: இரண்டு மாத்திரைகள். [illegible]

குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொல்படி.



'ஆஸ்ப்ரோ'

வலியை வெளியே இழுத்துவிடுகிறது

A. G. 33-66 TAM



'சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு முந்நூறு பள்ளிகள் நம் மாகாணத்தில் அதிகமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன' என்று அரசாங்கத்தார் பிரசாரம் செய்வதைப் பார்த்திருக்கிறோம். தேர்தலுக்குப் பயன்படும் இனிக்கும் செய்தியாக ஏட்டளவிலேயே இருக்கும் அந்தப் பள்ளி விவரங்கள். அறிவிக்கப்பட்ட இடங்களில் பள்ளிக் கட்டடம் இருக்காது. கட்டடமிருந்தால் — படிக்கப் பிள்ளைகள் வரமாட்டார்கள். போதிக்க ஆசிரியர்கள் இல்லாத பள்ளிகள் எத்தனை எத்தனையோ! சில இடங்களில் அறுபது எழுபது பிள்ளைகளுடன் போராடும் ஓர் உபாத்தியாயரையும் கண்டோம். இத்தகையதொரு நிலையில் பிளமேட்டை பெருமை கொள்ளும் வகையில், மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கல்வி ஸ்தாபனங்களைத் திறம்பட நிர்வகித்து நடத்தி வருகிறார்கள் பி. எஸ். ஜி. குடும்பத்தினர். பி. எஸ். ஜி. என்ற இந்த மூன்று எழுத்தை அறியாத கோவைவாசிகள் இருக்க முடியாது. தொழில் துறையில் ஆர்வம் கொண்ட இந்த ஸ்தாபனத்தினர் புரிந்துள்ள சாதனைகளின் வெற்றியிலே வீடும் வாழ்வும் பெற்று மகிழ்ச்சியுற்ற குடும்பங்கள் பலப் பல. கோவை மக்களின் புற இருளான வறுமையைப் போக்குவதற்குத் தொழில் துறையில் புகுந்து உழைத்த இவர்கள், அக இருளான எழுத்தறிவின்மையைப் போக்குவதற்கும் உழைப்பதென்று உறுதி செய்து கொண்டார்கள்.

1924ம் ஆண்டில் கல்விப் பணிக்கான ஆக்க வேலைகளில் பி. எஸ். ஜி. என்ற மூன்றெழுத்து முதன் முதலில் செயல்படத் தொடங்கியது. ஆதாரக் கல்வி, செகண்டரிப் பள்ளிகளிலிருந்து ஆரம்பித்து இன்று கலைக் கல்லூரி, தொழில் நுணுக்கக் கல்லூரிகளாக வளர்த்திருக்கிறார்கள். ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பி. எஸ். ஜி. கல்விக் கூடங்களினால் பயனடைகிறார்கள்.

பி. எஸ். ஜி. கல்வி 'டிரஸ்டி'னால் நிர்வகிக்கப்படும் சர்வஜன உயர்நிலைப் பள்ளியில், ஆரம்பத்தில் ஆண், பெண் இருபாலாரும் சேர்ந்தே படித்து வந்தார்கள். நாளுக்கு நாள் பெண் மாணவிகளின் எண்ணிக்கை அதிகமாவதைக் கண்ட பி. எஸ். ஜி. குடும்பத்தினர், பெண்களுக்காகத் தனியாக ஓர் உயர்நிலைப் பள்ளியின் அவசியத்தை உணர்ந்தார்கள். பெண்களின் தனித் திறமையையும், விசேஷ ஆர்வத்தையும் வளர்ப்பதற்கு அது பேருதவியாக விளங்கும் என்ற முடிவுக்கு வந்தார்கள். 'தந்தையைப் போலத் தனயர்கள்' என்ற முதுமொழிப்படி, இவான் பகதூர் திரு பி. எஸ். ஜி. ரங்கசாமி நாயுடு அவர்களின் வழித்தோன்றல்களான அவரது மக்கள் பீளமேட்டிலே பெண் கல்வியின் சிறப்புக்கு வழி வகுக்கலானார்கள்.

1956ம் ஆண்டு ஜூன் நான்காம் தேதி பீளமேட்டில் புதிய பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆரம்பமாயிற்று. ரங்கசாமிநாயுடு அவர்களின் துணைவியாராகிய ஸ்ரீமதி கிருஷ்ணம்மாளின் பெயரை அதற்குச் சூட்டினார்கள். தந்தையின் நினைவுக்குப் பல தொழில் நிறுவனங்களும் கல்லூரிகளும் இருப்பதைப் போலத் தங்கள் தாயின் நினைவுக்குப் பெண்கள் பள்ளிக்கூடத்தைப் பொருத்தமாக்கினார்கள் திரு ஜி. ஆர். தாமோதரன் சகோதரர்கள். கலைக் கல்லூரி, தொழில் நுணுக்கக் கல்லூரி ஆகியவற்றின் வளர்ச்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட மூத்த சகோதரரான திரு தாமோதரன், கிருஷ்ணம்மாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளியின் வளர்ச்சியைத் தமது தம்பி திரு கோவிந்தராஜுலுவிடம் ஒப்படைத்தார். எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றலும், ஆர்வமும் உழைப்பும் கொண்டவர் திரு கோவிந்தராஜுலு அவர்கள். கணவனுக்கு உற்ற துணைவியாக வாய்த்தவர் அவரது மனைவியார் ஸ்ரீமதி சந்திரகாந்தி அம்மையார் அவர்கள். இவ்விருவருடைய செயல்திறனுக்குச் சான்றாகத் திகழ்பவைதான் — கோவையில் உள்ள கிருஷ்ணம்மாள் உயர்நிலைப்பள்ளியும், கல்லூரியும்.

எடுத்த எடுப்பிலேயே உயர்நிலைப்பள்ளியை ஆறாவது வகுப்பிலிருந்து பதினோராவது வகுப்பு வரை பூரணமானதாக, முழு வளர்ச்சியடைந்ததாகத் தோற்றுவித்தனர். ஆரம்பத்தில் 294 பெண் குழந்தைகளைக் கொண்டதாக இருந்த இந்த உயர்நிலைப் பள்ளியில் இன்று 724 மாணவிகள் கல்வி அறிவு பெறுகிறார்கள் என்றால், அதற்கு ஸ்ரீமதி சந்திரகாந்தி அம்மையார் தாய்மைப் பரிவோடு பள்ளியின் தேவைகளைப் பார்த்துப் பார்த்து அதை வளர்ப்பதும், தந்தையின் அன்போடு திரு கோவிந்தராஜுலு அவர்கள் பள்ளியின் தரம் உயர்வதற்குத் தமது ஆலோசனைகளை வழங்கி ஊக்குவிப்பதுமேயாகும்.

'வெறும் ஏட்டுப் படிப்பு மட்டும் எங்கள் நோக்கமல்ல' என்கிறார்கள், கிருஷ்ணம்மாள் உயர்நிலைப்பள்ளி மாணவிகள். உற்சாக

மளிக்கும் பல உபயோகமான அலுவல்களை யும் இந்தப் பள்ளி மாணவிகள் செயல்படுத்து கிறார்கள். விஞ்ஞான சங்கம், கணிதச் சங்கம் சமூக அறிவுச் சங்கம், ஐ.நா. சபைச் சங்கம், நடன வகுப்புகள், இலக்கியக் கழகம், கலைக் கழகம், தோட்ட வேலை என்று இப்படிப் பாடத்தைத் தவிரப் பல விஷயங்களிலும் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பேற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

வசதியும் வாய்ப்பும் இருந்தாலும் அதைப் பயன்படுத்திக் கொண்டு பலன் பெற வேண் டாமா? கிருஷ்ணம்மாள் உயர்நிலைப்பள்ளி மாணவிகள், தாங்கள் சோடைகளல்ல என் பதை ஒவ்வோர் ஆண்டும் நிரூபித்து வரு கிறார்கள். இந்த ஆண்டு எஸ். எஸ். எல். ஸி.க் குப் பரீட்சை கொடுத்த 66 மாணவிகளில் 64 பேர் வெற்றியடைந்திருக்கிறார்கள். (97%) என்றால் பாருங்கள். இதில் 26 மாணவிகள் 400 மார்க்குகளுக்கு மேல் வாங்கியவர்கள். இதனால் தலைமையாசிரியர்கள் சங்கத்தின் கேடயத்தைப் பெறும் பாக்கியத்தையும் பெற்றிருக்கிறது இந்தப் பள்ளி.


இப்படி மணியான மாணவிகளை உருவாக்கிய பெருமையில் பள்ளியின் திறமைமிக்க ஆசிரியை களுக்கும் பெரும் பங் குண்டு.

அறிவு வளர்ச்சியில் அக்கறை காட்டி உட லுறுதியை உதாசீனப் படுத்திவிடவில்லை நிர்வாகத்தினர். விளை யாட்டுக் கலைகளிலும் மாணவிகள் விருப்பமும் ஈடுபாடும் கொள்ளும்படி செய்திருக்கிறார்கள். ஜில்லாவாரியிலும் மாகாண ரீதியிலும் விளை யாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு ஆறுக்கும் அதிகமான கேடயங்களை நான்கு வருடங்களாகத் தங்களுக்கே உரியதாக்கி நிறுத்திக் கொண்டிருக்கிறது கிருஷ்ணம்மாள் உயர்நிலைப்பள்ளி. 26 தங்கப் பதக்கங்களையும் பெற்றுப் பெருமை கொண்டிருக்கிறது.

இப்படிச் சிறந்த மாணவிகளை உருவாக்கும் தகுதி வாய்ந்த தாங்களே தங்கள் மாணவி களின் கல்லூரிப் படிப்புக்கும் ஏற்பாடு செய் தால் என்ன?—என்பதைப் பற்றித் தீவிர மாகச் சிந்திக்கலாயிற்று, நிர்வாகம். பெண் கல்வியிலும் பெண்கள் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டுள்ள திரு கோவிந்தராஜு லுவும் திருமதி கோவிந்தராஜுலுவான திருமதி சந்திரகாந்தி அம்மாளும் கிருஷ்ணம் மாள் பெண்கள் கல்லூரிக்கான திட்டத்தை வெகு வேகமாகச் செயல்படுத்தலானார்கள். உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் விரிவுபடுத்தப் பட்டுக் கம்பீரமான கல்லூரிக் கட்டடமாக உயர்ந்தது. உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய இருப்புக்கள் கட்டப்பட்டன.

1963ம் ஆண்டு கிருஷ்ணம்மாள் பெண்கள் கல்லூரியை ஜாம் ஜாம் என்று ஆரம்பித்து விட்டார்கள் ஜி. ஆர். ஜி. அண் சன்ஸ் டிரஸ்ட் நிர்வாகத்தினர்! 80 மாணவிகளுட னும் 9 ஆசிரியைகளுடனும் அன்று ஆரம்பிக்





கோவையை அடுத்துள்ள பீளமேட்டிற்கே பெருமை தரும் வகையில் கம்பீரமாக விளங்கும் கிருஷ்ணம்மாள் பெண்கள் கல்லூரியும் அதை உருவாக்கி வளர்த்து வரும் திரு ஜி. ஆர். கோவிந்தராஜுலுவும் ஸ்ரீமதி சந்திரகாந்தி அம்மையார் அவர்களும்.



கடப்பட்ட கல்லூரி மூன்றே ஆண்டுகளில் 630 மாணவிகளுடனும், 42 போதகாசிரியை களுடனும் நீர்நிலையை அடுத்து வளரும் ஆல மரத்தைப் போலத் தழைத்துள்ளது. சகல வசதியுடன் கூடிய ஆய்வுக்கூடம், நூலகம், விஸ்தாரமான விளையாடுமிடம் அத்தனையும் அழகாக, அமைப்பாக உள்ளன.

கல்லூரியைச் சேர்ந்தேயுள்ள ஹாஸ்டல் வசதியும், வளப்பமும், வனப்பும் கொண் டது. கல்லூரிகளில் பயிலும் மாணவிகளில் பாதிப்பேர் இந்த ஹாஸ்டலில் தங்குவதற்கு ஏற்ற வசதி உள்ளது.

கிருஷ்ணம்மாள் உயர்நிலைப் பள்ளி முதல் தரமான மாணவிகளைத் தயாரித்தளிக்கும் போது கிருஷ்ணம்மாள் கல்லூரி மாணவிகள் சோடை போவார்களா? சர்வ கலாசாலைப் பரீட்சைகளில் பாராட்டுக்குரிய வகையில் தேறியிருக்கிறார்கள். விளையாட்டுப் போட்டி களில் கேடயங்களையும் பரிசுகளையும் பெற்று வெற்றி சூடுவதுதான் கிருஷ்ணம்மாள் கல்வி ஸ்தாபனத்தின் தனித் தன்மையாயிற்றே!

பணம் உள்ளவர்களுக்கு மனம் இருக்க வேண்டும். மனம் இருந்தாலும் தருமம் செய்வது தங்கள் கடமையென்று பொருளைக் கொடுத்துவிட்டுப் பேசாதிருந்து விடுவார்கள். ஆனால் திரு கோவிந்தராஜுலுவும் ஸ்ரீமதி சந்திரகாந்தி அவர்களும் அப்படிப்பட்ட வர்களில்லை. பணமும் மனமும் இருந்த தோடு மட்டுமல்லாமல், ஆர்வமும் சேவை மனப்பான்மையும் அவர்களிடம் துடித்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். கல் லூரியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்து மாகத் தாங்களே பங்கு கொண்டு அதை ஒவ் வொரு விஷயத்திலும் முதல்தரமானதாகச் செய்ய வேண்டும் என்று உழைக்கிறார்கள். உழைப்பு என்றுமே வீண் போவதில்லையே.

செப்டம்பர் இரண்டு மூன்றும் தேதிகளில் கிருஷ்ணம்மாள் உயர்நிலைப் பள்ளியும், கல் லூரியும் தனது பெற்றோர் தினம், ஸ்தாபகர் தினம் ஆகியவைகளைக் கொண்டாடியது. அந்தக் கோலாகல வைபவத்தைக் கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங் தொடங்கி வைத்தார். திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமை தாங்கினார். விழா ஆரம்பமாவதற்கு முன் கல்லூரி, பள்ளி மாணவிகளின் என். ஸி. ஸி. படை அணிவகுப்பு மரியாதையை கவர்னர் ஏற்றுக் கொண்டார்.

விளையாட்டுக்களிலும், படிப்பிலும் போட்டி யிட்டு வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சர் தாரிணி ஸ்ரீமதி உஜ்ஜல் சிங் பரிசுகளை வழங் கினார்கள். எத்தனை பிரிவுகள்; எத்தனை— பரிசுகள்! பரிசு பெறாதவர்களே இல்லையோ என்று நினைக்கும் அளவுக்கு அத்தனை பரிசு களை (ஸ்தாபனத்தில் பணியாற்றும் வேலைக் காரர்களுக்குக் கூடப் பரிசுகள் உண்டு!) வழங்கியிருந்தார்கள் நிர்வாகத்தினர்.

மழை பெய்தபோதும் கூடியிருந்த மக்கள் கலைந்து போகாமல் நனைந்து கொண்டே கடைசிவரை இருந்து விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டது கோவை நகரவாசிகளின் உள்ளத்தில் கிருஷ்ணம்மாள் கல்வி ஸ்தா பனங்கள் எத்தகையதொரு சிறந்த இடத் தைப் பெற்றிருக்கின்றன என்பதைத் தெளிவு படுத்தியது.

திரு ஜி. ஆர். கோவிந்தராஜுலு அவர்கள் கல்விக்கு இன்னும் எவ்வளவோ செய்யவேண் டியதிருக்கிறது என்கிறார். உண்மைதான். நல் லது செய்வதற்கு எல்லைகள் ஏது?

நேர்மையும் உண்மையும்




1926-ல் காந்தியடிகள் தம் முடைய இரண்டாவது தமிழ் நாட்டுச் சுற்றுப் பயணத்தின் போது கோவைக்குச் சென் றிருந்தார். டாக்டர் சண்முக னார் இல்லத்தில் தங்கியபோது ஒருநாள் மாலை காந்தியடி களின் நிழற் படம் ஒன்றை எடுத்துக் கொண்டு போய் அதனடியிலே கையெழுத் திடும்படி சண்முகனார் கேட்டுக் கொண்டார். காந்தியடிகளோ, "எனது கையெழுத்தை இட நான் கேட்பதைக் கொடுக்க நீ தயாராக இருக்கிறாயா?" என்றார்.

சண்முகனார் சிறிதும் தயங்காமல் "கொடுக்கத் தயார். எவ்வளவு தொகை வேண்டும்?" என்றார். "எனக்கு நீ பணம் தரவேண்டாம். நான் கேட்கும் வாக்குறுதியைக் கொடுக்க வேண்டும். அதாவது தினசரி அரைமணி நேரத்திற்குக் குறையாமல், கைராட்டையால் நூல்நூற்கத் தயாரா?" என்றார்.

சண்முகனார் சிறிது சிந்தித் தார். "இது என்னால் முடி யாத காரியம்" என்றார். இவ் விடை அடிகளுக்கு அதிர்ச்சி யுண்டாக்கவில்லை. கோபப்படவு மில்லை; மகிழ்ச்சிதான் காந்தி யடிகளின் முகத்தில் பரவலா யிற்று. "நீ சொன்னஉண்மை யான விடையைப் பாராட்டுகி றேன்!" எனக்கு வாக்குக் கொடுத்துத் தவறுவதைவிட, உன் முடியாமையை ஒப்புக் கொண்டதே மேல்" என்று கூறினார்.

சண்முகனார் காந்தியடிக ளின் கருத்துக்கு மகிழ்ந்தார். "நான் ஒளியாமல் உண்மைபேசினதை வைத்துக் கொண்டு கையெழுத்துப் போட்டுத்தரக்கூடாதா?" என்று கேட்டார். காந்தியடிகள் நகைத்துக் கொண்டே, "நான் ஒரு வணிகன், நீயும் ஒரு வணி கன். வணிகத்திலே நீ வெற்றி பெற்று விட்டாய்" என்று கூறிக் கையெழுத்துப் போட்டுத் தந்தார்.

தகவல்: அடந்தை பாண்டியன்



தரத் தேயிலைத்தூள்களிலே தனிப்பெருமை வாய்ந்தது

லிப்டன்ஸ்
ஹிமாலயன் கோல்டன்
டஸ்ட் டீ



குணமும், சுவையும் நிறைந்த பொன்னிறமுள்ள டீ யை வெகு சீக்கிரத்தில் இந்தத் தேயிலையைக் கொண்டு அதிகமான கப்புகளைப் பெறுவீர்கள். இந்த ஒப்புயர்வற்ற டீ யை நீங்களே பருகிப் பாருங்கள் — உங்கள் விருந்தினர்களுக்கும் கொடுங்கள். நிச்சயமாக இதை ரசித்து நீங்கள் மகிழ்வீர்கள் — ஆம்! — அப்படியே உங்கள் விருந்தினர்களும்கூட! தரத் தேயிலைத் தூள்களில் லிப்டன்ஸ் ஹிமாலயன் கோல்டன் டஸ்ட் தனிப் பெருமை வாய்ந்தது. தன்னிகரற்றது என்பது உண்மை.

LIPTON

லிப்டன் என்றாலே நல்ல டீ

LHGC-5

முதல் பரிசு நாவல்

முள்ளும் மலரும்

உமாசந்திரன்



அத்தியாயம் 9

காளியண்ணன் அன்று முள்ளிமலைக்குப் போகும் நோக்கத்துடன் இல்லை. ''டூட்டி'' முடிந்ததும் வீடு திரும்புவதாகத்தான் திட்டம் போட்டிருந்தான். ஆனால் மாலைக் கதிரவன் மேல் திசை மலை வாயில் விழப் போகும் நேரம் நெருங்க நெருங்க அவன் நிலைகொள்ளாமல் தவிக்க ஆரம்பித்தான். வீடு திரும்பி வள்ளியை நேருக்கு நேர் கண்டு விட்டால் அவன் மனத்தில் குமைந்து கொண்டிருந்த புயல் மேகங்கள் எத்தகைய பயங்கரமான சூறாவளியாகச் சீறியெழுமோ என்று அவனுக்கே அச்சமாயிருந்தது. அதைத் தவிர்க்கவே அவன் விரும்பினான்.

அன்று வீட்டுக்குத் திரும்பாமல் இருக்க வழி என்ன என்று அவன் யோசித்துக் கொண்டிருந்தபோது இருதா மீசை முனியாண்டி அங்கு வந்து சேர்ந்தான்.

''என்ன காளி, சோர்ந்தாப்பலே உக்காந்திருக்கே?''

''அப்படி ஒண்ணுமில்லையே, 'டூட்டி' முடியப் போகுது. வீட்டுக்குப் போறதைப் பத்தி யோசிச்சுக்கிட்டிருக்கேன்'' என்றான் காளி.

''வீட்டுக்குப் போறதைப் பத்தி யோசனை என்ன? முள்ளிமலைக் கூத்துக்கே போயிடலாமான்னு சபலம் தட்டுதோ?'' என்று சிரித்தான் முனியாண்டி.

''என்ன சொன்னே? முள்ளிமலையிலே கூத்தா இன்னிக்கு?''

''உனக்குத் தெரியாதா? அன்னிக்கு மழை பெய்து கெடுத்திடுச்சில்லே, அந்தக் கூத்தை இன்னிக்கு நடத்தப்போறாங்களாம். நான்கூட இப்பத்தான் கேள்விப்பட்டேன்.''

''நீ அங்கேதான் புறப்பட்டுக்கிட்டிருக்கியா ?''

''என்னாலே முடியாதே. இன்னிக்குக் கீழேயிருந்து சரக்கு வரவேண்டியிருக்கு. லாரியிலே வந்தாகணும். லாரி வந்து சேருகிற வரையிலே நான் கடையை விட்டு நகர முடியாது'' என்றான் முனியாண்டி.



''இப்பக் கடைக்குத்தானேபோறே?''

''ஆமாம், ஏன் கேக்கறே?''

''நம்ம வீட்டுக்கு ஓர் ஆளை அனுப்பித் தகவல் சொல்லிடச் சொல்றயா?''

''எதைப் பற்றி?''

''நான் ராவுக்கு வீட்டுக்குப் போகப் போறதில்லே. முள்ளிமலைக் கூத்துப் பாத்துட்டு நேரே அங்கிருந்தே ஊட்டிக்கு வந்திடப் போறேன். வீட்டுக்குத் திரும்பிப் போறது நாளைக்கு வேலை முடிஞ்ச பெறகுதான்.''

''இந்தச் சமாசாரத்தை உங்க அத்தைக்குத் தெரிவிச்சுடணும், அவ்வளவுதானே? அது என் பொறுப்பு!'' என்று கூறிய முனியாண்டி காளியிடமிருந்து ஒரு பீடியை வாங்கிப் பற்ற வைத்துக் கொண்டு இருமிக் குரைத்த வாறே அங்கிருந்து நகர்ந்தான்.

டிராலிச் சரிவு வழியே அரை பர்லாங் தூரம் நடந்து சென்றால் வலது பக்கம் ஓர் ஒற்றையடிப் பாதை முள்ளிமலைக் காட்டை நோக்கிப் பிரிந்து செல்லும். அந்தக் காட்டில் சிறுத்தைப் புலியின் நடமாட்டம்கூட உண்டு என்று காளியண்ணனுக்குத் தெரிந்ததுதான். அதையும் பொருட்படுத்தாமல்தான் அவன் அந்தக் காட்டு வழியைக் கடந்து முள்ளிமலைக் குடியிருப்புக்குப் போய் வந்து கொண்டிருந்தான். அதிக ஆள நடமாட்டம் உள்ள நேர்பாதை வேறு இல்லாமல் இல்லை. ஆனால் இந்தக் குறுக்கு வழிதான் காளியண்ணனுக்குப் பிடித்திருந்தது. ஊட்டி முடிந்ததும் வேறு வழியே சுற்றி வளைத்துச் செல்லாமல் டிராலிப் பாதை வழியே இறங்கி ஒற்றையடிப் பாதையில் திரும்பிச் செல்வதுதான் அவனுக்குச் சௌகரியமாயிருந்தது.

முள்ளிமலைக் குடியிருப்பான காத்தான் கிடலில் இருளர்கள் அன்று வள்ளி திருமணத்தைத்தான் கூத்தாக நடிக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். குடியிருப்பைச் சார்ந்த திடலில் நாலைந்து தீவட்டி மரங்கள் கொளுத்தி வைக்கப்பட்டிருந்தன. சுற்றுவட்டாரத்து இருளர் குடியிருப்புக்களிலிருந்தெல்லாம் ஆண்களும் பெண்களுமாக இருநூறு முந்நூறு பேருக்கு மேல் அங்கே கூடியிருந்தார்கள். திடலையடுத்த மேடுகளிலும் பாறைகளிலும் அந்த மக்கள் கும்பல் கும்பலாக உட்கார்ந்து கூத்து ஆரம்பிப்பதற்காகக் காத்திருந்தனர். காத்திருக்கும் நேரத்தை வீணாக்காமல் கட்டுச் சோற்றை அவிழ்த்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர் சிலர். சுருட்டுப் பிடிப்பவர்கள் கிளப்பிய புகைப்படலம் பல பகுதிகளில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. சுரைக் குடுவையிலிருந்த கள்ளை மூங்கில் குவளையில் ஊற்றி ஊற்றிப் பருகும் வேலையும் அங்கங்கே நடந்து கொண்டிருந்தது. தேனையும் தினைச் சோற்றையும் தம்பரத்தம் பழத்தோடு சேர்த்துத் துவைத்துப் பல நாட்கள் புளிக்க வைத்த பிறகு காய்ச்சி இறக்கப்பட்ட அந்தக் கள் அருவருப்பான, ஆனால் இனிமை கலந்த ஒரு நெடியை அந்தத் திடலெங்கும் நிரப்பியிருந்தது.

காளியண்ணன் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்ததும் அந்த நெடியைத்தான் நுகர்ந்து கொண்டு நின்றான் சற்று நேரம். பின்பு, ''கலியா! கலியா!'' என்று முரட்டுக் குரலில் அழைத்துக் கொண்டே, அரையிருட்டும் அரை வெளிச்சமுமாயிருந்த அந்தத் திடலில் சுற்றியவாறு கலியனைத் தேட ஆரம்பித்தான்.

கலியன்தான் அந்தக் குடியிருப்புக்கு நாட்டாண்மைக்காரன். காளியண்ணனுக்கு வேண்டியவற்றை உடனுக்குடன் கவனித்து நிறைவேற்றுவதற்கு எப்போதுமே தயாராய்க் காத்திருப்பவன். காளியண்ணன் தருந்த விருந்தில் அவனை அவ்வப்போது கவனித்துக் கொள்ளத் தவறுவதில்லையென்ற விசுவாசம் கலியனுக்கு என்றும் உண்டு. இப்போது காளியண்ணனின் குரலைக் கேட்டதுமே அவனருகே ஓடி வந்தான். சுரைக் குடுவையும் மூங்கில் குவளையும் அவன் கையில் தயாராயிருந்தன. அவன் ஊற்றிக் கொடுத்த கள்ளை ஒரே மூச்சில் குடித்த காளியண்ணன் திருப்தியுடன் நெஞ்சை நிமிர்த்தி உரக்க ஏப்ப ஒலி செய்தான்.

''கூத்து இன்னும் ஆரம்பமாகலியா?'' என்று கேட்டான் கலியனைப் பார்த்து.

''ஆரம்பிக்க வேண்டியதுதான்! திமர்னு ஒரு சங்கடம் வந்திடுச்சு'' என்றான் கலியன்.

''என்ன சங்கடம்?''

''நம்பிராசன் வேடத்துக்குத்தான் தகராறு இப்போ. அதைப் போட வேண்டிய ஆளு குளிர்க் காய்ச்சல்லே படுத்திட்டான்.''

''நம்பிராசா இல்லாட்டா என்ன முழுகிப் போச்சு? இளைய நம்பியை வச்சுக் கதையை நடத்துவாயா, என்னமோ!''

''இளையநம்பிக்குக்கூட ஒருத்தரும் தோதா இல்லே'' என்றான் கலியன்.

''போகுது. நான் போடறேன் அந்த வேசம். வள்ளிக்கூத்து எனக்கும் பாடந் தான்'' என்றான் காளி.

''நிசமாகவா ஐயா?''

''பொய் வேறயா இதிலே ? அந்தக் கூத்து நீங்க நடத்தியே பத்து தடவை பாத்திருக்கேனே. உங்க ஆளு செய்ய றதைவிட மட்டமாவா நான் செய் திடப் போறேன்.''

''சவாசு, சவாசு'' என்று மகிழ்ச்சி யுடன் கூறிக் கொண்டே குடுவைக் கும் குவளைக்கும் இன்னொரு முறை தொடர்பு ஏற்படுத்திக் காளியண் ணனை மேலும் உற்சாகப்படுத்திவிட்டு அந்த நல்ல செய்தியைத் தன் கூட் டாளிகளுக்குச் சொல்வதற்காக ஓடி னான் கலியன்.

கூத்து ஆரம்பமாகியது. திடலில் தீவட்டிக் கம்பங்களையடுத்த மேடு தான் அந்தக் கூத்துக்கு மேடையாகப் பயன்பட்டது. படுதாவின் ஸ்தானத் தில் ஒரு மூங்கில் தட்டியை இரு ஆட்கள் இருபுறமும் பிடித்துக் கொண்டு வர அதன் மறைவில் வீர நடை போட்டவாறு காளியண்ணன்,

''இளையநம்பி நானும் வந்தேனே - இச்சகம் புகழும்
இளைய நம்பி நானும் வந்தேனே !''

என்று உரக்கப் பாடிக் கொண்டே மேடையின் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ச்சல் காட்டினான். அவ்வப்போது தட்டி ஆட்கள் தட்டியைச் சற்று இறக்கி அவன் முகத்தைச் சபையோர் பார்க்கச் செய்த போது கைதட்ட லும் சீழ்க்கையொலியும் காளியண்ண னின் குரலைக்கூட அமுக்கி விடுவதா யிருந்தது.

ஆரம்பத்திலிருந்தே களை கட்டிவிட் டது அந்தக் கூத்து. தினைப்புனத்தைக் காப்பதற்காக வள்ளியை வழியனுப்பி வைக்கும் சமயத்தில் இளையநம்பி தன் னுடைய நிஜத் தங்கை வள்ளியை நினைத்துக் கொண்டு விட்டான்.

''பளா... பளா... அதாகப்பட்டது என்ன வென்றால்....'' என்று வசனத் தில் ஆரம்பித்த அவன் உணர்ச்சி நிறைந்த குரலில் பாடிய பாட்டு அந்தத் திடலில் கூடியிருந்தவர்களின் கண்களில் கண்ணீரை வருவிக்கும் அளவுக்கு உருக்கமாயிருந்தது. காளி யண்ணன் பாடினான்.

'' தினைப் புனம் காக்கவே வள்ளிக்குட்டி - நீ
    திடமாகப் போயிடு வள்ளிக்குட்டி
பரண்மேலே நின்றிடு வள்ளிக்குட்டி - நீ
    பறவைகள் ஓட்டிடு வள்ளிக்குட்டி
யாருக்கும் அஞ்சாமல் வள்ளிக்குட்டி - நீ
    ஆயலை ஓட்டிடு வள்ளிக்குட்டி

மனம் தளராமலே வள்ளிக்குட்டி - நீ
    மலைப்புனம் காத்திடு வள்ளிக்குட்டி
துஷ்டர்கள் வந்தாலே வள்ளிக்குட்டி - நீ
    துயரேதும் கொள்ளாதே வள்ளிக்குட்டி
அண்ணனை நினைத்திடு வள்ளிக்குட்டி - நீ
    அஞ்சாமல் நின்றிடு வள்ளிக்குட்டி

காளியண்ணன் பாடி முடித்தபோது கைதட்டலும் சீழ்க்கையொலியுடன் கலந்த ஆரவாரமும் அந்தத் திட லெங்கும் எதிரொலித்தன.

''பளா, பளா! அதாகப்பட்டது என்ன வென்றால், என் அருமைத் தங்கை வள்ளிக்குட்டியே, நீ எந்த இடத்தில் இருந்தாலும் உனக்கு ஒரு ஆபத்தும் வரக் கூடாது. நீ நினைத்த தெல்லாம் கைகூட வேணும். அண்ண னுக்கேற்ற தங்கையாக நீ அகிலம் புகழ வாழ வேணும்'' என்று வள்ளியை அவன் வாழ்த்தியனுப்பிய போது உண்மையாகவே அவன் குரல் உணர்ச்சி மிகுதியால் கரகரத்தது. தட்டி வீரர்கள் தட்டியை உயர்த்திப் பிடிக்கத் தளர்ந்த நடையுடன் அவன் ''மேடை''யிலிருந்து அப்பால் நகர்ந்து சென்றான்.

குவளையும் கையுமாகக் கலியன் அவனருகே ஓடி வந்தான். ''சவாசு, சவாசு ! இந்த வேசத்தை இந்த மாதிரி யாருமே நடத்தியிருக்க மாட் டாங்க. அந்த நரியம்பய காய்ச்சல்ல படுத்தது எங்களுக்கு அதிர்ஷ்டமாப் போச்சு. இனிதான் இனிமே நாங்க இந்தக் கூத்து நடத்தும் போதெல் லாம் இந்த வேசத்தைப் போட்டாக ணும். இல்லேன்னு நாங்க ஐயாவை விடவே மாட்டோம்'' என்று குழைந்து குழைந்து கூறிக் கொண்டே குவளையை

காந்திஜியின் பரபரப்பு

சேவா கிராமத்தில் ஒரு நாள் காந்திஜி பரபரப் புடன் எதையோ தேடிக் கொண்டிருந்தார்.

''எதைத் தேடுகிறீர்கள்?'' என்று கேட்டார் கலெக்டர்.

''ஒரு சிறு பென்சில்'' என்றார் காந்திஜி.

உடனே கலெக்டர் தம்மிடமிருந்த ஒரு பென் சிலைக் கொடுத்து, ''இப்போது இதை வைத்துக் கொண்டு எழுதுங்கள். பின்னால் உங்கள் பென் சிலைத் தேடித் தருகிறேன்'' என்றார்

''நான் சொல்வது உங்களுக்குப் புரியவில்லை. அந்தப் பென்சில் கெட்டுப் போகக் கூடாது. அதைச் சென்னையிலிருக்கும் அந்தப் பிரமுகரின் பையன் எவ்வளவு அன்போடு ஓடிவந்து கொடுத்தான் தெரியுமா?'' என்றார் காந்திஜி துயரத்தோடு.

இருவருமாகத் தேடினார்கள். கடைசியில் அந்தப் பென்சில் கிடைத்தது. பிறகுதான் காந்திஜிக்கு மன நிம்மதி ஏற்பட்டது. அந்தப் பென்சிலின் நீளம் எவ்வளவு தெரியுமா? ஓர் அங்குலம்!

தகவல்: சி. முத்துக்குமரன்

அவன் கையில் கொடுத்தான். ஒரே மூச்சில் குவளையைக் காலி செய்து எறிந்துவிட்டு ஆயாசத்துடன் மேல் மேட்டில் மல்லாந்து சாய்ந்தான் காளியண்ணன்.

"கலியா! போதையிலே ஒறங்கிருனும் ஒறங்கிடுவேன். வேங்கை மரசீன் வரும் போது என்னை உசுப்பி விட்டுடு" என்று கலியனை எச்சரித்து விட்டுக் கண்களை மூடிக் கொண்டான் காளி.

உண்மையில் வள்ளி ஆயலோட்டப் போன பிறகு இளையநம்பிக்கு வேலையேது? ஆயலோட்டும் பெண்ணுடன் முருகன் நடத்தும் லீலைகள் எல்லாம் முடிந்த பிறகுதானே அவன் மறுபடியும் மேடையில் தோன்ற வேண்டும்! வள்ளிக்கேற்ற முருகனாகத்தான் ஓர் ஆளைப் பொறுக்கிப் போட்டிருந்தார்கள். அரிதாரத்தை அனாயாசமாகக் குழைத்து அப்பிக் கொண்டிருந்த அந்த முருகனைப் பார்த்த போது வேங்கை மரமாவதற்கு முன்னமேயே வெட்டிவிட முடியாதா என்ற துடிப்புத்தான் இளையநம்பியின் மனத்தில் தோன்றியது.

மேடை மீது கூத்து எப்படி நடக்கிறது என்று பார்க்க வேண்டும் என்ற ஆவலே காளியண்ணனுக்குத் தோன்றவில்லை. கீச்சுக் குரலில் வள்ளி பாடிய ஆயலோட்டும் பாட்டு மட்டும் அவன் காதைத் துளைத்துக் கொண்டிருந்தது. பாட்டின் ஒவ்வோர் அடியின் முடிவிலும், "ஆலோ...ஆலோ...." என்று பாடும் கட்டம் வரும்போது அந்த இடத்திலேயே அந்த வள்ளி வேஷதாரியின் மென்னியைப் பிடித்தால் என்ன என்று நினைத்தான் காளியண்ணன். காதுகளைப் பொத்திக் கொண்டு கண்களைத் திறந்தான்.

கரிய வானத்தில் ஆயிரமாயிரம் தாரகைகள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. மல்லாந்து படுத்திருந்த காளியண்ணனின் மனத்தில் வள்ளியைப் பற்றிய தழுதழுப்பு இன்னும் நிரம்பியிருந்தது. பாவம்.... அவளுடைய மௌனமான கோபத்தைக் கண்டு அவள் எவ்வளவு மிரண்டு போய் விட்டாள்! எவ்வளவு தூரம் நல்ல வார்த்தைகள் சொல்லி அவள் மனத்தை மாற்றப் பார்த்தான். பதிலுக்கு அவன் எவ்வளவு கடுமையாகப் பேசி விட்டான்! "வீட்டுக்கு வந்து பேசிக் கொள்கிறேன்" என்று பயமுறுத்தியனுப்பினானே. அதை நினைத்து அந்தப் பேதைப் பெண் அன்றெல்லாம் எப்படிப் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தாளோ! நல்ல வேளை! அன்று அவள் வீட்டுக்குத் திரும்பாமல் இருப்பதற்குக் கூத்து என்னும் காரணம் துணையாய் அமைந்தது. கிருதாமீசை முனியாண்டியை எவ்வளவு வாழ்த்தினாலும் தகும்.

உணர்ச்சிகளின் வேகத்தாலோ, கள்ளின் மயக்கத்தாலோ அவன் கண்கள் தாமாகவே மூடிக் கொண்டன. வள்ளி பாவம், நினைவு தெரிவதற்கு முன்பே தாயை இழந்த பெண்தானே. தாயின் அன்பை அறியாமல், அண்ணனுடைய அன்பிலேயே வளர்ந்தவள்தானே. அவளைக் கவனித்துக் கொள்ள அஞ்சலை அத்தை இருந்தாள். உண்மைதான். ஆனால் அவன் பங்குக்கு அவளை எவ்வளவு தூக்கிச் சுமந்திருக்கிறான்! அவளுக்கு ஐந்து வயது நிறையும்வரை அவன் ஊட்டினால்தான் சாப்பிடுவாள். அவன் அவளைத் தூக்கித் தோளில் சாத்திக் கொண்டு குறுக்கும் நெடுக்கும் நடந்தால்தான் அவள் தூங்குவாள். அவன்மேல் அவ்வளவு பாசம் அவளுக்கு. அவளுக்கு மட்டுமென்ன? அவன் எப்படிப்பட்ட கோபத்திலிருந்தாலும் அவளுடைய சிரித்த முகத்தைக் கண்டால் மறு கணமே அவ்வளவு கோபமும் பறந்து போய்விடாதா? ஊருக்கு முரடனாயிருந்தாலும் அருமைத் தங்கையின் அந்தச் சிரிப்புக்கு அவன் அடிமை தானே!

சட்டென்று காளியண்ணனின் சிந்தனை அந்தப் புது ஐயாவின் பக்கம் திரும்பி மனத்தில் கோபத்தைக் கிளப்பியது. அந்த ஆள் வரும்வரை அவன் எவ்வளவோ நிம்மதியாயிருந்தானே! வந்ததிலிருந்து திரும்பத் திரும்ப அவனுக்குக் குறுக்கே முளைத்து அவனுடைய நிம்மதியைக் கெடுத்துக் கொண்டிருக்கிறாரே!

ஆனால் • வள்ளி செய்ததும் தப்புத்தானே! அந்த ஐயா சொல்லிவிட்டார் என்பதற்காக டிராலியில் அவர்களோடு நெருக்கியடித்து உட்கார்ந்து கொண்டு வந்துவிட வேண்டுமா? நடந்து வந்துவிட்டால் கால் தேய்ந்தா போய்விடும்? நடப்பதற்கு வள்ளி பின்வாங்கியிருக்க மாட்டாள். ஆனால் அந்த மங்கா இருக்கிறதே, அப்பப்பா... அது அடம் பிடிக்க ஆரம்பித்தால் யாராலும் அதை அடக்க முடியாதே.

மங்காவை நினைத்துக் கொண்டதும் ஏனோ காளியண்ணனின் உதட்டில் புன்னகை அரும்பியது. இதமான சுகம் அவன் நெஞ்சில் நிரம்பியது. அந்தச்

சுகம் மங்காவின் நினைவினால் ஏற்பட்டதா, அல்லிப் பள்ளியில் போனதா யாலா என்று அவனுக்கே புரியாத நிலையில் உறக்கம் அவன் மனத்தைக் கப்பிக் கொண்டு அவனது எண்ணங்களுக்கு முற்றுப்புள்ளி அமைத்தது.

''ஐயா, ஐயா!'' என்று கலியன் அவன் காதருகே குனிந்து கத்திய போதுதான் காளியண்ணன் உறக்கம் கலைந்து கண்களைத் திறந்தான்.

''வேங்கை மர சீன் வரப்போகுது. நீங்க உசாராயிடணும்'' என்றான் கலியன். அந்தக் காட்சிக்குத் தேவைப் படும் முரட்டுக் கோடாலி அவன் கையில் தயாராயிருந்தது.

''நிஜக் கோடாலியே கொண்டு வந்திட்டயா. பேஷ்'' என்றான் காளியண்ணன் அதைக் கையில் வாங்கிக் கொண்டவாறு.

''வெறகு வெட்டற கோடாலிங்க. வேறே கோடாலிக்கு நாங்க எங்கே போறது?'' என்றான் கலியன்.

> ''எந்தன் தங்கை தன்னைத் தீண்ட
> எந்த வித்தவன் வாரடா....வாரடா''

என்று அட்டகாசமாகப் பாடிக் கொண்டே கோடாலியைச் சுழற்றிய வாறு வீர நடையுடன் மேடையில் பிரவேசித்தான் காளியண்ணன்.

''அண்ணே...அதாகப்பட்டது என்னவென்றால், இங்கே யாருமே இல்லையே?'' என்று கீச்சுக் குரலில் வசனம் பேசினான் வள்ளி வேஷதாரி.

''இந்த வேங்கை மரம் எப்படி வந்தது?'' என்று வேங்கை மரத்தின் ஸ்தானத்தில் அங்கே நட்டு வைக்கப்பட்டிருந்த சவுக்கு மரத் தூரை உக்கிரமாகக் காலால் உதைத்தான், இளைய நம்பி. உதை தாங்காமல் கீழே விழப் போன அந்த மரத்தைத் தட்டி வீரன் தாங்கி நிறுத்தினான்.

''அண்ணே, இது வேங்கை மரம்.''

''இல்லவே இல்லை. இது சவுக்கு மரம்'' என்று கூறிவிட இருந்த காளியண்ணன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''இருக்கவே இருக்காது. இவன்தான் என் தங்கையைத் தீண்டிய துரோகி'' என்று கர்ஜித்தான்.

''இல்லையண்ணே.... இது வேங்கை மரமேதான்'' என்று மன்றாடினான் வள்ளி.

''வேங்கை மரமானால் வெட்டி வீழ்த்துவேன்'' என்று கோடாலியை ஓங்கினான் இளைய நம்பி.

''வெட்டாதே அண்ணே.. அதாகப் பட்டது, அதைவிட என்னை வெட்டி

மகாத்மாவின்

நம்பிக்கையில்லாமல் உழைப்பது முடிவில்லாத ஒரு பள்ளத்தின் அடித்தளத்தை அடைய நினைப்பதை போன்றதாகும்.

உண்மையான வீரன் நோய்ப் படுக்கையில் மரணமடைய விரும்பமாட்டான். போர்க்களத்தில் வீர மரணமடைவதையே விரும்புவான்.

தூய்மையுள்ள பெண்கள் ஆண்களைவிட வலிமையுள்ளவர்கள். பெண்ணுக்கு உண்மையான ஆபரணம் அவளது தூய்மையான நடத்தையே.

தொகுப்பு : **எஸ். ஸ்ரீதரன்**

பொன் மொழிகள் :

விடுங்கள், அண்ணே!'' என்று கதறிக் கொண்டே வள்ளி வேஷதாரி அவன் காலில் விழ வேண்டிய கட்டம். அப்படி விழுந்திருந்தால் அந்த வள்ளியை வேங்கை மரத்தை உதைத்ததைவிட உக்கிரமாக உதைத்துத் தள்ளுவதற்குத்தான் காலைத் தயாராக வைத்துக் கொண்டிருந்தான் காளியண்ணன். ஆனால் அதற்குச் சந்தர்ப்பமே ஏற்படாமல் ஒரு நிஜப் பெண்ணின் அலறல் திடீரென்று அந்தத் திடலில் ஒலித்தது. ''ஐயோ புலி புலி!... காப்பாத்துங்க!''

திடலில் ஒரே அல்லோலகல்லோலம். பெண்களும் குழந்தைகளும் கூச்சலிட்டவாறு குறுக்கும் நெடுக்கும் பாய்ந்தனர். ஆண்களோ கையில் அகப்பட்ட கற்களையும் கழிகளையும் எடுத்துக் கொண்டு நாற்புறமும் பார்த்தவாறு புலி எங்கிருந்து பாய்ந்தாலும் எதிர்ப்பதற்குத் தயாராக நின்றனர். கூச்சலிட்ட பெண் என்ன ஆனாள் என்ற எண்ணமே யாருக்கும் தோன்றவில்லை.

திடீரென்று ''அதோ... அதோ...'' என்று கூவினான் ஓர் ஆள்.

திடலின் வலது பக்கம் காட்டு மரங்கள் செறிந்திருந்த பகுதிக்கருகே ஒரு பாறை மீது இரு நெருப்புத் தணல்கள் தெரிந்தன. பெண்ணைத்

துரத்தி வந்த புலி அவ்வளவு ஜனக் கூட்டத்தை அங்கு எதிர்பார்க்கவில்லை போலும்! பிரமை பிடித்தாற்போல் அந்தப் பாறையின் மீது அசைவற்று உட்கார்ந்து தன் நெருப்புக் கண்களால் நிலைமையை ஆராய்ந்து கொண்டிருந்தது.

''யாருமே அசையாதீங்க! நான் அதைக் கவனிச்சுக்கிடறேன்'' என்று எல்லோரையும் கையமர்த்திய காளியண்ணன் தீவட்டி மரத்திலிருந்து ஒரு தீவட்டியைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு வலது தோளில் சாத்திய கோடரியுடன் புலி உட்கார்ந்திருந்த பாறையை நோக்கி அடிமேல் அடி வைத்து முன்னேறினான்.

ஒரு சருகு விழுந்தால்கூடக் கேட்கும்படியான நிசப்தம் அந்த நேரத்தில் அத்திடலில் நிலவியது. அங்கங்கே ஒதுங்கி, ஒடுங்கி நின்றிருந்த ஒவ்வொருவர் மனத்திலும் என்ன நடக்கப் போகிறதோ என்ற அச்சம் நிரம்பியிருந்தது.

புலிக்குப் பத்துப் பதினைந்தடி தூரத்துக்குள் வந்து விட்டான் காளி. புலியோ இமைக்காமல் அனல் விழிகளால் தன்னை நோக்கி வரும் எதிரியையே பார்த்தவாறு அசைவற்று உட்கார்ந்திருந்தது. அதைப் போருக்கு இழுப்பது போல் காளி இடக்கையில் இருந்த தீவட்டியை முன் பக்கம் நீட்டி நீட்டி அதன் ஆத்திரத்தைத் தூண்டிவிட யத்தனித்தான். என்ன ஆத்திரமூட்டினாலும் இருந்த இடத்தை விட்டு அசைய மாட்டேன் என்று சொல்வது போல் உறுதியாக உட்கார்ந்திருந்தது சிறுத்தைப் புலி.

அதற்கு மேல் நெருங்கினால் புலியின் முதல் தாக்குதலுக்கே பலியாகி விட வேண்டியிருக்கும் என்பது காளியண்ணனுக்குத் தெரியாததல்ல. எனவேதான் அந்தப் பத்தடி தூரத்திலிருந்தே அதற்குப் பாய்ச்சல் காட்டிக் கொண்டிருந்தான். புலியும் எதிரி இன்னும் நெருங்கி வரட்டும் என்று நினைத்தது போல் சலனமே இன்றி உட்கார்ந்திருந்தது.

இந்தத் தேக்க நிலை இன்னும் எவ்வளவு நேரம் நீடித்திருக்குமோ, சொல்ல முடியாது. திடீரென்று எங்கிருந்தோ ஒரு கல் புலி அமர்ந்திருந்த பாறை மீது விழுந்தது. மறு கணமே உக்கிரமாகச் சீறிப் பாய்ந்தது புலி. மின்னல் வேகத்தில் இது நிகழ்ந்து விட்டது.

காளியண்ணன் இந்தத் திடீர்த் தாக்குதலுக்குத் தயாராக இல்லைதான். ஆனால் அதுவே ஒரு விதத்தில் அவனுக்குச் சாதகமாகவும் அமைந்தது. கல் வந்து விழுந்ததால் ஏற்பட்ட கண நேரச் சீற்றத்தில் புலி குருட்டாம் போக்காகப் பாய்ந்ததே ஒழிய அவனைக் குறி வைத்துப் பாய வில்லை. எனவே அவனது இடத் தோளை மட்டும் நகங்களால் கீறிக் கிழித்துக்கொண்டு பக்கவாட்டில் விழுந்தது புலி. மறுபடியும் அது தன்னைச் சமாளித்துக் கொண்டு அவன் மேல் பாய்வதற்கு ஒரு கணம்தான் அதற்குத் தேவையாயிருந்தது. ஆனால் அந்த ஒரு கணத்தைக் காளியண்ணன் தனக்குச் சாதகமாய்ப் பயன்படுத்திக் கொண்டான். புலி தரையில் விழுந்த மறு கணமே அவன் கோடாலி முழு வேகத்துடன் அதன் முதுகில் பாய்ந்தது. மண்ணில் சாய்ந்த புலி பயங்கரமாகக் கத்தியவாறு மறுபடியும் எழுந்திருக்க முயற்சி செய்து பார்த்தது. கால்களை ஊன்றி வைக்கக் கூடச் சக்தியில்லாமல் கனல் கக்கிய விழிகள் பஞ்சடையப் பீறிட்டுப் பாயும் ரத்த வெள்ளத்தில் செயலற்றுத் துவண்டு புரண்டது.

''சவாசு...சவாசு...'' என்று கத்திக் கொண்டே காளியண்ணனை நோக்கி ஓடிவந்தான் கலியன். மற்ற இருளர்களும் காளியண்ணனின் வெற்றியைக் குறித்து ஆரவாரம் செய்துகொண்டே ஓடிவந்து சூழ்ந்து கொண்டனர்.

மகிழ்ச்சிப் பெருக்கில் இருளப் பெண்கள் அனைவரும் குலவையிட்டவாறு அந்தச் சிறுத்தைப் புலியைச் சுற்றிச் சுற்றிக் கும்மியடித்தனர்.

அவ்வளவு கூட்டத்தையும் இடித்துக் கொண்டு முன்னே வந்தாள் ஒரு பெண். கும்மியடிக்கும் பெண்களை விலக்கிக் கொண்டு தரையில் விழுந்து கிடந்த புலியைக் குனிந்து பார்த்த அவள் குதூகலத்துடன் கைகொட்டியவாறு கூறினாள்: ''செத்திட்டியா... ஒழிஞ்சு போ. என்னைத் தொரத்திக்கிட்டு வந்தேல்லே...நல்லா வேணும்!''

தீவட்டியை முன்னுக்குக் கொண்டு வந்து அந்தப் பெண்ணின் முகத்துக்கு நேரே பிடித்தான் காளியண்ணன்.

மறுகணம் அவனுக்குக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. தோளில் பட்ட காயத்திலிருந்து ஏற்பட்ட ரத்தப் பெருக்கு அவனை நினைவிழக்கச் செய்தது. தரையில் சாயப்போன அவனைக் கலியன் தாங்கிக் கொண்டான்.

''ஐயோ... வள்ளியண்ணே... புலி உன்னை அடிச்சிடுத்தா...?'' என்று அலறினாள் மங்கா.

(தொடரும்)



ஒப்பனை

பாரதநாட்டில் மலர்ந்த கலை, மனித முயற்சியின் வரலாற்றிலே மகத்தான பொன்னேடாக மிளிருகிறது. கல்லிலும் பாறையிலும் தெரிகின்றது நம் பழம்பெரும் கலையின் நினைவுமுகம். காலக்கொடுமைகளையும் பருவமோதல்களையும் கடந்துமிஞ்சி, இன்று தேசப் பொருட்காட்சிசாலைகளிலே பாதுகாக்கப்பட்டுவரும் அப் பொக்கிஷங்கள், கற்பனைச் சிறகடித்த ஆக்க எழுச்சிக்குக் கண்கூடான சான்றுகளாக நின்று, தம்மைப் பெற்ற மக்கள் சமூகத்திற்குப் பெருமைதருகின்றன.

ஒப்பனை என்றொரு சிற்பம்: (11-ம் நூற்றுண்டின்) காஜுராஹோ சிற்ப மண்டலத்திலே கொலுவிருக்கும் எழில்வடிவம்.

சிற்பக் களஞ்சியங்களுக்காக மட்டுமின்றி, கைவினைத் தொழில்களுக்காகவும் புகழ்பெற்றிருந்தது பழங்கால பாரதநாடு; நெசவுக் கலை நிபுணர்களும், சாயம் தோய்த்தோரும், வார்ப்படக் கம்மாளர்களும் அப் பழங்காலத்திலே எய்தியிருந்த கலைத்தேர்ச்சி என்றும் வியப்புக்குரியது.

தொழில் முன்னேற்ற யுகமாகிய இந்நாள், அப் பழங்காலத் தொழில்வல்லுனர்களின் பண்பாட்டைத் தழுவும் ராய்ப்பூர், தற்கால எந்திர வசதிகளின் உதவியால், நேர்த்திமிக்க நெசவுகளையும் துணிவகைகளையும் உற்பத்தி செய்கின்றனர்.

கோடு போட்ட & கட்டம்போட்ட ஷர்ட்டிங்
வெண்ணிற & சாயம்தோய்த்த பாப்லின்
ப்ரிண்டெட் லான் & வாயில்
புட்டா-லினோ
ஸ்பிப்பர்ஃபைன் வேஷ்டி
கேபர்டின் – கோட்டிங்


SANFORIZED

ராய்ப்பூர் மில்ஸ் அஹமதாபாத்

TAP

தீர்க்கதரிசி

நாடோடி



'அழுமூஞ்சி' பத்திரிகையின் முதலாளி வெகு கோபமாகப் பத்திரிகாலயத்துக்குள் நுழைந்தார். அவர் அறைக்கு முன்னால் இருந்த ஆபீஸ் பையன் அவசரம் அவசரமாக அவருடைய அறைக் கதவைத் திறந்து விட்டான்.

''கூப்பிடு, ஆசிரியரை !'' என்றார் முதலாளி.

பையன் ஓடோடிப் போய் ஆசிரியரை அழைத்துக் கொண்டு வந்தான்.

''என்ன ஆசிரியர்வாள் ! நீங்கள் பத்திரிகை நடத்துகிற லட்சணம் வெகு நன்றாக இருக்கிறது ! உம்மை நம்பி, நான் என் மோட்டார்த் தொழிலைக் கவனிக்கச் சென்றால், பத்திரிகையை இந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டீரே! ஆமாம், இந்த வாரம் நம் பத்திரிகையின் சர்க்குலேஷன் என்ன தெரியுமா ?''

''தெரியும். முப்பதாயிரம்.''

''போன வாரம் என்ன தெரியுமா ?''

''நாற்பதாயிரம்.''

''அதற்கும் முந்தின வாரம் என்ன தெரியுமா ?''

''ஐம்பதாயிரம்.''

''இந்த ரீதியில் பத்திரிகை போய்க் கொண்டிருந்தால் இன்னும் முப்பது வாரங்களுக்குப் பிறகு பத்திரிகையின் சர்க்குலேஷன் என்னவாக இருக்கும்?''

''ஒன்றுமே இருக்காது.''

''அதாவது நாம் அடிக்கும் பிரதிகளை நாமே வைத்துக் கொண்டு அழகு பார்க்க வேண்டியது தான். அப்பொழுது நீர் எங்கிருப்பீர், தெரியுமா ?''

''இந்தக் கதவுக்கு வெளியே இருப்பேன்.''

''நான் எங்கே இருப்பேன் தெரியுமா ?''

''ஊரிலேயே இருக்க மாட்டீர்கள்.''

''ஏன்?''

''கடன் கொடுத்தவர்களுக்குப் பதில் சொல்லப் பயந்து கொண்டுதான்.''

''ஆகவே, இந்த நிலை ஏற்படக்கூடாதென்றுதான் நான் இன்று உங்களையெல்லாம் கலந்து பேச வந்திருக்கிறேன். எல்லாத் துறை ஆசிரியர்களையும், உதவி ஆசிரியர்களையும் இங்கு வரச்சொல்லுங்கள்.''

முதலாளியின் ஆபீஸ் அறைப் பையன் உடனே போய் எல்லாரையும் அழைத்துக் கொண்டு வந்தான். முதலாளி ஆசிரியர்களைப் பார்த்துப் பேச ஆரம்பித்தார்.

''இந்த சக பத்திரிகையைப் பாருங்கள். இதன் சர்க்குலேஷன் என்ன தெரியுமா ?''

என்று அவர்கள் பத்திரிகைக்குப் போட்டியாக இருந்த இன்னொரு பத்திரிகையைக் காண்பித்தார்.

''ஒரு லட்சத்து முப்பதாயிரம்.''

''போன வாரம் என்னவாக இருந்தது தெரியுமா ?''

''ஒரு லட்சத்து இருபதாயிரம்.''

''அதற்கும் முந்தின வாரம் !''

''ஒரு லட்சத்துப் பத்தாயிரம்.''

''இப்படி இது வாரத்துக்குப் பத்தாயிரம் வீதம் அதிகரித்துக்கொண்டு போகிறதே. நீங்கள் யாராவது காரணத்தை ஆராய்ந்தீர்களா?''

ஒருவரும் பதில் சொல்லவில்லை.

முதலாளி சொல்ல ஆரம்பித்தார்: ''நீங்கள் ஏன் இந்த விஷயங்களை ஆராய்கிறீர்கள்! இது விஷயத்தை நான் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். இந்தப் பத்திரிகையின் இந்த இதழில் காதல் என்கிற வார்த்தை எத்தனை தடவை வந்திருக்கிறது, தெரியுமா?''





உதவி ஆசிரியர்கள் உடனேயே எண்ண ஆரம்பிக்கிறார்கள். உடனே முதலாளி சொல்ல ஆரம்பித்தார்.

''உங்களால் இப்பொழுது எண்ண முடியாது. இதை எண்ண எனக்கே இரண்டு நாள் பிடித்தது. 5637 தடவை காதல் என்கிற வார்த்தை வருகிறது. இதன் ரகசியம் என்ன?''

''இந்த மூன்று எழுத்துக்களின் டைப்புகளையும் அவர்கள் அளவுக்கு மீறி வாங்கிப் போட்டிருப்பார்கள்!'' என்றார் ஆசிரியர்.

''நீங்கள் இதை நகைச்சுவை என்று எண்ணிச் சொல்லியிருந்தாலும் உண்மை என்னவோ அதுதான். நானும் இந்த மூன்று எழுத்துக்களிலும் ஒவ்வொன்றிலும் ஆயிரம் ராத்தல் டைப்புக்கு ஆர்டர் கொடுத்து விட்டேன். நாளைக்கே வந்து விடும். இனி நீங்கள் செய்யவேண்டியது என்ன தெரியுமா?''

''என்ன?'' என்று கேட்டார்கள் ஆசிரியர்கள். முதலாளி சொல்ல ஆரம்பித்தார்:

''இந்தப் பத்திரிகைகளில் எத்தனை தடவை காதல் என்கிற வார்த்தை வருகிறதோ, அதைவிட அதிகமாக நம் பத்திரிகையில் வர வேண்டும். இந்த இரண்டு பத்திரிகைகளிலும் வரும் காதல் வார்த்தைகளைக் கணக்கிட்டு நம்முடையது எத்தனை அதிகம் என்று தெரிவிப்பதற்காக நான் ஒரு புது உதவி ஆசிரியரை நியமிக்கப் போகிறேன். அதோடு அந்தப் பத்திரிகை இது வரையில் செய்யாத ஒரு காரியத்தை நாம் செய்ய வேண்டும் !''

''என்ன !''

''இவர்களுடைய பத்திரிகையில் கட்டுரை, கதைத் தலைப்புக்களில் காதல் என்கிற வார்த்தை காணப்படவில்லை. ஆனால் அந்தக் காரியத்தை நாம் செய்யவேண்டும்.''

''இது எப்படி ஸார் முடியும் ?'' என்று கேட்டார் ஆசிரியர்.

''ஏன், முடியாது? இதோ நான் சொல்லுகிறேன், நம் பத்திரிகையைப் பிரித்து ஒவ்வொரு தலைப்பாகப் படியுங்கள்.''

ஆசிரியர் படிக்க ஆரம்பித்தார்.

''முதலில் தலையங்கம். தலையங்கத்தின் தலைப்பு, ''ரூபாயின் மதிப்புக் குறைப்பு.''

''இருக்கட்டுமே! இதற்கு 'ரூபாயின் காதல் நாடகம்' என்று தலைப்புப் போட்டிருந்தால் எத்தனை நன்றாக இருந்திருக்கும்! இத்தனை நாளும் ஐந்து ரூபாய்களைக் காதலித்த டாலர் இப்பொழுது ஏழரை ரூபாய்களைக் காதலிக்க ஆரம்பித்திருக்கிறது. இப்படி எழுதினால் எத்தனை ருசியாக இருக்கும் ! அப்பொழுது எல்லாரும் நம் தலையங்கங்களை விழுந்து விழுந்து படிப்பார்கள். சரி, அடுத்த தலைப்பு என்ன?''

''உலகச் செய்திகள் !''

'' இருக்கட்டுமே ! நீங்கள் அழுது கொண்டே சொல்வதைப் பார்த்தால், அதைக் காதல் பாஷையில் சொல்ல முடியாது என்று நினைப்பது போல அல்லவா தோன்றுகிறது! ''இது காதல் கதை அல்ல'' என்று தலைப்புப் போட்டால், உண்மைக்கு உண்மையாகிறது, காதல் என்கிற வார்த்தையும் தலைப்பில் வந்ததாக ஆகிறது. சரி, அடுத்த தலைப்பு?''

''கடவுளைத் தேடிய காரிகைகள்.''

''ஆகா! இந்தத் தலைப்பை எத்தனை அருமையாக மாற்றலாம்! 'கடவுளைக் காதலித்த காரிகைகள்' என்று போட்டால் மோனைக்கு மோனை, காதலுக்குக் காதல். சரி, அடுத்த தலைப்பு?''

''அடுத்த விஷயம் நாம் தொழிலதிபர்களைப் பற்றித் தொடர்ந்து எழுதுவது. இந்த வாரம் மோட்டார் மன்னன் ஹென்றி போர்ட் என்று தலைப்புக் கொடுத்திருக்கிறோம்.''

''ஏன் இதற்குக் 'காதலை மறந்த மோட்டார் மன்னன்' என்று தலைப்புக் கொடுத்திருந்தால் எத்தனையோ அழகாக இருந்திருக்குமே!''

''அப்படி அவர் காதலை மறந்ததாகச் சரித்திரம் இல்லையே!'' என்றார் ஆசிரியர். அதற்கு முதலாளி சொன்னார்:

''இதற்குச் சரித்திரம் தேவையில்லை. மோட்டார்த் தயாரிப்பில் ஆழ்ந்திருந்த போதெல்லாம் அவர் காதலை மறந்துதானே இருந்திருக்க வேண்டும்! ஆகவே 'காதலை மறந்த மோட்டார் மன்னன்' என்று போடுவதுதான் சரி. இந்த முறையைப் பின்பற்றி இந்தப் பகுதியில் வரும் கட்டுரைகளுக்கு நீங்கள், 'காதலை மறந்த பட முதலாளி', 'காதலை மறந்த ஆலை முதலாளி', 'காதலை மறந்த கோடீசுவரன்' என்று இப்படித் தலைப்புக்கள் போட்டுக் கொண்டே போகலாம். சரி, அடுத்த பகுதி என்ன?''

''தொடர்ந்து மகாபாரதத்தைப் போட்டுக் கொண்டிருக்கிறோமே, அது.''

''இதற்கு என்ன இப்படி வியாச பாரதம் என்று சப்பென்று தலைப்புக் கொடுத்திருக்கிறீர்களே? உடனேயே 'துரியோதனனின் காதல்' என்று பெயரை மாற்றுங்கள். துரியோதனன் திரௌபதியின் மீது காதல் கொள்ளப் போகத்தானே மகாபாரதப் போரே நிகழ்ந்தது! சரி, பிறகு என்ன?''

''பிறகு வெளியிலிருந்து வந்த கதைகள் தாம்.''

''இனி இந்தக் கதைகளுக்கு அதை எழுதினவர்கள் கொடுத்த தலைப்புக்களை மாற்றிவிட்டு, 'கண்டதும் காதல்', 'காதலுக்குப் பிறகு கலியாணம்', 'கலியாணத்துக்குப் பிறகு காதல்', 'காதல் இல்லையேல் சாதல்', 'சாதல் இல்லையேல் காதல்' என்று இப்படி மாற்றி, மாற்றித் தலைப்புக்கள் கொடுக்க வேண்டியது.''

''சரி சார்!'' என்று எல்லா ஆசிரியர்களும் தலையை ஆட்டினார்கள். முதலாளி மேலே சொன்னார்:

''நான் இன்னொரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். அதை மறந்தே விட்டேன். ஆசிரியர்களாகிய நீங்கள் பத்திரிகைகளுக்கு வரும் கதைகளை 'எடிட்' பண்ணுவதே போதாது. கதைகளில் அங்கங்கே காதல் சம்பந்தமான சிறு குறிப்புக்கள் வெகு எளிதில் சேர்க்கலாம். அதை நீங்கள் செய்வது கிடையாது. உதாரணமாகப் பெண் என்று வரும் இடங்களில் எல்லாம் பருவப் பெண் என்றோ, பதினெட்டு வயதுப் பெண் என்றோ மாற்றிக் கொண்டே வந்தால் கதை எத்தனை ருசிகரமாக இருக்கும்!''

''சில கதைகளில் கிழவிகள் வருகிறார்களே, ஸார், அதை என்ன செய்வது?''

''இருபதாம் நூற்றாண்டு முடிந்து இருபத்தோராவது நூற்றாண்டு பிறக்கப் போகும் இந்தக் காலத்தில் எதற்காகச் சிறுகதைகளில் கிழவிகளுக்கு இடம் கொடுக்கிறீர்கள்! நீங்கள்தான் எத்தனையோ சமூக நாடகங்களைப் பார்க்கிறீர்களே, அதில் எதிலாவது கிழவி வருகிறாளா? நம் எல்லாத் தமிழ் சமூக நாடகங்களிலும் தகப்பனார்கள் எல்லாரும் மனைவியை இழந்தவர்கள்தான். தாயார் இல்லாததால்தான் பெண்கள் காதல் நாடகம் நடிக்க முடிகிறது. நாமும் பார்த்து ஆனந்திக்க முடிகிறது. வீட்டில் கிழவிகள் இருந்தால் காதலுக்கு இடம் இருக்குமா! ஆகவே, இனி பத்திரிகைக் கதைகளும் நாடக மேடைக் கதைகளைப் பின்பற்ற வேண்டும். இந்தாரும் ஆசிரியரே! இன்றே பத்திரிகையில் ஒரு குறிப்புப் போட்டு விடும். கிழவிகள், ஏன் கிழவிகள் என்ன, இருபத்தைந்து வயதுக்கு மேற்பட்ட பெண்கள் பற்றி வரும் கதைகள் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்று ஒரு குறிப்புப் போடும்.''

''சரி.''

''வருகிற கதைகளை ருசிகரமாக்கப் பண்ண இன்னும் எத்தனை எத்தனையோ வழிகள் இருக்கின்றன.

''இந்தக் கதைகளில் வரும் பெண்கள் எல்லாரும் தினம் காலையில் ஸ்நானம் பண்ணித்தானே ஆக வேண்டும்! அந்த ஸ்நான அறைக் காட்சியை இலை மறைவு, காய் மறைவாகச் சொன்னால் எத்தனை ருசிகரமாக இருக்கும்! அதோடு நம் காதல் கதைகளில் இனி காதல் ஒரே ஜாதியினரிடையே, ஒரே அந்தஸ்து உடையவர்களிடையே இருப்பது கூடாது. அதில் ஒன்றும் சுவாரசியம் இல்லை. உண்மையான காதல் ஜாதி வித்தியாசத்தையோ, அல்லது அந்தஸ்து வித்தியாசத்தையோ பார்க்காது. ஒரு கோடீசுவரனின் பெண் தங்கள் வீட்டு டிரைவரைக் காதலிக்கிறாள் என்று காட்டுவதில் தவறு ஒன்றுமில்லை. என்னடா முதலாளிக்குக் காதல் மீது இத்தனை இமர்க் காதல் ஏற்பட்டு விட்டது என்று ஆச்சரியப்படாதீர்கள்! நான் சொன்னபடி நடந்து பாருங்கள், சர்க்குலேஷன் எப்படி உயருகிறது என்று நீங்களே சொல்லுவீர்கள். சரி, நீங்கள் போய்ச் சித்திரக்காரர்களை வரச் சொல்லுங்கள். அவர்களோடும் நான் சில விஷயங்கள் பேச வேண்டியிருக்கிறது.''

ஆசிரியர்கள் சென்று சிறிது நேரத்துக்கெல்லாம் முதலாளி இருந்த அறைக்குச் சித்திரக்காரர்கள் வந்து சேர்ந்தார்கள். முதலாளி அவர்களை உட்காரச் சொல்லி விட்டு, அவர்களைப் பார்த்து, ''நீங்கள் யாரும் புடவைக் கடைகளையே பார்ப்பதில்லையா?'' என்று கேட்டார்.

''எங்களுக்குக் கிடைக்கும் இருநூறு ரூபாய் சம்பளத்தில் நாங்கள் எங்கள் மனைவிகளை எந்தப் புடவைக் கடைக்கு அழைத்துச் செல்ல முடியும்? எங்கள் மாமனார்கள் தங்கள் பெண்களுக்குப் புடவைகள் அனுப்

பிக் கொண்டிருக்கிறீர்களோ, நாங்கள் பிழைத்தோமோ!'' என்றார்கள் அவர்கள்.

''சரி, இன்றையிலிருந்து உங்களுக்கு ஐந்நூறு ரூபாய் சம்பளம் பண்ணியிருக்கிறேன். நீங்கள் இனி அடிக்கடி புடவைக் கடைக்குச் சென்று, அங்கு எத்தனை விதமான மெல்லிய புடவைகள் வந்திருக்கின்றன என்று பார்க்க வேண்டும். அந்த மெல்லிய கண்ணாடி போன்ற புடவைகளைத்தான் நீங்கள் படம் வரையும் இளங்குமரிகள் அணிவதாகக் காட்ட வேண்டும்.''

''ஆனால் கிழவிகள் அத்தகைய புடவைகளை அணிய மாட்டார்களே!''

''அந்தக் கவலை இனி உங்களுக்கு வேண்டாம். இனி நம் பத்திரிகைக் கதைகளில் கிழவிகளே வரக் கூடாது என்று உத்தரவு போட்டு விட்டேன்.''

''ரொம்ப நல்லதாகப் போயிற்று, ஸார்!''

''ஆகவே, இனி நீங்கள் பெண்களை எத்தனை கவர்ச்சியாக வரைய முடியுமோ, அத்தனை கவர்ச்சியாக வரைய வேண்டும். இதில் சங்கோசமே வேண்டாம்.''

''இத்தனை நாளும் அப்படிப் படம் வரைந்தால் நீங்கள் கோபித்துக் கொள்ளுவீர்களோ என்று பயந்து கொண்டுதான் நாங்கள் வரையவில்லை. இனி, அப்படியே வரைகிறோம், ஸார்!''

''சரி, நான் வருகிறேன்'' என்று முதலாளி தம் மற்ற தொழில் ஸ்தாபனங்களைப் பார்க்கச் சென்றார்.

காதல் மீது முதலாளி கொண்ட திடீர்க் காதல் விளைவினால், பத்திரிகையின் 'சர்க்குலேஷன்' மளமள வென்று ஏற ஆரம்பித்தது. இரண்டு மாதத்தில் இரண்டு லட்சம் எண்ணிக்கையை எட்டிப் பிடித்தது.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு மிக்க மகிழ்ச்சியோடு தம் காரியாலயத்துக்கு வந்த முதலாளி ஆசிரியரைக் கூப்பிட்டனுப்பினார்.

ஆசிரியர் வந்ததும், அவரைப் பார்த்து முதலாளி, ''இரண்டு மாதங்களுக்கு முன்பு நீங்கள்கூட நினைத்திருப்பீர்கள், என்ன இது, திடீரென்று முதலாளிக்குக் காதல் மீது திடீர்க் காதல் பிறந்து விட்டது என்று. ஆனால் அந்தத் திடீர்க் காதல் எத்தனை பலன் கொடுத்து விட்டது என்று பார்த்தீர்களா! இரண்டு மாதத்தில் சர்க்குலேஷன் இரண்டு லட்சம் ஆகிவிட்டது. ஆகவே, உங்கள் சம்பளத்தை நான் இந்த மாதத்திலிருந்து இரட்டித்திருக்கிறேன். சந்தோஷம்தானே?'' என்று கேட்டார்.

''சந்தோஷம்தான். ஆனால்'' என்று ஆசிரியர் இழுத்தார்.

''ஆனால் என்ன?''

''ஆனால் இந்தப் பொதுஜனங்கள் இருக்கிறார்களே, மிகவும் பொல்லாதவர்கள். நம் பத்திரிகையை விழுந்து விழுந்து படித்துக் கொண்டே 'இப்படி இளைஞர்களையும், இளம் பெண்களையும் கெடுக்கிறீர்களே!' என்று கடிதம் எழுதுகிறார்கள்.''

''நீங்கள் இந்தக் கடிதங்களைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். நீங்கள் பாட்டுக்கு நான் சொன்ன வழியில் பத்திரிகையை நடத்திக் கொண்டு போங்கள். இன்னும் ஐந்து மாதத்துக்குள் சர்க்குலேஷன் ஐந்து லட்சத்தை எட்டிப் பிடிக்கும், பாருங்கள்.''

அந்தச் சமயம் முதலாளியின் வீட்டுக் காரியஸ்தர் அங்கு ஓடோடியும் வந்தார்.

''ஸார்! அம்மா மூர்ச்சை போட்டுக் கிடக்கிறாங்க'' என்றார்.

''ஏன், என்ன சமாசாரம்?''

''உங்கள் ஒரே பெண் மங்களாதான், உங்களுடைய கார் டிரைவரைக் காதலிப்பதாகக் கடிதம் எழுதி வைத்துவிட்டு அவனோடு எங்கோ ஓடி மறைந்து விட்டாள்!'' என்றார் அவர்.

முதலாளி கல்லாய்ச் சமைந்தார்!



காந்தி போட்ட காப்பி

காந்தி அடிகள் ஆசிரமத்தில் தங்கியிருந்த தமிழ் நாட்டு இளைஞன் ஒருவன் ஒருமுறை உடல் நலம் குன்றிப் படுத்திருந்தான். அடிகள் நாள்தோறும் அவனை விசாரித்துச் செல்வது வழக்கம். அவ்விளைஞன் காப்பிப்பிரியன். காப்பி குடிக்கக்கூடாது என்பது ஆசிரம விதிகளில் ஒன்று. நீண்ட நாட்களாகக் காப்பி குடிக்காத அவ்விளைஞனுக்கு ஏக்கம் அதிகமாயிற்று. காந்தி அடிகள் அவனைக் காண வரும்போது 'என்ன தம்பி! உடல் நிலை நன்றாக இருக்கிறதா? என்ன சாப்பிடுகிறாய்? இட்டுலி வேண்டுமா? அல்லது தோசை வேண்டுமா?' என்று கேட்டார். 'எனக்கு அவையெல்லாம் வேண்டாம் பாபு! ஒரு கோப்பைக் காப்பி இருந்தால் கொடுங்கள்' என்று கேட்டான் இளைஞன். காந்திஜி புன்னகை பூத்தார். இரக்கம் கொண்டார். 'உனக்கு காப்பியும் வாட்டிய ரொட்டித் துண்டும் கொண்டு வருகிறேன்' என்று கூறிச்சென்றார்.

'இப்பொழுது இரண்டும் கெட்டான் நேரம். உணவு விடுதியும் மூடப்பட்டிருக்கும். அன்னை கஸ்தூரிபாயும் ஓய்வெடுத்திருப்பார். இந்தச் சமயத்தில் எனக்கு யார் காப்பி போட்டுக் கொடுப்பார்கள்' என்று இளைஞன் அவநம்பிக்கையுடன் எண்ணிக் கொண்டிருக்கையிலேயே காந்திஜி தாமே ஒரு தட்டில் ரொட்டியும் ஒரு கோப்பை காப்பியும் வைத்துத் துணி ஒன்றினால் மூடி எடுத்து வந்தார். 'சாப்பிடு! நீ தென்னாட்டான். என்னுடைய காப்பியை நீ விரும்பிப் பாராட்டுவாய்' என்று கூறிச் சென்று விட்டார். காந்தி போட்ட காப்பி இளைஞனுக்குச் சுவையாயிருந்தது என்பதைக் கூற வேண்டுமோ?

தகவல்: எஸ். ராமு

ஆதாரம்: ''காந்தியின் வாழ்க்கையிலே''

விண்ணவர் போற்றும்

காந்தியடிகள் எரவாடாச் சிறையில் இருந்தபொழுது, தமது அறையைத் தாமே கூட்டிப் பெருக்கிச் சுத்தமாக வைத்துக் கொள்வார். அவரோடு சிறையில் இருந்த ஸ்ரீ சங்கர்லால் பாங்கர், என்பவருக்கு, 'காந்தியடிகள் இந்தக் காரியமெல்லாம் செய்வதாவது' என்று தோன்றியது. காந்தியடிகளிடம் சென்று, ''பாபூஜி! தங்கள் அறையைச் சுத்தம் செய்யும் பொறுப்பை எனக்கு அளியுங்களேன்!'' என்றார். காந்தியடிகளும், ''சரி, உங்கள் மனத்தைக் கெடுப்பானேன்? நீங்களே துடைத்துத் துப்புரவாக்குங்கள்!'' என்று சம்மதம் தெரிவித்து விட்டார்.


காந்தியடிகளுக்குப் பணி செய்கிற மகிழ்ச்சியில் சங்கர்லால் பாங்கர் மிதந்தார். முதலில் காந்தியடிகளின் அறையைத் துப்புரவாக்குவார். அப்புறம் தம்முடைய அறையைச் சுத்தம் செய்வார். இப்படி நான்கு நாட்கள்தான் ஓடியிருக்கும். ''தவறாகக் கருதவில்லையென்றால், என் அறையை நானே பெருக்கிக் கொள்ள விடுங்களேன்!'' என்றார் காந்திஜி.

''ஏன்?'' வியப்புடன் கேட்டார் பாங்கர்.

''உங்கள் பணியை நான் மெச்சவே செய்கிறேன். ஆனால் எனக்குத் தூசிகூட அகத்தும் இல்லாமல் இருந்தால்தான் பிடிக்கும். நீங்கள் சுத்தம் செய்யும்போது மூலையில் சில சமயம் தூசி தங்கி விடுகிறது. புத்தகங்களைக் கூட மாடத்திலிருந்து எடுத்து நான் தட்டித் துடைத்து வைப்பது வழக்கம். அதனால்....''

காந்தியடிகள் வாக்கியத்தை முடிக்கவில்லை. இனிமேல் கவனமாக இருப்பதாகக் கூறி, அதே சமயத்தில் காந்தியடிகளின் துணிகளைத் துவைக்கும் வேலையையும் வாங்கிக் கொண்டார் பாங்கர்.

காந்தியடிகள் எவ்விதமான அப்பழுக்கும் சொல்லக் கூடாதே என்பதற்காகத் துணிகளைப் பால் போல் வெளுத்தார். நன்றாகக் காய வைத்துச் சுருக்கம் ஏதுமின்றி மடித்து வைத்தார். காந்தியடிகள் நாள்கைந்து நாட்கள் குறை ஏதும் கூறாமற் போகவே மகிழ்ந்தார். அவர் மகிழ்ச்சி நீடிக்கவில்லை. அந்தப் பக்கம் வந்த காந்தியடிகள், ''நீங்கள் துணி மணி துவைக்கும் வேலையை எனக்கே திருப்பிக் கொடுத்து விடுங்கள்!'' என்றார்.



''ஏன்? ஏதாவது குறை கண்டீர்களா?''

''துணிமணிகள் துப்புரவாகத்தான் இருக்கின்றன. ஆனால் உங்களுக்குச் சவுக்காரம் அதிகமாகச் செலவாவதாகத் தோன்றுகிறது. உங்களைப் போல் இரட்டிப்பு நாட்கள் எனக்கு அந்தச் சவுக்காரம் வரும்!'' என்றார் காந்தியடிகள். அதோடு குறைத்துச் செலவழித்து நிறக்கச் செய்யும் வித்தையையும் அவருக்குக் கற்றுக் கொடுத்தார்.



காந்தியடிகளுக்குச் சிறையில் பால், வெந்நீர் கூட வைத்துக் கொள்வதற்கென்று ஓர் அடுப்புக் கொடுத்திருந்தார்கள். தீப்பெட்டியும் தந்திருந்தார்கள். தீப்பெட்டி தீர்ந்து விட்டால் வேறு ஒன்று கொடுத்து வந்தார்கள்.

''ஒரு தீப்பெட்டி எத்தனை நாளைக்கு வருகிறது?'' என்று கேட்டார் காந்தியடிகள்.

''அந்தக் கணக்குத் தெரியாது. தீர்ந்து விட்டால் புதிதொன்று வாங்கிக் கொள்ளுகிறோம்'' என்று விடையளித்தார் பாங்கர்.

''அதுதான் கூடாது. எத்தனை குச்சிகள் என்று எண்ணிப் பார்த்துக் கொள்ள வேண்டும். எந்த எந்த வேலைக்கு எத்தனை எத்தனை உபயோகிக்கிறோம் என்பதையும் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும். என்னைக் கேட்டால் ஒரு பெட்டி ஒரு வாரத்துக்கு வரும்!'' என்று கூறினார்.

''மழைக் காலத்தில் உங்கள் கணக்கெல்லாம் சரிப் பட்டு வராது. சில பற்றிக் கொள்ளும், சில பற்றிக் கொள்ளாது. காற்று அடித்தால் அணைந்து விடுவதுண்டு. அப்பொழுது உங்கள் கணக்கெல்லாம் தலை குப்புறலாகி விடும். பல நாட்கள் அடுப்புப் பற்ற வைக்க முடியாமலே அவதிப்பட வேண்டியதுதான்!'' என்றார் பாங்கர்.

காந்தியடிகளா இலேசில் விடுவார்? ''முயன்றால் முடியாத காரியம் இல்லை. மழைக்காலத்தில் ஈரம் படாமல் நெருப்புப் பெட்டிகளை வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு வழி நான் சொல்லித் தரு கிறேன்!'' என்று ஆரம்பித்து விட்டார்.

காந்தியடிகள் நாளொன்றுக்கு நூறு உலர்ந்த திராட்சைப் பழங்கள் சாப்பிடுவது வழக்கம். நன் முகக் கழுவிச் சுத்தம் செய்த பின் அவற்றைச் சாப்பிடுவார்.

சங்கர்லால் பாங்கரே திராட்சைப் பழம் தரும் இந்த வேலையையும் ஏற்றிருந்தார். ஒரு நாள் காந்தி யடிகள் அவரைக் கூப்பிட்டு, ''இதென்ன, நூற்றுப் பத்துப் பழங்கள் தந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.



அண்ணலின் வாழ்விலே..



''ஒரு குத்துமதிப்பாகத்தான் தருகிறேன்!'' என்று ஒப்புக் கொண்டார் பாங்கர்.

''அதுதான் கூடாது. எதிலும் ஒரு கணக்கு வேண்டும். எண்ணித் தருவதற்குச் சோம்பக் கூடாது'' என்று உபதேசித்தார்.

சாதாரணக் காவல் கைதிகளுக்குச் சிறையில் அவர்கள் இஷ்டத்துக்குச் சொந்த உடை உடுத்திக் கொள்ள அனுமதி அளித்திருந்தார்கள். சங்கர்லால் பாங்கரின் வேஷ்டிகள் கிழிந்து விட்டன. புதியவை தருவிப்பதற்காகக் கடிதம் எழுதி யிருந்தார். அவை வரச் சில நாட்கள் பிடித்து விட்டன. அதனால் அவர் கிழிந்த துணிகளையே உடுத்திக் கொண்டார். இதைப் பார்த்த காந்தியடிகள், ''வேஷ்டி கிழிந்து விட்டது போலிருக்கிறதே!'' என்றார்.

''ஆமாம். புதிய வேஷ்டிகளுக்கு எழுதி யிருக் கிறேன்!''

''வரட்டும். அதற்காகக் கிழிந்த வேஷ்டியைக் கட்டிக் கொள்ள வேண்டுமா? ஏன் தைத்துக் கொள்ளக் கூடாது?''

''எனக்குத் தைக்கத் தெரியாது!''

''என்னிடம் கொடுங்கள், தைத்துத் தருகிறேன்'' என்றார் காந்தியடிகள். சொன்னது மட்டுமா? அழகாகக் கிழிசலே தெரியாமல் தைத்தும் கொடுத்தார்.

2

காந்தியடிகள் சபர்மதி ஆசிரமத்தில் இருந்த காலம். எத்தனையோ குழந்தைகள் அவரோடு இருந் தன. வாரம் ஒரு நாள் அவை காந்தியடிகளைக் கண்டு பல கேள்விகள் கேட்கும். காந்தியடிகளும் எத்தனை தான் பெரிய வேலை யிருந்தாலும், அவர்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லித் திருப்திப்படுத்தி வந்தார். ஆனால் அவர் அளிக்கும் பதில்கள் மிகச் சுருக்கமாக இருக் கும். 'உண்டு, இல்லை' என்பதாகவே கூட இருக்கும். குழந்தைகளுக்கு இந்தப் பதில் திருப்தியளிப்பதில்லை.

ஒரு நாள் ஒரு பையன், மிகத் துணிச்சலோடு, ''பாபுஜி! கீதையைப் பற்றியெல்லாம் தாங்கள் சொல்லு கிறீர்களே! அதில் அர்ஜுனன் ஒரே வரியில் கேட்கும் கேள்விகளுக்குக் கிருஷ்ணன் எத்தனை பெரிய பதில் பக்கம் பக்கமாகச் சொல்கிறார், பார்த்தீர்களா? நீங்கள் என்னடா வென்றால், நாங்கள் பக்கம் பக்க மாகக் கேட்கும் கேள்விகளுக்கு 'உண்டு, இல்லை' என்று ஒரே வார்த் தையில் பதில் சொல்லி விடுகிறீர் களே, இது நன்றாக இருக்கிறதா?'' என்று கேட்டுவிட்டான்.

காந்திஜி தமது பொக்கை வாயைத் திறந்து ஒரு சிரிப்புச் சிரித்தார். 'நீ சொல்வதும் ஒரு விதத்தில் நியாயம் தான். ஆனால் என் சிரமத்தையும் நீ பார்க்க வேண்டும். பகவான் கிருஷ்ணனுக்குக் கேள்வி கேட்க ஒரே ஒரு அர்ச்சுனன்தான் இருந்தான்.



ஒரு காகிதத்தைக் கண்டுபிடிக்க 217 பக்கங்கள்!

ஒரு துண்டுக் காகிதம் தொலைந்து போகிறது. அந்த முக்கியமான காகிதத்தைக் கண்டுபிடிக்க அலைகிறான் ஒருவன். அதைக் கண்டுபிடிக்க அவனுக்கு 24 மணி நேரம் பிடிக்கிறது. இடையில் அவனுக்கு நேரும் அனுபவங்களை மட்டும் வைத்து 217 பக்கக் கதையாக எழுதியுள்ளார் புகழ்பெற்ற கதாசிரியர் ராபர்ட் பின்செட். இவருக்கு பிரெஞ்சு கான்கோர்ட் அகாதமி வழங்கிய இலக்கியப் பரிசு கிடைத்தது.

தகவல்: உ. சுப்பிரமணியன்

எனக்கோ நீங்கள் அறுபது — எழுபது அர்ச்சுனர்களல்லவா இருக்கிறீர்கள்? ஒவ்வொருத்தர் கேள்விகளுக்கும் நான் ஓர் அத்தியாயம் பதில் சொன்னால் கட்டி வருமா? நீங்களும் தான் அலுக்காமல் கேட்டுக் கொண்டிருப்பீர்களா?'' என்று கேட்டார்.

குழந்தைகள் கை கொட்டிச் சிரித்து, ''நீங்கள் பொல்லாத காந்தித் தாத்தா தான்!'' என்று கூறின.

3

கீதையை அநாசக்தி யோகமாகப் பயின்றிருந்த காந்தியடிகள் பைபிளையும் குரானையும் கூட ஆழ்ந்து கற்றுத் தேர்ந்திருந்தார். எம்மதமும் சம்மதம் என்ற பெருங் கொள்கை உடையவராயிற்றே.

லார்டு இர்வினுக்கு நாட்டின் விடுதலை பற்றி அவர் எத்தனையோ கடிதங்கள் எழுதியிருந்தார். நேரில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியபோது, காந்தியடிகளைப் பார்த்து, இர்வின் பிரபு கூறினார்: ''தங்கள் கடிதங்களை நான் ஒரு முறைக்குப் பல முறையாகப் படித்தேன். தாங்கள் கூறும் பெரும்பாலான தர்க்கங்களை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. சொல்வதைப் புரியும்படியாகச் சொல்லக் கூடாதோ?''

காந்தியடிகள் அடக்கமாக முறுவலித்தார். ''எனக்கு உண்மையில் வியப்பாக இருக்கிறது; நீங்கள் புரியவில்லை என்று சொல்வதைக் கேட்கும்போது. நான் சொந்தமாக எதையும் எழுதி விடவில்லை. எழுதியிருந்ததெல்லாம் பைபிளிலிருந்து எடுத்த மேற்கோள்களேயாகும். ஒருவேளை உங்களுக்கு இப்பொழுதெல்லாம் பைபிள் படிக்க அவகாசமே கிடைக்கவில்லை போலும்!'' என்று முறுவலுக்கிடையே முடித்தார்.

4

1947ல் நடந்தது. காந்தியடிகள் நவகாளியிலிருந்து தில்லிக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். பட்னா ரயில்வே நிலையத்தில் வண்டி வந்து நின்றது. காந்தியடிகளைக் காண்பதற்காகப் பிஹார் மாநிலத்து மந்திரிகள் வந்திருந்தனர். காந்தியடிகளோடு பேசவும் தொடங்கி விட்டனர். வண்டி புறப்படும் நேரம் வந்தது. ஸ்டேஷன் மாஸ்டருக்கு ஒன்றும் புரியவில்லை. வண்டி புறப்பட உத்தரவு கொடுப்பதா, கூடாதா? நேரம் கடக்கவே, அவர் காந்தியடிகளிடம் சென்றார். வினயமாகக் கைகூப்பி, ''வண்டி புறப்பட நேரமாகி விட்டது. நான் சிக்னல் கொடுக்கலாமா?'' என்று கேட்டார்.

''நீங்கள் எல்லாப் பிரயாணிகளிடமும் இப்படி அநுமதி கேட்பதுண்டா? பக்கத்துப் பெட்டிகளில் உள்ள பிரயாணிகளிடம் கேட்டு விட்டீர்களா? அவர்கள் அநுமதி கொடுத்தால் எனக்கும் ஆட்சேபனை இல்லை'' என்றார் காந்திஜி. பேச்சில்தான் எத்தனை குத்தல்!

''இல்லை, மந்திரிமார்கள் தங்களிடம் பேசிக் கொண்டிருக்கிறார்களே, அதனால்தான் யோசித்தேன்'' என்று கையைப் பிசைந்தார் ஸ்டேஷன் மாஸ்டர்.

''மந்திரியாயிருந்தால் என்ன, அல்லது அவர்களுக்குத் தந்தையாக இருந்தால்தான் என்ன? நீங்கள் உங்கள் கடமையை அச்சமின்றி நிறைவேற்ற வேண்டியதுதானே? என்னைக் கேட்டால் நீங்கள் யாருக்கும் பயப்படக் கூடாது. உங்கள் கடமையைச் செய்ய வேண்டும். அதைப் பார்த்து உங்களுக்கு மேல் உள்ள அதிகாரிகளும், மந்திரிகளும் மகிழவேண்டுமேயொழிய, கோபிக்கக் கூடாது. பார்க்கப் போனால் உங்கள் கடமை உணர்ச்சியைப் பாராட்ட வேண்டும்!'' என்றார் காந்திஜி.

''பாபுஜி! பல ஆண்டுகளாக நான் ரயில்வே இலாகாவில் பணி புரிகிறேன். நான் ரிடையர் ஆக வேண்டிய நாட்களும் அதிகத் தொலைவில் இல்லை. ஆயினும் நாங்கள் எங்கள் அதிகாரிகளின் உத்தரவின்றி ஏதாவது செய்து விட்டால், வண்டியைக் கிளப்பிவிட்டால், நாங்கள் படும் அவஸ்தையைச் சொல்லி முடியாது. ஆண்டவன்தான் அறிவார். சொல்லும் செயலும் ஒன்றாயிருக்க வேண்டும் என்று உபதேசம் செய்யும் மகாத்மா தாங்கள். சொன்னதைச் சொன்னபடி வாழ்ந்து காட்டும் பெரியார் தாங்கள். தங்களைத் தேசத் தந்தை என்று கூறுவது....'' ஸ்டேஷன் மாஸ்டர் தழுதழுத்துப் போய்ப் பேசலானார்.

காந்திஜி குறுக்கிட்டு, ''இதோ பாருங்கள்! கடமையைச் செய்யும்பொழுது எத்தனையோ கஷ்டங்கள் ஏற்படத்தான் செய்கின்றன. எல்லோரையும் நல்லவர் என்று கூற முடியாது. உங்கள் பணி உங்களுக்கு இன்னலைத் தந்தாலும் அடுத்து வருபவர்களுக்குத் துணிச்சலைத் தரும். நியாய வழியில் நடக்கத் தூண்டும். இன்றைக்கு இல்லாவிட்டால் என்றைக்காவது ஒரு நாள் நியாயம் வெற்றி பெறும். எனவே, உங்களைப் போன்றோர் நியாய உணர்வுடன் கடமைப் பாதையில் சென்றால், அதுவே நாடு சிறக்க உதவும்'' என்று கூறி முடித்தார்.

ரயிலும் அவர் கூற்றை ஆமோதிப்பதே போல் கூவிவிட்டுப் புறப்பட்டது. —ஈ. வீ.



ஒரே ஒரு ஸாரிடான்

'ரோஷ்'



வலியைப் போக்குகிறது,
ஆசுவாசப் படுத்துகிறது, புத்துணர்ச்சி யூட்டுகிறது

உலகப்புகழ் பெற்ற வலி நிவாரணியான ஸாரிடான், பல்வலி, தலைவலி, உடல்வலி மற்றும் சாதாரண உடற்கோளாறுகள் இவற்றிலிருந்து விரைவில், அபாயமின்றி நிச்சயமாக நிவாரணம் அளிக்கிறது. பெரியவர்களுக்கு 1 வில்லை, குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை கொடுக்கலாம்.

ஒரே வில்லை ஸாரிடான் போதும்

'ரோஷ்' தயாரிப்பு

ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்

JWT. ST. 1338 (A)



திருமுருக கிருபானந்தவாரியார்

மூவரும் சென்று பொன்முகலியாற்றினை அடைந்தார்கள். பொன்னும் மணியும் கொழிக்கும் அத்திருநதியின் கரையில் ஒரு மரத்தின் நிழலில் பன்றியை வைத்தனர். ''நீ தீக்கடைக் கோலால் நெருப்பை உண்டாக்குவாய். நாங்கள் மலைக்குப் போய் வருவோம்'' என்று காடனை நோக்கிக் கட்டளை யிட்டு விட்டு நாணனுடன் சென்றார் திண்ணனார்.

வண்டுகள் நெருங்கியுள்ள சோலைகளின் மலர்கள் பொன்முகலியாற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தன. அந்நதியின் தெளிந்த நீரில் இறங்கிச் சிந்தை தெளிந்த திண்ணனார், மகிழ்ச்சி மிகவும் பொங்கத் திருக்காளத்தி மலையைக் கண்டார். நதியின் அக்கரை சேர்ந்து மலைச்சாரலை அடைந்தார். அப்போது கதிரவன் உச்சியை அடைந்து விட்டான்.

திருமலையின் உச்சியில் ஐந்து தேவ துந்துபிகளும் கடல் ஒலிபோல் முழங்கின. அந்த ஒலியைக் கேட்ட திண்ணனார், ''நாணா! இது என்ன ஓசை?'' என்று வினவினார்.

அந்த ஒலியைக் கேட்கும் பேறு பெறாத நாணன், ''இம்மலையில் உள்ள பெருந்தேனைச் சூழ்ந்து கொண்டு தேனீக்கள் செய்யும் ஓசையாக இருக்கும்'' என்று கூறினான்.

முன்பு செய்தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கியது; நிலைபெற்ற பெருங் காதலுடன் திருமலையை நோக்கி என்பு நெக்குருகிய திண்ணனார், நாணனும், அன்பும் முன்னே செல்ல, தத்துவங்கள் என்னும் படிகளை ஏறிச் சென்று சிவத்தைச் சாரும் சிவயோகிகள் போல் நீண்ட மலையின் மீது ஏறிச் சென்றார்.

திங்கள்சேர் சடையார் தம்மைச்
சென்றவர் காணு முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த
அருள்திரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச்
சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல்
பொருவில்அன் புருவம் ஆனார்.

திண்ணனார் இறைவனைச் சென்று காணுமுன், கண்ணுதற் கடவுளுடைய கருணை நோக்கம் இவர்மேல் எய்தியது. அதனால், முன்னைப் பிறப்பின் சார்புகள் நீங்கப் பெற்று, சிறந்த ஒளியின் நிழலிலே ஒப்பில்லாத அன்பு வடிவமாயினார்.

மாகமார் திருக்கா ளத்தி
மலையெழு கொழுந்தா யுள்ள
ஏகநா யகரைக் கண்டார்;
எழுந்தபே ருவகை அன்பின்
வேகமா னதுமேற் செல்ல
மிக்கதோர் விரைவி னோடும்
மோகமாய் ஓடிச் சென்றார்;
தழுவினார்; மோந்து நின்றார்.

மாகமார் திருக்காளத்தி மலையெழு கொழுந்தாயுள்ள ஏகநாயகரைக் கண்டார் திண்ணனார். அவரது உள்ளத்தில் பெரும் மகிழ்ச்சி பொங்கியது. அந்த மகிழ்ச்சியினால் அன்பின் வேகம் மிகுதியடைய மிகுந்த விரைவுடன் சென்றார்; மோகத்துடன் ஓடி எம்பெருமானைத் தழுவிக் கொண்டார்; உச்சி மோந்தார்; ஆனந்த மிகுதியால் அவ்வண்ணமே நெடிது நேரம் நெட்டுயிர்ப்புடன் நின்றார்.

நெடிதுபோ துயிர்த்து நின்று
நிறைந்தெழு மயிர்க்கால் தோறும்
வடிவெலாம் புளகம் பொங்க
மலர்க்கண்ணீர் அருவி பாய

"அடியனேற் கிவர்தாம் இங்கே
அகப்பட்டார், அச்சோ!" என்று
படியிலாப் பரிவு தானோர்
படிவமாய பரிசு தோன்ற.

திண்ணனுக்கு நிறைந்தெழு மயிர்க்கால்தோறும், வடிவெலாம் புளகம் பொங்கியது. மலர்க் கண்களில் ஆனந்தக் கண்ணீர் அருவி பாய்ந்தது. "ஆ! அடியேற்கு இவர் இங்கே அகப்பட்டார்; அச்சோ! இது என்ன அதிசயம்?" என்று கூறினார்.

"கொடிய மறக்குலத்தில் வந்த வேடுவரைப் போல, யானை, கரடி, சிங்கம், புலி முதலிய கொடிய விலங்குகள் திரிதற்கிடமாகிய இக்காட்டிலே, எம்பெருமானே! நீர் தனியே இருப்பதா? ஓ, கெட்டேன்!" என்று கூறி மனம் நொந்தார், எங்குமில்லாத அன்புருவமாகித் திகழ்ந்த திண்ணனார்.

அவர் கையிலே இருந்த வில் தானே கீழே விழ்ந்தது. அவ்வாறு வில் விழ்ந்ததையும் திண்ணனார் அறியவில்லை. "ஏகநாயகர் மீது பச்சிலையும் பூவும் பறித்து இட்டு, நீர் வார்த்திருக்கின்றார்கள். இந்த நல்ல காரியத்தைச் செய்தவர் யாரோ?" என்று கூறினார்.

"எனக்கு இது தெரியும்" என்று கூறிய நாணன், தொடர்ந்து, "உனது தந்தையும் நானும் முன்னொரு நாள் வேட்டையாடிக் கொண்டு இம்மலைக்கு வந்தோம். அப்போது ஓர் அந்தணர், இவரைக் குளிர்ந்த நீராலாட்டி, இலையும் பூவும் சூட்டினார். பின்னர் உணவு ஊட்டி, இவர் முன்னே சில மொழிகள் கூறினார். அன்று அப்படிச் செய்த அவரே இன்றும் இப்படிச் செய்திருப்பார்" என்றான் நாணன். அர்ச்சகர் பூசனை செய்ததையே, நாணன் இவ்வாறு கூறினான்.

திண்ணனாருக்கு அன்பு மேன்மேலும் வளர்ந்து தனித்தனிநிப் பெருகியது. 'திருக்காளத்திநாதராகிய எம்பெருமானுக்கு இனிய செய்கை இவையே போலும்' என்று தாமும் அவற்றைக் கடைப்பிடிக்க உறுதி கொண்டார். இறைவர் தனித்திருக்க, அவரை விட்டுத் தாம் பிரிவதற்கு அவர் மனம் இடம் தரவில்லை. 'எம்பெருமான் தனித்திருக்கின்றாரே! இவர் அமுது செய்ய இறைச்சி கொண்டு வந்து இடுவாரும் இங்கில்லை. இந்த நிலையில் நான் இவரைப் பிரிந்து போவது தகாது. இறைவருக்கு இறைச்சி கொண்டு வர வேண்டியதும் அவசியமாகும். ஐயன் பசித்திருக்கிறாரே? இவரை எவ்வாறு பிரிவேன்? இவருக்கு உணவு கொண்டு வந்து தருவதற்காகப் பிரியவும் வேண்டியிருக்கின்றதே' என்று பலப் பல எண்ணினார்.

திண்ணனார் திருக்காளத்திநாதரிடமிருந்து பிரிந்து போவார்; மீண்டு வருவார்; ஒழிவிலா அன்புடன் தழுவிக் கொள்வார்; காதலுடன் கடவுளை நோக்குவார். இளங்கன்றை விட்டுப் பிரியும் பசுவைப் போல் துடிதுடிப்பார். "நாதனே! நீர் அமுது செய்ய நல்ல மெல்லிறைச்சியை நானே குற்றமறத் தெரிந்து கொண்டு வருவேன்" என்று கூறுவார்.

போதுவர்; மீண்டு செல்வர்;
புல்லுவர்; மீளப் போவர்;
காதலின் நோக்கி நிற்பர்;
கன்றகல் புனிற்றுப் போல்வர்;



'' நாதனே! அமுது செய்ய
நல்லமெல் இறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறு
கொண்டிங்கு வருவேன்'' என்பார்.

மிகவும் அரிதின் அங்கிருந்து நீங்கினார். நாணன் பின்தொடர்ந்து வர மலையை விட்டு இறங்கினார். பற்றற்று நின்ற அவரை அன்பே செலுத்தியது. அவர் பொன்முகலி நதியைக் கடந்து புது மலர்ச் சோலையை அடைந்தார்.

திண்ணனார் எதிரே சென்று தொழுத காடன், ''தீக்கடைந்து வைத்தேன்; பன்றியின் உறுப்புக்களையெல்லாம் சரி பார்த்துக் கொள்ளும்; ஏன் இத்தனை நேரம்? நாம் திரும்பிச் செல்வதற்குத் தாமதமாகிறதே!'' என்றான்.

''காடனே! திண்ணன் மலையில் குடுமித் தேவரைக் கண்டு உடும்பு போல் பற்றிக் கொண்டான். குடுமித் தேவர் தின்பதற்காக இறைச்சி கொண்டு போகவே இங்கு வந்திருக்கின்றான். இவன் நமது குலத் தலைமையை விட்டு விட்டுத் தேவர்க்கே ஆளாயினான்'' என்றான் நாணன்.

''திண்ணா! என்ன காரியம் செய்தாய் நீ? என்ன மயக்கங் கொண்டாய்? நீ எங்கள் தலைவனில்லையா?'' என்றான் காடன்.

அவர்கள் இருவரது முகங்களையும் நோக்கவில்லை திண்ணனார். அவர் பன்றியைத் தீயில் வதக்கினார்; தசைகளை வேறு வேறாக அறுத்தார்; அம்பினில் கோத்துக் காய்ச்சினார்; பதமுறச் செய்தபின் சுவை தெரிந்து கொள்ளும் பொருட்டுப் பல்லினில் அதுக்கிப் பார்த்தார்; மிகவும் இனியவைகளை ஒரு தேக்கிலைக் கல்லையில் இட்டார்.

அவரது செயலைக் கண்ட நாணனும் காடனும், ''இவனுக்கு மயக்கம் மிகுந்து விட்டது. அருமையான இறைச்சியைக் காய்ச்சி அதுக்கிப் பார்த்து உமிழ்கிறான். இவனுக்குப் பெரும் பசி இருந்தும் இதனைத் தின்கின்றானில்லை. நமக்கும் தருகின்றானில்லை. இவனுடைய மயக்கத்தைத் தீர்க்கும் வழியும் தெரியவில்லை. தேவராட்டியையும், நாகனையும் அழைத்து வந்து இவனுடைய மயக்கத்தைத் தீர்ப்போம்'' என்று கூறி அங்கிருந்து நீங்கினார். வேட்டைக் காடு சென்று ஏனைய வீரர்களையும் அழைத்துக் கொண்டு போனார்கள்.

அன்புருவாகிய திண்ணனார் வேடர்கள் சென்றதை அறியவில்லை. விரைவாகக் கல்லையில் ஊனமுது அமைத்துக்கொண்டார். பெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்ட எண்ணி, பொன்முகலியாற்றில் நல்ல நீரைத் தூய வாயினில் முகந்து கொண்டார். ஒரு கையில் வில்லும், அம்புந் தாங்கி, ''எம்பெருமான் பசித்திருப்பாரே'' என்று இரங்கி ஏங்கி, மிக மிக விரைவாகக் காளத்திமலையை அடைந்தார். மலைக்கொழுந்தாகிய இறைவர் இளைத்தனர் என்று வாட்டமுடன் சென்றார். இறைவரைக் கண்டதும் இவர் முடிமிசையிருந்த மலரைத் தமது காலில் தரித்த அழகிய செருப்பால் மாற்றினார். அன்பு உமிழ்வார் போல் வாயில் உள்ள மஞ்சன நீரை முடிமேல் உமிழ்ந்தார். மலைமிசை மேலும் பெருமானுக்குத் தலைமிசை சுமந்த மலர்களை வணங்கிச் சாத்தினார். ஊன் கல்லையை இறைவர் திருமுன் வைத்து, ''பெருமானே! கொழுப்பினையுடைய தசைகளையெல்லாம் தெரிந்து அரிந்து எடுத்து, நன்கு காய்ச்சி, பல்லினால் அதுக்கிப் பார்த்து, நாவினால் சுவை பார்த்துக் கொண்டு வந்தேன். இது அழகிய இறைச்சி. ஐயனே! அமுது செய்தருளும்'' என்று வேண்டிக் கொண்டார்.

இவ்வாறு திண்ணனார் இறைவரை வழிபாடு செய்யும்போது கதிரவன் மேற்கடலில் மூழ்கினான். இரவிலே இரை தேடும் கொடிய விலங்குகளால் எம்பிரானுக்கு இடர் நேரும் என்று எண்ணி, சிறந்த அன்புடன் வில்லைத் தாங்கி, ஈசன் அருகில் நேசமுடன் நின்றார்.

சார்வரும் தவங்கள் செய்து
முனிவரும் அமரர் தாமும்
கார்வரை அடவி சேர்ந்தும்
காணுதற்கரியார் தம்மை
ஆர்வமுன் பெருக ஆரா
அன்பினிற் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றார்
நீளிருள் நீங்க நின்றார்.

இரவு தோன்றியது. முத்துக்களும், நவரத்தினங்களும் ஒளி வீசின. ஒளி வீசும் பெரிய சோதி மரங்களின் விளக்கத்தாலும், குரங்குகள் கற்பொதும்பில் தமக்கு விளக்காக வைத்த மணிவிளக்குகளின் ஒளியினாலும், ஐம்புலன்களை அடக்கிய மாதவர்களின் அரிய பெரிய சோதியாலும், எந்தையர் திருக்காளத்தி மலையில் இருள் நீங்கி இரவே இல்லாதொழிந்தது. (தொடரும்)



கோகோ மால்டீன்

புத்துணர்ச்சியும் வலிவும் அளிக்கும் லட்சிய உணவு பானம்

ஒரே ஸ்பூன் அளவு உட்கொள்வதில் உங்களுக்கு வேண்டிய எல்லாச் சக்தியும் கிடைக்கிறது...

முழு ஆடைப் பாலும், கோகோவும், சிறந்த தரமான பார்லி மால்ட்டும், குளுகோஸும் திறம்படக் கலக்கப்பட்ட கோகோ மால்டீனில் வலுவான தசைகளும், திடமான எலும்புகளும் அடையவும், வலுவும் உரமும் பெறவும் வேண்டிய புரதங்கள், கார்போஹைட்ரேட்டுகள், தாது உப்புக்கள் எல்லாம் உள்ளன. நீங்கள் சுறுசுறுப்புடன் செயல் புரிவதற்கு வேண்டிய மதிப்புயர்ந்த A, B, B-2 மற்றும் D வைட்டமின்கள் கோகோ மால்டீனில் இருக்கின்றன. ஆரோக்கிய நிலையிலும் நோயுற்ற நிலையிலும் இளையவர்களும் முதியவர்களும் அருந்தக்கூடிய லட்சிய ஊட்டப்பொருள் இது. கோகோ மால்டீனை அருந்தினால் அது ஓய்ந்துபோன நரம்புகளுக்கு இதமளிக்கிறது. படுக்கும்போது சூடாக அருந்தினால், ஆழ்ந்த உறக்கத்துக்கு வகை செய்கிறது.


கோகோ மால்டீன் லாபரடரீஸ்

உரிமையாளர்கள்: டிரேட் லிங்க்ஸ் பிரைவேட் லிட்., 46, புஸா ரோடு, புது டில்லி.-5. போன்: 52835

பிராந்திய விற்பனை ஆபீஸ்:

76, எல்லிஸ் ரோடு, மவுண்ட் ரோடு, சென்னை - 2 போன்: 85982 - தந்தி: SOUTHLAND

TL-NP-30



வட்டமேஜை

- அதிகாரக் கெடுபிடி
- அச்சம் வேண்டாம்!
- ஒரு வேண்டுகோள்
- நடந்ததுதான் நம்புங்கள்!

ஆகஸ்டு 18ந்தேதி வட ஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூரிலிருந்து எங்களின் வீட்டுச் செலவுக்காகச் சுமார் மூன்று படி அரிசி, படி 1-95 பைசா விலையில் வாங்கி அதையும் இன்னும் வீட்டுக்குத் தேவையான சாமான்களையும் கைப் பையில் வைத்து எங்கள் ஊரான தர்மபுரி மாவட்டம் கல்லாவிக்குப் புகைவண்டியில் எடுத்து வந்தேன். காகங்கரையில் அதிகாரிகள் என்று சொல்லிக் கொண்டு சுமார் ஐந்தாறு பேர்களுக்கு மேல் ஒவ்வொரு பெட்டியிலும் ஏறிப் பொதுமக்களிடம் இருந்த 1 படி, 2 படி அரிசி, மற்றும் புஞ்சை தானியங்கள் அனைத்தையும் பறிமுதல் செய்து எடுத்துப் போய் விட்டார்கள். எனது கையிலுள்ள பலசரக்குச் சாமான்களையும் சேர்த்து அரிசியுடன் பிடுங்கிக் கொண்டார்கள். அரசாங்க உத்தரவின்படி ஐந்து படி வரை எடுத்துப் போகலாமென்று வாதாடியதற்கு 'எங்களுக்கு உத்தரவு கிடையாது. தவிர இது மூன்று படி என்று எங்களுக்குத் தெரியாது!' என்று கூறிப் பிடுங்கிக் கொண்டு போய்விட்டார்கள். ஒரு நாள் கழித்துத் திருப்பத்தூர் தாலூக்காபீஸில் கேட்டதற்கு 'டி. எஸ். ஓ. வைக் கேள்' என்றார்கள். அவரைக் கேட்டால் 'தாசில்தாரைக் கேள்' என்றார். பலரைக் கேட்டும் கடைசியில் என்னுடைய பையும், அதில் உள்ள சாமான்களும் எதுவும் கிடைக்கவில்லை. அரசாங்கம் பொதுமக்களின் உடைமைகளுக்குச் சரியான பாதுகாப்பு அளிக்குமா?

கல்லாவி
2–9–66 — க. மு. இராசன்

பதினேழு ஆண்டுகளாகத் தி. மு. க. மூலம் நாட்டு மக்களுக்கு நல்ல தொண்டு புரிந்துவரும் அருமை அண்ணாவின் படத்தைப் பதினாறு படங்களில் மட்டுமல்ல (தங்கள் புத்தகத்தில்) நாலு கோடி தமிழர்களின் இதயத்திலும் பதித்து விட்டீர்கள்.

மதுரை
17–9–66 — தேனிநாதன்

'தலைப்பில்லை' என்ற தலைப்பின் கீழ் அண்ணாதுரை அவர்கள் சமயத்துக்கேற்றபடி திறம்படப் பேசியதாகக் கல்கியில் குறிப்பிடப்பட்டிருந்தது. சில ஆண்டுகளுக்கு முன்னால் சென்னை கிறித்துவக் கல்லூரித் தமிழ்ப் பேரவையில் பேசுவதற்காகச் செயலாளர், அறிஞர் அண்ணாவை அழைக்க முடிவு செய்தார். ஆனால் தலைவர் கட்சிச் சார்பில் பேசுவார் என்று அஞ்சியதால் பலர் இம்முடிவை விரும்பவில்லை. எனினும் இறுதியில் அறிஞர் அண்ணாவே அழைக்கப்பட்டார். கல்லூரிக்கு வந்ததும் தம்மை அழைப்பதற்குப் பலர் அஞ்சித் தயங்கியதாக அறிந்த அண்ணா, "அச்சம்" என்ற தலைப்பிலே பேசத் தொடங்கினார்! "கட்சியைப் பற்றிப் பேச நாங்கள் கல்லூரிக்கு வரவேண்டியதில்லை. எங்கு வேண்டுமானாலும் கூட்டம் கூடும்; என்னை அழைக்க அச்சம் வேண்டாம். அச்சமின்மைதான் வாழ்க்கையின் வெற்றிக்குக் காரணம்" என்று ஆரம்பித்துச் சொற்பொழிவாற்றினார்.

அயன்புரம்
15–9–66 — மு. ஜகந்நாதன்

"இறைவன் இறந்து விட்டாரா?" நாடகத்தின் முடிவு துன்பியலைக் கொண்டது. உணர்ச்சிகரமான, துன்ப முடிவுகள் கொண்ட குணசித்திர நாடகங்கள் நடத்த வேறு குழுவினர் இருக்கின்றனர். 'சோ'வின் நாடகங்களைக் காண வருபவர், மனச் சோர்வுக்கு மாமருந்தான ஹாஸ்யவெடிகளைக் கேட்டு மெய்ம்மறந்து சிரிக்கவே வருகின்றனர். துன்பியல் நாடகத்தை அவரிடமிருந்து எதிர்பார்க்கவில்லை என்பதை அவரது ரசிகை என்ற முறையில் தெரிவிக்கிறேன். "சோ" அவர்கள் நகைச்சுவை நாடகங்களாகவே எழுதி நடித்து நமக்கு அளிக்க வேண்டுகிறேன்.

சென்னை
15–9–66 — வி. வித்யா

நடந்ததுதான் நம்புங்கள்—நட்பும் நகையும் என்ற பகுதியைப் படித்தேன். கற்பனைக் கதைகளைவிட, உண்மை நிகழ்ச்சிகள் உள்ளத்தை ஒரு நொடியில் தொடுகின்றன.

'உயிர் காப்பான் தோழன்' என்பதைத் தான் பெரும்பாலோர் அறிந்திருப்பார்கள். கொலையும் செய்வான் நண்பன் என்பதை இதன் வாயிலாக அறிவார்கள். நண்பர்களாக எல்லோரையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. உயர்ந்த பண்பு உள்ளவர்களை நன்றாகத் தெரிந்த பின்னர் அவர்களை நண்பர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை இந் நிகழ்ச்சி உணர்த்துகிறது.

மேட்டூர் அணை
20–9–66 — தா. முருகன்

போலீஸில் சேரும் ஆர்வத்தில் ஒருவன் தானே கொலைகாரனாக மாறுவது விசேஷமில்லை. கொலையுண்ட மாணிக்கத்தையே கடைசி 'பாரா'வில் கொலைகாரனாக எழுதியிருப்பதுதான் வெகு விசேஷம்!

பம்பாய்
19–9–66 — டி. எஸ். கிருஷ்ணமணி

உலகம் தலைகீழாகியது — எனக்கு அல்ல; அந்த நொண்டிப் பல்லிக்கு! விட்டில்பூச்சி யொன்றைப் பிடிப்பதற்காகத் தன் யதாஸ்தானத்திலிருந்து விர்ரெனப் பாய்ந்து வந்த அது அம் முயற்சியில் தோல்வியுற்றதாலேயே அப்படிச் சுவரில் தலைகீழாக ஒட்டிக் கொண்டு சிரசாசனம் பண்ண ஆரம்பித்தது.

எனக்கு இந்தக் காட்சி புதிதல்ல. கடந்த ஐந்தாறு மாதங்களாகவே ஒவ்வொரு நாளும் இதைப் பார்த்து வருகிறேன்.

எனது படிப்பு அறையின் நடுவே வெகுகாலமாகப் பழைய பிங்கான் மூடியுடன் தொங்கிக் கொண்டிருந்த பல்பு விளக்கை மாற்றிவிட்டு, நாலடி நீளமான மெர்க்குரி குழாய் விளக்கைச் சுவரில் புதிதாகப் பொருத்திய நாள் முதல் அந்த நொண்டிப் பல்லி அங்கே குடியேறி வாசம் செய்து வருகிறது.





குழாய் விளக்கின் குளுமையைக் கண் கூசாமல் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த அந்த முதல் நாள் அன்றே என் கவனத்தை அப்பல்லி வெகுவாகக் கவர்ந்து விட்டது.

அப்போது அது குட்டிப் பல்லி தான். பிறந்து பத்துப் பதினைந்து நாட்களே ஆகியிருக்கும். அறைச் சுவரில் மாட்டப்பட்டிருந்த புத்தர் படமொன்றின் பின்னாலிருந்து வெகு வேகமாக வந்த அது, புது விளக்கின் தண்ணொளியைக் கண்டு பிரமித்தாற் போல் சற்று நேரம் அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பிறகு மகிழ்ச்சியுடன் சுவரில் அங்கு மிங்குமாக ஓடியாடத் தொடங்கியது.

என்னுடைய அறையில் மட்டும் குழாய் விளக்குப் போட்டுக் கொண்டிருப்பது பற்றி என் மனைவிக்கு உள்ளூறக் கொஞ்சம் மனத்தாங்கல். அது அன்றே சிறு வாக்குவாதமாகவும் வெடித்தது.

''இந்த ட்யூப் லைட்டுக்குக் கரண்ட் ரொம்பச் செலவாகாதாமே, நிஜந்தானா?''

''அப்படித்தான் கேள்வி. ஏன்?''

''சமையலறை விளக்கை இரவு பகல் எந்த நேரமும் எரியப் போட வேண்டியிருக்கிறதே! அதையும் இம்மாதிரிக் குழாய் விளக்காக மாற்றி விட்டால் கரண்ட் பில் பணம் குறையுமில்லையா?''

''ஆமாம்; ஆனால் இதற்கே அறுபது ரூபாய்க்கு மேல் செலவாகி விட்டது. இன்னொரு குழாய் விளக்குப் போடப் பணத்துக்கு எங்கே போகிறதாம்?''

''தெரியுமே, உங்கள் சுயநலம்! உங்களுக்கு வேண்டியதையெல்லாம் எப்படியாவது ஒப்பேற்றிக் கொள்வீர்கள். பிறத்தியாரைப் பற்றிக் கவலைப்படுகிற வழக்கமே கிடையாது. அந்தப் பாழாய்ப் போன பல்பு விளக்கு காடா விளக்கை விட மோசமாய் அழுது வழிகிறது. அவசரத்தில் எதையுமே


நிதானிக்க முடிகிறதில்லை. எண்ணெயில் பொரியும் வெங்காயம் சிவக்கிறதா, தீய்கிறதா என்பதும் புரிகிறதில்லை. சோம்புக்கும் சீரகத்துக்கும் வித்தியாசம் தெரிகிறதில்லை. இப்போது போடுகிற ரேஷன் அரிசியில் கலந்து கிடக்கிற கல்லையும் நெல்லையும் பொறுக்கி எடுப்பதற்குள் கண்கள் இரண்டும் தெறித்து விழுகிறாற்போல் ஆகித் தலைவலி வந்து விடுகிறது...''

நான் வாயை இறுக மூடிக் கொண்டேன். இடி, மின்னல், மழை எல்லாம் ஓய்ந்தன.

புது விளக்கின் தண்ணொளியை ரசித்து ஒரு புத்தகம் படிக்கவோ, அல்லது நாலு வரிகள் எழுதவோ கூட இயலாமல் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கிடந்த என்னை உற்சாகப்படுத்தி நிமிர வைத்தது இந்தப் பல்லிதான்.

எடுத்த எடுப்பிலேயே அது என் கவனத்தைக் கவர்ந்ததற்கு இன்னொரு காரணம் அதன் பின்னங் கால்களில் ஒன்று முடமாகி யிருந்ததே! அந்தக் காலில் விரல்கள் இல்லை; வெறும் குச்சி மாதிரி நீட்டிக்கொண்டிருந்தது. ஆயினும் மற்ற மூன்று கால்களின் உதவியால் சிறிதும் சிரமமின்றிச் சுவர் மீது வெகு லாகவமாகவும் வேகமாகவும் ஓடி அது செய்த சர்க்கஸ் வித்தைகளைக் காண எனக்கு ரொம்பவும் வேடிக்கையாக இருந்தது.

புது விளக்கு வரிசையைப் பார்க்கக் கூட என் மனைவி இந்த அறைப் பக்கம் தலை காட்டவில்லை. அவளுக்கு அத்தனை கோபம். ஆனால் அவள் வந்து பார்க்காதது எனக்குப் பெருங் குறையாக இருந்தது. விளக்கைப் பார்க்காவிட்டாலும், அந்த நொண்டிப்



நொண்டிப் பல்லி

ஜெகசிற்பியன்

அடுத்து என் பிள்ளைகள் ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு வீடு முழுக்கக் குழாய் விளக்குகளாகப் போட வேண்டுமாம். காரணம் அந்த நீல நிற விளக்கு வெளிச்சத்தில் அவர்கள் முகம், அணிந்திருக்கும் உடை, நகை எல்லாமே வெவ்வேறு நிறங்களில் பளிச்சென்று அழகாகத் தோன்றுகின்றனவாம்!

வயசின் காரணமாகக் கொஞ்சம் வெள்ளெழுத்தாகிப் போன என் கண் பார்வையை உத்தேசித்துப் படிப்பு அறையின் விளக்கை மாற்றப் போய் அது இப்படியெல்லாம் பல புதிய கோரிக்கைகளைத் தோற்றுவித்து விட்டதை எண்ணிக் குழம்பியவனாய், அந்தப் பல்லி போடும் கும்மாளத்தையாவது அவளைக் கூப்பிட்டுக் காட்ட வேண்டுமென மனம் பரபரத்தது. இம்மாதிரி விஷயங்களில் நான் எப்போதுமே ரொம்ப ரொம்பச் சின்னப் பிள்ளையாகி விடுவது வழக்கம். இதனால் சில சமயம் என் மனைவியிடம் மட்டுமல்லாது, பிள்ளைகளிடமும் அசட்டுப் பட்டம் வாங்கிக் கட்டிக் கொள்வதும் உண்டு. எனவே, என்னுள் மூண்டெழுந்த அவ்விருப்பத்தையும், உற்சாகத்தையும் அடக்கிக் கொண்டு, அந்தப் பல்லியின் ஒரு கால் எப்படி ஊனமாகியிருக்கும் என்ற ஆராய்ச்சியில் சிந்தனையைச் செலுத்தலானேன்.

பொழுது நன்றாக இருட்ட ஆரம்பித்து விட்டது. வெளியே இருள் கனத்துக் கவியக் கவிய என் அறையில் புது விளக்கின்பால் வெள்ளமாகப் பெருகியது. அதன் சீதளச் சுகத்தை விழிகளால் பருகி, அநுபவித்துக் கொண்டிருந்த நான், ''ஐயையே! என்னங்க இது?'' என்ற வியப்பும், கசப்புமான குரல் கேட்டு அவசரமாக நிமிர்ந்து உட்கார்ந்தேன். என் மனைவிதான் உடம்பைக் கூசிக் கொண்டு ஒரு புறமாக வந்து நின்றுகொண்டிருந்தாள்.

''என்ன?'' என்று கேட்டுச் சுற்று முற்றும் பார்த்தேன்.

அந்த அறையெங்கும் ஒரே விட்டில் பூச்சிகள் மயம்! மேசை, நாற்காலி, புத்தக அலமாரி, சுவர்கள் — இங்கெல்லாம் விட்டில் பூச்சிகள் படை படையாக மொய்த்துக் கொண்டிருந்தன. இன்னும் பெயர் தெரியாத ஏதேதோ பூச்சிகள், வண்டுகள் வந்து நிறைந்து புது விளக்கைச் சுற்றிச் சுற்றிப் பறந்து கொண்டிருந்தன.

என் உடம்பு சிலிர்த்தது. காரணம், என்னுடைய தலையிலும், கழுத்திலும்கூடச் சில பூச்சிகள் வளர்ந்தன. கிணறு வெட்டப் பூதம் கிளம்பின கதையாகி விட்டதே! பரிதாபமாய் என் மனைவியைப் பார்த்தேன். அவள் சேலைத் தலைப்பைப் பிரித்து உதறிக் கொண்டே அப்பால் ஓடினாள்.

''பார்த்தாயா? இந்த அறையில் போட்ட புது விளக்கைப் பார்க்கப் பிடிக்காமல் இவ்வளவு நேரம் முறுக்கிக் கொண்டிருந்தாயே; உனக்கு முன் எவ்வளவு 'பேர்கள்' இதைப் பார்த்து ரசிக்க வந்து விட்டிருக்கிறார்கள், பார்!'' என்று அவளைத் தமாஷ் பண்ணினேன்.

''ரொம்ப அழகுதான்! முதலில் இந்த விளக்கை அணையுங்கள். வீடு முழுக்கப் பூச்சியும் வண்டுமாக வந்து அடைகிறது. பிள்ளைகளின் மூக்கிலே காதுகளிலே எதனுச்சும் புகுந்து தொலைக்கப் போகிறது'' என்று சிடுசிடுத்தாள் அவள்.

எத்தனை நாட்களாகத் திட்டமிட்டு எவ்வளவு ஆசையாகப் போட்ட விளக்கு! அது எரியத் தொடங்கி இன்னும் ஒரு மணி நேரம் கூட ஆகவில்லை. அதற்குள் அணைத்து விடச் சொல்கிறாளே!

ஸ்விட்ச்போர்டு அருகில் சென்ற நான் மெல்லத் திரும்பி அந்த நொண்டிப் பல்லியைப் பார்த்தேன். அடாடா! அதற்குத்தான் என்ன கொண்டாட்டம்! எத்தனை உற்சாகம்! வெள்ளைச் சுவரில் அங்கு மிங்குமாகச் சுறுசுறுப்புடன் ஓடி, விட்டில் பூச்சிகளைக் கவ்விக் கவ்வி விழுங்கிக் கொண்டிருந்தது. இன்று அதற்கு இராஜ விருந்து. இதை முன்கூட்டியே தெரிந்து கொண்டுதான் இந்தக் குழாய் விளக்கைக் கண்டதும் அவ்வளவு குஷியாக ஓடி வந்ததோ?

'பட்'டென்று விளக்கை அணைத்து விட்டு வராந்தாவுக்குப் போனேன். அங்கே வழக்கமாக எரியும் சாதா பல்பு விளக்கு வழக்கம் போல் அழுது வழிந்து கொண்டிருந்தது. அந்த விளக்கை எந்தப் பூச்சியும் சட்டை செய்யவில்லை.

''தினந்தோறும் இதே மாதிரிதான் இருக்குமா?'' என்று கேட்டுக் கொண்டே வராந்தாவுக்கு வந்தாள் என் மனைவி.

''அப்படித்தான் நினைக்கிறேன். அதனால் தான் உன் சமையலறையில் இந்தக் குழாய் விளக்குப் போட வேண்டாமே என்று என்னினேன். இப்போது என்ன சொல்கிறாய்? நாளைக்கே ஒன்று போட்டு விடட்டுமா?'' என்றேன் நமட்டுச் சிரிப்புடன்.

''வேண்டாம்! வேண்டாம்! அங்கே கொண்டு போய் இந்த விளக்கைப் போட்டால் அப்புறம் புது மாதிரியான அசைவ உணவெல்லாம் தன்னாலேயே தயாராகி விடும்!'' என்று பதறினாள் அவள்.

ஒரு பெரிய பிரச்னை நல்ல விதமாகத் தீர்ந்து போயிற்று. இதற்குத் தோன்றாத் துணையாக வந்து உதவி செய்த விட்டில் பூச்சிகளுக்கும், மொச்சை வண்டுகளுக்கும் மனமார நன்றி செலுத்தினேன். ஆனால் அந்தக் குழாய் விளக்கால் என் படிப்பு, எழுத்து வேலைகள் குந்தகமாகி விடும்போல் இருக்கிறதே! இப்புதுப் பிரச்னையைத் தீர்ப்பது எப்படி?

''அப்பா! பூச்சிகள் வராமல் இருக்க நான் ஒரு வழி சொல்கிறேன், கேட்கிறீர்களா?'' என்றவாறு தன் 'வீட்டுப் பாடங்கள்' செய்வதைக்கூட விட்டு விட்டு எழுந்திருந்து ஓடி வந்தாள், என் இரண்டாவது பெண். அவளுக்கு வயது பதினொன்று.

நான் அவளை நிமிர்ந்து பார்த்தேன்.

''விளக்கைப் போட்டு விட்டு, கூடவே மின்சார விசிறியை வேகமாகச் சுழல விடுங்களப்பா! கொஞ்ச நேரம் அப்படிக் காற்று வீசினால் பூச்சிகள் ஓடிப்போய் விடும்.''

ஆகா, என்ன அருமையான யோசனை! அந்தச் சின்ன மூளையில் இவ்வளவு பெரிய குயுக்தி எப்படி உதயமாகியது?

''பேஷ்! பேஷ்! நீ எப்போதுமே சமர்த்துதான்!'' என்று பாராட்டி விட்டு எழுந்து போய்க் குழந்தைப் பெண் சொன்னவாறே செய்தேன்.

அடுத்த கணம் என் அறை ஒரே அல்லோல கல்லோலப்பட்டது. பத்திரிகைகள், காகிதங்கள், கடிதாசிகள் எல்லாம் 'பறக்கும் தட்டு'களாகி வீடு முழுக்கப் பறந்தன. ஒரு புயல் மண்டலமே அங்கு உருவானாற் போல் தோன்றியது. நானும் என் மனைவியும், பிள்ளைகளும் பாய்ந்து பாய்ந்து ஓடிச் சிதறிப் பறந்த காகிதங்களையும் பத்திரிகைகளையும் தாவிப் பிடித்துத் தவ்விப் பொறுக்கி அடுக்கி, அவற்றின் மேல் பெரிய புத்தகங்களாகத் தூக்கிப் போட்டு அழுத்தினோம்.

''போதும், போதும்! ஃபேனை ஆஃப் பண்ணுங்கள்!''—கூவினாள் என் வீட்டுக்காரி.

ஓடிப்போய் மின்விசிறியின் வேகத்தை மட்டுப்படுத்தினேன். வீடு அமைதியாகியது. படையெடுத்துவந்த பூச்சிகளும் வண்டுகளும் எங்கோ மாயமாய் மறைந்து விட்டிருந்தன. ஆனால் அறை முழுவதும் விட்டில் பூச்சிகளின் மெல்லிய சிறகுகள் உதிர்ந்து கிடந்தன. அவற்றையெல்லாம் பெருக்கிச் சுத்தப்படுத்துவதில் முனைந்தாள் என் மனைவி.

நான் சாய்வு நாற்காலியில் போய்ச் சாய்ந்து கொண்டு, இந்த அமர்க்களத்தில் அந்த நொண்டிப் பல்லியின் கதி என்ன ஆயிற்றோ என்ற கவலையுடன் அங்குமிங்கு மாகப் பார்த்தேன். சற்று நேரங் கழித்து வாசற் கதவுக்கு மேற் சுவரில் பொருத்தப் பட்டிருந்த குழாய் விளக்கின் நீண்ட இரும்புத் தகடு ஃபிரேமுக்குள்ளிருந்து மெல்ல வெளியே தலைநீட்டி எட்டிப் பார்த்தது அந்தப் பல்லி. சுவர்களில் பூச்சிப் பொட்டுகள் ஏதுமில்லாததைக் கண்டோ என்னவோ, மீண்டும் அது விளக்குச் சட்டத்தின் இடுக்கில் புகுந்து மறைந்தது. அதன் வயிற்றுப் பிரச்னை இன்று வெகு சீக்கிரம் தீர்ந்து போயிற்று அல்லவா?

இதுதான் அந்த நொண்டிப் பல்லி எனக்கு அறிமுகமான விருத்தாந்தம்!

இப்படி ஒவ்வொரு நாள் மாலைப் போதிலும் என் அறையின் குழாய் விளக்கு எரியத் தொடங்கியதுமே — ஓர் அரை மணி நேரத்துக்கு — மேலே சொன்ன அமர்க்களமெல்லாம் தொடர்ந்து நடைபெறலாயின. சில தினங்களுக்குப் பின் நிலைமை மாறியது; அதாவது பூச்சிகள் — வண்டுகள் படையெடுப்பு மட்டுப்பட்டது. பிறகு கொஞ்சங் கொஞ்சமாக அவை வருவது நின்றே போயிற்று. நான் நிம்மதியடைந்தேன்.

அந்த நொண்டிப் பல்லி மட்டும் என் அறையை விட்டு எங்கும் போகவில்லை. அது தான் தனக்கென்று மிகப் பாதுகாப்பான ஓர் இடத்தைத் தேடிக் கொண்டு விட்டதே!

இப்போதெல்லாம் மாலை ஆறரை மணி முதல் இரவு பத்துப் பதினொரு மணி வரையில் எனக்குப் பொழுது போவதே தெரிவதில்லை. அந்த நொண்டிப் பல்லியின் சாகச விளையாட்டுக்களைப் பார்ப்பதில் அப்படி ஒரு சுவாரசியம் ஏற்பட்டு விட்டது. இதனால் என் படிப்புக் குறைந்தது. எழுதுவதிலும் சிந்தனை செல்வதில்லை. இவற்றை விட அந்தப் பல்லியைப் பார்த்துக் கொண்டிருப்பதிலே அதிக விஷயங்கள் கற்றுத் தெளிவது போலவும், அதிக ஆத்ம திருப்தி பெறுவது போலவும் எனக்குத் தோன்றலாயின.

ஒரு கால் ஊனமாயிருந்தாலும் அந்தப் பல்லிக்குத்தான் எத்தனை தன்னம்பிக்கை! எவ்வளவு தீரம்! எத்தகைய புத்தி சாதுர்யம்! தனக்கு வேண்டிய உணவை வேட்டையாடுவதில் அது காட்டும் திறமை அபாரத்திலும் அபாரமானது! அவ்வேட்டையில் அது ஒரு முறைகூடக் குறி பிசகுவதே இல்லை.

விண்வெளிக்குச் செல்லும் ராக்கெட்டு போல் சுவரில் நெடு நேரே ஒட்டிக் கொண்டு நிற்கும் அந்தப் பல்லி. எங்கிருந்தேனும் ஒரு விட்டிலோ, பச்சை வெட்டுக்கிளியோ, தயிர்க்கடைஞ்சான் பூச்சியோ பறந்து வந்து குழாய் விளக்கின் மேல் உட்காரும். அதை இது எப்படித்தான் பார்த்து விடுமோ? சரேலெனப் பக்கவாட்டில் ஒரு பாய்ச்சல்; விஷயம் தீர்ந்து போகும்! சில சமயம் அந்த விட்டில்பூச்சி அல்லது வெட்டுக்கிளி அதன் பிடியில் சிக்காமல் தப்பி வேறிடத்துக்குப் பறந்து போய் உட்கார்ந்து விடுவதும் உண்டு. நொண்டிப் பல்லிக்கு அப்போது ஏமாற்றம்தான். ஆயினும், அது நம்பிக்கை இழப்பதில்லை; அவசரப்பட்டுத் துரத்திச் செல்வதுமில்லை. இருந்த இடத்திலிருந்து கொண்டே, தொலைவில் இருக்கும் அந்தப் பூச்சியைக் கண்ணிமைக்காமல் ஒரே நோக்காக வெறித்துப் பார்க்கும். பித்தளை மணி போல் பளபளவென்று தலையில் துருத்திக் கொண்டிருக்கும் அதன் கண்களில் அப்படி என்னதான் காந்தசக்தி இருக்குமோ, தெரியவில்லை. மெஸ்மரிஸத்தால் மயக்கி இழுக்கப்படுவது மாதிரி, தப்பிச் சென்ற அப்பூச்சி தானாகவே அதை நோக்கி மெல்ல மெல்லப் பறந்து வரத் தொடங்கும். ஒரு குறிப்பிட்ட அளவு தூரத்தில் நெருங்கியதும் ஒரே பாய்ச்சல் — 'லபக்' — சுவரின் மீது அப்படி ஒரு புரட்டு, இப்படி ஓர் அடி; மறுகணம் பூச்சி விழுங்கப்படும். அடுத்து இன்னொரு வேட்டைக்குத் தயார் நிலை!

அந்த நொண்டிப் பல்லியின் மேல் எனக்கு ஒரு விஷயத்தில் ரொம்ப ரொம்பக் கோபம். அது என்னவென்றால், தான் பிடிக்கும் இரை சற்றுப் பெரிதாக இருந்துவிட்டால் அதை ரசித்துச் சுவைத்துச் சாப்பிடுவதற்கு மறைவானதோர் இடத்தைத் தேடிச் செல்வது அதன் வழக்கம். அப்படிச் செல்லும் இடம், எதிர்ச் சுவரில் மாட்டப்பட்டிருந்த புத்தர் படத்துக்குப் பின்புறம்! தன் வாசஸ்தலமான அந்தக் குழாய் விளக்குச் சட்டத்தின் மடிப்பு இடுக்குகள் போதப்படாதோ? அங்கே அசுத்தமாகி விடும் என்பதாலோ என்னவோ, அந்தக் காரியத்துக்கென அவ்விடத்தை அது நாடிப் போவதே இல்லை.

மகான்களின் பெயர்களையும், அவர்கள் வகுத்துத் தந்த கொள்கை, கோஷங்களையும் திரைகளாக்கிக் கொண்டு அவற்றின் மறைவிலே சில சமூகத் துரோகிகள் இன்றைய அரசியல், கலை, சமயத் துறைகளில் நடத்தி வரும் பஞ்சமா பாதகங்களைப் போல் அல்லவா இந்தப் பல்லியும் செய்ய ஆரம்பித்து விட்டது! என்னால் அதைக் காணச் சகிக்க முடியவில்லை.

ஒரு நாள், கொழுத்த பட்டாம்பூச்சியொன்றைக் கவ்விக் கொண்டு புத்தர் படத்தின் பின்புறத்தை நோக்கி அது விரைந்து செல்லத் திரும்பியதைப் பார்த்து ஆத்திரமடைந்தேன் நான்.

பழைய பத்திரிகையொன்றில் சீன அதிபர் மா—சே—துங்கின் புகைப்படம் வெளியாகியிருந்தது. அதைத் தேடி எடுத்துக் கத்திரித்து ஒரு தினக் காலண்டர் அட்டையில் ஒட்டினேன். பிறகு புத்தர் படத்தைக் கழற்றிவிட்டு அவ்விடத்தில் மா—சே—துங்கின் படத்தை மாட்டினேன். நொண்டிப் பல்லி தன் கொலைத் தொழிலை நடத்த இனி அப்படத்தின் மறைவிடத்தை நாடிச் செல்லலாம்! நல்ல பொருத்தமான இடம்தானே அது? என் புத்திசாலித்தனத்துக்கு நானே ஒரு 'சபாஷ்' போட்டுக் கொண்டேன்.

ஏதோ வேலையாக என் அறைக்கு வந்தான் மனைவி. அவளுடைய கண்ணில் அந்தப் படம் பட்டது. ''என்ன இது?'' என்றுள் முகத்தைச் சுளித்துக் கொண்டு.

''நீதான் பாரேன்! படத்திலிருக்கும் ஆசாமி யாரென்று தெரிகிறதல்லவா ? நம் வீட்டு நொண்டிப் பல்லி உயிர்வதை செய்வதற்கு ஏற்ற இடம் தயாரித்துக் கொடுத்திருக்கிறேன்! என்ன பேஷான காரியம் பண்ணியிருக்கிறேன், பார்த்தாயா?''

''உங்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன? அயல் மனுஷார் யாரேனும் வந்து உட்கார்ந்து பேசுகிற அறை இது : இங்கே அந்தப் படத்தை மாட்டி வைத்திருக்கிறீர்களே ? அதைப் பார்க்கிறவர்கள் உங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள் ? ஊர், உலகம் இருக்கிற நிலைமை உங்களுக்குத் தெரியாதா ?''

என்னுடைய அந்தக் கோமாளித்தனத்தில் மறைந்திருந்த 'ஆபத்துக் கனல்' இப்போதுதான் என் மூளையில் சுரீலென உறைத்தது. அவசரமாக எழுந்து போய் அப்படத்தைப் பிய்த்துக் கிழித்தெறிந்துவிட்டு அசடு வழிய வந்து உட்கார்ந்தேன். ஒரு விஷயத்தின் மையப் புள்ளியைப் பெண்கள்தாம் எத்தனை விரைவாகவும், நேராகவும், தெளிவாகவும் தொட்டுக் காட்டி விடுகிறார்கள்!

நொண்டிப் பல்லி இப்போதெல்லாம் தன் கொலைக் காரியத்தைப் பகிரங்கமாகவே செய்ய ஆரம்பித்தது. அதற்கு எங்கேனும் மறைவிடம் இருந்தால்தானே? நான் அதைப் பற்றிக் கவலைப்படுவதை விட்டொழித்தேன். தினமும் பார்த்து வந்ததால் அந்தக் காட்சி எனக்குச் சாதாரணமாகி விட்டது.

ஒரு நாள் இரவு சமையல் வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு என் அறைக்கு வந்த மனைவி எதிர்ச் சுவரில் ஹாய்யாகச் சாய்ந்து அமர்ந்து கொண்டு பத்திரிகையொன்றில் ஏதோ படித்துக் கொண்டிருந்தாள். வழக்கம் போல் அந்த நொண்டிப் பல்லி செய்யும் 'சர்க்கஸ் வித்தை'களை வெகு சுவாரசியமாகப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன்.

தன் விதியை இன்று தானே முடித்துக் கொள்வது என்று தீர்மானித்து விட்டாற் போல் எங்கிருந்தோ விர்ரெனப் பறந்து வந்த ஒரு சிள் வண்டு குழாய் விளக்கின் அருகில் சென்று அமர்ந்தது. நொண்டிப் பல்லிக்கு ரொம்பப் பசி போலும். வண்டைப் பார்த்த மறுகணமே சற்றும் நிதானிக்காமல் அதைக் கவ்விப் பிடிக்க ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது. ஆனால் என்ன ஏமாற்றம்! அதன் ஊனக் கால் சுவரின் பிடிப்பை நழுவவிட்டதாலோ என்னவோ, மேலிருந்து கீழே விழுந்து விட்டது.

''ஹைய், சே !'' என்று கையிலிருந்த பத்திரிகையைப் போட்டுவிட்டுப் பதற்றத்துடன் எழுந்தாள் என் மனைவி. எழுந்தவள் உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு, முந்தானையையும் கொசுவத் தொங்கலையும் வேகமாக உதறினாள்.

> நம்பிக்கை என்பது மிக மென்மையான மலரைப் போல் சிறிய புயல்காற்றிலும் அடித்துக்கொண்டு போகக்கூடிய பொருள் அல்ல. நம்பிக்கை என்பது இமாலய மலையைப் போல் அசையாத தன்மை படைத்தது. - காந்திஜி

''என்ன? என்ன?'' என்றேன் ஒன்றும் புரியாமல்.

''அந்தப் பாழாய்ப் போன பல்லி என் மேலே விழுந்திடுச்சு!'' என்று அருவருப்புடன் முகத்தைச் சுளித்துக் கூறினாள் அவள்.

நான் அவசரமாக அங்குமிங்கும் பார்த்தேன். அவள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து அப்போதுதான் விர்ரென்று சுவரின் மேல் ஏறி விரைந்தது நொண்டிப் பல்லி.

என் மனைவியின் உடல் இலேசாக நடுங்கியது. ''சனி! எங்கே விழுந்து தொலைச்சுதுன்னு தெரியலையே !'' என்று கவலையுடன் அங்கலாய்த்தவாறு தன் தலையையும் கழுத்தையும் முதுகையும் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். பிறகு உள்ளே போய்ப் பழைய பஞ்சாங்கம் ஒன்றைத் தேடிப் பிடித்து எடுத்து வந்து அதன் பக்கங்களைப் புரட்டலானாள்.

நான் அவளுடைய கவலையைப் புரிந்து கொண்டேன். மனித உடம்பின் மேல் பல்லி விழுந்தால் அப்படி விழும் ஒவ்வோர் இடத்துக்கும் ஒரு பலன் உண்டாமே? அந்தப் 'பலனை'த்தான் இப்போது அவள் அறிய முற்பட்டிருக்கிறாள் !

''கவலைப்படாதே ! நம்ம வீட்டு நொண்டிப் பல்லி ரொம்பச் சமர்த்து ! சுப பலன் தரக்கூடிய இடமாகப் பார்த்துத்தான் அது விழுந்திருக்கும்!'' என்று கேலி பண்ணினேன்.

அன்றிரவெல்லாம் அவள் சரியாகவே தூங்கவில்லை. அவ்வப்போது எழுந்து உட்கார்ந்து கொண்டு அந்த நொண்டிப் பல்லியைச் சபிக்கத் தொடங்கினாள். அதை வீட்டை விட்டுத் துரத்திவிட்டுத்தான் மறுகாரியம் பார்க்கப் போவதாகக் கறுவினாள்.

மறுநாள் மாலை விளக்கேற்றியதும் புதிய 'நபர்' ஒருவர் என் அறைக்கு விஜயம் செய்தார். ஆமாம்; அதுவும் ஒரு பல்லிதான். கரும்புள்ளிகளுடன்கூடிய முரட்டுப் பல்லியாயிருந்தது அது. எங்கேனும் மரப் பொந்தில் வாசம் செய்து வளர்ந்ததாக இருக்கலாம். அந்த நொண்டிப் பல்லிக்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம்! அது அழகாக, மென்மையாக, உரித்த இளம் மீனைப்போல வெள்ளை வெளேரென்று இருக்கும். வாழும் சூழ்நிலையைப் பொறுத்துத்தான் உடல் — மன இயல்புகள் அமையும் என்பது மனித இனத்துக்கு மட்டுமே உரியது அல்ல போலும்.

தனக்கு ஒரு துணை வந்து சேர்ந்துவிட்ட மகிழ்ச்சியாலோ என்னவோ அந்த நொண்டிப் பல்லி இன்று வெகு உற்சாகமாக வேட்டையாடத் தொடங்கியது. இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் இன்னொரு விஷயத்தையும் நான் தெரிந்து கொண்டேன். என் அன்பைக் கவர்ந்த நொண்டிப் பல்லி

பெண் என்பதும், புதிதாக வந்த கறுப்புப் பல்லி ஆண் என்பதும்தான் அது. அவை இரண்டும் இப்போது அந்தக் குழாய் விளக்குச் சட்டத்தின் இடுக்கில் சேர்ந்தே வாழத் தொடங்கின.

அன்றிரவு எட்டு மணிக்கு மேல் கொஞ்சம் ஓய்வு கிடைத்தது. ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன். உடனே என் பார்வை எதிர்ச் சுவரை நோக்கிச் சென்றது.

'ச்சொ, ச்சொ, ச்சொ! கிர்க், கிர்க்!'

ஒரு விநாடிதான். நான் வெட்கத்துடன் கண்களை மூடிக் கொண்டேன். என்னையறியாமலே எனக்குச் சிரிப்பும் வந்துவிட்டது.

''என்ன, நீங்களாகவே சிரித்துக் கொள்கிறீர்கள்? எனக்கும் கொஞ்சம் சொல்லி விட்டுச் சிரியுங்களேன்!'' என்றாள் மனைவி.

''ஒன்றுமில்லை....'' என்று மழுப்பிவிட்டு வேறு ஏதோ விஷயத்தை ஆரம்பித்து அவள் கவனத்தைத் திருப்பிவிட்டேன்.

எல்லா உயிரினங்களின் வாழ்க்கை நியதிகளும் ஒன்று போலவேதான் அமைந்திருக்கின்றன!.....

ஒரு வாரம் கழிந்தது. திடீரென்று நொண்டிப் பல்லியைக் காணோம். கறுப்புப் பல்லி மட்டுமே என் கண்ணில் பட்டுக் கொண்டிருந்தது. நொண்டிப் பல்லி எங்கே?

எனக்கு அந்தப் பல்லியைக் காணாததால் முன்னிரவுப் பொழுதைக் கழிப்பது சிரம சாத்தியமாகி விட்டது.

பதினைந்து நாட்களுக்குப் பின், எனது அன்புக்குரிய நொண்டிப் பல்லி வந்து எனக்குத் தரிசனம் கொடுத்தது! இத்தனை நாட்கள் அது எங்கே போய் இருந்தது? உடம்பு ரொம்பவும் மெலிந்துவிட்டிருக்கிறதே! முன்போல் ஓடியாடிப் பூச்சிகளைப் பிடிக்கக்கூட அதற்குத் தெம்பு இல்லை.

கறுப்புப் பல்லி இப்போது அதைச் சட்டை செய்யவில்லை. தன் உணவு வேட்டையிலேயே அது கண்ணாயிருந்தது.

'கிர்க், கிர்க், கிர்க்!'

நான் நொண்டிப் பல்லியை ஆசையோடு பார்த்துக் கொண்டிருந்தேன். அதன் குரலைக் கேட்டோ என்னவோ, குழாய் விளக்குச் சட்டத்தின் இடுக்கிலிருந்து சின்னஞ்சிறு குட்டிப் பல்லி வெளியே ஓடி வந்தது.

ஓ.... நொண்டிப் பல்லி முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து விட்டதோ? இப்போது அது 'அம்மா'வாகி விட்டதாக்கும்!

ஆச்சரியத்துடன் அந்தக் குட்டிப் பல்லியைப் பார்த்தேன். அது குழாய் விளக்கின் ஒளியைக் கண்டு கண் கூசினாற்போல் சுவரில் அப்படியே ஒட்டிப் படுத்துக் கொண்டிருந்தது.

மறுகணம், அந்த முரட்டுக் கறுப்புப் பல்லி அதைப் பார்த்து விட்டது. இன்று அதற்கு அகோரப் பசியோ, அல்லது இயற்கையாகவே மூண்டெழும் இன விரோதமோ தெரியவில்லை. குட்டிப் பல்லியைக் கவ்வி விழுங்க அது பாய்ந்தது.

பிராண பயம் கொண்ட குட்டிப் பல்லி அங்குமிங்குமாக ஓடியது. ஆனாலும் அதை விடாமல் துரத்தியது கறுப்புப் பல்லி. அப்போது நொண்டிப் பல்லி, கறுப்புக் கொள்ளியை எதிர்த்துப் போரிடத் தயாராகியது. கணவன்-மனைவிச் சண்டை!

வெகு நாட்களாகப் புரியாமல் இருந்த ஒரு விஷயம் இப்போதுதான் எனக்குப் புரிந்தது. அதாவது, அந்த நொண்டிப் பல்லிக்கு எப்படி ஒரு கால் ஊனமாயிற்று என்ற விஷயமே அது.

இந்த நொண்டிப் பல்லியும் குட்டியாயிருந்தபோது இப்படித்தான் வேறொரு பல்லிக்கு இரையாவதிலிருந்து தப்பி ஓடியிருக்கும்; அச்சமயம் தன் ஒரு காலை மட்டும் இழந்து, பின் உயிர் தப்பி விட்டிருக்கும்.....!

இன்று அதன் குட்டிக்கும் அதே கதி ஏற்பட்டு விடுமா? கறுப்புப் பல்லி குட்டிப் பல்லியை மூர்க்காவேசமாகத் துரத்திப் பிடிக்க முயன்று கொண்டிருந்தது.

இதற்கு மேலும் அந்த ஜீவ மரணப் போராட்டக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்க என்னால் முடியவில்லை. அவசரமாக எழுந்தேன். கையிலிருந்த புத்தகத்தைப் பிரித்தவாக்கில் உயரே தூக்கிச் சுவரைத் தட்டினேன். அப்படித் தட்டினால், கொலை வெறி கொண்ட அந்தக் கறுப்புப் பல்லி பயந்து தன் முயற்சியை விட்டுவிட்டு ஓடி விடும் என்பது என் எண்ணம்.

கனமான அந்தப் புத்தகத்தைக் கொண்டு சுவரைத் தட்டியதால், சுண்ணாம்புப் படை பெயர்ந்து என் கண்ணில் விழுந்துவிட்டது. பிரித்துப் பிடித்திருந்த புத்தகத்தை மூடி வைத்து விட்டுக் குனிந்து கண்ணைக் கசக்கித் துடைத்துக் கொண்டு மீண்டும் நிமிர்ந்தேன். சுவரின் மேலிருந்த குட்டிப் பல்லியைக் காணோம். மற்ற இரண்டு பல்லிகள் மட்டுமே இருந்தன.

குட்டிப் பல்லி எங்கே? உயிர் தப்பிச் சென்று விட்டதா? அப்படித்தான் இருக்க வேண்டும். நான் அமைதியடைந்தேன்.

அடுத்த நாள் மாலை விளக்கேற்றியதும் வழக்கம் போல் விட்டில்பூச்சி வேட்டையாடக் கறுப்புப் பல்லி வெளியே வந்தது. ஆனால் நொண்டிப் பல்லி வரவில்லை. அதன் குட்டிப் பல்லியையும் காணோம். அவை இரண்டும் எங்கே போயின? இந்த இனத் துரோகி பல்லியின் சகவாசமே வேண்டாம் என்று வேறெங்கேனும் குடிபெயர்ந்து போய் விட்டனவோ?

என் மனத்தில் இருள் சூழ்ந்தது. அமைதியின்றித் தவித்தேன். அதிலிருந்து மீளப் புத்தகத்தின் துணையை நாடினேன். நேற்று படித்த அதே புத்தகம்தான் இன்றும் கைக்குக் கிடைத்தது. பாதியில் படித்து நிறுத்திய பக்கத்தைப் புரட்டினேன்.

மறு விநாடி என் நெஞ்சில் யாரோ ஓங்கி அறைந்தாற்போல் ஓர் அதிர்ச்சி! பரபரப்புடன் கண்களை நிமிண்டிக் கொண்டு, புரட்டிய பக்கத்தை மீண்டும் பார்த்தேன்.

அந்தக் குட்டிப் பல்லி அதில் அப்படியே நசுங்கிப் 'பாடமாகி' விட்டிருந்தது!


ரேடியோகிராம்கள் விலை உயர்ந்தவை என்றே இன்னமும் நீங்கள் நினைத்தால்

முற்றிலும் டிரான்ஸிஸ்டர்கள் பொருந்திய 'கான்க்வெஸ்ட்' எங்கும் எளிதாக எடுத்துச் செல்லத்தக்க ரேடியோகிராம் மட்டுமல்ல; மிகக் கவர்ச்சியான அளவு குறைந்த விலையான ரூ. 610/-க்கும் கிடைக்கும்.

அகில உலகிலும் அதி நவீனமான பாணியில் எச்எம்வியினால் அமைக்கப்பட்டுள்ள 'கான்க்வெஸ்ட்', 4-ஸ்பீட் ரிகார்ட்-பிளேயருடன் 3 வேவ் பாண்டுகள் உடைய சக்தி மிக்க ரேடியோவையும் சேர்த்துத் தருகிறது; இவை இரண்டும் இரு வர்ணங்கள் இசைந்தமைந்த கைக்கடக்கமான பெட்டியில் பொருந்தியுள்ளன.

உல்லாச பிரயாணத்துக்கு உங்களுடன் 'கான்க்வெஸ்ட்' எடுத்துச் செல்லுங்கள்; அங்கும் சரி, உங்கள் வீட்டின் அந்தியந்தச் சூழ்நிலையிலும் சரி. இன்னும் அதிக விலை படைத்த ரேடியோகிராமிடமிருந்தே நீங்கள் எதிர்பார்க்கக்கூடிய சாதனைச் சிறப்பையும் ஒலித்தரத்தையும் அது உங்களுக்கு அளிக்கிறது.

ரூ. 610/-க்குக் கிடைக்கும் எச்எம்வி 'கான்க்வெஸ்ட் உங்களுக்கு வியப்பூட்டும்



அண்மையிலுள்ள எச்எம்வி விற்பனையாளரிடம் வந்து 'கான்க்வெஸ்டை'ப் பாருங்கள். அதை வாங்காமல் கடையிலிருந்து திரும்ப உங்களுக்கு மனம் வராது. மாடல் கெ. 5863-இன் விலை (எக்ஸைஸ் வரி உள்பட)

ரூ. 610/- தான்.

"HIS MASTER'S VOICE"

His Master's Voice

GC-87 TAM

வெற்றித் திருநகர்

அகிலன்



அத்தியாயம் இருபத்தெட்டு

சூழ்ச்சியின் விளைவு

முரசுகள் முழங்கின; சங்குகள் விம்மின; எக்காளங்கள் எழுந்தன. அறைகூவல் எழுப்பிய போர்க்களத்தின் பேரொலி தாங்காது வானத்தில் சிறகு விரித்துப் பறந்த சின்னஞ்சிறு பறவைகள் பொலபொலவெனத் தாமிரவருணியில் மூழ்கி மிதந்தன.

விசுவநாதனின் படைவீரர்கள் மூன்று பேரணிகளாகப் பிரிந்து, அவன் தலைமையிலும், அரியநாத முதலியார் தலைமையிலும்



ராமபத்திர நாயக்கர் தலைமையிலும் திரண்டு நின்றார்கள். விசுவநாதனுக்கு வலதுபுறத்தில் அணிவகுத்து நின்ற ராமபத்திர நாயக்கரையும் அவரது வீரர்களையும் திரும்பிப் பார்த்தான் விசுவநாதன். அவருடைய அணிதான் மற்ற இரு அணிகளையும் விடப் பெரிதாக இருந்தது. அதில் இருந்தவர்கள் அனைவருமே விஜயநகரத்திலிருந்து விசுவநாதனோடு புறப்பட்டு வந்த வீரர்கள்.

அணிவகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த போதுதான் அரியநாத முதலியார் ராமபத்திர நாயக்கரைப் பற்றிச் சில இரகசியச் செய்திகளை விசுவநாதனிடம் வெளியிட்டார். அந்தச் செய்திகளுக்கேற்பவே அங்கு காரியங்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ''போர்க்களத்தில் சூழ்ச்சி என்னும் பயங்கரமான ஆயுதம் நமக்கெதிராகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. அதே ஆயுதத்தை நாமும் பயன்படுத்தித்தான் ஆக வேண்டும். அதுதான் யுத்த தர்மம்!'' என்று அவனிடம் வலியுறுத்தி யிருந்தார் முதலியார்.

''இவ்வளவு பெரும் படைகளோடு வந்திருக்கும் சேரனுக்கும் சாளுவருக்கும் இந்த ஆயுதம் தேவை யில்லையே?'' என்றான் விசுவநாதன்.

''வலிமை இருந்தும்கூடச் செருக்கு வீரத்தில் நம்பிக்கை இருப்பதில்லை; சாளுவ நரசிம்மர் நேர்மைத் திறனில் நம்பிக்கை இல்லாதவர். ஆகவே, நாம் அவரிடம் கடைசி வரையில் விழிப்போடு இருந்துதான் தீர வேண்டும்!''

விசுவநாதனுக்கு ராமபத்திர நாயக்கரைப் பார்த்தவுடன் அரியநாத முதலியார் கூறிய சொற்களே நினைவுக்கு வந்தன. அவனைச் சார்ந்த மனிதர்களிடம் அவன் நம்பிக்கை இழக்காதவன். அந்த நம்பிக்கையோடு அவன் எதிரே நதிக் கரையின் மறுபுறத்தைக் கூர்ந்து நோக்கினான்.

யானைக் கூட்டம் குன்றுகளின் கூட்டமெனக் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் தெரிந்தது. உதயமார்த்தாண்டனுடைய வலிமை முழுதும் அவனுடைய யானைக் கூட்டத்தையே பொறுத்திருந்தது. அதற்கு மிஞ்சினால் பிறகு அடுத்த படைகளை அனுப்பலாமென்பது அவன் திட்டம்.

ஆயிரமாயிரம் பேரிடிகளைப் போல் முழங்கிக்கொண்டு சேரனுடைய யானைப் படை வீரர்கள் தாமிரவருணியைக் கடந்து வரத் தலைப்பட்டார்கள். ஆற்றிலும் நீர் பரவலாக ஓடியதே தவிர அதிகமான ஆழமில்லை.

முன்னேற்பாட்டின்படி விசுவநாதனுக்கு இடதுபுறத்திலிருந்த அரியநாத முதலியார் தம் காலாட்படை வீரர்களோடு புறப்பட்டார். யானைகளைக் கொண்டு யானைகளோடு போரிட வழியின்றி, வீழ்ந்து மடிவதற்காகவே முதலியார் தம் வீரர்களை ஏவுவதாக நினைத்துக் கொண்டனர் சேரனின் வீரர்கள். காலாட்படையினரிடமிருந்த தீப்பந்தங்களை அவர்கள் அவ்வளவாகப் பொருட்படுத்த வில்லை. தீப்பந்தங்களை அவர்கள் யானைகளின் மீது வீசுவதற்கு முன்பாகவே அவர்களை அடியோடு அழித்துவிடவேண்டுமென்ற வேகத்தோடு அவர்கள் விரைந்து வந்தனர்.

குடம் குடமாக மதுவை மாந்தி மது வெறியும் போர் வெறியும் கொண்டிருந்த களிறுகள் சேர நாட்டுக் களிறுகள். புயலின் வேகத்தில் இடிமுழக்கம் செய்தவாறே அவை பாய்ந்தோடி வந்தன.

அரியநாத முதலியாரின் வீரர்கள் வேகமாக விரைந்து முன்னேறுபவர்களைப் போல் பாவனை செய்தார்களே தவிர, ஆற்றங் கரையில் ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு மேல் அவர்கள் தாண்டவில்லை.

ஆற்றைக் கடந்து மணல் தரைக்கு வந்துவிட்ட யானைகள் திடீரென்று ஒரே கூட்டமாக நின்று பிளிறத் தொடங்கின. முன்னேறித் தாக்க மறுத்துப் பிளிறிக்கொண்டே நின்றன. சில யானைகள் நொண்டிக்கொண்டு கீழே வீழ்ந்தன. அதற்குள் தீப்பந்தங்களும் அம்புகளும் கூர்வேல்களும் சரமாரியாகப் பாயத் தொடங்கவே, அவை திரும்பிக் கொண்டு தங்களுடைய படைகளையே தாக்க முற்பட்டு விட்டன.

பகைவர்களுக்கு முதலில் ஏதும் புரியவில்லை. ஆற்று மணலால் மூடப்பட்டிருந்த ஆயிரக் கணக்கான ஆணிகள் அடித்த பலகைகள் தரையில் கிடப்பதை அவர்கள் பின்னர்தான் அறிந்தார்கள். அந்த ஆணிகளில் கால்களைப் பதித்துக் கொண்டு வெறி கொண்ட யானைகள் துடிதுடித்துப் பிளிறின. ஆவேசத்தில் பயங்கரமாகச் சேர நாட்டு யானைகள் மீதே திரும்பி, அவற்றை அழிக்கத் தொடங்கின.


உதய மார்த்தாண்டன் தன்னுடைய மூல பலம் என்று எதை நம்பியிருந்தானோ, அதுவே அவனை அழிக்கும் பகைவரின் பலமாக மாறிவிட்டது. யானைகள் திரும்பியவுடன் பாண்டிய நாட்டு வீரர்கள் மளமளவென்று ஆற்று மணலில் எஞ்சியிருந்த ஆணிப் பலகைகளை அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டார்கள்.

முற்பகல் போர் சேரனுக்கு எதிராகத் திரும்பியவுடன், சாளுவ நரசிம்மர் அவனுக்கு உரமூட்டத் தொடங்கினார்.

''யானைகளை எப்போதுமே நாம் போரில் நம்பக் கூடாது. ஆனால் உங்கள் போர் முறையை நான் தடுக்க விரும்பாததால் பேசாதிருந்து விட்டேன். உங்களுடைய மற்ற படை வீரர்களின் எண்ணிக்கையில் அவர்கள் பாதிப் பேர்கூட இருக்க மாட்டார்கள். அவர்களிலும் விஜயநகரத்து வீரர்கள் நம்மோடு சேர்ந்துகொள்ளக் காத்திருக்கிறார்கள். அதோ பாருங்கள் ராமபத்திர நாயக்கரை! படைகளை ஒதுக்கி வைத்துக்கொண்டு தனியாக நிற்பது தெரியவில்லையா?''

''இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டான் உதயமார்த்தாண்டன்.

''அதோ, ஆணிப் பலகைகளை அவர்கள் அப்புறப்படுத்தி விட்டார்கள். விசுவநாதனும் குதிரைப் படையோடு புறப்பட்டு விட்டான். நீங்களும் உங்கள் வீரர்களை ஏவிவிட்டுப் புறப்



டாடா ஸ்டீல் அயல் நாடு செல்கிறது

ஒவ்வொரு ஆண்டும் பலமுறைகள் கல்கத்தா துறைமுகத்தினின்று கிழக்கு ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் தூரக்கிழக்கு நாடுகளுக்குச் செல்கின்ற கப்பல்கள் இதர சரக்குகளுக்கிடையே, ஜாம்ஷெட்பூரில் தயார் செய்யப்படுகின்ற ஆங்கிள்கள், குழாய்கள், பாளங்கள், உத்திரங்கள் மற்றும் இதர எஃகுப் பண்டங்களை ஏற்றிச் செல்கின்றன. இறக்குமதி செய்கின்ற நாடுகளுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு இந்த எஃகுப் பொருள்கள் மிக முக்கியமானவை.

கடந்த இரண்டு ஆண்டுகளாக, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட டாடா நிறுவனங்களுக்கான ஏற்றுமதி அமைப்பாகிய கமெர்சியல் அண்ட் இண்டஸ்ட்ரியல் எக்ஸ்போர்ட்ஸ் லிமிடெட் (CIEL) வாயிலாக, டாடா ஸ்டீல் 30,000 டன்களுக்கு அதிகமான எஃகுப் பொருள்களை ஏற்றுமதி செய்துள்ளது. இதன் மூலம் நாட்டுக்கு ரூ. 1.15 கோடிக்கு மேலாக அன்னியச் செலாவணி பெற்றுத்தந்துள்ளது. நிதானமாக முன்னேற்றமடைந்து வருகிற ஏற்றுமதிகள், தேசத்தின் குறிக்கோளாகிய திட்டமிட்டத் தொழில்மய வெற்றிக்கு இன்றியமையாத் தேவையான அன்னியச் செலாவணி அபிவிருத்திக்காக டாடா ஸ்டீல் தன்னுடைய சிறிய பங்கினைச் செலுத்துவதையே குறிக்கின்றன.

டாடா ஸ்டீல்

The Tata Iron and Steel Company Limited

JWT TN 2838A



இதுதான் கொசு



இதுதான் கொல்லிமருந்து: சிவப்பு டப்பாவில் வரும் ஃப்ளிட்

கொசு இல்லாத இடமே இல்லை. ஆண்கொசுக்களால் ஆபத்து ஏதுமில்லை. ஆனால் பெண்கொசுக்களோ இரத்தம் உறிஞ்சியே உயிர்வாழ்கின்றன. அவை கடிக்கும்போது அவற்றின் உமிழ்நீர் உங்கள் இரத்தத்தில் இறங்குகிறது: மலேரியா, டெங்குக் காய்ச்சல், யானைக் காலின் நோய்கள் ஆகியவற்றின் கிருமிகள் அந்த உமிழ்நீரில் இருக்கக்கூடும்.

கொசுக்கள், ஈக்கள், பிறவகைப் பறக்கும் பூச்சிகள் யாவற்றையும் ஒழிக்க, உங்கள் வீட்டிலே ஃப்ளிட் தெளியுங்கள். சக்தி மிகுந்த இரண்டு மருந்துகளின் ரசாயனச் சேர்க்கையான ஃப்ளிட், இரு வகைகளில் தாக்குகிறது: கொடிய பொருளில் அப்பூச்சிகளை வீழ்த்தி பின், அதிவிரைவில் சாகடிக்கிறது

ஃப்ளிட் தெளித்து உங்கள்வீட்டைப் பாதுகாப்பீர்

—அதுவே உலகில் முதன்மை வகிக்கும் பூச்சிக்கொல்லி!

எஸ்ஸோ ஸ்டாண்டர்ட் ஈஸ்டர்ன் இன்க்.

(வரையறுக்கப்பட்ட பொறுப்புடையவரோடு யு.எஸ்.ஏ. வில் இணைக்கப்பெற்றது)



CHEF-12 ATM

படுங்கள். நீங்கள் புறப்பட்டவுடன் ராமபத்திர நாயக்கரும், விசுவநாதனுக்குத் துணையாக வருபவர் போல் வருவார். அவர் உங்களை எதிர்க்காதவரையில் நீங்களும் அவரை எதிர்க்க வேண்டாம். அவர் இந்தக் கரைக்கு வந்த பிறகு நாங்கள் இருவருமே உங்களைப் பின்பற்றி வருகிறோம். பொழுது சாய்வதற்குள் இந்தப் போரை நாம் வெற்றிகரமாக முடித்துவிட்டு, இரவில் நகரத்துக்குள் புகுந்துவிட வேண்டும்.''

உதய மார்த்தாண்டனின் மூல பலம் முறிந்து விட்டாலும் அவனுக்குச் சாளுவ நரசிம்மரின் சேனையின் பலம் கைகொடுப்பது போல் தோன்றியது. எண்ணிக்கையில் மிகவும் குறைவாக இருந்த விசுவநாதனின் வீரர்களைச் சுட்டிக்காட்டி, ''இவர்களைக் கூடப் போரில் வெற்றி காண முடியவில்லையென்றால் எப்படித்தான் உங்களால் மலைநாட்டைக் காக்க முடியும்? எப்படித்தான் நீங்கள் சாம்ராஜ்யத்துக்கே சக்கரவர்த்திகளாகப் போகிறீர்கள்?'' என்று இடித்துரைத்தார் சாளுவ நரசிம்மர்.

ஆவேசம் வந்து விட்டது உதய மார்த்தாண்டனுக்கு. குதிரையில் தாவி ஏறிக்கொண்டு குதிரைப் படைவீரர்களையும், காலாட்படையினரையும் ஒன்றாகத் திரட்டிக்கொண்டு கிளம்பினான். சாளுவ நரசிம்மரையும் அவரது சோழநாட்டு வீரர்களையும் மட்டிலும் கரையில் விட்டுவிட்டு, ஆத்திரத்தோடு முன்னேறிப் பாய்ந்தான் அவன். முழு மூச்சோடு பாய்ந்து விசுவநாதனையும் அவன் வீரர்களையும் நிர்மூலமாக்கிவிட வேண்டுமென்று தன் வீரர்களிடையே முழங்கினான்.

அவன் புறப்பட்ட அதே வேளையில் சாளுவரின் சைகையை எதிர்பார்த்திருந்துவிட்டு ராமபத்திர நாயக்கரும் எதிரே தம் படைகளை நடத்திச் சென்றார். கடலெனப் பொங்கி வரும் சேரனின் வீரர்களுக்கு முன்னே விசுவநாதனையும் அரியநாத முதலியாரையும் விட்டு விட்டு அவர் மட்டிலும் எங்கே புறப்படுகிறார்? ஆபத்துக் காலத்தில் அவர்களைக் கைவிட்டுச் சாளுவரோடு சேர்ந்து, துரோகம் செய்யத் துணிந்துவிட்டாரா அவர்?

உதயமார்த்தாண்டனும், ராமபத்திர நாயக்கரும் எதிரெதிரே நதியைக் கடந்தும், ஒருவரோடொருவர் போர் தொடுக்காதது சாளுவருக்கு எல்லையற்ற மகிழ்ச்சியைத் தந்தது. இரு கரங்களையும் நீட்டிய வண்ணம் ராமபத்திர நாயக்கரைக் கட்டியணைத்து வரவேற்கத் துடித்துக் கொண்டிருந்தார் சாளுவர்.

அதற்குள் விசுவநாதனின் படைகளும் உதயமார்த்தாண்டனின் படைகளும் ஒன்றையொன்று மோதி அழிக்கத் தொடங்கி விட்டன. ''வெற்றியைத் தவிர வேறு வழியே நமக்கில்லை!'' என்று கர்ஜித்தவாறே வீரர்களுக்கு உற்சாகமூட்டியபடி களத்துக்குள் குதிரையைச் செலுத்தினார் தளவாய் அரியநாதர். 'வெற்றி அல்லது வீர மரணம்' என்பது தவிர, வேறெதையும் ஏற்க விரும்பாத பாண்டிய வீரர்களும் விஜயநகர வீரர்களும் தாம்பிரவருணியைக் குருதிப் பெருக்காக மாற்றிக் கொண்டிருந்தனர்.

விசுவநாதனும், உதயமார்த்தாண்டனும் நேரடியாகவே குதிரையின் மீதிருந்தவாறு வாள் வீச முனைந்தனர். வாள் வீச்சுக்கிடையிலேயே விசுவநாதன் உதயமார்த்தாண்டனுக்கு ஓர் ஆலோசனை கூறினான்.

''எதற்காக இந்தப் படுகளத்தில் நாம் இத்தனை ஆயிரம் உயிர்களைப் பலியிட வேண்டும்? நாம் இருவரும் தனியாகப் போரிட்டு வெற்றியை நிச்சயம் செய்தால் என்ன?'' என்று கேட்டான். கேட்டுவிட்டு, ''நீ போரை நிறுத்தும்படி உன் வீரர்களுக்குக் கட்டளையிட்டால் நானும் கட்டளையிடுகிறேன்'' என்றான்.

அலட்சியமாகச் சிரித்த உதயமார்த்தாண்டன், ''உன்னிடம் வீரர்கள் வேறு இருக்கிறார்களா, வீரர்கள்! உன் வீரர்கள்தான் ராமபத்திரர் தலைமையில் வந்து என்னிடம் தஞ்சம் புகுந்து விட்டார்களே!'' என்று ஏசினான். ஏசிவிட்டு, ''தனிப் போர் நடத்தினால் வெற்றி பெறலாம் என்று இப்படி ஒரு தந்திரம் செய்கிறாயா?'' என்று ஏளனமாய்க் கேட்டான்.

வீணாக வீரர்கள் மாண்டு மடிவதைத் தடுக்க விரும்பிய விசுவநாதன், அது முடியாமற் போகவே, முன்னிலும் உக்கிரமாக உதயமார்த்தாண்டன் மீது பாய்ந்தான். அரியநாத முதலியார் அவனைச் சுற்றிலும் வியூகம் வகுத்து, பகைவர்களுக்கெதிரே பம்பரமெனச் சுழன்று வந்தார். தலைகள் தரையில் உருண்டன; குதிரைகள் முடமாகிச் சாய்ந்தன. தாமிரவருணிக்கரை பிணக் காடாக மாறிவிட்டது.

உதயமார்த்தாண்டனைக் குதிரையிலிருந்து வீழ்த்தியவுடன், அவனுடைய நெஞ்சில் கால் வைத்து அழுத்தியவாறே, ''நீயும் சாளுவரும் செய்த சூழ்ச்சியின் விளைவைப் பார்!'' என்று, தலை தெறிக்க நாலாபுறமும் சிதறி ஓடிக்கொண்டிருந்த அவனுடைய சேர நாட்டு வீரர்களைச் சுட்டிக் காட்டினான்.

''ராமபத்திர நாயக்கரையா துரோகம் செய்யத் தூண்டியிருக்கிறீர்கள்? — அவர் அங்கே என்ன செய்துகொண்டிருக்கிறார் பார்!'' என்று உதயமார்த்தாண்டனுக்குச் சுட்டிக் காட்டினான் விசுவநாதன்.

அத்தியாயம் இருபத்தொன்பது

வாக்கெனும் வாள்முனை

ராமபத்திர நாயக்கரின் துரோகத்தை எதிர்பார்த்து அவரை வரவேற்பதற்காகக் கரம் நீட்டிக் காத்திருந்தாரல்லவா சாளுவ நரசிம்மர்? அவருடைய கரங்களில் நாயக்கரது வீரர்களின் விற்களிலிருந்து புறப்பட்ட சரங்களே வந்து பாய்ந்தன. எதிர்ப்பில்லாமல் எதிர்க்கரையை நெருங்கியவுடனேயே ராமபத்திர நாயக்கர், தாம் யார் என்பதைப்

பகைவர்களுக்கு நிரூபித்து விட்டார். வீரர்களை இரு பிரிவினராகப் பிரித்து, விசுவநாதனைத் தாக்கச் சென்ற சேர நாட்டு வீரர்கள் மீதும், கரையில் திரண்டு நின்ற சாளுவரின் வீரர்கள் மீதும் ஏவிவிட்டார்.

உதயமார்த்தாண்டனைப் பின்பற்றிக் கரையைக் கடந்து முன்னேறிக் கொண்டிருந்தவர்கள், திடீரென்று பின்புறத்திலிருந்து தாக்கப்பட்டதால் நிலைகுலைந்து போனார்கள். அவ்வாறே கரையில் காத்து நின்ற சோழ நாட்டுவீரர்களும் நாயக்கரின் மின்வேகத் தாக்குதலால் கதிகலங்கிப் போனார்கள். அவர்களில் யாருமே இப்படி ராமபத்திரர் தங்கள் மீது பாய்ந்து விடுவார் என்று சிறிதும் எதிர்பார்க்கவில்லை. பகைப்படை வீரர்களிடையே கூச்சலும் குழப்பமும் சீர்குலைவும் ஏற்பட்டு விட்டன.

சாளுவ நரசிம்மருக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. தம்முடைய சூழ்ச்சி தமக்கு எதிராகவே திரும்பிவிட்டது கண்டு, நாயக்கரை நோக்கி, ''துரோகி! நீ என்னை வஞ்சித்துவிட்டாயா!'' என்று சீறினார்.

''துரோகமும், வஞ்சனையும் நான் உங்களிடம் ஊழியனாக இருந்தபோது பெற்ற பயிற்சிகள். அவைகளை எங்கள் இளவரசரிடம் நான் காட்ட விரும்பவில்லை. நீங்களே சுவைத்துப் பார்த்தால்தான் உங்களுக்கு அவற்றின் பயன் தெரியும்!''

நாயக்கர் சரேலென வாளை உருவிக் கொண்டு சாளுவ நரசிம்மரை நெருங்கினார். சாளுவரின் வாளும் மின்னல் கீற்றென உறையிலிருந்து வெளிப்பட்டது.

களத்தில் அவர்கள் இருவரும் பம்பரங்களெனச் சுழன்று வந்தார்கள். சாளுவ நரசிம்மர் தமது ஆற்றலின் ஒவ்வொரு துளியையும் ஒன்றாகத் திரட்டி நாயக்கரை வீழ்த்தப் பார்த்தார். அவருடைய வீரர்கள் அவரைக் கைவிட்டு ஓடத் தலைப்பட்டார்கள். அந்த ஆத்திரமும் சாளுவரை ஆட்டிப் படைத்தது. சாளுவர் ராஜதந்திரங்களில் வல்லவரே தவிர, வாள் வீச்சில் அந்த அளவுக்குத் தேர்ந்தவரல்லர்.

ராமபத்திர நாயக்கரின் வாள் முனை சாளுவரின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு அவரை மணலில் தள்ளி விட்டது. குருதிப் பெருக்கோடு அவர் சரிந்து விழுந்தார்.

அங்கே, எதிர்க் கரையில் உதயமார்த்தாண்டன் விசுவநாதனிடம் தோல்வியுற்ற சிறிது நேரத்துக்கெல்லாம் இங்கே சாளுவ நரசிம்மரும் வீழ்ந்து விட்டார். இந்தச் செய்தி பகைவீரர்களிடையே பரவியவுடன் அவர்கள் தலைதெறிக்கப் புறமுதுகு காட்டி ஓடத் தலைப்பட்டார்கள். சாளுவர் வீழ்ந்து கிடந்த கரைப் பக்கத்துக் காடுகளிடையே அவர்கள் ஓடி ஒளிந்த வண்ணமாக இருந்தார்கள்.

பொழுது சாய்ந்து கொண்டு வந்தது. களத்தில் கொல்லப்பட்டவர்களையும் சிறை பிடிக்கப்பட்டவர்களையும் தவிரப் பகைவர்கள் யாரையுமே காண முடியவில்லை.

குற்றுயிராய்க் கிடந்த சாளுவ நரசிம்மரைத் தூக்கிக் கொண்டு நதியைக் கடந்து விசுவநாதனின் கூடாரத்தை நோக்கிப் புறப்பட்டனர் ராமபத்திர நாயக்கரின் வீரர்கள். குடல் சரிந்த அந்த நிலையிலும் சாளுவர் வேதனைக் குரல் எழுப்பவில்லை. ''மெதுவாகச் செல்லுங்கள்!'' என்று வீரர்களுக்குக் கட்டளை இட்டாரே தவிர, தம் துன்பத்தை மறந்தும்கூட அவர் வெளியிடவில்லை.

சாளுவர் வீழ்ந்த செய்தி கிடைத்தவுடனேயே, 'அரியநாத முதலியார் லட்சுமியையும், அவள் அன்னையாரையும் அழைத்து வருவதற்கு ஆட்களை அனுப்பி விட்டார். வெற்றிச் செய்தியோடு இந்த வேதனைச் செய்தியும் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

விசுவநாதன் தன் உடலையும் உடைவாளையும் தாமிரவருணித் தண்ணீரில் கழுவிக் கொண்டு கரையேறினான். தோளெங்கும் பட்டிருந்த சின்னஞ் சிறு வாள் முனைக் காயங்களில் நீர் பட்டு எரிச்சல் எடுத்தது. களத்தைச் சுற்றிப் பார்த்துப் பெருமூச்சுவிட்டான் விசுவநாதன். போர் வெற்றியில் முடிந்து விட்டது; உதயமார்த்தாண்டனும் சிறைப்படுத்தப்பட்டான்; என்றாலும் ஆயிரக் கணக்கான வீரர்கள் அங்கு உயிரிழந்து கிடந்த காட்சி அவனை என்னவோ செய்தது. 'எல்லோருமே சாம்ராஜ்யத்துக் குடிமக்கள்; ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகள் !' என்று மனம் குமைந்தான் அவன்.

மேலே கழுகுகளும் பருந்துகளும் வட்டமிடத் தொடங்கின. தொலைவில் காட்டுக்குள் விருந்தை எதிர்நோக்கி நரிகள் ஊளையிட்டுக் களித்தன. எங்குமே குருதி வெள்ளம்; பிணச் சேறு; குடலைப் புரட்டும் இரத்த வாடை.

குற்றுயிராய்க் கிடந்தவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக அவர்களைக் களத்திலிருந்து அப்புறப்படுத்திக் கொண்டிருந்தனர் விசுவநாதனின் வீரர்கள். 'காயம் பட்டவர்கள் பகைவீரர்களாக இருந்தாலும் அவர்களுக்கும் சிகிச்சை அளிக்க வேண்டும்' என்று கட்டளையிட்டிருந்தான் விசுவநாதன்.

கூடாரத்தை அவன் நெருங்கியபோது, அதற்குள்ளிருந்து அவனுடைய மருத்துவர் வெளியில் வந்தார். ''ஆபத்தான நிலை; பிழைப்பது அரிதுதான்'' என்று கூறிச் சென்றார் அவர். உள்ளே சாளுவநரசிம்மரைக் காயத்தின் கட்டுக்களோடு கிடத்தியிருந்தார்கள். அருகில் அமர்ந்து லட்சுமியும் அவள் அன்னையாரும் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தனர். அரியநாத முதலியாரும் உடனிருந்தார்.

விசுவநாதனைக் கண்டவுடன் சாளுவரின் விழிகளில் புத்துயிரின் ஒளி பிறந்தது. அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்போல், புன்னகை பூத்தவாறே, ''விசுவநாதா !'' என்று கனிவோடு அழைத்தார்; ''கடைசியில் நீதான் வெற்றி பெற்றாய்; நீ மிகப் பெரிய வீரன்; உனக்கு என்னுடைய வாழ்த்துக்கள்!'' என்றார்.

வியப்பும் வேதனையும் அடைந்தான் விசுவநாதன்: 'இந்த நிலையில் எப்படி இவரால் என்னை வாழ்த்த முடிகிறது?'

''உன்னை நான் என் புதல்வனுக்குச் சமமாக நினைத்தேன்; உனக்காக ஒரு சாம்ராஜ்யத்தையே உருவாக்கப் பாடுபட்டேன்...

ஹூம்!.... நீயே எனக்குப் பகைவனாக முளைத்து, என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டாய்!....''

''நடந்தது நடந்து விட்டது'' என்று தழுதழுத்த குரலில் கூறிய விசுவநாதன். ''இனியும் தாங்கள் என்னைப் பகைவனாக நினைக்க வேண்டாம்'' என்றான்.

''உன் மீது கொண்ட கோபத்தாலேயே நான் சேரனின் பக்கம் சேரும்படி ஆயிற்று ; ஆனாலும் வெற்றி பெற்று விட்டாய்; உன்னாலேயே இப்போது நான் மரணத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.''

விசுவநாதனின் கண்கள் கலங்கி விட்டன. அவர் மீது அவன் எல்லையற்ற கோபம் கொண்டிருந்தான் என்றாலும், அவருடைய மரணந் தறுவாயில் அவன் அவரை முழு மனத்தோடு மன்னித்துவிடத் துடித்தான். லட்சுமியை விசுவநாதன் திரும்பிப் பார்த்த போது அவளும் தன் கண்ணீர் நிறைந்த விழிகளால் அவனை நோக்கினாள்.

''விசுவநாதா!'' — மீண்டும் அழைத்தார் சாளுவர்.

''சொல்லுங்கள்!''

''எனக்கொரு ஆசை;....கடைசி ஆசை... அதை நீ நிறைவேற்ற வேண்டும் !''

ஆசை குமிழியிட்டு ஊற்றுப் பெருக்கெடுக்கத் தொடங்கியது விசுவநாதனின் உள்ளத்தில். அவ்வாறே லட்சுமியின் உள்ளமும் பரவசமடைந்தது. எந்த ஆசை அது என்பது அவர்களுக்குத் தெரியாததல்ல; 'வெற்றி பெறுவோருக்கே லட்சுமியை மணம் முடித்துக் கொடுப்பேன் !' என்று அவர் மார்த்தாண்டனிடம் கூறியதை அவர்கள் அறிந்திருந்தார்களல்லவா?

''என்ன? நிறைவேற்றுவாயா?'' என்று கேட்டார் சாளுவர்.

லட்சுமி நாணித் தலை கவிழ்த்துக் கொண்டாள். விசுவநாதனும் பரபரப்புற்றான்.

''சொல்லுங்கள், நிறைவேற்றுகிறேன்!''

''இப்படிச் சொன்னால் போதாது. எனக்கு நீ ஆணையிட்டுத் தர வேண்டும். உன்னுடைய சாம்ராஜ்யத்தின் மேல், சக்கரவர்த்தி கிருஷ்ணதேவராயரின் மேல், ஆணையிட்டுத் தர வேண்டும். அப்போது தான் என் ஆவி அமைதியோடு பிரியும்......''

மிகவும் சிரமப்பட்டுத் தம் வலது கரத்தை அவனிடம் நீட்ட முயன்றார் சாளுவ நரசிம்மர். விசுவநாதன் அதைப் பற்றித் தன் கரத்தில் ஏந்திக் கொண்டு, ''சாம்ராஜ்யத்துக்குத் தீங்கு செய்யாத தங்களுடைய எந்த ஆசையையும் நிறைவேற்றுகிறேன்!'' என்று சாம்ராஜ்யத்தின் மீதும் சக்கரவர்த்தி கிருஷ்ணதேவராயர் மீதும் ஆணையிட்டுக் கொடுத்தான்.

ஆணையிட்டுக் கொடுத்த அவன் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டு, ''அப்பாடா !'' என்று பெருமூச்சு விட்டபடியே, ''இனி நான் ஆனந்தமாய்க் கண் மூடலாம்; உன்னை எனக்குத் தெரியும்; நீ வாய்ச் சொல் தவறாதவன்'' என்றார்.

அவருடைய ஆசையை அவர் வாயாலேயே கேட்பதற்குத் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தனர், விசுவநாதனும் லட்சுமியும். அரியநாத முதலியார் சாளுவரின் முகத்தில் சிறிது சிறிதாக ஏற்பட்டு வரும் பயங்கரமான மாறுதல்களைக் கவனித்தார். லட்சுமியையும் விசுவநாதனையும் சாளுவர் விழித்த விழிப்பில் திடீரென்று கொலை வெறி தாண்டவமாடியது.

''தங்கள் விருப்பம் என்னவென்று சொல்லவில்லையே ?'' என்று கேட்டார் அரியநாத முதலியார்.

''அதுவா ? அதைச் சொல்லத்தான் என் சக்தியையெல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டிருக்கிறேன்!'' என்று கூறிவிட்டு, சித்தப் பிரமை கொண்டவர் போல் சிரித்தார் சாளுவ நரசிம்மர். ''கண்டவர் நடுங்கும் சிங்கம் போல் வாழ்ந்த இந்தச் சாளுவ நரசிம்மன், சக்கரவர்த்திக்கும் மேலான அதிகாரத்தில் வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டதைக் கெடுத்துக் குலைத்தவனல்லவா நீ?'' என்று வெறியோடு கேட்டார் விசுவநாதனை.

''அப்பா!'' என்று கதறினாள் லட்சுமி.

''விசுவநாதா!'' என்று சாளுவர் கத்திய போது அவர் வாயிலிருந்து இரத்தம்

> லோகமான்யர் எந்த ஸ்வராஜ்யத்தின் கனவு கண்டாரோ அது ரத்னகிரிக்கோ மஹாராஷ்டிரத்துக்கு மாத்திரமோ அல்ல. இந்தியா முழுவதிலுமுள்ள ஏழை, பணக்காரர் எல்லோருக்குமே ஆகும். எதுவரை இந்த நாட்டிலுள்ள கோடிக்கணக்கான ஏழை ஒவ்வொருவனுக்கும் வயிறு நிறைய உணவு கிட்டாதோ அதுவரை ஸ்வராஜ்யம் என்று சொல்லுவதற்குப் பொருளே இல்லை.
>
> **காந்திஜி**

பொங்கி வழிந்தது: ''நீ என் குமாரத்தி லட்சுமியை மணந்து கொள்ளக் கூடாது; உயிருள்ள வரையில் நீ அவளுக்காக ஏங்கித் தவிக்க வேண்டும்; இதுதான் என்னுடைய கடைசி ஆசை!''

அடுத்தாற்போல் சாளுவரின் குரல் அடங்கி ஒலித்தது: ''உன்னுடைய ஆசையை அழித்துக் கொண்டு நீ என்னுடைய ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் என் கடைசி ஆசை. நிறைவேற்று மகனே.' நிறைவேற்று! வாக்குக் கொடுத்தாயல்லவா? அது நீ என் கையில் கொடுத்த கடைசிவாள்!''

அரியநாத முதலியார் தம் வாளை உருவிச் சட்டெனச் சாளுவரின் நெஞ்சில் வைத்து அழுத்த முனைந்தார். தாவிச் சென்று அவர் கரத்தை இறுகப் பற்றினான் விசுவநாதன். அவனால் பேச முடியவில்லை. கண்ணீர் அவன் விழிகளை மறைத்தது. நெஞ்சை அடைத்துக் கண்கள் இருண்டு கொண்டு வந்தன அவனுக்கு.

''வேண்டாம்; இவருடைய மரணத்தை நீங்கள் துரிதப்படுத்த வேண்டாம்'' எனத் தடுத்துவிட்டு, ''முதலியார் அவர்களே! இவரை நீங்கள் கொன்றாலும், இவருக்கு நான் கொடுத்த வாக்கைக் கொன்றதாக அது ஆகாது; அதைக் கொல்ல யாராலுமே முடியாது!'' என்று குமுறினான் விசுவநாதன்.

லட்சுமி வேரற்ற பூங்கொடியெனச் சரிந்து வீழ்ந்து அவன் பாதங்களில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு கதறினாள். விசுவநாதன் அந்தக் கொடியை ஏற்க இயலாத நெடு மரமாக நின்றான். அவன் நின்று கொண்டேயிருந்தான். சாளுவநரசிம்மரின் கடைசி மூச்சும் அவர் பெற்ற கடைசி வெற்றியைச் சுமந்து கொண்டு பிரிந்தது.

எத்தனை நாழிகை விசுவநாதன் அப்படி மரமாக, சிலையாக, நடுகல்லாக நின்று கொண்டிருந்தானோ அவனுக்கே தெரியாது. பாதங்களைப் பற்றியவாறே தரையில் மூர்ச்சித்துக் கிடந்த லட்சுமியின் கரங்களிலிருந்து மெல்லத் தன்னை விடுவித்துக் கொண்டு, அவள் முகத்தைக் கண்ணிமைக்காது கனிவோடு நோக்கினான்.

'நான் எனக்கென்று எதையுமே இறைவனிடம் வேண்டவில்லை. தாங்களும் தங்களுடைய லட்சியமும் வெற்றி பெற வேண்டும். அதையே நான் இறைவனிடம் வேண்டுகிறேன்' என்று முதல் நாள் இரவு அவள் அங்கு வந்த போது கூறினாளல்லவா? அப்படிக் கூறிவிட்டுத் துறவுக்கோலக் கன்னி போல் தன் உதிரத்தால் திலகம் இட்டு விட்டாளல்லவா? அந்த நினைவு இப்போது புயல்பட்ட பேரலைபோல் விசுவநாதனுக்குள் எழுந்து மோதியது.

அவள் ஆவேசத்தோடு அப்படிக் கூறிய போதே, அவளுடைய சொற்கள் அவனைச் சுருக்கெனத் தைத்தன. அந்தச் சொற்களின் பொருள் எவ்வளவு கொடுமையானது என்பது அவனுக்கு இப்போதுதான் விளங்கியது. 'இறைவனிடம் நீ எதை வேண்டினாயோ அதை மட்டுமே அவன் கொடுத்திருக்கிறான்; உன்னை எனக்கோ, என்னை உனக்கோ அவன் கொடுக்கவில்லை' என்றெண்ணிப் பொருமினான் விசுவநாதன்.

''ராமபத்திர நாயக்கர் எதற்காக இவரை இங்கே குற்றுயிராய்த் தூக்கிக் கொண்டு வந்தார்? அங்கேயே இவர் உடலைக் காக்கைக்கும் கழுகுக்கும் இரையாகப் போட்டு வந்திருக்கக் கூடாதா?'' என்று வெகுண்டார் அரியநாத முதலியார்.

''யாரையுமே குறை கூறாதீர்கள்; நம்மையெல்லாம் ஆட்டி வைப்பவனுடைய சித்தம் எதுவென்றே நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை'' என்று கூறிவிட்டு, மெல்லக் கூடாரத்தை விட்டு வெளியே வந்தான் விசுவநாதன். அரியநாத முதலியாரும் அவனைப் பின்பற்றினார்.

''நீங்கள் இங்கேயே இருந்து அவர்களை அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள்; நான் ஆலயத்துக்குச் சென்று என்னைப் படைத்தவனிடம் சிறிது நேரம் முறையிட்டு வருகிறேன்.''

''அவர்களை அனுப்பி வைப்பதா ...?''

''ஆம்; லட்சுமிக்கு மயக்கம் தெளியட்டும். அவளும் அவள் அன்னையாரும் எந்த ஊருக்குச் செல்ல விரும்புகிறார்களோ அங்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். மதுரையைத் தவிர, தஞ்சைக்கோ, காஞ்சிக்கோ, விஜயநகரத்துக்கோ அவர்கள் எங்கு செல்ல விரும்பினாலும் சரி.''

மீண்டும் தாமிரவருணிக்குச் சென்று நெடுநேரம் அதில் மூழ்கித் தன் உள்ளத்தின் கொதிப்பை ஆற்றிக் கொள்வதற்கு அவன் முயன்றான். பிறகு வீரர்கள் பின்தொடர நகரத்துக்கு வந்து நெல்லையப்பரின் ஆலயத்துக்குள் நுழைந்தான். சிலைக்கெதிரே சிலையாக நின்று கண்ணீர் பெருக்கெடுத்தோட விட்டான்.

''இறைவா! நீ எங்களுக்கு இன்பத்தையும் துன்பத்தையும் மாறி மாறி வழங்கி வருகிறாய். எனக்கு நீ இன்பத்தை மட்டுமே கொடுக்க வேண்டுமென்று நான் வேண்டவில்லை. ஆனால் நீ துன்பத்தை அளிக்கும்

போது. அதை ஏற்றுக் கொள்வதற்கான மன வலிமையை மட்டும் எனக்குக் கொடு. உள்ளத்து உறுதியை மட்டும் உன் துன்பங்களோடு சேர்த்து எனக்குக் கொடு !''

தன்னை மறந்து, தன்னை அவனில் சரணடையச் செய்து, தான் என்பதையே இழந்து அவன் அங்கு பணிந்து நின்றான். பின்னர் வெளியே வந்தான்.

வரும்போது ஒரே ஒரு நினைவு மட்டும் அவனை வாட்டியது: 'மயங்கிக் கிடந்த நிலையில் லட்சுமிக்கு ஆறுதல் அளிக்காமல், நான் மட்டிலும் ஆறுதல் தேடி இங்கு வந்தது சரிதானா ?'

அந்த வினாவுக்கு விடையும் அவனுக்கு ஆலயத்தின் வெளிப்புற வாயிலில் கிடைத்து விட்டது. தொலைவில் ஆலயத்துக் கோபுர வாயிலுக்கு வெளியில் நின்றவாறே கரங் கூப்பிக் கண்மூடியிருந்தாள் லட்சுமி. குளித்து மூழ்கிவிட்டு உலராத ஆடையோடு துறவுக் கன்னியின் கோலத்தில் அவள் தோற்றமளித்தாள். அருகே அரியநாத முதலியார் நின்று கொண்டிருந்தார்.

விசுவநாதனின் விழிகளும் அவளுடைய விழிகளும் கடைசி முறையாகச் சந்தித்தன. இருவரும் ஒருகணம் எதிரெதிரே நின்று கரங்கூப்பிக் கொண்டார்கள். .வாய்திறந்து எதுவுமே அவர்கள் பேசிக் கொள்ளவில்லை. ஆனால் அவர்களுடைய விழிகள் அந்தக் கணப் பொழுதுக்குள் பேசாதனவெல்லாம் பேசிக் கொண்டு விட்டன.

வாயிலில் காத்து நின்ற குதிரையில் தாவி ஏறினான் விசுவநாதன். அந்தக் காட்சியை லட்சுமி பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். தொலைதூரம் சென்ற பிறகும் அவன் அவளைத் திரும்பிப் பார்க்கவில்லை. அதையும் லட்சுமி கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். அவளுடைய புற விழிகளிலிருந்து அவன் மறைந்த பிறகும் அவளுடைய இதயத்துக்குள்ளிருந்த அவனைக் கண் மூடிக் கண்டு நின்றாள் அவள்.

முடிவுரை

விஜயநகரத்தை விட்டு விசுவநாதன் மதுரைக்குப் புறப்பட்டபோது, மதுரைத் இருநகரையும் அப்படியொரு வெற்றித் இருநகராக மாற்றி அமைத்துவிட வேண்டுமென்று கனவு கண்டானல்லவா ?

அவனுடைய வாழ்க்கையின் கனவுதான் நிறைவேறவில்லை. ஆனால் லட்சியக் கனவையும் அப்படி அவன் கை கழுவவிட்டு விட விரும்பவில்லை.

அவனுடைய பிரிவுத் துன்பத்தை அவன் லட்சிய வெறியில் மறக்கலானான்.

காடுகளை அழித்து வீடுகள் கட்டுவித்தான்; நாடு நகரங்கள் தோற்றுவித்தான். குளங்கள் வெட்டிக் குடிதண்ணீர் தேக்கினான். ஏரிகள் வெட்டி, பாசனம் பெருக்கி, விளைச்சலைக் குவிய வைத்தான். வாணிகம் வளர்ந்தோங்க வழிவகைகள் செய்தான். கள்வர் பயத்தையும் பகைவர் பயத்தையும் நாட்டிலிருந்து அறவே ஒழித்தான்.

ஆயிரக்கால் மண்டபமென்ன, ஆலயங்களென்ன, கல்விச்சாலைகள் என்ன, பூஞ்சோலைகள் என்ன — இவ்வாறு நாட்டுக்கே ஒரு புது வாழ்வைக் கொடுத்து விட்டான் விசுவநாதன்.

முதன் முதலாக அவன் தமிழ் நாட்டைக் காண வந்தபோது அதன் நிலை கண்டு இரத்தக் கண்ணீர் வடித்தானல்லவா? அதே தமிழ்'நாடு அவன் கண் முன்னே ஆனந்தக் கூத்தாடத் தொடங்குவது கண்டு, அதில் ஆறுதலைத் தேடினான்.



'விசுவநாத பாண்டியர்' என்று குடிமக்கள் அவனை அகம் குளிர அழைத்து வாழ்த்தினர். அதே பெயரில் சந்திரசேகர பாண்டியர் அவனுக்காக நாணயங்களும் வெளியிடச் செய்தார்.

பிற்காலத்தில் பகைவர்களின் பயங்கரமான வெறிச் செயல்களுக்கு இலக்காகி விஜயநகரம் சீரழியத்தான் செய்தது. அதன் வாழையடி வாழையென விசுவநாதனால் உருவாக்கப் பெற்ற புதிய மதுரையோ, 'இதோ, நான் இருக்கிறேன், வெற்றித் திருநகராக!' என்று வைகை நதிக் கரையில் கம்பீரமாகத் தலை நிமிர்ந்து நின்றது: இன்றும் நின்று கொண்டிருக்கிறது.


விசுவநாதன் லட்சுமியோடு வாழவில்லைதான்: ஆனால் அவன் தன் லட்சியத்தையே லட்சுமியாகக் கொண்டு விட்டான்.

அவனையும் அவனுடைய லட்சியமாக மாறிவிட்ட லட்சுமியையும் காண விரும்புவோர்...

விசுவநாதனால் புதுப்பிக்கப் பெற்ற திருவரங்கம் ஆலயத்தில்; திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆலயங்களில்; திருச்சிராப் பள்ளிக்கே அழகு தரும் அதன் தெப்பக் குளத்தில்; மதுரைக் கோயிலின் ஆயிரக்கால் மண்டபத்தில் — இன்னும் எத்தனை எத்தனையோ இடங்களில் அவர்களைக் காணலாம்.

ஆனால் அவர்களோ அவர்களது பிரிவுக்குப் பிறகு ஒருவரையொருவர் மீண்டும் நேரில் காணவே இல்லை.

அபார ஞாபகம்




அருணகிரி முதலியாருக்குப் பிறந்த பிள்ளைகள் மூன்றும் மூன்று ஆயுதங்களாக இருந்தன. ஒவ்வோர் ஆயுதமும் அவரை நோக்கியே பாய்ந்து கொண்டும் இருந்தது. ''மகா தத்தாரிகள்'' என்று பிள்ளைகளை மொத்தமாகக் குறிப்பிடுவார் அவர்.

கடந்த ஆறு வருஷங்களாக அவருக்குப் பக்கத்து வீட்டுக்காரனாக இருந்து வரும் எனக்கு இந்த ஆறு வருஷகாலமும் ஆச்சரியமாகத்தான் இருந்து வந்திருக்கிறது. அருணகிரி முதலியாருக்கு இப்படிப்பட்ட பிள்ளைகள் எங்கிருந்து பிறந்தார்கள்? கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்; சேற்றிலே செந்தாமரை மலரும் என்று சொல்வார்கள். இங்கே நேர்மாறாக அகிலில் கள்ளியும், செந்தாமரையில் சேறும் பிறந்திருக்கின்றனவே என்று நான் ஆச்சரியப்பட்டுக் கொண்டே — முந்தா நாள் வரை — இருந்திருக்கிறேன். ஏனென்றால் முதலியார் அவர் மனைவியைப் போலவே பரம சாது: அழுத்தமான சிவபக்தர். தமிழில் ஓரளவு புலமையும் உண்டு. எந்நேரமும் புத்தகமும் கையுமாக மாடியறையில் உட்கார்ந்திருப்பாரே ஒழிய ஒரு வம்புக்கும் போக மாட்டார். பிள்ளைகள் மூவருக்கும், தேவாரம் பாடிய மூவர் பெயர்களையே வைத்தார். மூத்தவன் விவரம் தெரியும் வயது வந்தவுடன் முதல் காரியமாகத் தன் பெயரையே மாற்றிக் கொண்டான். 'ஞான சம்பந்தம்! இது என்ன பெயர்! நாகரிகமாக இருக்க வேண்டாமா?' என்று தன் பெயரை ''சம்பத்'' என்று வைத்துக் கொண்டான். அவனைப் பார்த்து இரண்டாவது மகன் திருநாவுக்கரசு, தன் பெயரை மோஹன் ஆக்கினான். கடைசிப்பிள்ளை சுந்தரமூர்த்தியோ அவ்வளவுதூரம் புரட்சி செய்யாமல் மூர்த்தி என்று மட்டும் வைத்துக் கொண்டான்.

அப்பா வைத்த பெயர்களையே ஏற்றுக் கொள்ளாத பிள்ளைகள் அப்பாவின் உபதேசங்களையும் ஆசார அநுஷ்டானங்களையும் கடைப்பிடிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா? எந்நேரமும் நீறு பூசிய நெற்றியோடு காட்சியளிக்கும் முதலியாருக்கு எதிரில் சிகரெட்டும் கையுமாக வீட்டினுள் நுழைவான் ஞானசம்பந்தம் — அதாவது சம்பத்.

இரண்டாவது மகன் மோஹன், பிரபல சினிமா நடிகன் ஒருவனின் பிரதிபிம்பமாகத் தன் தோற்றத்தையே எப்படியோ மாற்றியமைத்துக் கொண்டு விட்டான். அவன் படியில் ஏறினாலும் இறங்கினாலும் அதிலே ஒரு பாய்ச்சல் இருக்கும்; ஒரு சாதனை இருக்கும். எங்கள் தெருவில் இதுவரை மூன்று பெண்களிடம் அவன் வம்பு செய்ததாகப் புகார் வந்திருக்கிறது. ஒரு தடவை அவனைச் சந்தில் தள்ளி மூன்று பேர் அடித்து விட்டார்கள். அதற்கும் பெண் விவகாரம் தான் என்று கேள்வி.

கடைசி மகன் அப்படியில்லை. அவனுக்கு இருபத்துநாலு மணி நேரமும் சைக்கிளோடு தான் சகவாசம். எப்பொழுது பார்த்தாலும் சைக்கிளில் போவதும் வருவது



மாக இருப்பான். எதற்கென்று யாருக்கும் தெரியாது. கடந்த இரண்டு வாரங்களாக அவனுக்கும் அப்பாவுக்கும் தீராப் பகையே மூண்டு விட்டது. அவன் ஸ்கூட்டர் வாங்கித் தர வேண்டும் என்று கேட்டான். அவர் வாங்கித் தரவில்லை. ஜென்ம விரோதிகள் ஆகிவிட்டார்கள். என்றாவது ஒரு நாள் அவருடைய மண்டையை உடைக்கப் போவது நிச்சயம் என்று அவன் வெளிப்படையாகவே சொல்லிக் கொண்டு திரிந்தான். எனக்கு வேறு பயம் திக்திக்கென்று அடித்துக் கொண்டது. முதலியாருக்கு மிகவும் வேண்டியவனாகப் போய், தினந்தோறும் அவருடன் அவர் வீட்டில் ஒரு மணி நேரமாவது உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்து விட்டு வருவது என் வழக்கமாக இருந்தது. அவர் மண்டைக்குப் பதிலாக என் மண்டையில் குறி வைத்து விட்டால்? நல்ல வேளையாக இருவர் தலையும் தப்பிவிட்டது. இனி என் தலைக்கு ஆபத்து வந்தாலும் வரலாமே ஒழிய, முதலியார் தலைக்கு ஆபத்து வரவே முடியாது. முந்தாநாளே அவர் காலமாகி விட்டார்; அவராகவே அவர் மண்டையைப் போட்டு விட்டார்.

முதலியார் வீட்டு மாடியில் அவரோடு எனக்கு என்ன பொழுதுபோக்கு என்பதைச் சொல்ல வேண்டியது அவசியமே. முதலியாரிடம் சைவ சமய நூல்களும், மற்றும் தமிழ் நூல்களும் ஏராளமாக இருந்தன. சில அவராக வாங்கியவை; சில அவருடைய அப்பா வாங்கி வைத்துவிட்டுப் போனவை. முதலியார் தினந்தோறும் திருவாசகம் படிப்பார். எனக்கும் படித்துக் காட்டிப் பொருள் கூறுவார். சில மாதங்களுக்குள் எனக்கு அதில் ஈடுபாடு ஏற்படும்படியும் செய்து விட்டார். அதன் விளைவாக என் சொற்ப சம்பளத்தில் ஒன்று இரண்டு மிச்சம் வைத்து என் சொந்தத்துக்கு என்று ஒரு திருவாசகம் புத்தகம் வாங்கினேன்; பிறகு தேவாரமும் பெரிய புராணமும் வாங்கினேன். திருக்குறள் வாங்கினேன். மலிவுப் பதிப்புக்கள் வெளிவரத் தொடங்கியதும், அநேகமாக எல்லாத் தமிழ்ச் செய்யுள் நூல்களையும் வாங்கி அடுக்கிவிட்டேன். அதன் பின் முதலியார் விளக்க, நான் விளங்கிக் கொள்ள என்றிருந்த நிலை மாறி, இரண்டு பேருமே நுட்பமான கருத்துக்களை எடுத்துரைக்கவும், அவை பற்றி விவாதிக்கவும் தொடங்கி விட்டோம். இருவரும் கல்விக்கு இருவர் என்று சகபாடிகளாகி விட்டோம். ஆனால் அவருக்கு வயது அறுபத்து மூன்று; எனக்கு முப்பத்துமூன்றுகூட ஆகவில்லை. இருபத்தொன்பதுதான்.

ஒரு தடவை முதல் தேதி சம்பளம் வாங்கியதும் ஒரு தாயுமானவர் பாடல் புத்தகம் வாங்கினேன். அதை முதலியாரிடம் கொண்டு போய்க் காட்ட விரும்பி, மாலை ஆறு மணிக்கு அவருடைய மாடிக்குச் சென்றேன். முதலியார் அப்போது இலக்கிய விசாரத்தில் மூழ்காமல் வெறும் விசாரத்தில்

ஆழ்ந்து கிடப்பதை அவருடைய முகக் குறிப்பால் உணர்ந்து கொண்டேன். என்னைப் பார்த்தும்கூட முகம் மலரவில்லை.

''ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''எல்லாம் இந்தத் தத்தாரிப் பசங்களாலேதான். என்னத்தைச் சொல்றது? நூத்து முப்பது ரூபாயைத் தூக்கிக்கிட்டுப் போயிட்டாங்க. எவன்னு தெரியல்லே. மூணு பேரையுமே வீட்டிலே காணல்லே'' என்றார்.

''நூத்து முப்பது ரூபாயா?''

''ஆமா, சார்! கொடக்கூலி வசூல் பண்ணிக்கிட்டு வந்து பீரோவிலே வைச்சேன். கடைத் தெருவுக்குப் போயிட்டுத் திரும்பி வர்றேன். பணத்தைக் காணல்லே.''

''இதென்ன மாயமா இருக்கு?''

''மாயம் என்ன மாயம்? இப்படி இதுக்கு மூன்னாலேயும் ரெண்டு தடவை மாயம் நடந்திருக்கு. 'நான்தான் எடுத்தேன்'னு கொஞ்சம்கூடக் கூசாமல் சொன்னான் ஞானசம்பந்தம். இப்போ பணத்தை எவன் எடுத்தானோ?''

''உங்களுக்கு வயசுக் காலத்திலே இப்படி மனக் கஷ்டம் குடுக்கப்படாது. கேட்கவே எனக்கு வருத்தமா இருக்கு. உங்களைப் போல ஒருத்தருக்கு இப்படிப்பிள்ளைகளான்னு நம்ப முடியல்லே.''

உடனே முதலியார் ஏதோ நம்பிக்கை ஒளியைக் கண்டு விட்டவர் போலவும், அவருடைய பிள்ளைகளை நான் ஒரேயடியாகப் பழித்து விடக் கூடாது என்று அறிவுறுத்துகிறவர் போலவும் பேசினார்: ''இந்த வயசிலே அப்படித்தான் இருக்கும். நூத்திலேஒண்ணு தான் தாய் தகப்பனுக்கு அடங்கி நடக்கும். காலம் அப்படி ஆயிட்டது. இந்தப் பசங்களுக்கும் காலா காலத்திலே கால்கட்டைப் போட்டு வச்சிட்டா தானு வழிக்கு வந்துடுவாங்க'' என்று சொன்னார். அடுத்த வருஷமே சொன்னதைச் செய்தும் காட்டி விட்டார்.

இப்போது முதலியார் வீட்டில் அவர் குடும்பமும் பிள்ளைகள் குடும்பமுமாக நான்கு குடும்பங்கள் ஆகிவிட்டன. பிள்ளைகள், மூன்று ஆயுதங்கள், மனைவிமாரைச் சேர்த்து ஆறு ஆயுதங்கள். இதிலே மனைவிமார் என்ற ஆயுதங்கள் நேரடியாக முதலியார் மீது பாய்வதில்லை. ராக்கெட்டுகள் விண்வெளிக் கோள்களை ராக்ஷஸ வேகத்தில் வெளியே தள்ளுவதுபோல், கணவன்மாரைத் தள்ளி விடும் கருவிகளாக இருந்தனர்.. பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் அமைந்த கதையாகி விட்டது. கல்யாணம் ஆன புதிதிலேயே மூத்த மகனுக்கும் அவன் மனைவிக்கும் சண்டை ஆரம்பித்து விட்டது. 'யார் பேச்சை யார் கேட்பது? யாருக்கு யார் அடங்கி நடப்பது?' என்ற அற்பப் பிரச்னையைத் தீர்க்கவே அன்றாடம் வாய்ச் சண்டைகைச் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். இரண்டாவது மகன் இந்தப் பிரச்னைக்கே இடம் வைத்துக் கொள்ளவில்லை. எடுத்த எடுப்பிலேயே மனைவியிடம் சரணடைந்து விட்டான். இது பரவாயில்லை என்று பாராட்டும்படியாகவே இருந்தது. பிரச்னை தீராமல் சண்டை போடுவதைவிட, எப்படியோ ஒரு வழியில் பிரச்னை தீருவது உசிதம் அல்லவா? இப்படி முதலியாரே என்னிடம் ஒருமுறை சொல்லியிருக்கிறார்.

கடைசி மகன் ஸ்கூட்டர் வாங்கும் வரை தகப்பனைத் தவிர வேறு யாருடனும் சண்டை போடுவதில்லை என்ற உறுதியுடன் இருந்ததால், அவன் மனைவிக்கும் அவனுக்கும் தீவிரமான மோதல் எதுவும் ஏற்பட்டு விடவில்லை.

மூன்று பிள்ளைகளுக்கும் அவரவர் கைச் செலவுக்கென்று ஆளுக்கு முப்பது ரூபாய் கொடுப்பார். இந்த ஏற்பாட்டில் பிள்ளைகளுக்குத் திருப்தி ஏற்படவில்லை. காலமெல்லாம் அப்பாவின் கையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது ஆண்பிள்ளைகளுக்கு அழகல்ல என்ற விபரீத புத்தி ஒவ்வொருவனுக்குமே தோன்றிவிட்டது. அதன் பலனாக, முதலியாருக்குச் சொந்தமாக எங்கள் தெருவிலேயே இருந்த ஒரு வீட்டில், நான்கு குடித்தனக்காரர்களிடமும் இரண்டாம் தேதியானதும் வாடகை வசூலுக்காக ஒவ்வொருவனும் போய் நிற்கத் தொடங்கி விட்டான்.

குடித்தனக்காரர்கள் பார்த்தார்கள். மூன்று பிள்ளைகளிடமும், ''உங்களுக்குள் ஆயிரம் சண்டை இருக்கும். அதுக்கு நாங்க பலியாக முடியாது. உங்க அப்பாதான் எங்களுக்கு வீட்டை வாடகைக்கு விட்டார். அவர் கையிலேதான் கொடக்கூலி கொடுப்போம்'' என்று கூறி விட்டார்கள்.

பேச்சுத் தடித்துப் போலீசுக்குப் புகார் போயிற்று. பிள்ளைகள் மூவரும் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகப்பட்டார்கள். மறு நாள் தலையில் அடித்துக் கொண்டு வந்தார் முதலியார்.

''ஸார்! எனக்கு மன நிம்மதியே இல்லே. வீட்டிலே ஒரு நிமிஷம் உட்கார்ந்திருக்க முடியல்லே. எங்காவது பரதேசம் போயிட்டாத் தேவலே போலே இருக்கு. என்ன செய்யறதுன்னே தெரியல்லே. துண்டை உதறித் தோளிலே போட்டுக்கிட்டு நான் போயிடுவேன். பாவம், அவபாடு கஷ்டமாப் போயிடுமேன்னு பார்க்கிறேன்'' என்றார் முதலியார்.

''அவ பாடு'' என்பது அவருடைய மனைவியை — அவரைப் போலவே பரம சாதுவுமான அவருடைய மனைவி கற்பகாம்பாள் பாடு.

நான் ஒரு யோசனை சொன்னேன்: ''நீங்க ரெண்டு பேரும் ஒரு தடவை வடக்கே யாத்திரை போய்ட்டு வாருங்களேன், காசி, கயா, ஹரித்வார், ரிஷிகேசம்னு.''

என் யோசனை முதலியாருக்கு மிகவும் பிடித்துவிட்டது. அப்படியே செய்யத் தீர்மானித்துவிட்டார். போலீஸ் கேஸில் சிக்கியிருக்கும் பிள்ளைகள் மூவர் விஷயமும் பைசலான பிறகு போகலாம் என்று தீர்மானித்தார். மூன்று பேருக்கும் அபராதம் விதித்தால் கட்டுவதற்கு ஆள் வேண்டும் அல்லவா? இல்லையென்றால் பிள்ளைகள் ஜெயிலுக்குப் போய்விடுவார்கள். ஊர் சிரிக்கும். பிள்ளைகள்

> கடவுள் என்னும் சக்தி எங்கோ மேகத்தின் நடுவில் இருப்பதல்ல; கடவுள் என்னும் பார்க்க முடியாத சக்தி நம்மிடையே வாழ்ந்து, சதையோடு நகம் பற்றியிருப்பதைவிட நெருங்கி இருந்து வருகிறது.
>
> — காந்திஜி

ஜெயிலிலே இருக்கும்போது அப்பாவும் அம்மாவும் ஸ்தல யாத்திரை போயிருக்கிறார்கள் என்று ஊர் கேலி செய்யுமே என்று முதலியார் பயந்தார். 'இதுவரையிலும் மெச்சியிருக்கிறார்கள். இனிமேல்தான் கேலி செய்யப் போகிறார்கள். — இவர்கள் குடும்பத்தைப் பார்த்து' என்று நான் எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

தலா நூறு ரூபாய் அபராதத்துடன் பிள்ளைகளின் வழக்குப் பைசலானது. ரூபாய் முந்நூறைக் கோர்ட்டில் கட்டிய முதலியார் கையில் எழுநூறை எடுத்துக்கொண்டு அடுத்த மாதமே ஸ்தல யாத்திரைக்கு மனைவியோடு கிளம்பத் திட்டமிட்டுவிட்டார். டிக்கட்டும் வாங்கியாகி விட்டது. அவருடைய வீட்டில் இந்த இடைக்காலத்தில் தகராறு இல்லாமல் அசாதாரணமான ஓர் அமைதி நிலவியது. நானும் பழையபடி திருவாசக ஆராய்ச்சிக்கு அங்கே போகத் தொடங்கினேன்.

2

முதலியார் தம்பதிகள் யாத்திரைக்குப் புறப்படுவதற்கு முதல் நாள் இரவு. நான் சாப்பிட்டுவிட்டே அங்கே போனேன். ஒன்பதரை மணி இருக்கும். வழக்கம் போல் திருவாசகம் படித்துக் கொண்டிருந்தோம்.

''முத்திநெறி அறியாத
மூர்க்கரொடு முயல்வேனை''

என்று தொடங்கும் பாடலை நான் பாடத் தொடங்கினேன்.

''இந்தப் பாட்டு எனக்கு ரொம்பப் பொருத்தம். மூணு மூர்க்கர்களோட என் காலம் போய்க்கிட்டிருக்கு'' என்றார்.

எனக்கு அடக்க முடியாமல் சிரிப்பு வந்தது.

''கல்யாணம் பண்ணினால் வழிக்கு வந்துடுவாங்கன்னு சொன்னீங்களே!'' என்றேன்.

பிள்ளைகளின் கௌரவத்தை விட்டுக் கொடுக்க விரும்பாதவர் போல், ''இந்த வயசிலே அப்படித்தான் இருக்கும். அவனவனுக்குப் பொறுப்பு வர்றபோது எல்லாம் சரியாய்ப் போயிடும்'' என்றார்.

''பொறுப்பு எப்ப வர்றது? இப்பவே பொறுப்புத் தெரியற வயசுதானே?''

''ரெண்டு பிள்ளை குட்டின்னு ஆகட்டும்' அப்போ பாருங்க. இதைவிட மோசமான பசங்ககூடப் பெட்டிப் பாம்பா ஒடுங்கியிருக்கிறாங்க.''

'ஓஹோ! பிள்ளைகள் பிறந்துதான் பொறுப்புத் தெரியணுமோ? சரிதான்' என்று ஏகத்தாளமாக எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

திருவாசக விளக்கம் தொடர்ந்து நடந்தது. மணி பத்து அடித்து விட்டது. ஒரே நிசப்தம். முதலியார் வீட்டில் கீழே அவருடைய மனைவி மக்களும், மருமக்களும் படுத்துறங்கி விட்டார்கள். நானும் புறப்பட வேண்டியதுதான் என்று தீர்மானித்து, ''நாளைக்கு இந்நேரம் ரயில்லே இருப்பீங்க ரெண்டு பேரும். சௌக்கியமாய்ப் போய்ட்டு வாங்க. நான் ஸ்டேஷனுக்கும் வர்றேன்'' என்று சொல்லிவிட்டு எழுந்தேன். எழுந்து வரும்போது முதலியாரின் கண்ணாடி பீரோவுக்குள் இருக்கும் புத்தகங்களை ஒரு முறை பார்த்தேன். அங்கே இருந்த ஒரு பழைய தமிழ் அகராதி என் கண்ணில் பட்டது. அநேகமாகத் தினம் தவறாமல் அதை எடுத்துப் புரட்டிப் பார்த்து அரும் பதங்களுக்குப் பொருள் தெரிந்துகொள்வது என் வழக்கம். அகராதியைப் பார்த்ததும், 'இந்த அகராதியை எடுத்துக்கிட்டுப் போறேனே. நீங்க வர்ற வரையிலும் என் வீட்டிலேயே இருக்கட்டும்!'' என்றேன்.

''எடுத்துக்கிட்டுப் போங்க'' என்றார் முதலியார்.

நானும் சந்தோஷமாக அந்தப் பெரிய புத்தகத்தை எடுத்துக் கொண்டு மாடியிலிருந்து கீழே இறங்கினேன். முதலியார் என் கூடவே வந்து மாடிப் படி விளக்கைப் போட்டார். கீழே வாசல் வரையும் வந்து வழியனுப்பிவிட்டு மறுபடியும் மாடிக்குப் போனார்.

'இப்படித் தங்கமான மனிதருக்கு இப்படிப் பிள்ளைகள்' என்று ஒரு தடவை நினைத்துக்கொண்டு என் வீட்டுக்கு வந்தேன்.

முதலியார் தம்பதிகளை மறுநாள் நான் ஸ்டேஷனுக்குச் சென்று வழியனுப்பினேன். பிள்ளைகள் மூன்றுபேரும் வந்திருந்தும்கூட, ரயில் புறப்படுகிறவரை என்னோடுதான் பாசத்தோடு பேசிக் கொண்டிருந்தார் முதலியார். வீடு திரும்பும்போது, பிள்ளைகள் மூவரும் தனித் தனியாக என்னை முறைத்துப் பார்த்துக் கொண்டு போனார்கள்.

சுமார் பத்து நாட்களுக்குப் பிறகு ஒரு விஷயம் கேள்விப்பட்டேன். நான் வேலைக்குப் போயிருந்த சமயத்தில், தான் நேரில் கண்ட காட்சியை என் மனைவி என்னிடம் கூறியதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. முதலியாரின் பையன் ஒருவன் அபூர்வமான புத்தகங்களில் பத்துப்பதினைந்தை எடுத்து வீட்டு வாசலில் பழைய காகிதம் வாங்குகிற ஒருவனுக்கு நிறுத்துப் போட்டுக் காசு வாங்கினானாம்.

''எல்லாம் அருமையான புத்தகங்களாச்சே. முதலியார் பார்த்தால் உயிரை விட்டுவிடுவாரே'' என்று சொன்னேன்.

''இன்னிக்கு நான் பார்த்தது. இதுக்கு முன்னுலே எவ்வளவு போயிருக்கோ?'' என்று என் கவலையை அதிகப்படுத்தினுள் மனைவி.

ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று முதலியார் வீட்டிலிருந்து ஒரு கட்டுப் புத்தகம் மாடியிலிருந்து தலைச்சுமையாகக் கீழே இறங்கி வந்ததை நானே என் கண்களால் பார்த்தேன். பழைய பேப்பர் வாங்குகிறவன் ஒருவன்தான் எடுத்துக் கொண்டு வந்தான்.

முதலியாரும் நானும் சேர்ந்து படித்த, பக்கக் குறிப்புகள், எழுதி வைத்த எத்தனை இலக்கியங்கள் நிறுவையில் போய்விட்டனவோ? கடவுளுக்குத்தான் வெளிச்சம்!

முதலியார் ஒரு மாதத்துக்குப் பிறகு சௌக்கியமாக மனைவியோடு திரும்பிவந்தார். வந்ததும் வராததுமாக என்னைக் கூப்பிட்டு, எத்தனையோ கோயில் பிரசாதங்களையும், கங்கா ஜலம் அடங்கிய தகரப் பாத்திரத்தையும் கொடுத்தார்.

நான் வீட்டுக்கு வந்த சிறிது நேரத்துக்கெல்லாம் முதலியார் என் வீட்டுக்கு ஓடோடி வந்தார். ''சார்! போயிட்டதே ஸார்! அவ்வளவும் போயிட்டதே! பீரோவில் இருக்கிற புத்தகங்களெல்லாம் காணுமல் போயிட்டதே!'' என்று கூவிப் புலம்பித் தலையிலும் அடித்துக் கொண்டார்.

''என்ன ஆச்சு?'' என்று ஒன்றும் தெரியாதவன் போல் கேட்டேன்.

''என்ன ஆயிருக்கும்? இந்தத் தத்தாரிப் பசங்கதான் அரை காசுக்கு விற்றுத் தொலைச்சிருப்பாங்க. கேட்டா ஒவ்வொருத்தனும் எனக்குத் தெரியாதுன்னு கையை விரிக்கிருனே! கடவுளே! நான் கண்ணுக்குக் கண்ணு வச்சிருந்த புத்தகங்கள்! உங்க கிட்டக் குடுத்திட்டுப் போயிருந்தாலும் பத்திரமா இருந்திருக்கும். நீங்களாவது பிரியமாய்ப் படிச்சிக்கிட்டிருந்திருப்பீங்க. இந்த முட்டாள் பயல்கள் அநியாயமாய்ப் பாழாக்கிப் போட்டான்களே! பணத்தை இழந்தாக்கூட நான் இவ்வளவு கவலைப் பட்டிருக்க மாட்டேன். என் புஸ்தகங்கள் போச்சே! பீரோவிலே ஒண்ணுக்குக் கால் வாசிகூடப் புஸ்தகங்கள் இல்லையே...''

''இனி அழுது என்ன பிரயோசனம்? போனது திரும்புமா, போகுது போங்க. உங்களுக்கு நான் புஸ்தகம் தரேன். வேண்டிய புஸ்தகங்கள் வாங்கி வச்சிருக்கிறேன். ஒண்ணு உட்கார்ந்து படிப்போம்'' என்று முதலியாரைச் சமாதானப்படுத்தினேன்.

நான் எவ்வளவு தேறுதல் சொல்லியும் அவர் துயரம் ஆறவில்லை. புலம்பலும் நிற்கவில்லை. யாத்திரை போய் விட்டு வந்த காலோடு வெகு நேரம் அழுது புலம்பி விட்டுத்தான் தம் வீட்டுக்குப் போனுர்.

3

முதலியாரின் ஜாதக ராசியோ என்னவோ யாத்திரை போய் வந்தும் அவரைப் பிடித்த கஷ்ட காலம் நீங்கவில்லை. அவருக்கு மன நிம்மதி கிட்டவுமில்லை. அதற்கு மாருகப் புஸ்தகங்கள் போய் மனச் சஞ்சலம் தாங்க முடியாத அளவுக்கு அதிகமாகி விட்டது. அதுவே கவலையாக ஆள் உருக் குலைந்து விட்டார். போதும் போதாததற்கு எப்போதும் போல் பிள்ளைகள் சண்டை. எடுத்ததற்கெல்லாம் வீட்டிலே கூச்சல்.

'தாயைப் போல் பிள்ளை; நூலைப் போல் சேலை' என்ற பழமொழியும், 'தக்கார் தகவிலர் என்ப அவரவர் எச்சத்தால் காணப்படும்' என்ற குறளும் எவ்வளவு பொய்யான கூற்றுகள் என்று நான் ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது சொல்லிக் கொள்வது வழக்கமாகிவிட்டது.

முதலியார் அப்புறம் அதிக காலம் உலகத்தில் வாழ விரும்பவில்லை. அவர் மட்டும் என்ன, அவர் பிள்ளைகளும் அவர் உயிர் வாழ்வதை விரும்பவில்லை. அவர் படும் கஷ்டத்தையும், அநுபவிக்கும் மன வேதனையையும் பார்த்து, அவர் சீக்கிரம் இறந்தால் நல்லது என்று நானுமே நினைத்தேன். அவர் உட்பட எல்லோரும் விரும்பாத உயிர் அவர் உடம்பை விட்டு நீங்குவதற்குப் பல மாதங்கள் ஆகிவிட்டன. கடைசியில் முந்தாநாள் இரவு பதினெரு மணிக்குத்தான் அவருடைய ஆவி பிரிந்தது.

முதலியார் இறந்த செய்தி தெரிந்ததும் எனக்குக் கண்ணீர் வரவில்லை. துக்கப்படக் கூட இல்லை. நான் அவர் வாழ்ந்ததற்காகத் தான் அழுதிருக்கிறேனே ஒழிய, செத்ததற்காக அழவில்லை. அவருடைய வாழ்க்கையைவிட அவரது சாவு எவ்வளவோ மேல் என்பதால். இப்பொழுதாவது அவரது ஆத்மா சாந்தியடையும் என்று சந்தோஷப்பட்டேன். சாகும்போது அவர் அருகில் நான் இருந்திராமல் போனேனே என்றுதான் எனக்கு வருத்தம். இவ்வளவு காலம் உயிருக்குயிராய்ப் பழகிவிட்டு அவரை அந்திம காலத்தில் வழியனுப்ப முடியாமல் போய்விட்டது.

அவர் இறந்தது நல்லது என்று நினைத்தாலும், நான் கண்ணீர் விட்டு அழாவிட்டாலும், அவரது மறைவுக்காகவும் பிரிவுக்காகவும் துக்கப்படாமல் என்னுல் இருக்க முடியவில்லை.

'அபூர்வ மனிதர். மூர்க்கர்களிடையே முக்திநெறி நாடியவர். சூழ்நிலையை மறந்து குடும்பக் கவலைகளில் மூழ்கிவிடாமல் தாமரை இலைத் தண்ணீராக ஒட்டியும், ஒட்டாமலும் ஒரு துறவி போல் வாழ்ந்து நாள் தவருமல் திருவாசகம் படித்துக் கொண்டிருந்த ஞானி. வேறெருவராக இருந்தால் இந்தக் கவலைகளையும் வைத்துக் கொண்டு, திருவாசகம் படித்துக் கொண்டிருப்பாரா! இவர் பந்த பாசங்களில் கட்டுண்டு கிடந்தாலும், அகத் துறவு பூண்டுவிட்டவர் என்றுதான் சொல்ல வேண்டும்....' — இப்படி அவரைப் பலவிதமாக நினைத்துப் போற்றிய வண்ணம் இருந்தேன். எந்நேரமும் அவர் நினைவுதான். ஆபீஸில் வேலை ஓடவில்லை.

முதலியார் காலமான இரண்டாம் நாள்; தகனக் கிரியைக்கு மறுநாள் மாலை. நான் ஆபீஸிலிருந்து திரும்பிப் பத்து நிமிஷங்களுக்குள்ளாக முதலியாரின் மூத்த மகன் சம்பத்தும் அவனுக்குச் சாட்சி சொல்ல



பெண்களின்
தியாகம்
அளவிடற்கரியது.
அவர்கள் ஒரு
காரியத்தைச்
சரியானபடி
செய்யத் தொடங்கி
விட்டால்
மலைகளையும்
புரட்டித் தள்ளி
விடுவார்கள்.

— காந்திஜி

✿——✿——✿

அவர்களுடைய உறவினர் ஒருவரும் திடீரென்று என் வீட்டுக்கு வந்தார்கள்.

''உங்ககிட்ட அப்பாவோட புஸ்தகம் இருக்காமே...அவராதி'' என்றான் சம்பத்.

அதற்குள் ''அகராதி'' என்று திருத்தினார் சாட்சி சொல்ல வந்தவர்.

''ஆமா. இருக்கு'' என்று பயந்து கொண்டே சொன்னேன். அவன் கேட்ட தோரணை பயப்படும்படியாக இருந்தது.

''அதைக் குடுங்க'' என்று கையை நீட்டினான் சம்பத்.

''சரி, தர்றேன்.''

''இப்பவே குடுங்க'' என்று சம்பத் அவசரப்படுத்தவும், ''ஏன் அப்படிக் கேட்கிறே? அவர் என்ன குடுக்க மாட்டேன்னு சொன்னாரா?'' என்று அவனைக் கண்டித்துவிட்டு, என்னைப் பார்த்துத் திரும்பினார்.

'என்னிடத்தில் அகராதி இருப்பது இவர்களுக்கு எப்படித் தெரிந்தது? நான் முதலியாரிடம் வாங்கிக் கொண்டு வந்ததை யாருமே பார்க்கவில்லை. பார்த்திருந்தாலும் அந்த இரவு வேளையில் அது அகராதி என்பது தெரிந்திருக்காது. இப்போது இவர்கள் வந்து கேட்கிறார்களே! என்ன அதிசயம்!'

உள்ளே போய் அகராதியைத் தூக்கிக் கொண்டு வந்தேன். அதைச் சம்பத் வாங்கி ஒருதடவை என்ன புஸ்தகம் என்று புரட்டிப் பார்த்தான். இவ்வளவுதானா என்பதுபோல் மூடிவிட்டான். கனமான புத்தகம் என்பதில் அவனுக்கு ஒரு திருப்தி ஏற்பட்டது என்பதை அவன் புத்தகத்தைப் பிடித்திருந்த பிடியும், முக பாவமும் எடுத்துக் காட்டின.

அப்போது சாட்சிக்காரர் கதையை ஆரம்பித்தார்: ''பெரியவருக்கு எவ்வளவு ஞாபக சக்தி என்கிறீங்க! நீங்க வந்துட்டுப் போனீங்களா, இல்லையா? அப்புறம் ஒரு மணி நேரம் வரைக்கும் ஒண்ணும் பேசாமல் இருந்தவர், திடீர்னு பேச ஆரம்பிச்சுட்டார். பிள்ளைகளெல்லாம் கூப்பிட்டுப் பக்கத்திலே வச்சிகிட்டு ''எல்லோரும் சௌக்கியமா இருங்க. நான் போறேன்'' இன்னு சொன்னார். பிறகு பேசலே....''

இந்தச் சமயத்தில் சம்பத் அகராதியோடு போய்விட்டான்.

சாட்சிக்காரர் கதையைத் தொடர்ந்தார்.

''அதுக்கு அப்புறம் ஒரு அரை மணி நேரம் ஆகியிருக்கும். சம்பத்தைக் கிட்டத்திலே கூப்பிட்டார். சம்சாரத்தையும் கூப்பிட்டார். நானும் அங்கேதான் இருந்தேன். கொஞ்சம்கூடக் குழறாமல், தடுமாறாமல், மகன்கிட்ட சொன்னார்: 'ஞானசம்பந்தம்! பக்கத்து வீட்டு அழகிரிசாமிகிட்டே என் அகராதி இருக்கு. யாழ்ப்பாணத்து அகராதி. என் பேரும் அதிலே எழுதியிருக்கும். அப்பவே பத்து ரூபாய்க்கு வாங்கினது. அதை ஞாபகமா வாங்கிப்பிடு...' இப்படியே சொன்னார். ஒரு வார்த்தை கூடப் பிசகலே. பிறகு கொஞ்ச நேரம்தான். பதினொரு மணிக்கு ஆத்மா பிரிஞ்சுட்டது. சாகிற காலத்திலே இவ்வளவு ஞாபகசக்தியோட இவ்வளவு பிரக்ஞையோட ஒரு மனிதன் இருந்திருக்க முடியாது.'

அவர் முதலியாரைப் பாராட்டப் பாராட்ட என்னுள் ஏதோ குமுறிக் கொண்டிருந்தது. வயிற்றெரிச்சல் தீர, ''அபாரப் பிரக்ஞை! அபார ஞாபக சக்தி! மனுஷன் ஆயிரத்திலே ஒருத்தர்!'' என்று பேசித் தீர்த்தேன்.

''இல்லையா அப்புறம்?.... சரி, நான் வரேன்'' என்று சொல்லிவிட்டு அவர் போய் விட்டார்.

உடனே மனைவியைக் கூப்பிட்டேன்.

''பார்த்தியாடி! முதலியார் சமாசாரத்தை இவ்வளவு நேரமும் சொன்னாரே கேட்டியா? என்ன ஞாபக சக்தி! எவ்வளவு பிளானாச் சொல்லிவிட்டு உசிரை விட்டிருக்கிறார் மனுஷன். இந்த அகராதிக்காகத்தான் ஒன்பது மணிக்குப் போயிருக்க வேண்டிய உசிரு, பதினொரு மணிக்கு மேலும் ஊசலாடியிருக்குன்னு இப்பத்தான் தெரியுது. ஞாபகமா வாங்கிப்பிடணுமாம். யாழ்ப்பாணத்து அகராதியாம். அவரோட பேரும் எழுதியிருக்காம்.... இதெல்லாம் அடையாளம். நான் அகராதியை வாங்கல்லே. தொலைச்சிட்டேன்னு ஏதாவது சொல்லி ஏமாத்திட்டா, பத்து ரூபாயை வசூல் பண்ணிப்பிடுன்னு விலையையும் சொல்லிப் பிட்டுப் போயிருக்கிறார். அகராதியை வச்சி ஞானசம்பந்தம் திருவாசகம் பாராயணம் பண்ணப் போறான் பாரு. இப்படியே பழைய பேப்பர்க்காரன்கிட்டே கொண்டு போய்த் தள்ளிட்டு, சிகரெட் பெட்டியோட திரும்பப் போறான்... எல்லாத்தையும் விட ஆச்சரியம் ஞானசம்பந்தம் சாட்சிக்கு ஓர் ஆளையும் கூட்டிக்கிட்டு வந்தானே, அதைச் சொல்லு. அப்பனுக்கு மேலே பிள்ளை; பிள்ளைக்கு மேலே அப்பன்! ஆறன் சொல்றது பொய்யின்னு சொன்னேனேடி! 'தக்கார் தகவிலர் என்ப அவரவர் எச்சத்தால் காணப்படும்'னு வள்ளுவர் சொன்னது பொய்யின்னு சொன்னேனே. அவரா பொய் சொல்வார். மனுஷன் யார் என்கிறது இப்பவில்லே தெரியுது...''

''நீங்க ஏன் இப்படிச் சொல்லிக்கிட்டிருக்கீங்க? ஆயிரமானாலும் தன் சொத்து தன் பிள்ளைக்குத்தான். ஊராருக்குக் குடுக்க மனசு வருமா?'' என்று புத்தி சொன்னாள் என் மனைவி.



நான் சொல்லப் போகும் இந்தக் கதை சிற்பியின் கைவண்ணம் கண்டு மக்களின் வழிபாட்டுக்குரிய தெய்வச் சிலையாக உருப் பெற்றுவிட்ட கல்லின் நிலையை ஒத்தது. ஞாபக மறதி என்னும் பாதாள உலகத்தின் அடித்தளத்தில் அழுந்தித் துடிப்பற்றுப்போய் விட்ட இந்தக் கதையை எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின். சொல்லின் உதவியை வேண்டிப் பெற்று, உலக மேடையிலே உலாவ விட முன்வந்துள்ளேன். நாம் சுடுபாடு காட்டி ஏறிட்டும் பாராது ஒதுக்கிவிட்ட ஒரு பொருள் எப்படித்தான் நமக்கு இவ்வளவு அன்புக் கன்பானதாக ஆகிறதோ? நம்மைத் தவிர வேறு யாரும் அதைப் பார்க்கக்கூடாது என்று கூட எண்ணுகிறோம். எனக்கு இன்றும் என்னுடைய இந்தக் கதையைப் பொறுத்தவரையில் அதேபோன்ற பிடிவாதம்தான். இந்த நிகழ்ச்சியின் வாசனை அடித்தாலே நான் காத தூரம் ஓடி ஒளிந்த காலமும் ஒன்று உண்டு. ஆனால் அதே நிகழ்ச்சியின் ஒவ்வோர் இணைப்பும் என் கருமித்தனத்தின் பெருநிதியாக இப்போது தோற்றம் தருகிறது.

1934–35ல் நடந்த நிகழ்ச்சி இது. என் தந்தை ரங்கூனிலிருந்து திரும்பி வந்து, தமது தொழிலுக்கு நிலையான இடமாகக் கோயமுத்தூரைத் தேர்ந்தெடுத்து அங்கு குடியேறி யிருந்தார். என் சொந்தத் தாயார் நான் சிறுவனாயிருந்தபோதே காலமாகி விட்டாள். எனக்கு மாற்றுத் தாய் உண்டு. ஆனால் அவள் காட்டிய அன்பும் வாஞ்சையும் சொல்லி முடியாது. என் சிறுமையும் பலவீனமும் அவற்றின் ஆழத்தையும் அகலத்தையும் அளந்து இனம் கண்டுகொள்ளும் வாய்ப்பை எனக்கு அளிக்கவே இல்லை. சம்ஸ்கிருதத்தில் எம். ஏ. பட்டம் பெற்று நான் சென்னைக் கல்லூரி ஒன்றில் லெக்சரராகப் பணியாற்ற வந்தேன். இப்படியாக எங்கள் குடும்பச் சக்கரம் ஒரு நிலைபெற்று, தங்கு தடையின்றி ஓடிக் கொண்டிருந்தது.

இந்த நிலையில்தான் ஒரு நாள் பலத்த பூகம்பம் ஒன்று ஏற்பட்டது. அதன் பேயாட்டத்தில் என் ஒழுக்கம் என்னும் ஆலமரம், இப்பொழுதோ அப்பொழுதோ, எப்பொழுது வேர் பறிந்து விழுமோ என்ற நிலையை அடைந்து விட்டது. சாவதா, வாழ்வதா என்ற பிரச்னையே உருவாகி விட்டது. வாழ்க்கை காலசர்ப்பமாகித் தனது ஆயிரமாயிரம் படங்களை விரித்து என்னைத் திண்டித் திணற வைத்தது. ஓடிவிடலாமா என்று நான் எவ்வளவோ எண்ணினேன். ஆனால் ஒவ்வொரு முறையும் என் அறிவு என்னைத் தடுத்து, 'ஓடினாலும்—சாவு தவிர்க்க முடியாதது' என்று எச்சரித்தது. சாவதோ, வாழ்வதோ எதுவானாலும் காலூன்றிய இடத்தில்தான் நடைபெறவேண்டும் என்றும் வலியுறுத்தியது.

என் அன்னையின் பிறந்தகத்திலிருந்து ஒரு விதவை, அன்னையோடு என் வீட்டுக்கு வந்திருந்தாள். இளம் பிராயத்தில், வாழ்க்கையின் சுகபோகங்களை அனுபவிக்க வேண்டிய காலத்தில், கணவனைப் பறி கொடுத்தவள் அவள். அவள் குடும்பமோ பழைய சம்பிரதாயச் சடங்குகளில் ஊறித் திளைத்தது. எனவே, மறுமணம் என்ற யோசனைக்கே இடம் இல்லை. தனது இனிய அடக்க ஒடுக்க

மான சுபாவம், பெரியவர்களிடம் காட்டும் பக்தி — மரியாதை இவற்றின் மூலம் ரஜனி — ஆம், அதுதான் அவள் பெயர். — என் தாயாரின் அன்பையும், ஆதரவையும் வெகு விரைவிலேயே பெற்றுவிட்டாள். என் தாயாரும் அவளைத் தன் பெண்ணைப் போலத் தனது அன்பு நிழலிலேயே வைத்துக் கொள்வது என்று முடிவு செய்துவிட்டாள்.

கோடை விடுமுறையில் நான் ஊருக்குப் போன பொழுது ரஜனி அம்மாவுக்கு இன்றியமையாதவளாக விளங்குவதைக் கண்டேன். இரவு ரஜனியின் துயரக் கதையை எனக்குக் கூறும்பொழுது அம்மா எத்தனையோ முறை தன்னையும் அறியாமல், கண்ணீர் உகுத்துப் புடவைத் தலைப்பினால் துடைத்து விட்டுக் கொண்டதுண்டு.

பெண்மைக்கே உரித்தான இந்த எளிய உதார குணத்தைக் கண்டு என் உள்ளம் பொங்கிப் பூரித்தது. இரவு வெகு நேரம் வரை அந்தச் சீர்மைப் பிரவாகத்திலே மூழ்கி முக்குளித்து மகிழ்ச்சிக் கடலாடிக் கொண்டிருந்தேன். ஆகா! பெண்தான் எத்தனை சீக்கிரம் மகிழ்ந்து விடுகிறாள்! கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் வாமனன் அளந்த மூன்றடி நிலம் கூட அல்லவா பெண்மையின் இந்த மென்மைக்கெதிரே மதிப்பிழந்து விடுகிறது; மெலிந்து மிதக்கத் தொடங்கி விடுகிறது. எப்படித்தான் ஒரு பெண் இப்படி அபூர்வச் சொந்தம் பாராட்டத் தொடங்கி விடுகிறாளோ! உண்மையில் உடல் ஒரு பொருள் அல்ல; பொருட்டும் அல்ல; எல்லாம் மனம்தான் காரணம். அள்ளி அள்ளி மாளாத, எடுக்க எடுக்க வற்றாத அன்புச் சுரங்கம் இந்தத் தாயுள்ளம். மனத்துக்குக் கருமித்தனம் ஏது? பூமி, வானம் — எல்லாவற்றையும் தாண்டிய பொருள்களுக்கெல்லாம்கூட அல்லவா இந்த மனம் எசமானன்? பரந்த மனத்தினிடம் இல்லாமைக்கு இடம் எங்கே?



எம்.வி.பி.வரதாச்சாரி

கோடை விடுமுறை கழிந்ததும், நான் மீண்டும் சென்னை வந்து உபாத்திமைத் தொழிலை மேற்கொண்டேன். ஒரு மாதம் ஓடிவிட்டது. ஒரு நாள் காலை என் தங்கையிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. அதைப் படித்ததும் பூமி பிளந்து அதில் நான் அழுந்திப் போவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. தங்கையின் கடிதப்படி, ''.... மாலையே ரஜனி வாந்தி எடுக்கத் தொடங்கி விட்டாள். இரண்டு மணி நேரத்துக்கெல்லாம் பிரக்ஞையும் இழந்து விட்டாள். வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டு அப்பா அவளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார். ஆஸ்பத்திரியில்தான் எல்லா ரகசியமும் அம்பலமாகியது. அம்மா அவளை எவ்வளவோ பன்னிப் பன்னிக் கேட்டாள். எதற்கும் அவள் மௌனமே சாதித்தாள். தங்கள் பெயரைச் சொன்னபொழுதிலும்கூட அவள் வாய் திறக்கவில்லை.... அப்பா மிகவும் வருத்தப்படுகிறார். தங்களிடம் யாருமே இப்படி எதிர்பார்க்கவில்லை. தாங்கள் என்ன செய்யப் போகிறீர்கள், தீர்மானித்துக்கொள்ளுங்கள். கிராமத்தில் நமது குடும்பத்து நிலை நீரிலிருந்து நிலத்தில் எடுத்துப் போட்ட மீனின் நிலையில் உள்ளது. அம்மாவோ இரவு பகல் எந்நேரமும் அழுத வண்ணமாயிருக்கிறாள். பொறுப்பும் பண்பும் வாய்ந்த தங்களைப் போன்றவர்கள் நடக்கக் கூடாத காரியத்தில் இறங்கியதை நினைத்தால் எல்லோருக்குமே மிகத் துயரமாயிருக்கிறது'' என்னும் செய்தி தெரிய வந்தது.

என் மனத்தில் பேரிடி விழுந்தது போன்றிருந்தது. தந்தை, தாய், தங்கை மூவருக்கும் கடிதங்கள் எழுதினேன். என் நிலையைத் தெளிவுபடுத்தினேன். அன்பின் மீது ஆணையிட்டேன். ஆண்டவனின் மீது பாரத்தைப் போட்டேன். 'இது விஷயத்தில் நான் குற்றமற்றவன் மட்டும் அல்ல; துளியும் கல்மஷ மில்லாதவன்' என்றும் எடுத்துக் கூறினேன்.

ஒரு வாரம் என்ன, இரண்டு வாரங்களுக்குப் பதிலை எதிர்பார்த்தேன். மூவரில் ஒருவர் கூட என் கடிதத்துக்குப் பதில் போடவில்லை. கடைசியில் மனம் கேளாமல் பெட்டி படுக்

கையோடு ஊருக்குப் புறப்பட்டேன். வீட்டுப் படி ஏறிய என்னை, ''இந்த வீட்டுக்குள் நுழைய உங்களுக்கு அம்மா அனுமதி அளிக்கவில்லை'' என்று தடுத்தாள் தங்கை.

''போய் விடுகிறேன். ஆனால் போவதற்கு முன் ஒரு முறை — அதுவும் கடைசி முறையாக—அம்மாவைத் தரிசிக்க விரும்புகிறேன்'' என்றேன்.

தங்கை உள்ளே போக அடி எடுத்து வைப்பதற்கு முன்பாகவே அன்னையின் உறுதியிருந்த குரல் படிக்கட்டைத் தாண்டிக் கொண்டு வந்து என் காதுகளில் ஒலித்தது: ''வீடு வேண்டுமென்றால் வா, தாராளமாக நீ இங்கே வந்து இரு. நாங்கள் நாளைக்கே வேறு வீடு வாடகைக்குப் பார்த்துக் கொண்டு போய் விடுகிறோம்.''

இந்தச் சொற்கள் என் செவியில் விழுந்ததுதான் தாமதம், என் கால்கள் வந்த வழியே திரும்பிவிட்டன. நான் மீண்டும் சென்னை திரும்பினேன். ஒவ்வொரு பொழுதும் கடித்து விழுங்க வருவது போலத் தோன்றியது. உணவு செல்லவில்லை; உறக்கமும் கொள்ளவில்லை. வாழ்க்கையோ திரௌபதியின் துகிலென எதிரே நீண்டு கிடந்தது. எல்லாமே என்னைத் தூக்க முடியாத சுமையாக அழுத்தின. எதிலுமே பிடிப்பற்றுப் போய் வேலையை விட்டேன். இருந்தவற்றை எடுத்துக் கொண்டு பயணம் புறப்பட்டேன், வானத்தைப் போன்று அன்பு வெறிச்சோடிக் கிடந்த என் மனத்தைத் தூக்கிக் கொண்டு எல்லை காண முடியாத இந்த உலகத்தில் வளைய வரலானேன்!

களங்கச் சுமை என் தலையை அழுத்திக் கொண்டிருந்தது. மூட்டை என்னவோ வெற்றுமூட்டைதான்; கனமில்லாததுதான். என்றாலும் மூட்டை மூட்டைதானே? அதை இறக்க வேண்டாமா?


கீதை படித்தேன்; பைபிள் படித்தேன். பக்தர்களின் கதைகளைப் படித்தேன். வழுக்கி வழுக்கிச் சென்ற மனப் பூமிக்கு ஏதோ சிறிது ஆறுதல் கிடைத்தது. ஆனால்; மாசு மறுவின்றித் தூய்மை பெற்றபொழுதிலும் அநீதியை வேரறுக்கும் ஆற்றலும் திடமும் மனத்துக்குக் கிட்டவில்லை. ஆம், அந்த உயர் நிலையைத் தேடிச் செல்ல எனக்கு நூல்கள் பெரிதும் உதவின. 'மனம் என்னும் விளைநிலம்தான் உங்களைக் கடைத்தேற்றவோ அமுக்கவோ செய்கிறது.' — வோர்ட்ஸ்வர்த்தின் இந்த வாக்கு என் வாழ்க்கையில் பலிதமடைவதை நான் கண்டேன். நான் படித்த நூல்கள் நாட்டின் விடுதலைக்கு வாழ்க்கையை அர்ப்பணிக்குமாறு என்னைத் தூண்டின. ஒரு நாள் நான் என் வாழ்க்கையை இதற்கென்று அர்ப்பிக்கும் நோக்கத்துடன் காந்தியடிகளிடம் சென்றேன். என் சங்கல்பத்தைக் கேட்டதும் அவர் புரிந்து கொண்டுவிட்டார், எனது இந்த விருப்பத்துக்குப் பகைப்புலனில் வேறு ஏதோ ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறதென்று. அவர் கேட்டதும் நான் நடந்தவற்றை நடந்தபடி சொன்னேன். அவர் என்னைக் காலிலிருந்து தலைவரை பார்த்தார். பார்த்தவர் ஒரு கணம் பார்த்துக்கொண்டே இருந்தார். பிறகு, ''விதை முதலில் தன் வயலில்தான் விளைய வேண்டும். இதுவே அது தோன்றியதன் உண்மையான பயன். வயலின் கடனைத் தீர்த்த பின் அது உலகத்துக்கும் பயன்படுமானால் தவறான செயல் ஆகாது. ஆனால் வயலில் ஒடுங்கி விட்டது என்பதற்காக வயலின் உரிமையைப் புறக்கணிக்குமானால், அது அறச் செயல் ஆகாது. இப்படி வாட்டமுற்றுப் பலவீனமடைய வேண்டிய தேவையும் இல்லை. ஆண்டவனின் கரங்களால் நடப்பவையெல்லாம் மனிதனின் நன்மைக்காகவேதான். அதோடு நீயோ நீரைப் போல் தூய்மையாயிருக்கிறாய். உனக்குச் சுமை ஏது? பொய்யான அவதூறு எத்தனை நாட்கள்தான் நிற்கும்? அதற்குக் கால் உண்டா?'' என்று கேட்டார்.

தளர்ந்து போன என் ஆத்ம பலத்துக்குப் புத்துயிர் கிடைத்தது போலிருந்தது. மலையாக அழுத்திக் கொண்டிருந்த சுமை என் தலையிலிருந்து இறங்கினாற் போலிருந்தது. ஆனால் முடிச்சுத்தான் முடிச்சாகவே இருந்தது, அவிழ்க்க முடியாதபடி. காந்தியடிகள் ஒரு சொடுக்கில் அதையும் அவிழ்த்துவிட்டார். ''....ஆனால் அவதூறு பொய்யானதாகவே இருந்தாலும் அதையும் அழித்தேயாகவேண்டும். இந்தப் பிரச்னை இன்னும் உனக்கு இருக்கிறது. உண்மை வெளிப்படுமானால்தான் இந்தக் களங்கம் தீரும். உண்மைக்கெதிரே எந்தப் பொய் புனைசுருட்டும் நீடித்து நிற்காது. நீ இந்த நிகழ்ச்சியின் உண்மையான ஆதாரத்தைத் தேடிக் கண்டுபிடி. எது பொய்யோ, அது உண்மைக்கெதிரே தலை கவிழ்ந்து போகுமே தவிர நிமிர்ந்து நிற்காது. எனவே நீ உண்மையென்னும் கயிற்றினைப் பற்றிக்கொள். எங்கள் பக்கத்தில் ஒரு பழமொழி உண்டு. 'உண்மையென்னும் ஓடம் ஒரு நாளும் மூழ்காது' என்பார்கள். உன் முயற்சியில் உண்மையைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டு இறங்கு. இந்த இருளைக் கிழித்துக் கொண்டு நீ அக்கரை சேர்ந்துவிடுவாய்!'' என்றார்.

நான் நேரே கோயமுத்தூருக்கு வந்தேன். வீட்டுக்குப் போனால் ரஜனி ஆஸ்பத்திரியில் இருக்கிறாள் என்றும், அன்று மத்தியானம் அவளுக்கு ஆபரேஷன் நடக்கப் போகிறது என்றும் தெரிய வந்தது. அம்மாவும் அப்பாவும் அங்கேதான் இருக்கிறார்கள் என்பதை அறிந்தேன். நேரே ஆஸ்பத்திரியை அடைந்தேன். அறையில் நுழைந்ததும் அம்மா எதிர்ப்பட்டாள். நான் குனிந்து அவள் கால்களைப் பற்றி வணங்கினேன். நிமிர்ந்து பார்த்தால் அம்மா அழுதுகொண்டிருந்தாள். அவள் இரு கைகளாலும் என் முன் நெற்றியைப் பற்றிக் கொண்டாள். இருவரும் எதுவுமே பேசவில்லை.

மத்தியானம் ரஜனிக்கு ஆபரேஷன் நடந்தது. அவளது வயிற்றில் கிண்ணம் போன்றதொரு கட்டி இருந்தது. விதி செய்த சதி இப்படியாக விலகியது என்றாலும், மனத்தில் விழுந்துவிட்ட முடிச்சு அவிழாமல் அப்படியேதான் இருந்தது.

அம்மா என்னோடும் பேசவில்லை; ரஜனியோடும் பேசவில்லை. ரஜனி உடல் நலம்



இளமையிற் கல்

சமையல் பயிலும் சிறுமி, அவளே வருங்காலக் குடும்பத் தலைவி. கற்றுக்கொடுங்களேன் ஒரு நாள். எவ்வளவு விரைவில் கற்றுக்கொடுக்கிறீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு மேல்.

உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் இப்போதே கற்றுக்கொடுக்க வேண்டிய மற்றொரு பாடம், பற்களையும் ஈறுகளையும் ஒழுங்கு தவறாமல் பராமரிப்பதே. பற்சிதைவும் ஈறு நோய்களும் வராமல் பாதுகாத்த உங்கள் உதவிக்காகப் பிற்காலத்திலே நன்றி செலுத்துவார்கள் அவர்கள்.

போர்ஹான்ஸ் பற்பசை கொண்டு பற்களையும் ஈறுகளையும் பாதுகாத்துக்கொள்ள இன்றே பழக்குங்கள் உங்கள் செல்வங்களை. அது ஒரு பல் வைத்தியரின் தயாரிப்பாகும்; ஈறுகளின் நலனுக்காக டாக்டர் போர்ஹான்ஸ் தயாரித்த விசேஷத் துவர் மருந்துகள் அடங்கிய பற்பசை உலகில் இதுவொன்றே. தவறாமல் உபயோகித்துவந்தால் பளிச்சென்ற வெண் பற்களையும் பசுங்கான உறுதிவாய்ந்த ஈறுகளையும் பெற்று விளங்குவது திண்ணம்.

"CARE OF THE TEETH AND GUMS" என்ற சிறிய வண்ணப் புத்தகத்தை இலவசமாகப் பெற, தபால் செலவுக்காக 10 பைசா தபால் வில்லைகளை இணைத்து எழுதவும்: மானேர்ஸ் டென்ட்டல் அட்வைசரி பியூரோ, தபால் பை நம்பர் 10031, பம்பாய்.



COUPON

Please send me a copy of the booklet
"CARE OF THE TEETH AND GUMS"

Name ....

Address ....

....

பெற்று வீட்டுக்கு வந்த பின் ஒரு நாள் அம்மா அப்பாவிடம் சொன்னாள்: ''ரஜனியை அவளது புக்ககத்துக்கு அனுப்பிவிட வேண்டும் என்று வெகு நாட்களாகவே யோசித்துக் கொண்டிருக்கிறேன். இரண்டொரு நாளில் அவளை அனுப்பிவிட ஏற்பாடு செய்யுங்கள்!''

அப்பா மௌனமாகச் சம்மதம் தெரிவித்தார். அம்மாவின் அந்தப் பேச்சைக் கேட்டபொழுது யாரோ என் மனக் கதவைத் தட்டுவது போல மட்டும் தோன்றியது.

இரவு ஒரு மணி இருக்கும். சட்டென்று ஏனோ என் தூக்கம் கலைந்தது. என் கட்டிலுக்கருகில் ரஜனி நின்று கொண்டிருந்தாள். எனக்குப் பேசத் தோன்றவில்லை. சட்டென்று தங்கையை எழுப்பினேன். அவள் எழுந்து உட்கார்ந்து ஏதோ சொல்ல வாயெடுத்தாள். நான் ஜாடை காட்டினேன். தங்கை, ரஜனி, நான் மூவருமே உட்கார்ந்தோம்.

''ரஜனி! நானே உன்னிடம் பேசவேண்டும் என்றிருந்தேன். உனக்கு என்னிடம் என்ன வன்மம்? எதற்காக என்னை இந்தப் பொய்யான அவதூறுக்கு இரையாக்கத் துணிந்தாய்?'' என்று கேட்டேன்.

ரஜனி எதற்கும் விடையளிக்கத் தயாராக வந்திருப்பவள் போலவே தோன்றினாள். ''நான் யார் பெயரையும் எடுக்கவில்லை. இதென்ன மாயப் பிரபஞ்சம்? நம் தலையை இப்படி உருட்ட வந்துள்ளதே என்று எண்ணினேனே யொழிய எனக்கு எதுவுமே விளங்கவில்லை. அன்றைய நிலையில் நான் என்ன சொல்லுவேன்? ஆனால் இன்று ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த வீடு என்னை விடுமானால், நான் உயிரையே விட்டுவிடுவேன். நான் புக்ககத்துக்கு எந்தக் காரணம் கொண்டும் போக மாட்டேன். அங்கே எனக்கு ஒரு மைத்துனன் இருக்கிறான். நடத்தை சரியில்லாதவன். என்னை எத்தனையோ முறை பலவந்தப்படுத்த முயன்றிருக்கிறான். இங்கே அம்மாவின் நிழலில் வந்த பின் நான் அந்த நரகத்திலிருந்து விடுபட்டிருக்கிறேன். ஆனால் இனி இங்கும் எனக்கு இடம் இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. நான் யாருக்கு என்ன கெடுதல் புரிந்தேன்? என்னை ஒரு வேலைக்காரியாகவோ பணிப் பெண்ணாகவோ கூட வைத்துக் கொள்ள யாரும் விரும்பவில்லையே!'' என்றவள் குமுறிக் குமுறி அழ ஆரம்பித்து விட்டாள்.

''இதையெல்லாம் நீ அம்மாவிடம் அல்லவா சொல்ல வேண்டும்?'' என்றேன் நான்.

அவள் அழுத வண்ணமே, ''உங்களிடம் தான் முதலில் சொல்ல வேண்டும். ஏனெனில் நீங்கள் ஆண்பிள்ளை. நாலு ஊர் சென்று உலகத்தை அறிந்திருப்பவர்!'' என்றாள்.

''அண்ணா! ரஜனி என் ஒப்புதலின் பேரில் தான் இதையெல்லாம் சொல்லுகிறாள்; செய்கிறாள். முழுக்க முழுக்க நான் இதற்குச் சாட்சி. அம்மா உன்னை உயிரைக் காட்டிலும் மேலாக நினைக்கிறாள். உனக்கு ஒரு வேதனை ஏற்பட்டதே என்பதற்காக அம்மா இவளுக்குத் தண்டனை அளிக்க விரும்புகிறாள். இது துளிக்கூட நியாயமில்லை, அண்ணா!'' என்றாள் என் தங்கை.

மறுநாள் நான் அம்மாவோடு உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த நேரம் பார்த்து என் தங்கை பேச்சைத் தொடங்கினாள்.

''விதவையை, அதுவும் இளம் விதவையை வீட்டில் வைத்துக் கொள்வது நல்லதில்லை, ருக்மா! இது மிகவும் இசைகேடான பொறுப்பு'' என்று மறுத்தாள் தாயார்.

''ஆனால், அம்மா! அவளோ அங்கு போகவே அஞ்சுகிறாளே! இந்த நிலையில் நாம் அவளுக்கு உதவி புரிய வேண்டாமா? உன் நிழலிலிருந்து அவளை விலக்கிவிடுவாயானால் பிரச்னை மேலெழுந்தவாரியாகக் கட்டாயம் தீர்ந்துவிடும். ஆனால் உன் மனம் உன்னைத் தண்டிக்காமல் ஒருபொழுதும் விடாது'' என்றேன் நான்.

''வேறு வழி தோன்றாதபோது என்ன செய்வது? நான் அத்தகைய தண்டனையை அநுபவிக்கத் தயார். ஆனால் நீ அநுபவித்த வேதனை இருக்கிறதே. அதுபோல் மீண்டும் நிகழாமல் தவிர்க்கலாம் அல்லவா? நானும் அந்தக் குற்றத்திலிருந்து தப்பலாம் அல்லவா?'' என்றவள், ''என் பேச்சு மட்டும் எடுபடுமானால், நான் என்ன செய்வேன், தெரியுமா? அவளுக்கு மீண்டும் திருமணம் முடித்து விடுவேன். ஆனால் அவள் குடும்பம், அதற்கும் மேலாக அவன் மனம், எல்லாம் இருக்கின்றனவே! களங்கமற்ற இந்தச் சந்திரபிம்பம் படும் துயரை என்னால் காண முடிகிறது என்கிறாயா?'' என்று கேட்டாள்.

''அம்மா! ரஜனியை நான் மணந்து கொள்ள விரும்பினால், எனக்கு அநுமதி தருவாயா?'' என்று நான் எப்படியோ துணிச்சலை வரவழைத்துக் கொண்டு கேட்டுவிட்டேன். அம்மாவின் குளம் கட்டிய கண்கள் எந்தச் சுழற்காற்றில் அடிபட்டு உலர்ந்து வறண்டனவோ? அவள் வியப்புற்ற முகத்தோடு என்னைப் பார்த்தாள். அவளது பெரிய கண்களின் தீவிர ஒளி என் உள் மனம் முழுவதையும் எடை போடுவது போலத் தோன்றியது. அவள் வாய் திறந்து என்னை ஏதும் கேட்கத் தொடங்குவதற்கு முன்பாகவே, ''அம்மா! இந்தக் கேள்வியை நான் உன்னெதிரே ஒரு முறை என்ன, ஆயிர முறைகள் திருப்பிக் கேட்க முடியும். நீ எதிரே இருக்கும்பொழுது என்னை யாருடைய பயமும் எதுவும் செய்துவிட முடியாது!'' என்றேன்.

அம்மாவின் அருட் கரங்களின் நிழலிலே ரஜனிக்கும் எனக்கும் திருமணம் நடைபெற்றது. சில நாட்களுக்கு முன், ஆயிரம் ஆயிரம் தேள்களாக என் இதயத்தைக் கொட்டித் தீர்த்த அந்த மாசுமறுவற்ற களங்கத்தை நான் சிரமேற் கொண்டு விட்டேன், சிறிதும் தயங்காமல். உண்மை என்னும் பற்று நூலைப் பற்றிய பின் பொய் மட்டும் அழியவில்லை; வாழ்வை வாட்டி வதக்கிவந்த எத்தனையோ பயங்களும் பலவீனங்களும்கூட வேரற்றுப் போயின. அதுமட்டுமா? பரிசுப் பொருளாகக் கிடைத்தன நெஞ்சுறுதியும், நேர்மைத் துணிவும். பிறர் துயரம் காணச் சகியாத மனமும் கைகொடுத்து உதவி அத்துயர் தீர்க்கும் உடலும் அப்பரிசுப் பொருள்களின் சின்னங்களே அல்லவா?

நவநீத் – அக்டோபர் 1958

வலியால்
அவதிப்படும் வயதுவந்தவர்களுக்கு

அனாசின்

இரண்டு வில்லைகள் கொடுங்கள்.

குழந்தைக்கு ஒரு வில்லை போதும்.

எத்தனை எளிய முறை!

அறிகுறிகள் : தலைவலி, ஜலதோஷம் மற்றும் ஃப்ளூ, பல் வலி, உடல் வலி, நரம்பு வலி.



அனாசின்


சிறந்தது ஏனெனில் அது
4 வழிகளில்
வேலை செய்கிறது



Registered user: GEOFFREY MANNERS & COMPANY LIMITED

நட்சத்திரப்





ஒரு கிராமத்தின் ஒரு மூலையில் ஒதுங்கி வாழ்ந்த மூன்று அற்பமான ஏழைகள்—ஒரு கிழவியும், ஒரு சிறுவனும், ஒரு சிறுமியும். இவர்கள் வாழ்வில் அவ்வப்போது நிகழ்ந்த சிறு சிறு நிகழ்ச்சிகள், நான் அவற்றை உணர்ச்சிகரமாக விவரிக்க வேண்டிய அவசியமின்றி, அவைகளே உணர்ச்சி மயமாக இருந்தன.

அவர்கள் வாழ்ந்த அந்தச் சின்னஞ் சிறு கிராமம் மிகவும் அழகு வாய்ந்தது. ஒரு கடைத்தெருவும், அதை அடுத்து ஐந்தாறு வீதிகளும் கொண்டது மத்தியப் பகுதி. அப்பகுதியைச் சுற்றிலும் பல குடிசைகள் வீதி என்று சொல்ல முடியாதபடி இறைந்து கிடந்தன. அவற்றுக்கப்பால் பசுமையான வயல்வெளிகளும், அடர்த்தியான காடுகளும் கொண்ட சம வெளிப்பரப்பை மங்கலாகத் தெரிந்த நீல மலைகள் எல்லையிட்டன.

ஊர்க் கோடியில் ஒரு சிறிய கோயில் உண்டு. போதிய பராமரிப்பு இன்றி அது பாழடைந்து கிடந்தது. அதன் பக்கத்தில் மண்ணில் புதைந்து கிடந்த உடைந்த கருங்கல் தூண்களும் அற்புதமான கலைத் திறன் வாய்ந்த தேர்ச் சக்கரங்களும் சிறுவர்கள் பிரியமாக விளையாடுவதற்குப் பயன்பட்டு வந்தன. சற்றுத் தூரத்தில் கொஞ்சம் மேடாக முட்டிக்

கொண்டிருக்கும் ஒரு மொட்டைப் பாறையின் ஆதரவில், பனை ஓலைகளும், தென்னங் கீற்றுக்களும் சாக்குத் துண்டுகளும் பிணைந்து உருவாகிய ஒரு சிறு குடில். அதில்தான் அவர்கள் வசித்து வந்தார்கள்.


அவர்கள் எப்படி எப்போது அங்கு வந்து சேர்ந்தார்கள் என்பதெல்லாம் இட்டவட்டமாகக் கூற முடியாத விவகாரங்கள். அக்கம் பக்கத்தில் இருந்த செடி கொடிப் புதர்கள் எல்லாம் எப்படி முளைத்து மண்டிக் கிடந்தனவோ, அப்படி.

அந்தக் கிழவிக்கு ஐம்பது வயதுக்கும் கொஞ்சம் அதிகமாக இருக்கலாம். குள்ளமாகவும் ஒல்லியாகவும் இருப்பாள். முதுகு சற்று வளைந்திருக்கும். கண்களுக்குக் கீழ் எலும்புகள் புடைத்துக் கொண்டிருந்தாலும் முகம் விகாரமாகத் தோன்றுவதில்லை. வயதைக் கடந்த முதுமை. அவளுக்கு ஒரு பெயர் இருந்ததா என்பதே யாருக்கும் தெரியாது.


அந்தச் சிறுவனுடைய பெயர் நீலமேகம். நீலா என்று அழைப்பார்கள். அவனுக்கு எட்டு வயது இருக்கும். சிறுமியின் பெயர் சூடாமணி. அவளை அவன் மணி என்று அழைப்பான். அவளைவிட அவன் இரண்டு வயது இளையவன்.

பாட்டி விடியற்காலையில் எழுந்து வயல்வெளி ஓரமாக இருந்த குறுகிய வாய்க்காலில் குளித்துவிட்டுப் பிழைப்புக்காக வெளியே சென்றால் மாலையில்தான் வருவாள். அதுவரை அவர்கள் இருவரும் கோயில் மண்டபத்தில் விளையாடுவார்கள்; அல்லது படுத்துக் கிடப்பார்கள்.

கோயிலுக்குச் சிறிது தூரத்தில் தெற்கு நோக்கிச் செல்லும் விசாலமான சாலை ஒன்று உண்டு. பிரம்மாண்டமாகத் தழைத்து நின்ற ஆலமரங்கள் சாலை நெடுக நெருக்கமான பந்தல் அமைத்திருந்தன. அந்தச் சாலையில் அரை மைல் தூரம் நடந்து சென்றால் ஆற்றை அடையலாம். அது நிலையற்ற சலன புத்தியுள்ள ஒரு சிற்றாறு. விவசாயிகள் அதை நம்புவதில்லை. அகலம் கொஞ்சம் அதிகமாக இருந்தாலும் அது வெறும் மணல் வெளியாகத்தான் காட்சியளிக்கும். அந்த ஆற்றைப் போய்ப் பார்க்க வேண்டும் என்பது சிறுமி சூடாமணியின் நெடுநாளைய ஆசை. தினமும் ஒரு முறையாவது தன் அண்ணனிடம் கேட்டு வந்தாள். அன்று மாலையும் வெய்யிலின் கடுமை சற்றுத் தணிந்த பிறகு அவள் மெல்ல ஆரம்பித்தாள்.



பூ



நெடுங்கதை

வே. கோவிந்தராஜன்



''டேய்....நீலா! டேய்.... ஆத்துக்குடா...டேய்....!''

மண்டபத் தூணில் சாய்ந்து கொண்டு தீப்பெட்டிகளையும், நூலையும் வைத்துக் கொண்டு மும்முரமாக என்னவோ செய்து

கொண்டிருந்த நீலா மெள்ள எழுந்து அவள் அருகில் வந்து அவள் தலையில் நறுக்கென்று குட்டினான்; காதைப் பிடித்துத் திருகினான்.

''இனிமேல் டேய்னு சொல்லுவியா....ம் சொல்லுவியா?....''

''இல்லேடா டேய், சொல்லலேடா.... காதை விடுடா, டேய்...''

அவன் காதை விட்டுவிட்டான். அவள் திரும்பவும் 'டேய்' என்று சொல்வதை அவன் கிரகிக்கவில்லை. அவன் கவனம் தீப் பெட்டிகளில் மூழ்கிவிட்டது. அவள் காதைத் தேய்த்து விட்டுக் கொண்டாள்.

சிறிது நேர மௌனத்துக்குப் பின் மீண்டும் ஆரம்பித்தாள். ''நீலா!....நீலா அண்ணா! என்னை ஆத்துக்குக் கூட்டிப் போறேன்னு ஏமாத்திக்கிட்டே வர்றியே, கூட்டிட்டுப் போகமாட்டியா...?''

இப்போது 'டேய்' என்று சொல்லாமல் முன்னெச்சரிக்கையாகப் பேசினாள். அவன் சலிப்புடன் நிமிர்ந்தான்.

''அட, மணிக்குட்டி! ஆத்துக்குப் போனால் இந்தப் பாட்டி கத்துமே!''

''பாட்டிகிட்டே சொல்ல வேண்டாண்டா... சொல்ல வேண்டாம் அண்ணா!''

நீலா சிறிது நேரம் பேசாமல் இருந்தான். பிறகு தீப்பெட்டிகளையும் நூலையும் சுருட்டிக் கால் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டு வீட்டுக் கதவின் கம்பியை நன்றாக மடக்கி முறுக்கி விட்டான். அந்தக் கம்பிதான் அந்த வீட்டுக்குப் பாதுகாப்பு. அதற்கு மேல் பாதுகாப்புத்தான் எதற்கு?

''நான் ஆத்துக்குப் போறேன்... வர்றவங்க வரலாம்....'' என்று கூவிக்கொண்டே அவன் திடீரென்று அந்தச் செம்மண் சாலையின் புழுதி புகையாகக் கிளம்ப ஓட்டமாக ஓடினான்.

''டேய்.....டேய்....'' என்று கத்திக் கொண்டே அந்தக் குட்டைப் பெண் குருவி வால் போன்ற தன் சடை குலுங்க அவன் பின்னாலேயே 'குடு குடு' வென்று ஓடினாள்.

ஆற்று மணலில் கால் புதையப் புதைய நடப்பதில் மணிக்குட்டிக்கு அடக்க முடியாத மகிழ்ச்சி. ஓடி ஓடிப் பொத்தென்று விழுந்து கும்மாளமிட்டாள். ஆற்றின் ஓரத்தில் முப்பதடி அகலத்துக்குக் கணுக்கால் அளவு தெளிந்த கதகதப்பான நீர் மாலை வெய்யிலில் பொன்னிறமாக மின்னியவாறு சலசலவென்று ஓடிக் கொண்டிருந்தது. தண்ணீரை அள்ளி அள்ளி வீசி அது குண்டு குண்டாய்ப் பளபளத்துக் கொண்டே கிழே விழுந்து மறைவதைக் கண்டு அவளுக்கு வியப்புத் தாளவில்லை.

''சரி, தண்ணீரில் ஆடியது போதும். இந்த டெலிபோனைப் பிடி!'' என்று கூறிக் கொண்டே நூல் முடிந்த தீப்பெட்டி ஒன்றை அவளிடம் கொடுத்தான் நீலா. நான் தண்ணீருக்கு அக்கரையிலே நின்னுக்கிட்டு பேசுவேன். நீ இதைக் காதில் வச்சுக் கேளு.''

முதலில் அவளுக்குப் புரியவில்லை. அவன் அவளுக்கு நன்றாக விளக்கிச் சொல்லி நூலின் வழியாகத் தான் பேசுவது அவளுக்குக் கேட்கிறதா என்று சொல்ல வேண்டும் என்று கூறினான். நீரின் இந்தப் பக்கம் அவளும், அந்தப் பக்கம் அவனும் நின்றார்கள். இருவரையும் இணைத்த மெல்லிய நூலுக்கு அடியில் அந்தச் சிற்றாறு உற்சாகமாக ஓடிக் கொண்டிருந்தது. அவன் டெலிபோனில் பேசினான்.

''ஹலோ.... நான் நீலமேகம் பேசறேன். சிலோன்லே இருந்து பேசறேன்...''

''என்னடா சொல்றே? சத்தமாகச் சொல்லு!'' என்று அவள் டெலிபோனைக் கையில் வைத்துக் கொண்டு கத்தினாள்.

''ஹலோ... ஹலோ.... சிலோன்லேருந்து நீலமேகம் பேசறேன். இந்தியாவிலிருந்து யார் பேசறது?''

சிலோனுக்கும் இந்தியாவுக்கும் இடையில் கடலாக ஓடுகிறோம் என்று பெருமை கொண்டாற்போல் ஆற்று நீர் கொஞ்சம் வேகமாக ஓட ஆரம்பித்தது. வெள்ளம் சிறுகச் சிறுகப் பெருகிற்று. சூடாமணி நின்ற இடத்தையெல்லாம் தாண்டிப் பரவிற்று.

''ஹலோ... ஹலோ.... சிலோன்லேருந்து நீலமேகம்....''

''டேய் தண்ணி வருதுடா, டெலிபோனை நிறுத்து.''

''ஹலோ..ஹலோ...சிலோன்லேருந்து..''

தண்ணீர் முழங்கால் அளவு வந்துவிடவே தொப்பென்று ஒரு முறை விழுந்து எழுந்து நின்றாள் சூடாமணி. டெலிபோன் தொடர்பு அறுந்து போன கோபத்தோடு அவளைப் பார்த்த நீலா தண்ணீர்ப் பெருக்கின் அபரிமிதமான வேகத்தைக் கண்டு பயந்து போய்க் கூச்சலிட ஆரம்பித்தான்.

''மணி... ஓடிப் போ, ஓடிப் போ...இங்கே வராதே, ஓடிப்போ!''

பயங்கரமான அவன் கூச்சலைக் கேட்டு மணி பதறிப் போனாள். ஏதோ ஆபத்து என்று புரிந்து கொண்டதும் உதவியை நாடும் இயற்கை உணர்வோடு அவள் தன் அண்ணனை நோக்கி ஓட முற்பட்டாள்.

''மணி வராதே, ஓடிப்போ...ஓடிப்போ..'' என்று கத்திக் கொண்டே அவன் எதிர்க் கரையை நோக்கி ஓட முற்பட்டான்.

''ஐயோ, என்னை விட்டுட்டுப் போகாதேடா, போகாதே அண்ணா நீலா அண்ணா..''

தண்ணீர் அவள் மார்பளவு வந்துவிட்டது. அவள் மேலும் ஆழத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். வெறி பிடித்தவன் போல் ஓடிய நீலா நின்று ஒரு கணம் நிதானித்தான். பிறகு மணியை நோக்கித் திரும்பி வர ஆரம்பித்தான். வெள்ளத்தின் வேகம் அவன் காலை இழுத்தது. ஆயினும் அவன் நிதானமாக ஒரே திடத்துடன் நடந்து வந்தான். ''இங்கே வராதே, ஓடிப்போ!'' என்று அவன் வாய் விடாமல் அரற்றிக் கொண்டிருந்தது. எப்படியோ அவளை நெருங்கிவிட்ட சமயத்தில் நீரின் வேகத்தால் அவள் சட்டென்று மூழ்கி மறைந்து விட்டாள்.

நீலா ஓவென்று அலறினான். ''ஐயோ, மணி, செத்துப் போயிடாதே... மணி...''

நுரைத்து ஓடிய நீர்ப்பரப்பு அவன் எதிரே ஊஞ்சல் போல் மெள்ள அசைவதாகத் தோன்றியது. அதில் மணியின் தலையைக் காணோம். அவன் கால் போன வழியே ஓடினான். ஓரிரு விநாடிகள்தான். சற்றுக் கரையோரமாக அவள் 'சளக்'கென்று நீரிலிருந்து எழுந்து நின்று கொண்டு இரண்டு

கைகளையும் வீசியவாறு தடுமாறினாள். ஒரே பாய்ச்சலாகச் சென்று அவள் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு, கரையை அடைந்தும் நிற்காமல் ஓடினான் நீலா. சாலையை அடைந்து நிச்சயமாக அவ்வளவு தூரம் தண்ணீர் வர முடியாது என்று தெரிந்த பிறகே அவன் ஓட்டம் குறைந்தது. மணி தேம்பிக் கொண்டு நின்றாள். ஓடியதில் அவளுக்கு மூச்சு வாங்கியது. குளிராலோ, பயத்தாலோ அவள் உடல் வெடவெடவென்று நடுங்கிற்று. அவள் முகத்தைத் துடைத்து விட்டு முதுகைத் தடவிக் கொடுத்தான் நீலமேகம். அவன் விரல்களும் நடுங்கின.

அவளுக்குக் கொஞ்சம் நிதானம் வந்ததும், ''இந்தாடா!'' என்று தன் கையில் அதுவரை விடாமல் பிடித்திருந்த தீப்பெட்டியை அவனிடம் கொடுத்தாள். அவன் திடுக்கிட்டு அவற்றைப் பார்த்தான். மற்றொரு தீப்பெட்டி அந்த வெள்ளத்தில் எங்கே போயிற்றோ! ''என்னை விட்டுட்டுப் போகாதேடா....'' என்று அவள் கெஞ்சிய வார்த்தைகள் அவன் காதில் ஒலித்துக்கொண்டே இருந்தன. அவன் கண்களில் நீர் முட்டியது. மணியின் கையைப் பற்றியவாறு அவன் வீட்டை நோக்கி நடந்தான்.

அவர்கள் வீட்டை அடையும்போது இருள் பெய்ய ஆரம்பித்து விட்டது. வீட்டுக்கு வெளியே திறந்த வெளியில் சுள்ளிகளை எரித்துக் கிழவி சோறாக்கிக் கொண்டிருந்தது தெரிந்தது.

''பாட்டி வந்திருச்சி... ஐய்யய்யோ!'' என்றாள் மணி.

''ஆமாம், நெருப்புக்குப் பக்கத்திலே காலை நீட்டி உட்கார்ந்திருக்கு, கொள்ளிவாய்ப் பிசாசு மாதிரி'' என்றான் நீலா. அவர்கள் அருகில் நெருங்கியதும் பாட்டி ஏதோ மெல்லிய குரலில் ராகமிட்டுக் கொண்டிருந்தது கேட்டது.

''பாட்டி பாட்டுப் பாடுது!'' என்றாள் மணி.

''இல்லை; அழுவுது!'' என்றான் நீலா. ''சில சமயத்திலே இப்படித்தான் ராகம் போட்டு அழும்.''

பாட்டா அல்லது அழுகையா என்று நிர்மானிப்பதற்கு முன் அது நின்று போயிற்று. திருதிருவென்று எரிந்த தீயில் கிழவியின் முகம் மஞ்சளாகப் பளபளத்தது. நெற்றியிலும் கன்னத்திலும் ஓடிய கோடுகள் தழலின் அசைவில் நடுங்குவது போலத் தோன்றின. உலர்ந்து போய்க் கழுத்து வரை தொங்கிய செம்பட்டைத் தலைமயிரை ஒரு சிறு முடி போட்டுக் கட்டியிருந்தாள். நீலாவும் மணியும் அவள் பக்கத்தில் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள்.

கிழவி திடீரென்று விழித்துக் கொண்டவள்போல், ''ஏண்டா, சங்கரசாதிப் பயலே! ஒழிஞ்சு போவுறதுதானே, ஏன் வந்தே?'' என்று கத்தினாள். அவளுடைய குரல் கரகரப்பாக ஆணின் குரலைப் போல் இருக்கும். கண்களை இடுக்கி அவள் மணியைப் பார்த்தாள். ''அடிப் பாவி, துடைகாலி, இப்படி நனைஞ்சு போய் வந்திருக்கே! ஆத்துக்குப் போனியா?'' என்று கேட்டு அவளை அடிக்க ஓடி வந்தாள். மணி தப்பி ஓடிவிட்டாள்.

சிறிது நேரம் சுள்ளிகளை உள்ளே தள்ளுவதும் வெளியே இழுப்பதுமாக அடுப்பருகே இருப்புக் கொள்ளாமல் உட்கார்ந்திருந்தாள் கிழவி. பிறகு மடியிலிருந்து வேக வைத்த வள்ளிக்கிழங்கை எடுத்து, இரண்டாகப் பிட்டு, ஒன்றை மணியிடமும் மற்றொன்றை நீலாவிடமும் கொடுத்தாள். அதை வாங்கிக் கொண்ட மணி சட்டென்று பாட்டியின் மடியில் கைவிட்டு மற்றொரு கிழங்கை எடுத்துக் கொண்டு ஓடினாள்.

''அதைக் குடுத்திடு.... ஏ, பெட்டை நாயே! அதைக் குடு, இப்படி!'' என்று கையை வீசியவாறு கத்தினாள் கிழவி.



''பாட்டி.... பாட்டி.... இதையும் எடுத்துக்கிறேன், பாட்டி!'' என்று கூத்தாடிய அந்தக் குள்ளமான பெண்ணைப் பார்த்ததும் கிழவிக்குச் சிரிப்பு வந்தது. ''நின்று நாசமாய்ப் போ, பெட்டைச் சனியனே!'' என்று சபித்தவாறு மற்றொரு கிழங்கை எடுத்து நீலாவிடம் தந்துவிட்டு மடியைத் தட்டிவிட்டுக் கொண்டாள். காய்ந்து மக்கிப் போன குச்சிகள் நன்றாக எரிந்ததால் பானையிலிருந்து சோறு பொங்கி வழிந்தது.

சாப்பிட்டு விட்டுப் படுக்கும் வரை யாருமே பேசவில்லை. சூடாமணி படுத்தவுடன் அயர்ந்து தூங்கி விட்டாள். இறுக்கமாகப் பின்னி வளைந்திருந்த சடையில் இலேசாக ஈரம் கசிந்தது. அதை அவிழ்த்து விட்டுத் துணியால் அழுத்தித் துடைத்தான் நீலா. விழித்துக் கொண்ட மணி, ''நான் அறுக்கலேடா டெலிபோனே'' என்று இன்னும்

ஏதோ முணு முணுத்துக் கொண்டே மீண்டும் தூக்கத்தில் ஆழ்ந்து போனாள்.

வெளியே நிலவொளி மங்கலாகப் பரவி யிருந்தது. வீட்டுக்கு முன்னால் சாணத்தால் மெழுகிச் சுத்தமாக இருந்த இடத்தில் நீலா காலை நீட்டிச் சாய்ந்து கொண்டான். சுமார் பத்தடி தூரத்தில் இருந்த ஒரு சிறிய குப்பை மேட்டில் கிழவி விறைப்பாக உட்கார்ந்திருந்தாள்.

அவனுக்குச் சிரிப்பு வந்தது. ''பாட்டி அந்தக் குப்பைமேட்டில் உட்கார்ந்து கிடக்கும்......''

அதற்குக் காரணம் உண்டு. ஏதோ ஆடு மாடுகள் வராமல் காவல் காப்பதுபோல் அவள் பேய் பிசாசுகளுக்குக் காவல் இருப்பாள். அதற்காக ஒரு பழைய தாயத்தை அந்தக் குப்பை மேட்டில் அவள் புதைத்து வைத்தது நீலாவுக்குத் தெரியும். அதோடு ஒரு பிய்ந்து போன செருப்பும் அங்கே எப்போதும் இருக்கும். செருப்பைக் கண்டால் பேய் நெருங்காதாம்!

''பாட்டி!'' என்று அழைத்தான் நீலா.

''அட, சங்கரசாதிப் பயலே.... இன்னும் தூங்கலையா, நீ?'' என்று எரிச்சலுடன் தன் கரகரப்பான குரலில் கத்தினாள் கிழவி. அவன் தூங்காததால் தான் சுருட்டுப் பிடிக்க முடியவில்லையே என்ற ஆத்திரம் அவளுக்கு. ஓர் ஆண்பிள்ளை எதிரில் சுருட்டுப் பிடிப்பதை அவள் ஒரு பெரிய அவமானமாகக் கருதினாள்.

''மணிக்குட்டிக்கு ஜுரம் வந்தாலும் வந்துடும் பாட்டி.''

''எல்லாம் உன்னாலேதான்.... நீ செய்யுற வேலைதான்.... அவளை ஏன் ஆத்துக்கு இழுத்துக்கிட்டுப் போனே? நான் தினமும் என்ன சொல்லிட்டுப் போறேன்? ஆத்துக்குப் போகாதீங்கன்னு தலையிலே அடிச்சிக்கிறேனா! எமனாட்டம் ஆறுச்சே! வருஷா வருஷம் காவு வாங்காமல் விடாது....''

சட்டென அவள் குரல் தழுதழுத்தது. இலேசான கீச்சுக் குரலில் அழுகை பொங்க அவள் கூறினாள். ''அவளையும் அதுதான் காவு கொண்டுது.... அவதான் உங்கம்மாவை.... உசுரோடு வாரிக் கொடுத்திட்டு நிற்கிறேன். உங்கப்பன் வடக்கே ஓடிப்போயிட்டான். உங்க ரெண்டு பேரையும் என் தலையில் கட்டிட்டுப் போனாளே, மகராசி.

''என்னாலே முடிஞ்ச மட்டும் பாடுபட்டேன். உங்களுக்கு ஆக்கிக் கொட்டினேன்.... ராக்கண்ணு முழிச்சு, பகக்கண்ணு முழிச்சு உங்களை வளர்த்தேன். என் சக்தியும் தீர்ந்து போச்சு. கண்ணு தெரியலே. எந்த வீட்டுக்குப் போனாலும் வாண்டான்னு சொல்லுதுங்க. நான் விளக்கின பாத்திரம் சுத்தமாக இல்லையாம்..... ராங்கிக்கார நாயி....நான் கூட்டறது சரியில்லையாம்..... நான் நெல்லு குத்தும் போது உரலையே உடைக்கிறேனாம். ராங்கிக்கார நாயி.... இப்ப கொஞ்சம் கண்ணு என்னவோ மங்கலாப் போச்சு தான். அதுக்கு நான் என்ன பண்ணுவேன்? என்கிட்டே வஞ்சனை இல்லே.''

''உனக்கு வயசு என்ன பாட்டி ?''

''என்னமோ ஆச்சு. ஆரு கண்டா ? நாற்பது வயசிலே சாளேசுவரம் வருமாம். எனக்கு இப்பத்தான் வந்திருக்கு போலிருக்கு. விடிஞ்சா என்ன செய்யறதுன்னு தெரியலே. மத்தவங்க தாட்சிண்யத்தை எத்தனை நாள் எதிர்பார்க்க முடியும்? நீ தூங்கு. சாவுவரலே.''

''உனக்குச் சாவு வரலே. எனக்குத் தூக்கம் வரலே !''

''ரெண்டும் ஒண்ணுதான்டா, வனக் குரங்கே ! எழுந்து உள்ளே போய்ப் படு.''

''நான் வனக் குரங்கு. நீ கிழக் குரங்கு!''

பாட்டி ஒரு கம்பை எடுத்து 'டக், டக்' கென்று தரையில் தட்டினாள். வீட்டுக்கு முன்னாலும் குப்பைமேட்டுக்குஅருகிலும் அதே போல் நான்கு முறை தட்டியவாறு சுற்றி வந்தாள்.

''இது என்ன புது மாதிரி மந்திரம் ? சீக்கிரம் சொல்லு.... கிழப் பிசாசே !''

''வாயை மூடு! மல்லிகைப் பூ வாசனை வருது பார்த்தியா ?''

''ஆமாம்! ஆற்றங்கரை நந்தவனத்திலேயிருந்து வருது. காற்றடிக்கிறதாலே வருது.''

''ஆமாம்! அதேதான் — இந்த வாசனைக்குப் பூச்சிப் பொட்டு வரும். தட்டிச் சந்தடி செய்தால் ஓடிப் போகும்.''

''பாம்பு வருமா ?''


''ஐயோ, ஐயோ, ராவுலே அந்தப் பேரைச் சொல்லலாமா! மூட ஜென்மமா இருக்கியே! உள்ளே போய்ப் படுன்னாலும் அசைய மாட்டேங்கிறே !''

நீலா எழுந்தான். அடிவானத்திலிருந்து கொஞ்சம் உயரே வந்திருந்த குறைச் சந்திரன் இப்போது கீழே இறங்க ஆரம்பித்திருந்தது. கள்ளிகள் எரிந்த இடத்தில் வெண்மையான சாம்பலுக்கிடையே ஓரிரு நெருப்புத் துண்டுகள், கற்றாழையில் ரோஜா மலர்ந்தது போல் தென்பட்டன. கிழவி கையில் கம்புடன் குப்பைமேட்டில் உட்கார்ந்து கொண்டாள்.

''நீ சும்மா வீட்டிலேயே கிட, பாட்டி! நான் ஏதாவது வேலைக்குப் போகிறேன்'' என்றான் நீலா.

அவன் அப்படிக் கூறியது அவளுக்குப் பெரிய ஆதரவாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. அவனால் என்ன செய்ய முடியும் என்று யோசித்தாள். எதுவும் நடக்கக்கூடியதாக மனசுக்குப் படவில்லை. இதற்கு முன்பு இரண்டு வருடங்கள் அவன் பள்ளிக்குச் சென்று ஏதோ படித்தான். அதற்கு மேல் ஏனோ அவன் படிக்கவில்லை. அவளும் அதைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை. அதெல்லாம் தேவையில்லாத ஆடம்பரங்களாகத்தான் அவளுக்குத் தோன்றின. அவன் பள்ளிக்குப் போகாததால் அவள் மணியைத் தன்னோடு அழைத்துப் போகாமல் வீட்டிலேயே விட்டு விட்டுப் போக முடிந்தது.

'என்ன செய்வது?.....' என்று வெகு நேரம் யோசித்துக் கடைசியில் மூவருமாகச் சேர்ந்து இலை தைத்து விற்கலாம் என்று தீர்மானித்தாள் கிழவி. என்னதான் யோசித்தும் வேறெதுவும் சரிப்பட்டு வரவில்லை. 'சிறு மூலதனம் இல்லாமல் எதையும் செய்ய


ARYAN
ARYAN TOOTH BRUSH
NYLON
DE-LUXE
ஆரியன்
டீ-லக்ஸ் மற்றும்
ஸ்டாண்டார்ட்
இவையிரண்டும்
தம்ப் க்ரிப்புடன்
கிடைக்கின்றன.
கைகள்: அடல்ட், ஜூனியர் மற்றும் பேபி
அமைப்புகள்: ஹார்ட், மீடியம் மற்றும் சாஃப்ட்
இயற்கை பிரிஸில்களுடனும் கிடைக்கின்றன
மிகவும் சிறப்பாகக் கழுவலாம்
நீண்ட காலம் உழைக்கும்
இந்தியாவின்
தலைசிறந்த
பிரஷ்கள்
Aryan
ஆரியன்
ஷேவிங் பிரஷ்
அபரிமிதமான நுரைக்கும்.
சுத்தமான முகக்ஷவரத்திற்கும்.
தேர்ந்தெடுக்க பற்பல ரகங்கள் உள்ளன
திறமைக்கும் நேர்த்திக்கும் சின்னம்!


அழகிய சுருண்ட
கூந்தலின் இரகசியம்
காஸ்டரோல்!
சுகந்த காஸ்டர் ஆயில்
Castorol
தி
கல்கத்தா கெமிகல் கோ லிட்.
கல்கத்தா-29
தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை-1

பாலுஸேரி பெனிபிட் சிட்பண்ட் பிரைவேட் லிட்.

(நிறுவியது : 1947)

தலைமைக் காரியாலயம் &
ரிஜிஸ்டர்டு ஆபீஸ் :
பாலுஸேரி பில்டிங்
3, சிங்கராச்சாரி தெரு
சென்னை – 5

கிளைகள் :
புது டெல்லி –1, 3 & 5
பெங்களூர் – 9
கல்கத்தா – 29
பம்பாய் – 1 & 22

ஏலச் சீட்டுகள் – 1966 அக்டோபர் ஸீரிஸ்

பம்பாய் கிளைகள்

கிங்ஸ் சர்க்கிள் கிளை

வீணா விஹார்
(ஷண்முகானந்தா சபா அருகில்)
17-A, பிளாங் ரோடு, பம்பாய்-22 D. D.
போன் : 471455 - தந்தி : GROWRICH

ஏலத் தேதி : 9-10-66
(குறுகியகால சீட்டுகள்)
சேரக் கடைசி தேதி : 8-10-66

ஏலத் தேதி : 8-10-66
(நீண்டகால சீட்டுகள்)
சேரக் கடைசி தேதி : 6-10-66

வகுப்பு	மாதச்சந்தா	மாதங்கள்	சீட்டுத்தொகை
குறுகியகால சீட்டுகள்			
A	200/-	25	5000/-
B	100/-	25	2500/-
C	50/-	25	1250/-
F	25/-	25	625/-
G	20/-	25	500/-
நீண்டகால சீட்டுகள்			
C	200/-	50	10000/-
A	100/-	50	5000/-
B	50/-	50	2500/-
D	20/-	50	1000/-

கிங்ஸ் சர்க்கிள் கிளை :
வேலை நேரம் : காலை 8 முதல் 10-30 மணி வரை; மாலை 4 முதல் இரவு 8 மணி வரை
வார விடுமுறை நாள் - வெள்ளி

போர்ட் (Fort) கிளை

சத்னம் மான்ஷன் முதல் மாடி
245, பி. டிமெல்லோ ரோடு
(G. P. O. அருகில்) பம்பாய் - 1 B. R.
தந்தி : EVERMANS

ஏலத் தேதி : 22-10-66
(குறுகிய&நீண்டகால சீட்டுகள்)
சேரக் கடைசி தேதி : 21-10-66
(குறுகிய&நீண்டகால சீட்டுகள்)

வகுப்பு	மாதச்சந்தா	மாதங்கள்	சீட்டுத்தொகை
குறுகியகால சீட்டுகள்			
B	100/-	25	2500/-
C	50/-	25	1250/-
F	25/-	25	625/-
G	20/-	25	500/-
நீண்டகால சீட்டுகள்			
A	100/-	50	5000/-
B	50/-	50	2500/-
D	20/-	50	1000/-

போர்ட் (Fort) கிளை :
வேலை நேரம் : காலை 11 முதல் மாலை 6 மணி வரை
வார விடுமுறை நாள் - ஞாயிறு

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

பாலுஸேரி மூலம் சேமிப்புகளைப் பெருக்கி பயனடையுங்கள்

முடியாது. அல்லது பாடுபடுவதற்காவது சக்தி இருக்க வேண்டும். இலை தைத்து விற்பது சுலபம்..... மூலதனம் வேண்டாம். சாலையிலிருந்த ஆலமரங்களிலும் அக்கரையிலிருந்த பலாமரங்களிலும் இலைக்குப் பஞ்சமில்லை. நீலா கொண்டு வந்து சேர்க்க மாட்டானா....'

அவள் எதிர்பார்த்ததற்கு மேலேயே நீலா உபயோகமாயிருந்தான். தேவையான இலைகளை அவன் எப்படியும் கொண்டு வந்து சேர்த்தான். ஈர்க்குச்சிகளைக் கொண்டு பாட்டி வட்ட வட்டமான இலைகளைத் தைத்தாள். கண் பார்வை மங்கி விட்டதால் தடவித் தடவி அவள் தைப்பதற்கு வெகு நேரமாயிற்று. நீலா சீக்கிரத்திலேயே இலை தைக்கக் கற்றுக் கொண்டான். நாளாவட்டத்தில் பாட்டி ஒப்புக்கு உட்கார்ந்திருந்தாளே தவிர அவனே எல்லா இலைகளையும் தைத்து வந்தான். சிற்றுண்டிசாலைகளுக்கு எப்படியும் இலை தேவைப்பட்டது. நீலா இரண்டு மூன்று கடைகளை வாடிக்கையாகப் பிடித்து வைத்திருந்தான். இவ்வாறாகப் பாட்டிக்குப் பழைய உற்சாகம் மீண்டும் வந்து விட்டது.

மணிக்குத் தானும் நீலாவோடு சென்று இலை கொண்டு வர வேண்டும் என்று அடங்காத ஆசை. ஆனால் 'இந்தக் கிழப் பிசாசு விடாது' என்று எண்ணிப் பேசாமல் இருந்து விட்டாள். இரவு நேரத்தில் வீட்டுக்கு வெளியே உட்கார்ந்து கொண்டு அவள் தன் அண்ணனிடம் 'துருவித் துருவி'க் கேள்விகள் கேட்பாள். அவனும் ஏதேதோ சொல்வான்.

''நீ ராத்திரி நேரத்திலேதானே நட்சத்திரத்தைப் பார்த்திருக்கே. நான் பகலிலேயே தினமும் பார்க்கிறேன்.''

''எங்கேடா?.... எங்கே அண்ணா ?''

''உச்சி நேரத்திலே மரத்துக்கு அடியிலேயிருந்து அண்ணாந்து பாரு. ஒவ்வொரு இலை இடுக்கிலேயும் ஒரு நட்சத்திரம் ஜொலிக்கும். சூரிய வெளிச்சம்தான்! அப்படியே கண்ணு கூசும். எவ்வளவு அழகாயிருக்கும் தெரியுமா? ஒவ்வொரு மரமா பார்த்துக்கிட்டே போவேன். பளிச் பளிச்சின்னு என்னமாத் தெரியும்! இப்போகூட என் கண்ணிலே அந்த நட்சத்திரமெல்லாம் தெரியுது....''

''நாளையிலிருந்து இந்தக் குட்டியையும் கூட்டிக்கிட்டுப் போடா.... இலை பத்தாது'' என்றாள் பாட்டி.

''நானும் நெனைச்சேன்.......''

''காற்றுக் காலம் வரட்டும். அதுவரைக்கும் இப்படித்தான்.''

''ஆமாம்! காற்றுக் காலம் வந்தால் தேவலை......''

பூனை போல் அங்கு வந்து உட்கார்ந்திருந்த மணி, ''காற்றுக் காலம் வந்தால் என்ன ?'' என்றாள்.

''காற்றுக் காலம் வந்தால் வாழை இலையெல்லாம் கிழிஞ்சு போகும். நம்ம தையல் இலைக்குக் கிராக்கிதான். நிறையக் காசு கிடைக்கும்.''

சிறிது நேரம் மௌனமாக இருந்த மணி, எழுந்து வந்து நீலாவின் முன்னால் உட்கார்ந்தாள். பிறகு ஆழமான நிதானத்துடன், ''அந்த வாழை இலையையெல்லாம் இப்பவே கிழிச்சு விட்டுட்டா என்ன?'' என்றாள்.

நீலாவுக்கு மீண்டும் தூக்கிவாரிப்போட்டது. அந்தப் பயங்கரமான யோசனை தனக்கே ஒரு முறை தோன்றியதை அவன் நினைத்துக் கொண்டான். கிழவி கத்தினாள்.

''அடி, துடைகாலி! நீ செய்தாலும் செய்வே. இத்துனூண்டு இருக்கு, நெனைப்பைப் பாரேன். ராட்சசி, என்னையே ஒரு நாள் கொன்னு போட்டாலும் போட்டுடும். கொலைகாரப் பாவி.....''

மறு நாளிலிருந்து பாட்டியை மட்டும் வீட்டில் விட்டுவிட்டு நீலாவோடு மணியும் இலைக்குச் சென்று வந்தாள். மெள்ள மெள்ள அவளும் இலை தைப்பதற்குக் கற்றுக் கொண்டாள். தினமும் வெளியே சென்று இலைகளைச் சுமந்து வருவது அவளுக்கு ஒரே மகிழ்ச்சியாக இருந்தது. அவன் ஒவ்வொரு மரமாக நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டே கூத்தாடுவான். அவளுக்கு அது பிடிப்பதில்லை. ''தினமும் இதென்னடா, வேலை? கழுத்து வலிக்கும்'' என்று சலித்துக் கொள்வாள்.

காற்றுக் காலம் மூன்று முறை வந்து போய் விட்டது. பழைய மாதிரி இல்லாமல் தற்காலத்திலே வெய்யில் அதிகரித்துப் போய் விட்டதாகப் பாட்டி கூறி வந்தாள். காலம் ஏதோ விபரீதத்தை விளைவிக்கும் வன்மத்தோடு காத்திருப்பது போல் தோன்றியது. நெல் வயல்களிலே ஆங்காங்கே மோட்டார் வைத்துத் தண்ணீர் இறைப்பது சகஜமாகி விட்டது. புதிதாக அந்தக் கிராமத்தின் வழியாக ஒரு பஸ் தினமும் ஒரு முறை போய் வந்து கொண்டிருந்தது. சில ஆலமரங்களின் விழுதுகள் மண்ணில் புதைந்து கிளைத்து இலை விட்டிருந்தன. நீலாவும் மணியும் கொஞ்சம் வளர்ந்து விட்டார்கள். அதை ஈடு செய்வது போல் கிழவி ஒரு பிடி குறைந்து போனாள்.

மணி 'டேய்' என்று கூப்பிடுவதை விட்டு விட்டாள். அண்ணா என்றே அழைத்தாள். அவள் பேச்சில் எப்போதும் உள்ள அலட்சியம் இருந்தாலும் அதில் ஒரு மலர்ச்சியும் இருந்தது. ஆனால் நீலா மிகவும் சோர்ந்து போயிருந்தான். நட்சத்திரங்களைப் பார்த்து அவன் இப்போதெல்லாம் மகிழ்ச்சியால் துள்ளுவதில்லை.

அன்றிரவு படுத்துக் கொள்ளும் போது, ''இந்த நட்சத்திரங்கள் பெரிய தொந்தரவு. எந்நேரமும் கண்ணுக்குள்ளேயே இருக்கு. அதை என் கண்ணிலிருந்து விரட்டிப் பார்க்கிறேன், முடியல்லே ! போராட வேண்டியதாயிருக்கு....'' என்று கலங்கிப் போய்க் கூறினான் நீலா.

''இனிமேல் அந்தப் பகல் நட்சத்திரங்களைப் பார்க்காதே, அண்ணா!''

''பார்க்காமல் இருந்தாலும் அதெல்லாம் என் கண்ணில் இருந்து கொண்டே இருக்கு, மணி! கண்ணை மூடினாலும் நட்சத்திரம்.... இறந்தாலும் நட்சத்திரம்.... சேச்சே ! எனக்குப் பைத்தியம் பிடிக்கும் போல் ஆயிடுச்சு. உற்றுப் பார்த்து இலை தைக்கவே முடியலே.''

''நீ தைக்காதே, அண்ணா! நானே தைச்சுடுவேன் !''

மல்லிகை மணமும் பாட்டியின் 'டக்,டக்' ஒலியும் ஒன்றை ஒன்று தொடர்ந்து வந்தன. சிறிது நேரத்தில் அவர்கள் உறங்கிப் போனார்கள்.

மறு நாள் வெளியே சென்ற போது நீலாவினால் வெய்யிலைத் தாளவே முடியவில்லை. மணலிலிருந்தும், மரத்திலிருந்தும், நீரிலிருந்தும், இலைகளிலிருந்தும் அனல் வீசி அவனைக் கருக்குவது போல் இருந்தது. இலேசான வெயில் பட்டாலும் தலைவலிப்பதாகச் சொல்லித் துடித்தான். அவனைப் பத்திரமாக அழைத்துக் கொண்டு இலையேதும் இன்றி உடனே வீடு திரும்பிவிட்டான் மணி.

கண் மூடிக் கண் திறப்பதற்குள் நாட்கள் போனதே தெரியாமல் நீலா வீட்டிலேயே படுத்துக் கிடக்க வேண்டிய ஒரு நிலையை அடைந்து விட்டான். பாட்டியின் எந்தப் பற்றுக்கும் அவன் தலைவலியைப் போக்கும் சக்தி இல்லாமற் போய் விட்டது. உள்ளூர் வைத்தியர் மிகவும் நல்லவர். அவர் இலவசமாகவே அவனுக்கு வைத்தியம் செய்ய முன் வந்தார். இரண்டு பக்கமும் தொங்கிய தமது நரைத்த மீசையை ஒதுக்கி விட்டுக் கொண்டே, 'இது மண்டையிலே கோளாறு இல்லேம்மா, கண்ணிலே!'' என்று சொல்லி விட்டு ஏதேதோ மூலிகைகளை அவன் கண்களுக்கு வைத்துக் கட்டினார்.

கடைசியில் அது நடந்தே போய்விட்டது. நீலா பார்வையை இழந்துவிட்டான். அந்த நட்சத்திரங்களைத் தவிர வேறு எதுவுமே அவன் கண்ணுக்குத் தெரியவில்லை. நட்சத்திரங்களை அள்ளி, அள்ளி யாரோ கண் முன்னால் கொட்டிக் கொண்டேயிருந்தார்கள். அவனால் எதையுமே பார்க்க முடியவில்லை.

நீலா இந்த உலகத்தை விட்டே பிரிந்து போனவன் போல் எப்போதும் வீட்டுக்குள்ளேயே உட்கார்ந்து கிடந்தான். என்ன தான் முயன்றும் பாட்டியால் இந்தத் துயரத்தைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. இரவும் பகலும் ஓயாமல் அவள் தனக்குத் தானே பேசிக்கொண்டிருந்தாள்.

மணியைப் பொறுத்தவரை ஒரு மௌனமான புதிய வாழ்க்கை தொடங்கிற்று. அவள் தனியாகவே சென்று இலைகள் கொண்டு வந்தாள். தானே பதமான இலைகளைத் தைத்துக் கடைகளில் கொடுத்து, காசைப் பெற்றுக் கொண்டாள். அவளே உணவு சமைத்து அவர்களைச் சாப்பிடச் செய்தாள்.

ஒரு நாள் பாட்டி மணியை அழைத்து அவள் முகத்தைத் தன் மெல்லிய விரல்களால் தடவித் தந்து, ''கடைசியில் நீ பாடுபட்டு எங்களைக் காப்பாத்தும் நிலையாச்சு!'' என்று பெருமூச்செறிந்தாள். பிறகு, கொஞ்சம் மெல்லிய குரலில், ''இப்ப எனக்குக் கொஞ்சம் பார்வை தெளிவாக இருக்குடி. திரையை விலக்கிட்ட மாதிரி பளிச்சனு இருக்கு. இது எப்படி ஆச்சன்னு தெரியலே. அப்பா.... இந்த நாலு வருஷங்களா என்ன கஷ்டம்.... தண்ணிக்குள்ளே இருந்த மாதிரி! ஒரு வேளை சாளேசுவரம் தானே தெளிஞ்சு போகும்னு சொல்வாங்களே அப்படி இருக்குமோ என்னவோ.... அது எப்படி இந்த வயசிலே? எப்படியோ தெளிஞ்சுது.'' என்றாள்.

''அது ஒரு கணக்குப் பாட்டி!''

'எமச்சி என்னவோ சொல்லப் போகிறாள்' என்று மனத்துக்குள்ளேயே எண்ணியவாறு பாட்டி, ''என்ன கணக்கு?'' என்றாள்.

''அதுதான். அண்ணனுக்குப் போயிட்டது. உனக்கு வந்திட்டுது. அதுதான் கணக்கு!''

பாட்டி ஏதோ குற்றவாளியைப் போல் மணியைப் பார்த்தாள். ''இனிமே நீமட்டும் தைக்க வேண்டாம். நானும் தைக்கிறேன்'' என்றாள்.

''வேண்டாம், பாட்டி ! நீ அண்ணனைப் பார்த்துக்க. இதை நான் கவனிச்சுக்கிறேன்'' என்று அன்புடன் கூறினாள் மணி.

''இதிலே ஒண்ணும் குறைச்சல் இல்லே. அவ்வளவு கொழுப்பு. நாம இல்லாட்டா இந்தக் கிழ நாயி என்ன செய்யும்கிற அழுத்தம்...... திமிர் பிடிச்ச கழுதை.... இன்னும் எத்தினி வருசத்துக்கும் உழைச்சுத் தின்கிறதுக்கு இந்தக் கட்டைக்குச் சக்தி இருக்குடி.... உன் கையை எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லே....தெரிஞ்சுக்க....''

கிழவி ஓநாய்போல் எழுந்து நடந்தாள். அவளுக்கு என்ன கோபம் என்பது மணிக்கு விளங்கவில்லை. அவள் அமைதியாகத் தைக்க ஆரம்பித்தாள். வெகு நேரத்துக்குப் பிறகு பாட்டி கொஞ்சம் தாழ்ந்த குரலில், ''நீ வெளியே போவது எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை'' என்றாள்.

மேலும் இரண்டு முறை காற்றுக் காலம் அவசர அவசரமாக வந்து போயிற்று. இலை விற்றுக் கிடைத்த அற்பமான வருவாயில் அந்த மூன்று உயிர்களும் வாழ்ந்துதான் வந்தன. மணி பன்னிரண்டாவது வயதைத் தொட்டுக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் பாட்டி கூறினாள். ''அந்தப் பங்களா வூட்டிலே ஒரு கிழவன் குந்திக் கிடப்பானே, அவனுக்கு இழுத்துக்கிட்டுக் கிடக்குதாம்......''

நீலா துயரத்தோடு சிரித்தான். ''ஏன் பாட்டி, உனக்குப் பயமா இருக்கா? அவன் உன்னைவிடச் சின்ன ஆளா, பெரிய ஆளா?''

''அவனுக்கு வயசு கம்மிதான்!''

''இருந்தாலும் பயப்படாதே, பாட்டி! உன்னை அசைக்க முடியாது. நீ என்ன சாதாரணக் கட்டையா ?''

''வரமாட்டேங்குதேடா. நானு சாகப் பயப்படுவேன்? வரமாட்டேங்குதே? அந்தக் கிழவன் என்ன வேலை செய்தான். சும்மா பிஞ்சியிலே உட்கார்ந்துகிட்டுப் பங்கா இழுக்கிறது. சுலபமான வேலை. நீ கூடச் செய்யலாம்.....''

படுத்திருந்த நீலா 'சட்'டென எழுந்து உட்கார்ந்தான். அவன் முகத்தில் அற்புதமான ஒளி வீசிற்று. யாரோ ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரி அந்தப் பங்களாவில் உல்லாசமாக வாழ்ந்து வந்தார். வெய்யிலைத் தாங்காத வர்க்கம். காற்றுக் காலத்திலேகூட அந்தக் கிழவன் பங்கா இழுத்துக்கொண்டே இருப்பான். உட்கார்ந்து கொண்டு கயிற்றை இழுக்க வேண்டியதுதானே! எவ்வளவு சுலபமான வேலை! அந்தக் கிழவன் இறந்து போனால்...

''பாட்டி! அந்தப் பங்களா விட்டு ஆபீசருகிட்டக் கேளு. விடாதே. எப்படி யாவது கேட்டு என்னை அங்கே கொண்டு போய் உட்காரவெச்சுடு. என் கவலையெல்லாம் தீர்ஞ்சு போகும். பாட்டி, ஏமாந்துடாதே. எவ்வளவுதான்... ஏமாந்துடாதே...''

''அந்தக் கிழவன் சாகக் கிடக்கிறான். இப்பக் கேட்கக் கூடாது. பிறகு பார்க்க லாம். எப்படியும் சேர்த்துக்கலாம். இந்தக் குட்டி வெளியே போகிறது எனக்குப் பிடிக் கலேடா.... பெட்டைக் கழுதை... வெளியே சுத்தக் கூடாது.''

''சரி பாட்டி!''

மணி இலை தைப்பதை நிறுத்தி விட்டு நகத்தைக் கடித்தவாறு சிந்தனையில் ஆழ்ந் திருந்தாள்.

''என்னடியம்மா யோசிக்கிறே? நகத்தைக் கடிக்காதே. இனிமே வெளியே போக முடியா தேன்னு யோசிக்கிறியா?'' என்று ஏகத் தாளமாகக் கேட்டாள் பாட்டி.



அவளுக்கு எந்தவித மான பதிலையும் மணி கூறவில்லை. கொஞ்ச நாட்களாகவே அவள் நெஞ்சை ஒரு பெரிய பாரம் அழுத்திக் கொண் டிருந்தது. ஓர் இனம் தெரியாத அச்சம் அவள் உள்ளத்தை இடையறாது வருடிக் கொண்டிருப் பதை உணர்ந்தாள். கடைக்காரன் இப்போ தெல்லாம் அவளிடம் வலியப் பேசிச் சிரித் தான். வேண்டுமென்றே சீக்கிரமாகக் காசு தரா மல் அவளை நிற்கவைத்து விளையாட்டுக் காட்டு வான். அவள் வெட்கப் படும்படி ஏதாவது கூறு வான். 'கொஞ்சம் பொடி வேணும்' என்று சொல்லி அவன் கன்னத் தைக் கிள்ளிவிட்டு மூக் கில் விரல் வைத்து உறிஞ்சுவான். பிறகு ''பொடி ஒரே காரம்'' என்பான். எல்லா ரும் அவளைக் கிண்டலாகப் பார்த்துச் சிரிப் பார்கள். இதைப் பற்றிப் பாட்டியிடமோ அண்ணனிடமோ அவளுக்குச் சொல்லத் தோன்றவில்லை. இதெல்லாம் மற்றவர்களிடம் எடுத்துச் சொல்ல முடியாத, தானே சமா ளிக்க வேண்டிய தொல்லைகளாக அவள் உணர்ந்தாள்.

இந்த நிலையில் ஆற்றுக்குச் செல்லும் வழி யிலே புதிதாகக் கம்பம் நட்டுக்கொண் டிருந்த நான்கைந்து பேர்களில் இளைஞனைத் தோன்றிய ஒருவன் அவளைப் பார்த்துச் சிரிப் பது போல் தோன்றவே திடுக்கிட்டுத் தடு மாறிப் போனாள் மணி. அது வெறும் பிர மையா அல்லது உண்மைதானா என்று அவ ளால் தீர்மானிக்க முடியவில்லை. அதை நினைக்கும்போதெல்லாம் நெஞ்சு படபடத் தது. ஒரு வகையான மகிழ்ச்சியுடன் கடல் போன்ற பயமும் அவளை நிரந்தரமாகச் சூழ்ந்து கொண்டது. மறுநாளும் அதே போல் நடந்தது. அப்போது இரண்டு கம்பங் களை நட்டு இருந்தார்கள். அவன் சிரித்தது நன்றாகவே தெரிந்தது.

வீட்டுக்கு வந்த பிறகும் மணி அமைதி யற்றுக் குழம்பினாள். நகத்தைக் கடித்துக் கொண்டு தன்னை மறந்து வெகு நேரம் உட்கார்ந்திருந்தாள். பாட்டி வந்து அவளை நெட்டியவாறு ''என்னடி?'' என்று கேட்ட போதுதான் அவளுக்குச் சுய உணர்வு வந்தது. பாட்டி அவளுக்கு வெகு அருகில் குந்துக் காலிட்டு உட்கார்ந்து கொண்டு கெகிக்கக ஆரம்பித்தாள். ''நகத்தைக் கடிக்கக் கூடா துன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்? நகத்தைக் கடிச்சால்...''

'என்ன?' என்று கேட்பது போல் மணி ஏறிட்டுப் பார்த்தாள்.

''வயசாயிட்டுது. ஒண்ணும் தெரியாத வளா இருக்கியே? நகத்தைக் கடிச்சா சம் மதம்னு அர்த்தம்.... தெரிஞ்சுதா? மட்டி மாதிரி எவனையாவது பார்த்தால் நகத்தைக் கடிக்காதே. காறித் துப்பணும். அப்ப எந்தக் கழுதையும் நெருங்காது. பெட்டைச் சிறுக்கி நெருப்பு மாதிரி இருக்கணும்!''

உள்ளிருந்து நீலா கத்தினான். ''அங்கே என்ன பாட்டியும் பேத்தியும் மந்திரம் போடு றீங்க? பங்களா கிழத்தைப் பார்த்தீங்களா? என்ன ஆச்சு...?''

''அது இன்னும் இழுத்துக்கிட்டுத்தான் கெடக்கு. எப்பப் போகுமோ தெரியலே. நரம்பு மாதிரி உடம்பு. லேகலே போகாது போலிருக்கு. வானம் இருட்டிக்கிட்டு வருது. அந்த இலையை எடுத்து உள்ளே போடலாமா ....சரி, வாணும், நனையட்டும்...''

அன்றிரவு நல்ல மழை பெய்தது. சாரல் சுழன்று கதவின் இடுக்கு வழியாகக் குடி சைக்குள்ளும் அடித்தது.

காற்றுக்கும், மழைக்கும், மண்ணுக்கும் நிகழ்ந்த மூர்க்கமான போராட்டத்தின் சின்னம் காலையில் எங்கும் தென்பட்டது. எங்கு பார்த்தாலும் இலைகள் சிதறிக் கிடந்தன. சாலையெல்லாம் ஆலம் பழங்கள் குண்டு குண்டான சிவப்பு மணிகளாய் இறைந்து கிடந்தன. எங்கேயோ சிறிது தூரத்தில் இடி விழுந்து ஓர் ஊற்று நீர் உண்டாகி நீர் பீறிடுவதாகச் சொல்லிக் கொண்டார்கள்.

கையில் கம்பிச் சுருள்களை வைத்துக் கொண்டு ஒரு கம்பத்தருகில் அவன் அன்று தனியாக நின்று கொண்டிருந்தான். அவளைக் கண்டதும் குழந்தை போல் சிரித்தான். அவள் சற்றுத் தயங்கி நின்றாள். பிறகு நகத்தைக் கடித்தாள்.

''எங்கேயோ இடி விழுந்திருக்காமே, எங்கே?'' என்றாள் அவள்.

''தெரியலே'' என்று சொல்லும்போது அவன் குரல் கம்மிவிட்டது. மெதுவாகக் கனைத்துக் கொண்டு, ''இது எதற்கு, இந்தக் கம்பமெல்லாம்?'' என்றாள். அப்போதும் அவள் குரல் விடுபடாமல் கம்மியே இருந்தது.

'' 'லைட்'டுப் போடறதுக்குத்தான். இந்த ஊருக்கு மின்சாரம் வந்தாச்சு. இன்னும் பத்து நாளையிலே ஊர் முழுவதும் 'லைட்' எரியும்... உன் பேர் என்ன?...''

ஆர்வத்தோடு அவனை நோக்கிய மணி மற்ற ஆட்கள் வந்து கொண்டிருப்பதைக் கண்டு மிரட்சியுடன் ஆற்றை நோக்கி ஒரே ஓட்டமாக ஓடி விட்டாள்.

அன்று மாலை நீலாவிடம், ''அண்ணு, ''நம்ம ஊருக்கு ஒரு விருந்தாளி வந்திருக்கிறார்!'' என்றாள்.

''இரண்டாவது 'பஸ்' விட்டிருக்காங்களா ?''

''ஊஹூம்!''

''பின்னே?''

''மின்சாரம்!''

''என்ன?''

''ஆமாம், அண்ணு! வரிசையாகக் கம்பம் நட்டு, அதிலே கம்பி கட்டி வேலையெல்லாம் ஜோரா நடந்துக்கிட்டு இருக்கு.'' இதைச் சொல்லும்போது அவள் அவனை நினைத்துக் கொண்டாள். ''இன்னும் பத்து நாளையிலே விளக்கு எரியுமாம்!''

நீலா தலையைக் கவிழ்த்துக் கொண்டான். அளவற்ற சோகம் அவன் முகத்தில் படர்ந்தது. அவளுக்கும் வருத்தமாக இருந்தது. அண்ணனுக்கு இதையெல்லாம் பார்க்கக் கண்ணில்லையே என்று நினைத்ததும் அவளுடைய கண்கள் கலங்கின. வெளியே பாட்டி என்னவோ உற்சாகமான செய்தியைச் சொல்லிக் கொண்டே வந்தாள். உள்ளே நுழைந்ததும், ''ஒரு வழியா தீர்ந்தது!'' என்று சொல்லி விட்டு உட்கார்ந்தாள். ''ஒரு வழியா அந்தப் பங்கா இழுக்கிறவன் கட்டையைப் போட்டான்.... நமக்காகவா செத்தான்? என்னவோ அவன் காலம் முடிஞ்சுது, போனான். இப்படிச் சந்தோஷப்படக் கூடாது. ஆனால் அவன் போனதாலே நமக்கு நன்மை இருக்கே !''

''இல்லே பாட்டி!'' என்றான் நீலா.

''ஏன் இல்லே? நாளைக்கே நான் கேட்டுட மாட்டேன்...!''

''வேண்டாம் பாட்டி!'' என்று மீண்டும் அவன் குறுக்கிட்டான். பாட்டி பதறிப் போய் ''என்னடா சொல்றே?'' என்றாள்.

''நம்ம அதிருஷ்டம் நம்மை விட்டுப் போகுமா, பாட்டி! இந்த ஊருக்கு மின்சாரம் வருதாம். இனிமே விசிறியெல்லாம் தானே சுத்தும். 'பங்கா' வேண்டிய அவசியமே இல்லே.''

அன்றிரவு அவர்கள் மூவருமே சரியாக உறங்கவில்லை. மறுநாள் நிகழப் போகும் பேரிடியை உணர்ந்தவர்கள் போல் பேச்சற்று, செயலற்றுக் கிடந்தார்கள். பாட்டி ஏதேதோ நினைவுகளில் ஆழ்ந்தாள். எதிர்பாராமல் கிடைத்த பெருந்தனம் திடீரென்று பறி போய்விட்டது போல் அவள் அதிர்ச்சியடைந்திருந்தாள். அந்தக் கிழவன் மடிந்து போயும் பலனில்லாமல் போய்விட்டதே! எவ்வளவு நம்பிக்கையோடு இருந்தாள்! 'இனி என்ன செய்வது? கண்கள் நன்றாகத் தெரிந்தாலும் உடம்பிலே சக்தி இல்லாமல் போச்சு. அந்தக் குட்டியை இப்படி வெளியே அலைய விடறது கட்டோடு பிடிக்கலே...' வெளியே முழு நிலா தெளிந்த வெண்பனி போல் ஒளி பரப்பிக் கொண்டிருந்தது. மல்லிகை மணம் காற்றில் இழைந்தது. கிழவியின் 'டக் டக்' ஒலி எழவே இல்லே.

விடிந்த பிறகு சற்றுத் தாமதமாகவே எழுந்து வந்த மணியைக் கிழவி கண்களை இடுக்கிப் பார்த்தாள். 'இங்கே வாடி!' என்று அழைத்துப் பிறகு, ''ஐயயோ! கல்லைத் தூக்கிப் போட்டுட்டானே! இன்னும் பன்னிரண்டு கூட முடியலே. கடவுளே! இவ்வளவு சீக்கிரமா? தள்ளி நில்லடி.... ஒரு மூலையிலே உட்காரு. வீட்டுக்குள்ளே நுழையாதே. நான் என்ன செய்வேன்...'' என்று ராகமிட ஆரம்பித்தாள்.

மணி மெல்லிய குரலில், ''பாட்டி ! பாட்டி! கத்தாதே. ஐயையோ, அண்ணன் காதிலே விழும்.... ஏன்தான் இப்படிக் கத்துவியோ...!''

''சீ நாயே, கம்மா கிட... அட நீலா.... அட நீலமேகம்...''

''பாட்டி...'' என்று கொடூரமாக ஓங்கிக் கத்தினாள் மணி. இரண்டு கைகளையும் இறுக்கமாக மூடிக் கொண்டு கண்கள் பிதுங்குவதைப் போல் ஆவேசத்தோடு அவள் பாட்டியைப் பார்த்தாள். பிறகு வெறி கொண்டவளைப் போல் சாலையை நோக்கி நடந்தாள்.

''அடி ராட்சசி! இது என்னடி ஆங்காரம்? நில்லடி. அடிப் பாவி, அவபாட்டுக்குப் போறாளே. அடியே நீ போவியா ...... போப்போ, ஒரேயடியாப் போயிடு...திரும்பி வராதே! வந்தே கொலை விழும்... இன்னைக்கு நீ போ, உனக்குச் சூடு வைக்கிறேனா இல்லையா பாரு. அடியே போகாதேடி. வாடி. அடே நீலமேகம்...''

மணி கொஞ்சம் கொஞ்சமாகச் சிறிய உருவமாகக் குறுகி, தூரத்தில் மண்டியிருந்த புதர்களின் மேல் மிதப்பது போல் தோற்றம் தந்து பாட்டியின் விழிப்புலனில் இருந்து மறைந்தாள்.

அவளுக்கே புலனாகாத ஒரு மூர்த்தண்யம் அவளை ஆட்கொண்டிருந்தது. உடலெல்

லாம் முறுக்குவது போலிருந்தது. பரபரப்பும் ஜுர வேகமும் கொண்ட உணர்வு. 'அரளிச் செடி அக்கரையில்தானு இருக்கு? இங்கே இல்லையா, என்ன?' என்று சம்பந்தமில்லாமல் நினைத்தாள். 'அரளியின் நினைவு ஏன் வந்தது? அரளி விதையைத் தின்று சாகவா போகிறேம்' என்றும் நினைத்தாள். வெகுதூரம் வந்த பிறகே அவள் சற்று நிதானமடைந்து, 'நமக்கு என்ன நேர்ந்து விட்டது? ஏதாவது மூளை பிசகியிருக்குமோ?' என்று நினைத்தாள். வெட்க மேலிட்டால் மெள்ள நகைத்தாள்.

அவள் உள்ளம் கசிந்தது. 'ஐயோ பாவம்.. பாட்டி! கலவரப்பட்டிருப்பாள். இனி வெளியே செல்லவே விடமாட்டாள். இந்தப் பாட்டிக்கு எவ்வளவு பயம்... குழந்தைமாதிரி எனக்குக் கூடப் பயம்தான். அந்தக் கடைக்கு இனிமேல் போகக் கூடாது. சேச்சே! எவ்வளவு அருவருப்பான பெரிய மனிதர்கள்!'

ஆற்றைக் கண்டதும் அவளுக்கு உடனே குளிக்க வேண்டும் போல் இருந்தது. மெள்ள நீரில் இறங்கி உட்கார்ந்து கொண்டாள்.

'அண்ணு... நீலா அண்ணு! தங்கக் கட்டி! உனக்கு என்னுலே எவ்வளவு கஷ்டம். இந்தப் பாட்டி தடுக்காமல் இருந்தால் நான் இலே விற்றே உன்னைக் காப்பாற்றுவேன். அது விடாது, நிச்சயமா விடாது. நான் இனிமேல் உங்களுக்குச் சுமைதான்....'

தூரத்தில் ஆற்றை நோக்கி ஓட்டி வந்த மாட்டு மந்தையை, வேறு திசையில் திருப்பி விட்டுக் கொண்டிருந்தான் மாட்டிடையன். திரளாக எழுந்து பரவிய புழுதிப் படலத்தில் மாடுகளின் இடையே அவனுடைய குச்சி போன்ற மெல்லிய கால்கள் சுறுசுறுப்பாகச் சுற்றி வருவது தெரிந்தது.

கழுத்தில் 'சில்'லென்று நீர் பட்டதும், அவள் உடம்பு சிலிர்த்தது. 'கழுத்துவரை எப்படித் தண்ணீர் வந்தது' என்று திடுக்கிட்டு எழுந்து நின்றாள். அவள் முகம் பயங்கரமாக மாறிற்று. புதுத் தண்ணீர் பெருக்கெடுத்து 'ஜில்'லென்று பரவிக் கொண்டிருந்தது. முன்பு ஒரு முறை இதே போல் சிக்கிக் கொண்டது நினைவு வந்தது. 'எவ்வளவு ஆபத்தான காட்டாறு! எப்படிப் போவது! இரண்டு கரைக்கும் கிட்டத்தட்ட ஒரே தூரம்தான். அரளிச் செடி அக்கரையில் தானே இருக்கு? சேச்சே! அது எதற்கு? நான் ஏன் சாக வேண்டும்? இது என்ன காலையே நகர்த்த முடியவில்லை. எருமை போல நின்னுக்கிட்டு... உடனே ஓடிவிட வேண்டும். அது யார்... அந்த மாட்டுக்காரன் பார்க்கிறனு? திடீரென்று பேச்சு வந்து விட்டது போல் "ஐயையோ... இதோ இந்தப் பக்கம்... இங்கே இருக்கேன்..." என்று இரு கைகளையும் வீசியவாறு கத்தினுள். காலில் கயிற்றைக் கட்டி இழுப்பது போல் தண்ணீர் அவளை இழுத்துச் சாய்த்தது. அந்த இளைஞனின் சிரித்த முகம் ஒரு கணம் தோன்றி மறைந்தது. 'நகத்தைக் கடித்தது பாட்டிக்குத்தான் தெரியாதே... தண்ணிக்குள்ளும் ஒரே வெளிச்சமா இருக்கு... எழுந்திருக்க முடியலையே!' மூச்சுத் திணறியது. அவள் தண்ணீர் குடித்தவாறு துடித்தாள். நினைவு தப்பிற்று. வெள்ளம் சினந்து சுழித்துப் பாய்ந்து சென்றது.



"மச்சான்! அதோ வரப்பு மேலே உட்கார்ந்திருப்பது யாரு?"

"அவருதான் கொள்முதல் அதிகாரி! நாம உழுது, நாற்று நட்டு, களைபிடுங்கி, ஒழுங்காப் பயிரிட்டு, அறுவடை ஆன உடனே, அத்தனையும் வாங்கிட்டுப் போக வந்திருக்காரு."

ஆற்றங்கரையில் பெரிய கூட்டம் சூழ்ந்து நின்றது. "அந்தப் பொண்ணுதானையா! தாவணிகூட [illegible] கடைக்கு வருமே, பார்த்ததில்லே[illegible]"

"அடப் பாவமே[illegible] நல்ல குட்டி!"

கூட்டத்தின் நடுவே மணியின் உடல் போர்த்தப்பட்டுக் கிடந்தது. அவள் கண்கள் வானத்தையே பார்ப்பது போல் திறந்திருந்தன. வானத்தில் நீலமேகம் ஏதும் இல்லை. நீலமேகம் பிரமை தட்டியவன்போல் அவள் பக்கத்திலேயே அமர்ந்திருந்தான். உள்ளும், வெளியும், எங்கும் அவனை அகண்டாகாரமாக இருள் சூழ்ந்திருந்தது. குவியல் குவியலான நட்சத்திரங்கள் எல்லாம் எங்கோ மறைந்தன. அவன் கண்ணுக்குள் இப்போது இருந்ததெல்லாம் ஒரே ஒரு நட்சத்திரம்தான். பிரகாசமான ஒளியுடன் மிருதுவான மலர்—போன்ற அந்த ஒற்றை நட்சத்திரம் 'அண்ணு, அண்ணு' என்ற உயிர்த் துடிப்பை அவனுள் கிளர்ந்து கொண்டேயிருந்தது.

மணியின் உடலைப் போராடி ஆற்றிலிருந்து மீட்டு வந்த இடையன் இன்னும் அங்கேதான் இருந்தான். பாட்டி அவனைப் புலம்பித் திட்டிக் கொண்டிருந்தாள்.

"படுபாவி, சாகவிட்டுட்டுப் பிறகு தூக்கி வந்தியா... செத்தப்புறம் எதுக்குடா தூக்கினே... ஏன் தூக்கினே? நீயும் விழுந்து சாகிறதுதானே, கொலைகாரப் பாவி..."

அந்தக் கூட்டம் அடை கட்டினாற் போல் அப்படியே இடுகாட்டை நோக்கி நகர்ந்தது. அடக்கம் செய்வதில் மனிதன் காட்டும் இயற்கையான அக்கறை அங்கு பளிச்சிட்டது, என்னவோ அது சமுதாயத்தின் ஒரு பெருமை போல. கேவலம் ஒரு காக்கை இறந்தால்கூட அதைச் சுற்றி நூறு காக்கைகள் கூடிக் கொண்டு கத்துகின்றன.

கிழவியும் நீலாவும் மூன்று நாட்கள்வரை ஒன்றுமே பேசவில்லை. பெற்றோரை இழந்து விட்ட அநாதை போல் இருவரும் கேள்வி முறை இன்றி விழுந்து கிடந்தார்கள்.

நான்காம் நாள் கிழவி எழுந்தாள். ''இனி இங்கே என்னடா வேலை? ஒரு நிமிஷம் தங்கக் கூடாது. புறப்படு.''

''...ம்.....'' என்றான் நீலா. தொண்டை ஒட்டிக் கொண்டு அவனால் பேசமுடியவில்லை.

''புறப்படு, புறப்படு! பட்டணத்துக்குப் போவோம். பெரிய டாக்டர்களைப் பார்த்து உன் கண்ணுக்கு வைத்தியம் செய்யலாம். இனியும் இங்கே என்ன வேலை? புறப்படு.... கிழவி உளறுகிறான்னு நெனைக்காதே, என் கிட்டே பணம் இருக்கு! ஆமாண்டா, ஆசையாச் சேர்த்து வச்ச பணம் அப்படியே இருக்கு.... புறப்படு!''

நீலா திரும்பிப் படுத்துக் கொண்டான்.

''ஏண்டா, நான் சொல்றது கேட்கலையா, இனிமே நமக்கு எதுக்குடா வீடு, குடும்பம் எல்லாம்... எங்கே வேணாலும் சுத்தலாம்.... புறப்படு.. பணம்... அதுக்குத்தானே யோசிக்கிறே....''

கிழவி தள்ளாடியவாறு எழுந்தாள். தான் வழக்கமாக உட்காரும் குப்பை மேட்டுக்குச் சென்று குப்பைகளை விலக்கிவிட்டுச் சிறிது தோண்டினாள். அங்கிரு[illegible]ர கலயத்தை எடுத்து வந்து நீலாவின் [illegible]கையைப் பிடித்து அதில் வைத்தாள்.

அதைத் தடவிப் பார்த்த நீலா, ''என்ன இது?'' என்றான்.

''இது ரத்தம்டா, ரத்தம்... இந்தக் கிழவி ரத்தம். என் ஆயுசு பூரா கண்ட பயன்... முந்நூறு ரூவா... குப்பை மேட்டிலே புதைச்சு வச்சு, பேய்போலக் காத்துக்கிட்டிருந்தேன்!''

''பாட்டி'' என்று கூறியபடி அந்தக் கலயத்தைக் கீழே வைத்தான் நீலா. பிறகு மெள்ளத் தடவி அவள் சுருக்கம் விழுந்த தோள்களைப் பிடித்தான். அவன் கைகள் இறுகின. அவன் முகம் பயங்கரமாக மாறிற்று. அதைவிடப் பயங்கரமான வார்த்தைகளை அவன் கூறினான். ''நீதானே.... நீதானே மணியைச் சாகடிச்சே? இப்ப நான் உன்னைக் கொல்றேன்... செத்து ஒழி. பேராசை பிடிச்ச பேயே! பணத்தை வச்சிக் கிட்டே எங்களைப் பட்டினி போட்டே. அவனை அடிக்கச் சித்திரவதை செய்தே. இப்ப நீ சாவு... என் கையாலேயே சாவு. இந்தப் பணத்தைப் பூதம் காக்கிற மாதிரி காவல் காத்தியே, அதையும் உன்னோடு சேர்த்துப் புதைக்கிறேன்...''

அவன் அவள் கழுத்தை நெரித்தான். கிழவியின் வாய் குழறியது. உயிர்ப் போராட்டத்தின் இறுதி முயற்சி போல் உடலை முறுக்கி அவனை விலக்கித் தள்ளினாள். ஒரு கை விலகியதும் அவன் அவள் தலை மயிரைத் தடவிப் பிடித்துக் கொண்டான். இரண்டு பஞ்சை உடல்களும் துடிதுடித்தன. இரண்டு எரிமலைகள் ஒரே சமயத்தில் வெடித்தாற்போலிருந்தது. படபடக்கும் கோழி போல் கிழவி அவனோடு போராடினாள். ''என்னைக் கொல்றுடா.... கொல்றுடா...'' என்று கீச்சுக் குரலில் கத்தினாள். இன்னும் ஏதேதோ கூறினாள். அவள் வாயிலிருந்து வார்த்தைகளை விடக் காற்றே மிகுதியாக வெளிவந்தது. கடைசியில் அவள் முழு மூச்சையும் திரட்டி அவனை நெட்டித் தள்ளினாள். அவன் ஒரு மூலையில் விழுந்து எங்கே இருக்கிறோம் என்று தெரியாமல் காற்றில் கையை வீசித் தடுமாறினான். அவன் உதட்டில் ரத்தம் கசிந்தது.

''சங்கராசாதிப் பயலே! உனக்கு இவ்வளவு தெரியுமாடா... காண்டாமிருகமே... எதுக்குடா சேத்து வச்சேன்... நான் சீலை வாங்கிச் சுத்திக்கவா....அட மூடமே! அந்தப் பெட்டை நாயிக்கு ஒரு நல்லது செய்யறதுக்கு எங்கே போவுறது?... அவளைத் தெருவிலே அலைய விடறதா? விட முடியுமாடா?... பொம்பளைக்கு எது முக்கியம்? நானும் எங்கம்மாவும், உங்கம்மாவும் வாழ்ந்த மாதிரி ராசாத்தி அவளும் வாழ வேண்டாமா? அதுக்குத்தான் காவல் காத்தேன். கடைசியிலே காவு கொடுத்தேன்... நான் பட்டினி கிடக்கலையா, கூலி காயச் சுருண்டு கிடக்கலையா? ஏழையாப் போகலாம்டா... இறங்கிப் போகக் கூடாது.''

பாட்டிக்கு மூச்சுத் திணறியது. தள்ளாடியவாறு மெள்ள நடந்து சென்று மற்றொரு ஓரமாகக் காலை நீட்டி உட்கார்ந்து கொண்டாள். நீலா துயரத்துடன் கவிழ்ந்து படுத்துக் கொண்டான்.

அன்று மாலை அந்தக் கிராமத்துச் சாலையில் நின்ற பஸ்ஸில் நீலாவை அன்புடன் பற்றியவாறு உட்கார்ந்திருந்தாள் கிழவி. திடீரென்று மனத்தில் தோன்றிவிட்ட நிம்மதியாலோ என்னவோ அவளுக்குத் தூக்கம் வந்துவிட்டது. பேரிரைச்சலுடன் பெட்டிகள் உருள அந்தப் பஸ் புறப்பட்டவுடன் அவள் திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். பெரிய புழுதிப் படலத்தில் வெறும் புள்ளியாக மாறிய 'பஸ்' சிறிது நேரத்தில் பனிக்கட்டி உருகுவது போல் மறைந்து விட்டது.

அதன் பிறகு அவர்கள் அந்தக் கிராமத்துக்குத் திரும்பவே இல்லை. அவர்கள் என்ன ஆனார்கள் என்ற ஒரு முடிவைக் கற்பித்துக் கூற நான் விரும்பவில்லை. அவர்கள் வாழ்ந்த இடம் நாளடைவில் சிதைந்து புதர் மண்டிக் கிடந்தது. அந்த மண்டபம் மேலும் பாழடைந்து போயிற்று. நந்தவனத்தில் மல்லிகை மண்டிப் போனதால் அந்தப் பிராந்தியம் முழுதும் எந்நேரமும் மணம் வீசி ஓர் உயிர்த் துடிப்பை உண்டாக்கிக் கொண்டே இருந்தது.


Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.



ஸ்வஸ்திக்

பர்ஃப்யூம்டு காஸ்டர் ஆயில்

படியாத கேசத்தையும் படியச்
செய்கிறது—நாள் முழுவதும்
மழமழப்பாய் வைக்கிறது



நேர்த்தியாக வாரிவிடப்பட்ட
கவர்ச்சி மிக்க கேசம்...
கண்ணைக் கவரும் பளபளப்
புள்ள கரும் கேசம்—நாள்
முழுவதும் மழமழப்புடன்
திகழச் செய்வது ஸ்வஸ்திக்
பர்ஃப்யூம்டு காஸ்டர் ஆயில்.

Shilpi SOM 24 Tam

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்



உயரிய பண்போடு உபயோகிக்கவும் உதவவும் உகந்தது பனாமா
பனாமா
இழுக்க இழுக்க
இன்பம் இறுதிவரை
Panama
20
CIGARETTES
GTC